வந்துவிட்டார்! திகம்பர சாமியார்

வசந்த மல்லிகா



வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்

வஸந்தமல்லிகா

நூலாசிரியர்:

வடுவூர் K. துரைசாமி ஐயங்கார், B.A.,

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு – 2004

விலை: ரூ.110/-

மொத்த பக்கங்கள் 16+264=280

Lase eset by – Print Point Graphics, Chennai – 20.
Prin – M/s. Jai Ganesh Offset Printers, Chennai - 600 004.

பதிப்புரை

பரபரப்பு குறையாமல், அந்த பரபரப்புக்கு என்று நிகழ்ச்சிகளைத் தொடுக்காமல், ஆபாசமில்லாமல், ஏராளமான கதாபாத்திரங்களை உருவாக்கி, அபத்தங் களைக் கொட்டாமல், முதல் வரியிலிருந்து கடைசி வரி வரை விறுவிறுப்பைக் குறைக்காமல், நிகழ்ச்சி மேல் நிகழ்ச்சியாக உருவாக்கி, புத்திசாலித்தனமாக, சாதுர்யமாக கதாபாத்திரங்களைப் பேச விட்டு, சமு தாயத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் எப்படி எல்லாம் நடந்து கொள்ளக் கூடாது... போன்ற அற்புத மான தகவல்களைச் சொல்லும் நாவல்கள்தான் வடு வூர் துரைசாமி ஐயங்காரின் நாவல்கள். இவருடைய கதைகளில் காதல் காட்சியும் வரும், கோர்ட் சீனும் வரும், போலீஸ் நடவடிக்கைகளும் வரும், மருத்துவரின் சேவையும் வரும் — இப்படி அநேகமாக எல்லாத் தரப்பு மனிதர்களின் மேன்மையைப் பற்றியும் சொல் வார்.

அதே சமயத்தில், இதே சமுதாயத்தில் நல்லவர் கள் மத்தியில் வாழும் வக்ர புத்தி உள்ளவர்களைப் பற்றியும் சொல்லி, அப்படிப்பட்டவர்களை எப்படி எல்லாம் அடக்கி ஆளலாம் என்பதைப் பற்றியும் சொல்லியிருப்பார். இவருடைய எழுத்துக்களில் சிரிப் புக்குப் பஞ்சமிருக்காது. கதைகளில் நிலவும் கடின மான சூழ்நிலையையும், படு சாதாரணமாகக் கையாண் டிருப்பார். சிக்கலையும் உருவாக்கி, அந்த சிக்கலி லிருந்து விடுபடும் வழியையும் சொல்வார். வடுவூர் துரைசாமி ஐயங்கார் எழுதிய நாவல்களைப் படித் தால், பொழுது போவது மட்டுமன்றி, பல விஷயங் களைத் தெரிந்து கொள்ளலாம்.

தமிழில் நெடுங்கதை அல்லது நாவல் தோன்றிய ஆரம்ப கால கட்டத்தில் வடுவூர் துரைசாமி ஐயங்கார் இந்த நாவல்களை எழுதியுள்ளார். அந்த காலகட்டத்தில் இவருடைய நாவல்களைப் படிக்காதவர் எவரும் இருந்திருக்க முடியாது. மிகவும் பிரபலமாகப் பேசப் பட்ட 'திகம்பர சாமியார்' இவருடைய பாத்திரப் படைப்பு. திகம்பர சாமியாரின் அறிவு அளவிட முடியாதது. மிகவும் புத்திசாலியானவர். தன்னுடைய ஒவ்வொரு பேச்சு வார்த்தையிலும், செயலிலும் பல்லாயிரக்கணக்கான அர்த்தங்களை யூகிக்க வைப்பார். இவருடைய ஒவ்வொரு நாவலும், ஒன்றை ஒன்று மிஞ்சி நிற்கிறது.

'இவ்வளவு வருடங்கள் ஆகி விட்டதே! போர் அடிக்காதா?' என்று வாசகர்கள் துளிகூட எண்ண வேண்டாம். இதை நாங்கள் வியாபார நோக்கில் சொல்லவில்லை. உண்மையில் இந்த நாவல்களை எல்லாம் நாங்கள் படித்துப் பார்த்த பிறகுதான் வெளியிடுகிறோம். நேரம் போவதே தெரியாமல் சரளமான தமிழ் நடையில், கதை போகும் போக்கே மிக மிக நன்றாக உள்ளது.

வடுவூர் துரைசாமி ஐயங்கார் இப்படிப்பட்ட நாவல்களை எழுதியதால் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களையும், தங்க மெடல்களையும் பெற்று உள்ளார். இதெல்லாம் சாதாரண விஷயமல்ல. இந்த நாவல்களைத் தமிழ் மக்கள் படிக்க வேண்டும், போற்ற வேண்டும், நாங்களும் நிறைய புத்தகங்களை விற்க வேண்டும். இதெல்லாம் வாசகர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? இந்தப் புத்தகங்களை வாங்கும் அனைவருமே புத்திசாலிகள்தான்.

இந்த நாவல்களை வெளியிடும் முயற்சியில் எங்களுக்கு மிகவும் உதவியாக எங்களது நீண்ட நாள்

நணபரான, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தலைவரான திரு. இரா. முத்துக்குமாரசாமிக்கும், நூலின் பழைய பிரதிகளைக் கொடுத்து உதவிய *(காஞ்சி புரம்)* அன்பர்களுக்கும், மேலும் இந்த நூல்களை, அந்தக் காலத்திலேயே ஏராளமாக விற்பனை செய்து, பெரும் பணியாற்றி தற்போது எங்களுக்கு உரிமையை வழங்கிய இரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ் உரிமை யாளர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் வாசகர் கள் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

'வடுவூர் துரைசாமி ஐயங்கார் நூல்கள் மீண்டும் வருமா? மீண்டும் வருமா?' என்று ஏங்கிக் கொண் டிருக்கும் வாசகர்கள் இப்போது மகிழ்ச்சி அடை வார்கள். இந்த நூல்களை 'புரூப்' பார்த்துக் கொண் டிருக்கும்போதே, பல வாசகர்கள், 'புரூப்' படிக்க வில்லை என்றால்கூடப் பரவாயில்லை, தாமதப்படுத் தாமல் உடனே வெளியிடுங்கள் என்று கூறினார்கள்.

அன்று 007
இன்று ஜேம்ஸ்பாண்டு - ஆனால்
அன்றும் இன்றும் என்றும்
''திகம்பர சாமியார்''

அல்லயன்ஸ் ஸ்ரீநிவாஸன்

வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார்

வடுவூர் துரைசாமி ஐயங்கார்: 1880-1942. தஞ்சை மாவட்ட மன்னார்குடி வட்டம். தந்தை கிருஷ்ண ஐயங்கார். பி.ஏ. பட்டம் பெற்று தாசில்தாராக விளங்கி, எழுத்துச் செல்வாக்கால் வேலையை விட்ட வர். தம் நாவல்களைத் தாமே அச்சிட ஓர் அச்சகமும் 'மனோரஞ்சனி' என்ற மாத இதழும் தொடங்கி மாதம் ஒரு கதை நூல் என எழுதிக் குவித்தவர். கலைமகள் கம்பெனி, விற்பனை நிலையமாகும்.

நடுத்தர உயரம், ஒல்லியான உடல், கருத்த மேனி, கழுத்து வரை பொத்தான் போட்ட கோட்டு, அங்க வஸ்திரம், பஞ்சகச்சம், தலையில், குல்லா, காலில் கட் ஷூ, கையில் தடி, நெற்றியில் எப்போதும் திரு மண், வாய் நிறைய வெற்றிலை *(பெரிய வாய்)*, புகை யிலை, தினமும் தங்க பஸ்பம் சாப்பிடுவார் இளமை யோடிருக்க. மொத்தத்தில் கை நிறைய சம்பாதித்த கவலை இல்லாத உல்லாச மனிதர். இவர் மாடிக்கு ஜே.ஆர். ரங்கராஜு, ஆரணியார், பம்மல் சம்பந்த முதலியார், வை.மு.கோ., எஸ்.எஸ். வாசன் வந்து போவர்.

மனைவி நாமகிரி அம்மாள். மக்கள் விஜயராக வன், ரங்கநாயகி, கிருஷ்ணசாமி. மூத்த மகன் மனைவி புஷ்பவல்லி; புதுப்பேட்டை கார்ப்பரேஷன் பள்ளி ஆசிரியையாக இருந்து ஓய்வு; ஒரு பெண்ணும் பிள்ளையும் ரங்கநாயகிக்கு நான்கு மகள்களும், ஒரு பிள்ளை ரகுவும் நேவியில் காப்டன், வடுவூராரின் நவீனம் 'மைனர் ராஜாமணி' சினிமாவாக வந்து திரை யிட்டதும் ஒரு சமூகத்தை இழிவு செய்வதாக வழக்கு

தொடர்ந்து நிறுத்தப்பட்டது. இந்த அதிர்ச்சி, அவமானம் தாங்காது குருதிக் கொதிப்பால் மாண்டார்!

இந்த நூற்றாண்டின் தொடக்க 30 ஆண்டுகளில் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்களைத் தம் துப்பறியும் கதைகளால் பிணித்தவர். புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி, பரந்த ஓர் வாசக உலகினைப் படைத்துக் கொண்ட பெருமையர் Reynolds போன்ற நாவலாசிரியர்களைத் தழுவி எழுதியதோடு, சொந்தமாகவும் படைத்துள்ளார். இவர் படைப்பில் சிறந்ததாக மேனகா, கும்பகோணம் வக்கீல் குறிப்பிடத்தக்கன; படமாகவும் வந்தவை. வாசகர்களின் நாடித் துடிப்பறிந்து ஈர்க்கும் இனிய வசனமும் அழகு வருணனைகளும் அனைவரையும் அள்ளின.

திகைப்பூட்டும் திருப்பங்கள், சுவைமிகு நிகழ்ச்சிகள், ஆவலைத் தூண்டும் விறுவிறுப்பும், படிக்கப் படிக்க மகிழ்வூட்டும் நடையும், நகைச்சுவை நெளிய நல்ல நல்ல நவீனங்களைப் படைத்துள்ளார்.

வெறும் மர்ம நாவல் என ஒதுக்க முடியாத அளவுக்கு வைணவத் தலங்களையும், வேற்று மதத்தினரும் கூடி வாழும் வகையும், சமூகக் குறை நீக்கமும் கொண்டும் விளங்குகின்றன. திகம்பர சாமியார் துப்பறியும் பாத்திரம் நினைவில் நிற்கும். நாவல் வரலாற்றில் சுவடு பதித்தவர் வடுவூரார் என்பதை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

— நன்றி - தமிழ் இலக்கிய வரலாறு
(மது.ச. விமலானந்தம்)

இலக்கிய சாதனையாளர்

முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் கல்கி என்கிற எழுத்தாளர் தமிழ் வாசகர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவன செய்ததுபோல இருபதுகளில் தமிழ் வாசகர்கள் பரம்பரையை உருவாக்க முயன்றவர்கள் என்று ஜே.ஆர். ரங்கராஜு என்பவரையும் வடுவூர் துரைசாமி ஐயங்கார் என்பவரையும் சொல்ல வேண்டும்.

இந்த விஷயத்தைக் கல்கி தெரிந்து செய்தார் என்றும், முன்னிருவரும் தாங்களும் அறியாமலே வாசகர் பெருக்கத்துக்குக் காரணமாக இருந்தார்கள் என்றும் சொல்ல வேண்டும்.

ஜே.ஆர். ரங்கராஜுவின் ஐந்தாறு நாவல்களும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒன்றாக 1916 முதல் 1923 வரையில் வெளிவந்தன. பிரஸ் சொந்தக்காரரான ரங்கராஜு பத்தாயிரம் பிரதிகளை அச்சிட்டு ஒவ்வொரு ஐநூறு பிரதிகளையும் ஒரு பதிப்பாகக் குறிப்பிட்டு 10 பதிப்புகள் வரை தன் நாவல்களை வெளியிட்டார். ராஜாம்பாள், ராஜேந்திரன், சந்திரகாந்தா, ஆனந்தகிருஷ்ணன் என்று ஒவ்வொரு நாவலும் வெளியாகும்போது மிகவும் பரபரப்பாக வாசகர்கள் வாங்கிப் படித்தனர். வரதராஜன் என்று இரண்டு பாகங்கள் வெளிவரும் வரையில் ஒன்றும் தடங்கல் இல்லை. 'வரதராஜனின் பல பகுதிகள் இலக்கியத் திருட்டு' என்று கேஸ் போட்டு, மேலே எதுவும் எழுதிப் பிரசுரிக்கக் கூடாது என்றும், ஆறு மாதம் ஜெயில் வாசம் அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் என்றும் கோர்ட் அவருக்குத் தண்டனை விதித்தது என்று எண்ணுகிறேன். ஜெயிலில் இருந்து விட்டு எழுதுவதை நிறுத்தி விட்டார் ரங்கராஜு. இவரை எழுத்தாளர் சங்கம் ஒன்று 40களின் ஆரம்பத்தில் கல்கி தலைமையில் ஏற்பட்டபோது முதல் கூட்டத்துக்கு வரவழைத்து நான் சந்தித்

திருக்கிறேன். தாடி வளர்த்துக் கொண்டு நாமம் போட்டுக் கொண்டு *(வைஷ்ணவ நாயுடு அவர் என்று எண்ணுகிறேன்)* பார்ப்பதற்குக் கம்பீரமாக இருந்தார்.

ரங்கராஜுவுக்கு அடுத்து வாசகர்களின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தவர் என்று வடுவூர் துரைசாமி ஐயங்கார் என்பவரைச் சொல்ல வேண்டும். 1923, 24 முதல் 27 வரையில் தஞ்சையில் கல்யாண சுந்தரம் ஹைஸ்கூலில் நான் படித்துக் கொண்டிருக்கும்போது பச்சை, மஞ்சள், சிவப்பு அட்டையில் டெமி சைஸில் அவர்கள் நாவல்கள் ஒவ்வொன்றாக அப்பாவுக்குத் தெரியாமல் ரெயில்வே ஸ்டேஷன் ஹிக்கின்பாதம்ஸில் வாங்கிப் படித்த நினைவிருக்கிறது. படித்துவிட்டு வீட்டுக்கு எடுத்துப் போனால் அப்பா சண்டை பிடிப்பாரென்று அப்போது மேல வீதியில் தெற்குக் கோடியில் இருந்த ஒரு லைப்ரரிக்கு இனாமாகப் புஸ்தகத்தைக் கொடுத்து விடுவேன். இப்படிப் படித்த நாவல்கள் என்று கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலைமகளும், வஸந்த கோகிலம், பூரண சந்திரோதயம், விலாஸவதி, திகம்பர சாமியார், மேனகா இவை நினைவுக்கு வருகின்றன. ஒரு நாவல் கலைப் பிரக்ஞையுடன், சுலபமாகப் படிக்கக் கூடிய நடையுடன், விரஸமான விஷயங்களையும்கூட அதிக விரஸம் தட்டாமல் எழுதுவதில் சிரத்தையுடன் எழுதிய வடுவூரார் உண்மையிலேயே இலக்கியப் பிரக்ஞை உடையவர் என்பதில் சந்தேகத்துக்கிடமேயில்லை.

ரெயினால்ட்ஸின் மட்டமான நாவல்களைத் தழுவி எழுதினார் பெரும்பாலும் என்றாலும் அவர் விக்டர் ஹ்யூகோவின் Les Miserables என்கிற நாவலை அற்புதமாகத் தமிழில் தழுவி எழுதியிருக்கிறார். முதநூலைப் போலவே கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலைமகளும் என்கிற நாவல் அமைந்திருப்பதாகச் சொன்னால் அதில் தவறவில்லை.

அதே போல கிரேக்க புராணக் கதையான Eros and Psyche கதையை வஸந்த கோகிலம் என்கிற நாவலாகச் செய்திருக்கிறார்.

இன்று தமிழில் சரித்திர நாவல்கள் ஏராளமாக எழுதப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் முன்னோடி யாகக் கல்கியைக் கருதுவது வழக்கமாக இருக்கிறது. ஆனால், இதே அளவில் இன்று எழுதப்படுகிற சரித்திர நாவலாசிரியர்களுக்கு முன்னோடியாக 1924-ல் வெளி வந்த வடுவூராரின் விலாஸவதி என்பதைத்தான் சொல்ல முடியும். அது வெளிவந்த சமயத்தில் மிகவும் பரவ லாகப் பேசப்பட்டதுடன் படிக்கவும் பட்டது. மூன்று ஆண்டுகளில் ஐந்து பதிப்புகள் வந்ததாக ஒரு தகவல் படித்திருக்கிறேன்.

வடுவூராரின் ஆரம்பக் காலத்திய நாவல்கள் எல் லாம் மாதாந்திரப் பத்திரிகையாக வெளிவந்த மனோரஞ் சிதம் *(அல்லது மனோரஞ்சனியா?)* என்கிற பத்திரிகை யில் வெளிவந்ததாகச் சொல்வார்கள். இந்தப் பத்திரி கையைப் பார்த்திருப்பதாக எனக்கு நினைவில்லை. அந்தப் பத்திரிகையை முன்மாதிரியாகக் கொண்டுதான் வை.மு. கோதைநாயகி அம்மாள் தனது ஜகன்மோகினி நாவல் பத்திரிகையைத் தொடங்கியதாகவும் சொல்வார்கள்.

இன்னொரு விஷயமும் அப்போது பரவலாகப் பேசபட்ட விஷயம் நினைவுக்கு வருகிறது. வை.மு. கோதைநாயகியின் முதல் நாவலான வைதேகியின் முதல் பாதியை வடுவூரார் எழுதி, முன்மாதிரியாகத் தந்த தாகவும் அதைப் பின்பற்றி முடித்து விட்டு வெற்றிகர மாக வை.மு.கோ. துப்பறியும் நாவல்களிலிருந்து அவர் தனி பிராண்டான சமூக நாவல்களுக்கு நகர்ந்தார் என்றும் சொல்லுவார்கள்.

1930-ல் என்று எண்ணுகிறேன். பைகிராப்ட்ஸ் ரோடு கோடியில் மரினா பஸ் ஸ்டாண்டிற்கு எதிரே

வேங்கடரங்கம் பிள்ளை தெரு பைகிராப்ட்ஸ் ரோடைச் சந்திக்கிற இடத்தில் இருந்த வீட்டை வாங்கி வடுவூரார் புதுப்பித்து வடுவூர் ஹவுஸ் என்று பெயரிட்டு கிரஹப் பிரவேசம் நடத்தியபோது, மாலையில் பாண்ட் வாசித்துக் கொண்டிருக்கும்போது நான் சென்னையில் இருந்தேன். வீட்டைப் பார்த்து வைத்துக் கொண்டு ஒரு வாரம் கழித்து, அவரைப் பார்க்கப் போனேன். அந்த ஒரு தடவை மட்டுமே அவரை நான் சந்தித்திருக்கிறேன்.

என்ன பேசினோம் என்று நினைவில்லை. ஆனால், பேச்சு பூராவும் தன் பக்கத்தில் அவர் நாவல்களைப் பற்றி யும், அவருடைய தழுவல் முறைகளைப் பற்றியும் அவர் நடையைப் பற்றிய வரையிலும்தான் என்று நான் நினைவு கூர்கிறேன். தன் நாவல்களில் பெரும் பகுதி தழுவல்கள்தான் என்று அவர் ஏற்றுக் கொண்டார். ஆனால், மேனகாவும் திலோத்தமை என்று ஒரு ஐந்து அங்க நாடகமும் தன் சொந்த எழுத்து என்று சொல்லி எனக்கு திலோத்தமா ஒரு பிரதி அன்பளிப்பாக அளித் தார். அதை வெகுநாள் நான் பத்திரப்படுத்தி வைத்திருந் தேன்.

அதைத் தவிர அவர் பேசிய விஷயங்களிலே முக்கியமானதாக ஒன்று நினைவுக்கு வருகிறது. எகிப் தில் தலைமுறை தலைமுறையாக ஃபாரோக்கள் என்கிற பெயருடன் அரசாண்ட மன்னர்கள் தென்னாட்டிலிருந்து எகிப்து என்கிற மிசிர தேசத்துக்குச் சென்ற வடகலை அய்யங்கார்கள்தான் என்று அசைக்க முடியாத ருசு இருப்பதாகவும், அதையெல்லாம் சொல்லித் தான் ஒரு நூல் எழுதிக் கொண்டிருப்பதாகவும் சொன்னார். இந்தச் சரித்திர உண்மையில் இருந்த அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கையின் காரணமாக ஆங்கிலத்தில் Long Missing Links என்று ஒரு 900 பக்க நூல் எழுதி அதைத் தன் சொந்தச் செலவிலேயே அச்சிட்டு விற்க முயன்றார். புஸ்தகம் விற்கவில்லை. அச்சுக்கும், பேப்பருக்கும் ஆன

கடனை புதுசாக வாங்கிய வீட்டை விற்று அடைத்து விட்டு, பேசாமல் கிராமத்துக்குப் போய்விட்டார் என்று எண்ணுகிறேன். இந்தப் புஸ்தகமும் என்னிடம் வெகு நாள் இருந்தது.

'காங்கிரஸ் கமலம்' அல்லது 'ஆணென்று அணைய அகப்பட்ட பெண் புதையல்' என்கிற நாவலை சுதேச மித்திரனில் தொடராக எழுதி வெளியிட்டார். இதுதான் பழைய வடுவூர் பாணியில் அவர் கடைசி முயற்சி என்று எண்ணுகிறேன். அதற்குப் பிறகு அவர் முப்பதுகளில் பழைய வேகத்தையோ சாதனையையோ எட்டவில்லை. மாசத்துக்கு ஒரு நாவல் என்று எழுதி, நாவலுக்கு நூறு ரூபாய் என்று கூலி வாங்கிக் கொண்டு ஏழெட்டு ஆண்டு கள் இருந்து பிறகு இறந்து விட்டார் என்று எண்ணு கிறேன்.

சேலம் பட்டுக் கரை வேஷ்டியும், காதில் டால் வீசும் வைரக் கடுக்கனும், நெற்றியில் ஒரு சிவப்பு ஸ்ரீ சூர்ணக் கோடுமாகவும் நான் பார்த்த வடுவூர் துரைசாமி ஐயங்காரை என்னால் இன்றுகூட நினைவுகூர முடிகிறது. தமிழுக்கு அவர் சேவை சரியானபடி கணிக்கப்பட வில்லை; புரிந்து கொள்ளப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

— நன்றி - இலக்கியச் சாதனையாளர்கள் - க.நா.சு.

தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆரணி குப்புசாமி முதலியாரைத் தொடர்ந்து அவர் பாணியில் தழுவல்களாக எழுதியவர் வடுவூர் துரைசாமி ஐயங்கார். தழுவல் நாவல்களாயிருந்தபோதிலும் தமிழ்நாட்டு இடப் பெயர், மக்கள் பெயர்களை வைத்தே ஜனரஞ்சகமாக எழுதப்பட்டதால், இவரது நாவல்கள்தான் தமிழ்நாட்டில் ஒரு பரந்த வாசகர் உலகத்தைச் சிருஷ்டித்து வைத்தன. புத்தகம் படிக்கும் பழக்கம் இந்த நாவல்களால் ஏற்பட்டது ஒரு புற மிருக்க, கண்டமேனிக்கு கதை எழுதும் எழுத்தாளர்களை உற் பத்தி செய்யக் காரணமாய் இருந்ததும் வடுவூரார் நாவல்கள் தான். ஆக, அக்காலச் சூழ்நிலையை ஒரு விமர்சகர் பின்வரு மாறு எடுத்துக் காட்டுகிறார்:

'அச்சுப் பொறி மலிந்து காகித வர்த்தகம் பெருகி வரும் இக்காலத்தில் நாவல்களும் புற்றீசல்போல் தோன்றித் தொடங்கி விட்டன. மக்களின் ஆசாரங்கள் சீர் பெறவும், பாஷை வளர்ச்சி யுறவும் நாவல்கள் பெரிதும் உதவி புரியும் என்பது உண் மையே. ஆனால், தடியெடுத்தோரெல்லாம் வேட்டைக்காரர் என்றபடி தமிழ் உலகத்திலே இறகோட்டிகளெல்லாம் நாவ லாசிரியர்களாய் முன்வந்திருப்பதால் தற்கால நாவல்கள் பெரும்பாலானவற்றால் விளையும் தீமைகள் அற்ப சொற்ப மன்று. 'ர'கர 'ற'கரங்களைச் சரியாய் வழங்க அறியாதவர் களும் தமிழ் எழுத்தாளராகத் துணிவு கொள்வதும் தமிழ் மொழியின் சனி திசையென்றே கூற வேண்டும். ஒன்றோ இரண்டோ விட புருஷர்கள், இரண்டோ மூன்றோ நாண மற்ற கன்னியர்கள், ஒரு துப்பறியும் கோவிந்தன் அல்லது கோபாலன், ஒரு ஆகாவழி ஜமீந்தார் — தமிழ் நாவல் பூர்த்தி யாகி விடுகிறது. தற்காலத்தில் துப்பறியும் நாவல்களெல் லாம் பிற நாட்டுப் பழக்க வழக்கங்களையும் மனோபாவங் களையும் தமிழகத்தில் பரப்பித் தமிழ் மக்களை அனாசாரப் படுகுழியில் தலைகீழாக வீழ்த்துகின்றன. நாவல்களின் தன்மை இன்னதென்றறியாத தமிழ் மக்களும் இந்த நாவல் புற்றீசல்களைக் கோழி விழுங்குவதுபோல் விழுங்கித் திருப்தி அடைகின்றனர் *(லக்ஷ்மி, செப். 1924, முத்து மீனாட்சி நாவ லுக்கு மதிப்புரையில்).*

வடுவூர் துரைசாமி ஐயங்கார் ரெயினால்ட்ஸ் போன்ற ஆங்கில நாவலாசிரியர்களின் கதைகளைத் தழுவி எழுதிய தோடு நின்று விடாமல் தமிழ்நாட்டின் சமகால சமு தாயத்தைச் சித்திரிக்கும் சொந்த நாவல்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறார். இவருடைய சொந்த முயற்சிகளில் சிறந் தவை மேனகா, கும்பகோணம் வக்கீல் என்பவையாகும். கையில் எடுத்தால் புத்தகத்தைக் கீழே வைக்காமல் தொடர்ந்து படிக்கும் ரசனை மிகுந்த கதைகளை எழுதிய வடுவூர் துரை சாமி ஐயங்கார் பின்னர் கல்கி போன்றவர்களின் கதைகளைப் படிக்கத் தயாரான ஆயிக்கரணக்கான வாசகர்களைத் தோற்று வித்த முன்னோடியாகவே விளங்கினார். இந்தப் பெருமையை ஆரணி குப்புசாமி முதலியாரும், ரங்கராஜுவும் பகிர்ந்து கொண்டனர்.

துரைசாமி ஐயங்காரின் மிகப் பிரசித்தமான மேனகா என்ற நாவலின் முதல் பக்கத்திலேயே ஓர் அடிக் குறிப்பு காணப்படுகிறது:

> 'சம்பசிவையங்கார், மேனகா என்பவை உண்மைப் பெயர்களை மறைக்கும் பொருட்டு வைக்கப்பட்ட கற்பனைப் பெயர்கள்'

என்று அந்தக் குறிப்பு விளக்குகிறது. இன்றைய நாவல்களில் வரும் 'பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. உண்மை மனிதர்களையும் சம்பவங்களையும் குறிப்பிடுபவை அல்ல' என்ற சட்ட அடிப்படையில் முன்கூட்டியே விளக்கம் சொல்லிக் கொள்வது நடப்பியல் சித்திரங்களில் இன்றியமையாத நிபந்தனையாக அமைவதற்கு மாறாக, வடுவூராரின் குறிப்பு, மேனகா கதை உண்மை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த கற்பனை என்பதை உணர்த்துகிறது. மர்மங்களும் துப்பறிதலும் நுறைந்த இந்த நாவலில் வாசகர் மனதை ஈர்க்கும் சம்பவங்கள் பல கையாளப்பட்டிருக்கின்றன. உணர்ச்சி களின் உச்ச நிலையைத் தொடும் சம்பவங்களுக்கும் குறை வில்லை. பல அல்லல்களுக்குட்படும் மேனகா, ஒரு முஸ்லிம் பெண்ணின் உதவியினால் தன் கணவனை மீண்டும் அடை வது லட்சிய கதை மாந்தர்களின் செயலின் விளைவாக அமை கிறது. தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களின் சமகாலச் சூழ் நிலை 1920களில் எழுதப்பட்ட இந்த நாவலில் தத்ரூபமாக விளங்குகிறது.

வடுவூர் துரைசாமி ஐயங்கார் நாவல்களில் மேனகாவை அடுத்து மிகப் பிரசித்தி பெற்றது கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பர சாமியார் என்பது. பல மர்மங்களும், திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்த இந்த நாவலில் தஞ்சைப் பிராந்தியத்தில் அன்று நிலவிய சூழ்நிலை வருணிக்கப்படுகிறது. கதையின் ஆரம்பமே பின்வருமாறு அமைந்திருக்கிறது:

'திருக்கண்ணமங்கை என்னும் சிற்றூர் தஞ்சை ஜில்லாவிலுள்ள மிக்க இரமணியமான ஒரு ஸ்தலம். அவ்வூரில் எக்காலத்திலும் ஓயாது குயிலினங்கள் தமது தீங்குரலமுதைச் சொரிந்து கொஞ்சிக் குலாவிக் குதூகலமாக வதிந்த தென்னஞ்சோலைகளுக்கிடையில், அச்சிற்றூரின் வேளாளரது தெரு அமைந்திருந்தது. அத்தெருவினிடையிலிருந்த ஒரு பெருத்த மச்சு வீட்டின் கூடத்தில் முப்பத்தைந்து வயதுள்ள ஒரு ஸ்திரீ தென்னங்கீற்று முடைந்து கொண்டிருந்தாள். அவளது கைகள் எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தனவோ அவ்வளவு சுறுசுறுப்பாகவே அவளது வாயிலிருந்து சொற்களும் வெளிப்பட்டு பக்கத்து அறையில் வாழைப் பூவை அரிவாள்மணையில் வைத்து நறுக்கிக் கொண்டிருந்த ஓர் அழகிய பெண்மணியின் செவிகளில் தாக்கிக் கொண்டிருந்தன.'

இவ்வாறு அழகாக சில காட்சிகளை வருணிக்கும் துரைசாமி ஐயங்கார் எழுத்திலே வாசகரைக் கவரும் உத்தி எங்கும் சிறந்து நிற்கிறது. 'கல்கிக்கு முன் அவ்வளவு தெளிவுடனும், அழகுடனும் வசனம் எழுதியவர்கள் வடுவூராரைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்லி விடலாம்... தமிழ் வாசகர்களின் நாடியைப் பிடித்துப் பார்த்து அறிந்து எழுதியவர்களில் காலத்தால் முதன்மையானவர் வடுவூர் துரைசாமி ஐயங்கார்...' என்பது க.நா. சுப்பிரமணியத்தின் மதிப்பீடு *(படித்திருக்கிறீர்களா?-2)*.

வடுவூர் துரைசாமி ஐயங்காரின் செல்வாக்கைப் பயன் படுத்தி, குடும்பச் சூழ்நிலையை வைத்து, ஜனரஞ்சகமான நாவல்களை எழுதியவர் வை.மு. கோதைநாயகி அம்மாள்.

நன்றி: தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் - சிட்டி, சிவபாதசுந்தரம்.

தமிழ்த் திரையில்... முதல் நாவல்

புராணக் கதைகளும், இதிகாசக் கதைகளும், ராஜா ராணிக் கதைகளும் படமாக எடுக்கப்பட்ட தமிழ்த் திரையின் தொடக்க காலத்தில்... முதன்முதலாக நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம் மேனகா.

அந்நாளின் புகழ் பூத்த எழுத்தாளர் வடுவூர் துரை சாமி ஐயங்கார் எழுதிய நாவல் இது.

திரைப்படமாக எடுக்கப்படுவதற்கு முன்பு மேனகா நாவல், நாடகமாகவும் வடிவமைக்கப்பட்டு பல தடவை மேடையேறி புகழ் பெற்றது. அப்போது, நடிகர் எம்.கே. ராதாவின் தந்தையார் எம். கந்தசாமி முதலி யார், மேனகா நாடகத்திற்கு வசனம் எழுதினார் *(டி.கே. சண்முகம் சகோதரர்கள்தான் இந்நாடகத்தைத் தயா ரித்து வழங்கியவர்கள்).*

1935-இல் மேனகா நாவலைப் படமாக்கிய பொழுது அதில் டி.கே. பகவதி, டி.கே. சண்முகம், என்.எஸ். கிருஷ்ணன், டி.கே. சங்கரன், எஸ்.வி. சகஸ்ரநாமம், கே.ஆர். ராமசாமி, டணெ். சிவதாணு ஆகியோர் நடித்தனர். இவர்கள் அனைவருக்கும் இதுவே முதல் படம் என்பதும் குறிப்பிடத் தக்க செய்தி. எம்.எஸ். விஜயா, கே.டி. ருக்மணி ஆகியோரும் நடித்த இப் படத்தை இராஜா சாண்டோ இயக்கினார். பாரதி யாரின் பாடல் முதன் முதலாக ஒலித்த படம் என்ற வர லாற்றுப் பெருமையும் மேனகா படத்தையே சேரு கிறது.

நன்றி - பதிப்புத் தொழில் உலகம், ஜூலை 2004

வஸந்தமல்லிகா

1—வது அதிகாரம்

பேய்களும் பெண்மானும்

சோழ மன்னர்களும் மகாராஷ்டிர அரசர்களும் தமிழ்நாட்டை ஆண்ட காலத்தில், அவர்களது இராஜதானியாயிருந்து பெருமை பெற்ற தஞ்சைபுரிக்குக் கிழக்கில் நான்கு மைல் தூரத்திலுள்ள **பவானியம்பாள்புரம்** என்னும் சிற்றூர் மிக்க இரமணீயமான ஒரு ஸ்தலம். தஞ்சையிலிருந்த அரசப் பெருமாட்டிகள் படகுகளில் அமர்ந்து விளையாடி வேடிக்கையாகப் பொழுதுபோக்கும் பொருட்டு தஞ்சைக்கும் பவானியம்பாள்புரத்திற்கும் மத்தியில் நான்கு மைல் நீளம் அரை மைல் அகலத்தில் வெட்டப்பட்டு சமுத்திரம் என்று அழைக்கப்பெற்ற பெருத்த ஏரியில் எக்காலத்திலும் வற்றாத தெளிந்த தண்ணீர் நிறைந்திருக்கும்.

அந்தச் சமுத்திரத்தின் கிழக்குக் கரையின் மேலுள்ள பவானியம்பாள் புரத்தின் இயற்கையழகும்; எங்கு நோக்கினும் காணப்படும் தோப்புகளும், சோலைகளும், தாமரைத் தடாகங்களும், ஓடைகளும், உன்னதமாக அமைக்கப்பெற்ற தேவாலயங்களும், திருக்குளமும், தேர்களும், அழகிய நீண்ட வீதிகளும் காண்போர் கண்களையும் மனத்தையும் ஒருங்கே கவர்ந்தன. பவானியம்பாள் புரமும், வேறு 35–கிராமங்களும் **பரசுராம பரவா** என்னும் மகாராஷ்டிரச் சீமானினது ஜெமீன் சமஸ்தானம். அவருக்கு தஞ்சையில் ஒரு பெருத்த மாளிகையிருந்ததாயினும், பவானியம்பாள் புரத்தின் மேற்குக் கோடியில் சமுத்திரக் கரையின்மீது நான்கு பக்கங்களிலும் பூஞ்சோலையாற் சூழப்பெற்ற விசாலமான ஒரு மாளிகை இருந்தது. அவர் அடிக்கடி அங்கே தங்கி இனிமையாய்ப் பொழுதுபோக்கும் பொருட்டு அந்த மாளிகை அமைக்கப் பெற்றிருந்தது.

இத்தகைய மேம்பாடுகள் நிறைந்த சிற்றூரின் மேலை வீதியிலிருந்த ஒரு வீட்டின் கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த பாயில்

ஒருநாட் பிற்பகலில் இரண்டு மகாராஷ்டிரப் பெண்கள் உட்கார்ந்து புதிய உடைகள் தைத்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கெதிரில் பற்பல நிறங்களையுடைய சீட்டித் துணிகளும், வெல்வெட்டுத் துணிகளும், கிழிபட்ட துண்டங்களும், தைப்பதற்குரிய கருவிகளும் அலங்கோலமாய்க் கிடந்தன. சகோதரிகளான அவ்விரண்டு பெண்களில் மூத்தவளுக்கு 17–வயதும், சிறியவளுக்கு 14–வயதும் இருக்கலாம் ஆயினும், இருவரும் தசைப்பிடிப்பற்ற மாநிறமான சரீரத்தைக் கொண்டவராயும், அதிக அழகானவர்கள் என்று சொல்வதற்கு அருகமற்றவராயும் இருந்தனர்.

அவர்கள் தமக்குள் அடியில் வருமாறு சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

''ஓர் அடி தூரத்திலிருக்கும் சமுத்திரத்திற்குப் போய் ஜலங் கொண்டுவர இவ்வளவு நேரமா! இவள் என்ன பெண்பிள்ளை! புருஷன் வீட்டில் இவள் எப்படிக் குப்பைகொட்டி வாழப் போகிறாள்? போன அன்றைக்கிருந்து புதனன்றைக்கே திரும்பி வந்துவிடுவாள்'' என்று அருவருப்புடன் **கமலாபாயி** தனது தங்கையை நோக்கிக் கூறினாள். ''இவள் புருஷன் வீட்டுக்குப் போனாலல்லவா அந்தக் கவலை! போகும்போது பார்த்துக் கொள்ளலாம்'' என்றாள் **ஸீதாபாயி.**

கமலா : குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு சமுத்திரக் கரைக்குப் போய்விட்டால், இவளுக்கு இது பூலோகமோ கைலாசமோ என்னும் சந்தேகம் வந்துவிடுகிறது. யானை தீவாந்தரத்தை நினைத்துக்கொள்வதைப் போலத் தன்னுடைய உடம்பையே மறந்துவிடுகிறாள். வீட்டுக்கு வரவேண்டும் என்பதையும், இடுப்பிலிருக்கும் குடத்தையும், தான் வந்த காரியத்தையும் கூட மறந்துவிடுகிறாள்.

ஸீதா : இன்னம் கொஞ்சகாலம் போனால் தன்னுடைய இடுப்பிலிருக்கும் பாவாடையைக்கூட மறந்துவிடுவாள்.

கமலா : நம்முடைய அப்பா வருவதற்குள் இந்தத் துணிகளையெல்லாம் எடுத்து மடித்து வைத்துவிட்டு, வீட்டைப் பெ‌ருக்கிச் சுத்தி செய்ய வேண்டுமென்றும், பொழுது போய்விட்டபடியால் சீக்கிரம் வரவேண்டுமென்றும் நான் எத்தனையோ தரம் படித்துப் படித்துச் சொன்னேன்; இவள் தன் வழக்கப்படியே


செய்துவிட்டாள்; இதெல்லாம் இவளுக்கு நம்முடைய அப்பா கொடுக்கிற இடமல்லவா! யாரோடு பேசினாலும் இவள் குழந்தையைப் போலக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்போது எனக்கு எவ்வளவு எரிச்சலுண்டாகிறது தெரியுமா? அப்படியே இவளுடைய கன்னத்தில் ஓங்கிப் பளீரென்று அடிக்க வேண்டு மென்னும் எண்ணம் உதிக்கிறது.

ஸீதா : நம்முடைய அப்பாவுக்கு இவள்மேல் அவ்வளவு பிரியம் உண்டாவதற்குக் காரணமென்ன? அவர் ஏன் இதை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கிறார்?

கமலா : அப்பா இவளிடத்தில் பிரியமாயிருப்பதாக வெளிக்கு மாத்திரம் காட்டுகிறாரேயொழிய உண்மையில் அவருக்கு இவளிடத்தில் பிரியமில்லை; வெறுப்புதான்.

ஸீதா : அப்படியானால், மனசுக்குப் பிடிக்காத கழுதையை ஏன் நம்முடைய வீட்டில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்?

கமலா : ரகஸியம் உனக்குத் தெரியாது. அதனால் நீ இப்படிப் பேசுகிறாய். நம்முடைய அப்பாவும் இவளுடைய தகப்பனும் பூனாதேசத்து அரண்மனையில் ஒரே இடத்தில் வேலையிலிருந்த சிநேகிதர்கள். இவளுடைய தகப்பன் இறந்தபோது, இவள் குழந்தையாயிருந்தாள். இவளுக்குத் தாய் முதலிய பாதுகாப்பவர் எவருமில்லாமையால் இவளுடைய தகப்பன் இவளை நம்முடைய அப்பாவிடத்தில் ஒப்புவித்தான்; அவனுக்கிருந்த சொத்துக்களை, பங்காளிக்குப் பயந்து நம்முடைய அப்பாவின் பேரில் எழுதி வைத்தான். அதிலிருந்து வரும் வட்டிப் பணத்தை வாங்கி இவளுடைய செலவுக்கு வைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு அவன் இறந்து போனான். இவளுக்கு அதனால் மாசம் ஒன்றுக்கு 35-ரூபா வருமானங் கிடைக்கிறது. நம்முடைய அப்பாவுக்கு வயதாய்விட்டதென்று உபகாரச் சம்பளத்துக்குப் பதிலாக இந்த ஊரில் விடப்பட்டிருக்கும் மானிய நிலம் நமக்குப் போதாததாயிருப்பதால், இவளுடைய பணமில் லாவிட்டால் நம்முடைய காலக்ஷேபம் நடப்பது கடினம். தவிர, இவள் நம்முடைய வீட்டில் வேலைக்காரி வைக்க வேண்டிய அவசியமில்லாமல் எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு உபயோகப்படுகிறாள். இவைகளை உத்தேசித்தே நம்முடைய



கமலாபாயி ஸீதாபாயி மல்லிகா

அப்பா இவளிடத்தில் கொஞ்சம் அன்பைக் காட்டுகிறார். அதனால் இவளுக்குக் கொழுப்பு ஏறிவிட்டது. தன்னைக் கண்டிப்பதற்கு ஒருவருமில்லையென்று நினைத்துக் கொண்டாள் போலிருக்கிறது. புஷ்பவதியான பெண் இப்படிக் கண்ட இடத்தில் தன்னிச்சைப்படி நிற்கலாமா? இன்றைக்கு அப்பா வந்தவுடன் அவரிடத்தில் எல்லாவற்றையும் நாம் சொல்லிவிட வேண்டும்.

ஸீதா : இவள் அப்பாவை மாத்திரமா மயக்குகிறாள்? இவளைப் பார்ப்பவர் எல்லோரும், ''இந்தப் பெண் யார்? இவளுக்குக் கலியாணம் ஆகிவிட்டதா?'' என்று இவளைப் பற்றிக் கேட்கிறார்களேயொழிய நம்மைக் கண்ணெடுத்தும் பார்க்கிறதில்லையே! நம்மிடத்தில் இல்லாத விசேஷம் இவளிடத்திலென்ன இருக்கிறது?

கமலா : துடைப்பக் கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் கட்டியதைப் போல மல்லிகாபாயி என்று டம்பமாகப் பெயர் வைத்துக் கொண்டிக்ருகிறாளல்லவா? அதுதான் விசேஷம். வெறும் பெயரைத் தவிர வேறு என்ன யோக்கியதை இருக்கிறது? ஒன்றுமில்லை.

ஸீதா : இரண்டு கண்ணுமவிந்த குருடனைக் கமலக்கண்ணனென்று கூப்பிடுவதைப் போலிருக்கிறது.

கமலா : நாயை 'ரோஜா' வென்று அழைப்பதனால் அதன் துர்நாற்றம் மாறி, அதன்மேல் ரோஜாவின் மணமுண்டாகுமா? ஒரு நாளுமில்லை. வரப்போகும் தீபாவளிப் பண்டிகையில் இவளுடைய வாயில் மண்ணைப் போட்டுவிடுகிறேன். அதுதான் இவளுடைய அகம்பாவத்துக்குத் தகுந்த தண்டனை.

ஸீதா : காலடிச் சத்தம் கேட்கிறது; வந்துவிட்டாள்.

உடனே அவ்விரு மங்கையரும் தமது சம்பாஷணையைத் திடீரென்று நிறுத்திவிட்டு ஒன்றையும் அறியாதவரைப் போலக் குனிந்தவண்ணம் தைத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, இடையில் வைத்த தண்ணீர்க் குடத்தோடும், தளர்ந்த நடையோடும், புன்னகை பூத்த முகத்தோடும், மங்கைப்

பருவமடைந்த அழகிய ஒரு சிறுமி உள்ளே நுழைந்தாள். அவ்வாறு வந்தவளது தோற்றத்திற்கும் மற்ற இருவரின் தோற்றத் திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமலிருந்தது. மல்லிகா ஓர் இராஜஸ்திரீயைப் போலவும், மற்றவர் அவளுக்குப் பணிவிடை செய்யும் சேடியரைப் போலவும் காணப்பட்டனர். மல்லிகாவின் காந்தியும், கட்டழகும், யௌவனமும், முகவசீகரமும், கம்பீரமும் காண்போரது மனதைக் கவர்ந்தன.

அவ்வாறு நுழைந்த மடமங்கை உட்புகுந்து குடத்தை அறைக்குள் வைத்தபின் கூடத்திற்கு வந்து, அன்பும் புன்னகையும் அரும்பிய முகத்தோடு கமலாவை நோக்கி, ''அக்கா! இவ்வளவு நேரம் வைத்தால் கண்ணும் கழுத்தும் நோகுமே. இன்றைக்கு இவ்வளவோடு நிறுத்துங்களேன். கொஞ்சம் கொஞ் சமாக ஆகட்டுமே; என்ன அவசரம்? பொழுதும் போய் விட்டதே?'' என்றாள்.

கமலா : மல்லிகா! இப்போதுதான் ஆகாயத்திலிருந்து குதித்து வந்தவள்போலப் பேசுகிறாயே! தீபாவளிப் பண்டிகை சமீபத்தில் வந்துவிட்டதென்பதை மறந்துவிட்டாயா? அதற்குள் பாவாடைகளும் ரவிக்கைகளும் தைத்தாக வேண்டாமா? உனக்கு நல்ல உடைகள் ஏராளமாக இருப்பதால் உனக்கு இதில் கவலையே இல்லை.

ஸீதா : (ஆத்திரமாக) அப்பா வருவதற்குள் இவைகளை யெல்லாம் எடுத்துவிட்டு வீட்டைச் சுத்தி செய்ய வேண்டுமென்று சொன்னதற்குத்தான் நீ இவ்வளவு சீக்கிரமாக வந்தாயோ?

கமலா : ஸீதா! நீ சுத்த முட்டாள்! இவளுடைய அழகென்ன அற்பமானதா! தன்னுடைய அலங்காரத்தைக் குனிந்து நிமிர்ந்து பார்த்துக் கொண்டு, குலுக்கி மினுக்கி நடப்பதற்கு நேரமாகாதோ?

ஸீதா : இவள் கோணிக் குலுக்கி நடந்ததில் கழுத்திலும் இடுப்பிலும் சுளுக்குண்டானதே யொழிய எந்தப் புருஷனும் இவளைக் கண்டு மயங்கவில்லையே! ஏன் இப்படி வீண் பாடுபட வேண்டும்?

என்று அவ்விரு ஸ்திரீகளும் பொறாமையையும் ஆத்திரத்தையும் காட்டிய மொழிகளைக் கூறி மல்லிகாவை ஏளனம் செய்தார்கள்.

அந்தப் பெண்மணி, அவர்களது கடுமொழிகளை மனதில் வாங்காமல், புன்சிரிப்பும், பொறுமையும் ஜ்வலித்த முகத்தோடு, ''ஸீதா! நான் சீக்கிரமாக வரவேண்டுமென்னும் எண்ணத்தோடு குடத்தை எடுத்துக் கொண்டு வேகமாய் நடந்து வந்தேன். அவசரத்தில் காலில் ஒரு கல் அடிபட்டது; உடனே இரத்தம் பெருகியது; நொண்டிக்கொண்டு வந்து சேர்ந்தேன். இதோ பார் காயத்தை'' என்று தனது காலிலிருந்த ஒரு காயத்தைக் காண்பித்துவிட்டு, அங்கே கிடந்த துணித் துண்டுகளையும் மற்ற பொருட்களையும் எடுத்து ஒழுங்காய் வைக்கத் தொடங்கினாள். அப்போது தனது கையில் அகப்பட்ட ஒரு வெல்வெட்டு ரவிக்கையின் ஒரு பாகத்தை அவள் எடுத்து அதில் தனது வலது கரத்தைப் புகுத்தி அதை அவர்களுக்குக் காட்டி, ''அக்கா! இது எனக்கு எப்படி இருக்கிறது பாருங்கள்!'' என்று குதூகலத்தோடு கேட்டாள்.

பளபளவென மின்னும் சுவர்ணத்தைப் போலிருந்த அந்த மின்னாளின் நிறத்திற்கு அந்த இரவிக்கை மிகவும் பொருந்தி யிருந்தமையால், அவளது அழகு முன்னிலும் ஆயிரமடங்கு சிறந்து தோன்றியது. அதைக் கண்டவுடன் கமலாவுக்கு உண்டான பொறாமைக்கு அளவேயில்லை; உடனே அவளைப் பார்த்து ''வெறும் உடம்பின் அழகில் மயங்கி வந்ததனால் காலில் கல் அடித்தது. இன்னும் வெல்வெட்டு ரவிக்கை போட்டுக் கொண்டால் பிறகு குடத்துக்கும் ஆபத்து வந்துவிடும். அப்புறம் புதுக்குடம் வாங்க அப்பாவிடம் இப்போது கையில் பணங்கூட இல்லை'' என்றாள் கமலா.

''மல்லிகா எவ்வளவோ பாடுபட்டுப் பார்க்கிறாள். ஒரு பாவியாவதும் அவளைக் கலியாணம் செய்துகொள்ள வர மாட்டேனென்கிறான்! வந்திருந்தால் அவளுக்கு இப்போது தீபாவளிக்கு வெல்வெட்டு ரவிக்கை வாங்கிக் கொடுத்திருப் பான்'' என்று குத்தலாக மொழிந்தாள் ஸீதா.

இவ்விதமாக அவ்விரு மகளிரும் இடித்திடித்துப் பேசிய மொழிகள் மல்லிகாவின் மனதில் சுருக்கென்று தைத்தன வாயினும், அவர் தனது வருத்தத்தை அடக்கி முகத்தில் எவ்வித மாறுபாடும் காட்டாமல் உடனே அந்த இரவிக்கையைக் கழற்றிவிட்டு யாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்தாள்.

அப்போது துக்கோஜிராவ் உள்ளே நுழைந்தான். அவன் சுமார் 45–வயதடைந்தவனாயும், நல்ல திட சரீரம் உடையவனாயும் காணப்பட்டான். அவனது கடுகடுத்த முகம் அவன் நிரம்பவும் முன்கோபம் உடையவனென்பதை நன்றாகத் தெரிவித்தது. தாறுமாறாய்க் கிழிபட்டுக் கிடந்த துணிகளைப் பார்த்து, ''கமலா! இதென்ன அமர்க்களம்! ஜவுளிக்கடையே இங்கே வந்துவிட்டாற் போலிருக்கிறதே! நான் கொடுத்த பணத்துக்கெல்லாம் துணிகளையே வாங்கிவிட்டீர்களா? கையில் பணமில்லாமல் நான் தவிக்கும் போது, குழந்தைகள் சந்தோஷமாய்ப் பண்டிகை கொண்டாடட்டுமென்று, இருந்த பணத்தை யெல்லாம் கொடுத்தேன். அதையெல்லாம் துணியில் செலவழித்துவிட்டால், மற்ற காரியங்களுக்கென்ன செய்கிறது? கமலா! உனக்கு இவ்வளவு வயதாயும் நீ என்னுடைய கஷ்ட நிஷ்டூரங்களை அறிந்து நடக்கவில்லையே!'' என்றார் துக்கோஜிராவ்.

கமலா : (அலட்சியமாக) அப்பா! உம்மிடம் பணமிருந்த நாளேது? நாங்கள் எதைக் கேட்டாலும் பணமிருக்கிறதில்லை. மல்லிகா பணம் வேண்டுமென்றால் உடனே அது வந்துவிடும். நாங்கள் தாயில்லாத பெண்கள்தானே! நாங்கள் ஒரு பொருட்டா! பணமில்லாவிட்டால் பண்டிகை செய்ய வேண்டாமே. நிறுத்தி விடுவோமே?

ஸீதா : (விசனமாக) அம்மா உயிரோடிருந்தால் இப்படி நடக்குமா? வருஷத்துக்கு ஒருநாள் பண்டிகை வருகிறது; அதற்கு ஏதோ உபயோகமற்ற இரண்டு சீட்டித் துணிகளை வாங்கிக் கொண்டால், அதைப் பார்க்கச் சகிக்கவில்லையா?

கமலா : ஊரில் ஒவ்வொருவரும் தம்முடைய பெண்களுக்கு ஆயிரம் இரண்டாயிரத்துக்கு ஆடையாபரணங்கள் வாங்கிக் கொடுத்து புருஷன் வீட்டுக்கு அனுப்புகிறார்கள்; எங்களுக்கு ஒன்றுமில்லை, மாட்டுக்கு வைக்கோல் போடுவதைப் போல எங்களுக்கு ஒரு வயிறு சோறு போட இவ்வளவு பாடாயிருந்தால், நாங்கள் சமுத்திரத்தில் விழுந்து உயிரை விட்டு விடுகிறோம். அதன் பிறகு வருமானமெல்லாம் மிகுதியாய்ப் போகும் – என்று கண்ணீர் ததும்பிய கண்களுடன் மொழிந்தாள்.

துக்கோஜி : (விசனமாக) அம்மா கமலா! ஸீதா! கோபித்துக் கொள்ள வேண்டாம். என்னுடைய தரித்திரக் கொடுமையைப் பொறுக்க முடியாமல் நான் இவ்விதம் சொன்னேனேயொழிய உங்களுக்குச் செய்யக் கூடாதென்னும் லோபித்தனத்தினால் அல்ல. எனக்கு உங்களைத் தவிர வேறு யாரிருக்கிறார்கள்? உங்களுக் கில்லாமல் யாருக்குச் சேர்க்கப் போகிறேன்? போனது போகட் டும். இதோ 5–ரூபாய் இருக்கிறது. இதை நம்முடைய நிலக் குத்தகைக்காரன் இன்று தற்செயலாய்க் கொடுத்தான். இதை வைத்துக் கொண்டு மற்ற காரியங்களைச் செய்து கொள்ளுங்கள் – என்று கமலாவிடத்தில் பணத்தைக் கொடுக்க, பெண்களின் கோபம் தணிந்தது, அவர்களது முகத்தில் புன் சிரிப்பும் அன்பும் தோன்றின.

கமலா : அப்பா! பணமில்லை, பணமில்லையென்று ஏன் வீணில் கவலைப்பட வேண்டும்? நமக்கு வேண்டிய பணம் சமயத்தில் எங்கிருந்தாவது வந்துசேரும். உமக்கு லட்டுவின் மேல் நிரம்பவும் ஆசையல்லவா? பண்டிகைக்கு அதைத்தான் செய்யப் போகிறேன்.

ஸீதா : நம்முடைய ஜெமீந்தாரின் பங்களாக் காவற்கார னிடத்தில் அதன் திறவுகோலை வாங்கிக் கொண்டால், பண்டி கையன்று சாயுங்காலம் சமுத்திரத்துக்கும் பங்களாவுக்கும் மத்தி யிலுள்ள சோலையில் நாம் உட்கார்ந்துகொண்டு பலகாரங்களை வேடிக்கையாகத் தின்றுவிட்டு வரலாம்.

துக்கோ : ஓகோ! உங்களுக்குச் சமாசாரம் தெரியாதோ?

கமலா : என்ன விசேஷம்? அப்பா!

துக்கோ : இறந்துபோன நம்முடைய ஜெமீந்தார் இந்த சமஸ்தானத்தை யாருக்கு எழுதி வைத்திருக்கிறாரோ என்பதைப் பற்றி நாம் இதுவரையில் சந்தேகித்துக் கொண்டிருந்தோம் அல்லவா?

ஸீதா : ஆம்; யாருக்குக் கொடுத்துவிட்டார்?

துக்கோ : அவருக்குக் குழந்தைகள் இல்லாதபடியால் பூனா தேசத்திலிருக்கும் அவருடைய பங்காளியான வஸந்தராவுக்கு எல்லாம் சேர்ந்துவிட்டதாம். அவர் நேற்று தஞ்சைக்கு வந்து

சொத்துக்களையெல்லாம் ஒப்புக்கொண்டாராம். அவர் இன்று காலையில், நம்முடைய ஊரிலுள்ள பங்களாவைப் பார்க்க வேண்டும் என்று வந்திருக்கிறார். அவர் யார் தெரியுமா உனக்கு? நாம் பூனாவில் இருந்தபோது வந்து உன்னோடு விளையாடிக் கொண்டிருப்பாரே அவர்தான்.

கமலா : ஓகோ! அப்படியா! அவரைப்பற்றி எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறதே!

துக்கோ : இன்று நான் அவரைப் பார்த்தேன். அவர் என்னைக் கண்டு மிகவும் சந்தோஷமடைந்தார்; இங்கே இன்னும் சில நாட்களிருந்து ஊர்களை எல்லாம் சுற்றிப் பார்க்கப் போகிறாராம். நாம் மூவரும் இனி அடிக்கடி பங்களாவுக்கு வரவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

கமலா : அப்படியா! நிரம்ப சந்தோஷம். இதற்கு முன்னிருந்த ஜெமீந்தார் நம்மை மதித்துப் பேசியதுகூடக் கிடையாது! என்ன நமது பாக்கியம்! அப்படியானால் நாம் பண்டிகையன்று பங்களாவுக்குப் போக வேண்டும்.

ஸீதா : அப்பா! அவருக்கு மனைவி குழந்தைகள் இருக்கிறார்களா? அவர்கள் எப்போது வருவார்கள்?

துக்கோ : அவர் மிகவும் பாவியரல்லவா. அவருக்கு இன்னம் கலியாணமே ஆகவில்லையே. இனிமேலேதான் அவர் மனதுக்குப் பிடித்த ஒரு பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்துகொள்வார். ஆனால், அவர் இந்தத் தேசத்திலிருப்பாரோ, பூனாவுக்கே போய்விடுவாரோ தெரியவில்லை. நாம் அவரிடம் அடிக்கடிப்போய் நட்புண்டாக்கிக் கொண்டால், அதனால் பல சௌகரியம் ஏற்படும். இதுவும் நம்முடைய அதிர்ஷ்ட காலந் தான். அதிருக்கட்டும்; உங்களுக்கெல்லாம் உடைகள் தைத்துக் கொள்ளுகிறீர்களே; மல்லிகாவுக்கு ஏதாவது கொடுத்தீர்களா?

கமலா : அவளுக்கென்ன அவசரம்? எங்களுக்குத்தான் நல்ல உடைகளில்லை. அவள் ஜதை ஜதையாகப் பாவாடையும் தாவணியும் வைத்துக் கொண்டிருக்கிறாளே! இப்போது புது ஜெமீந்தார் வந்திருக்கிறார். அவரைப் பார்க்க நாம் பங்களா வுக்குப் போகும்போது நல்ல உடைகளில்லாவிட்டால் அவர் நம்மைக் கேவலம் அற்ப மனிதராக மதிப்பார். அடுப்பண்டை

யிலிருப்பவளுக்கு இப்போதிருக்கும் துணி போதாதோ? பின்னால் வேண்டுமானால் பார்த்துக் கொள்வோமே.

ஸீதா : அவள்தான் சிவப்பாகவும் அழகாகவும் இருக்கிறாளே! அவளுக்குப் புதிய உடைகள் எதற்காக? நாங்கள் இரண்டு பேரும் கட்டிக் கழிக்கும் பழைய பாவாடையைக் கட்டிக் கொண்டாலும் அது ஏராளமாய்ப் போய்விடுமே. அதைப்பற்றிக் கவலை எதற்கு?

துக்கோ : சே! அப்படிச் சொல்லாதே; அவளும் உங்களைப் போலக் குழந்தைதானே. அவளுக்கும் ஏதாவது ஒன்று கொடுங்கள் – என்றான்.

அங்கே நடந்த சம்பாஷணையையெல்லாம் அடுத்து அறையிலிருந்தவண்ணம் கவனித்திருந்த மல்லிகா மெதுவாகக் கூடத்திற்கு வந்தாள். அவளைக் கண்ட துக்கோஜிராவ் புன்சிரிப்போடு, ''மல்லிகா! தீபாவளிக்கு உனக்கு என்ன வேண்டும்?'' என்றான். அதைக்கேட்ட மல்லிகா சிறிது நாணமடைந்து குனிந்த தலையோடு ''எனக்கு வேறொன்றும் வேண்டாம். கமலாவுக்கு தைக்கிற வெல்வெட்டு ரவிக்கைபோல ஒன்று வேண்டும். உங்களிடத்தில பணமில்லாவிட்டால், எனக்கு வட்டிப்பணம் கொடுக்க வேண்டியவர்களைக் கேட்டால், உடனே கொடுப்பார்கள்'' என்று தணிந்த குரலில் மறுமொழி கூறினாள்.

துக்கோ : அம்மா! மல்லிகா! உனக்குச் செய்ய வேண்டுமென்பது எனக்குத் தெரியாதா? வட்டிப்பணம் கொடுக்க வேண்டியவர்களைக் காலையிற் கண்டு கேட்டேன்; இன்னம் இரண்டு மூன்று நாட்கள் ஆகவேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். நான் என்ன செய்வேன்? என் கையில் ஒரு செப்புக்காசுமில்லை. கொஞ்சம் பொறுத்துக்கொள். பணம் வந்தவுடனே உன் ஆசையைப் பூர்த்தி செய்கிறேன் – என்றான். ''அப்படியே ஆகட்டு'' மென்று சொல்லிவிட்டு மல்லிகா வீட்டுக் காரியங்களைச் செய்யும் பொருட்டு உள்ளே சென்றாள்.

சிறிது நேரத்திற்கு முன் துக்கோஜிராவ் தனது பெண்களிடம் தயாள குணத்துடன் கொடுத்த 5 ரூபாயும் அன்று காலையில் வசூல் செய்யப்பட்ட மல்லிகாவின் வட்டிப் பணமே. அதை அவளிடம் சொல்லாமல் மறைத்து அவளை ஏமாற்றினான்.

அன்றிரவு போஜனம் செய்து சயனித்துக்கொள்ளும் வரையில் கமலா ஸீதா ஆகிய இருவரும் பெரிதும் குதூகலமடைந்தவராய்ப் புதிய ஜெமீந்தாரைப் பற்றியும், பண்டிகைக்குச் செய்ய வேண்டுவதைப் பற்றியும் ஓயாமல் பன்னிப்பன்னிப் பேசிப் பிதற்றிக் கொண்டிருந்தனர். இரவு 9–மணி நேரமாயிற்று. இருவரும் படுத்துக் குறட்டைவிட்டு நித்திரை செய்யத் தொடங்கினார்கள். துக்கோஜிராவ் தனது வழக்கப்படி ஒரு தலையணையை எடுத்துக் கொண்டு அடுத்த திண்ணையில் படுத்துக் கொள்ளச் சென்றான். வீட்டுக் காரியங்களனைத்தையும் முடித்த பிறகு மல்லிகா தன்னை அவர்கள் காணாவண்ணம் மெதுவாக வீட்டை விட்டு வெளிக் கிளம்பி, சமுத்திரக் கரையை நோக்கி நடந்தாள்.

2–வது அதிகாரம்

வேடன்வலைப் பேடன்னம்

ஜெமீந்தார் பரசுராமபாவாவின் பங்களாவானது பவானியம்மாள்புரத்தின் மேற்குக் கோடியில் சமுத்திர கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அது பெருத்த அரண்மனை போல எண்ணிறந்த மாடங்களையும், கூடங்களையும், உப்பரிகைகளையும் கொண்டதாய், மிகுந்த அழகும் கம்பீரமும் தோன்ற நின்றது. அதற்கு, சமுத்திரத்தைப் பார்த்தவண்ணம் ஒரு வாசலும் அந்த வாசலுக்கு எதிர்புறத்தில் முன்வாசலுமிருந்தன. இரண்டு வாசல்களிலிருந்தும் கீழே இறங்கச் சலவைக் கற்களால் அமைக்கப்பட்ட 15–படிகளும், படிகளின் இருபுறங்களிலும் ஒற்றைக் கல்லினால் செதுக்கி நிறுத்தப்பெற்ற பெருத்த யானைகளும் இருந்தன. சமுத்திரத்தை நோக்கிய பக்கத்தில் மாளிகைப் படியிலிருந்து தண்ணீர் நிலை வரையில் பூஞ்சோலையிருந்தது. முடிவில், தண்ணீரில் இறங்கி விளையாடும் பொருட்டு படித்துறை ஒன்றிருந்தது. பங்களாவின் மற்ற மூன்று பக்கங்களிலும் விநோதமாக அமைக்கப்பட்டிருந்த அடர்ந்த தோட்டமிருந்தது. அந்த மாளிகை எப்போதும் பூட்டப் பெற்றிருப்பினும் அதன் தோட்டத்து வாசல் மாத்திரம் திறக்கப்பட்டிருப்பது வழக்கம். ஆதலால், அந்தச் சிற்றூ[illegible]கள் அனைவரும் சுயேச்சையாக அதற்குள் நுழைந்து சந்தோ[illegible]யிருந்து விட்டுப்போவதுண்டு.

நமது மல்லிகா துக்கோஜிராவின் வீட்டில் அவர்களுடன் இருக்கையில் நிரம்பவும் சந்தோஷத்துடன் இருப்பதாய்க் காணப்பட்டாள். ஆயினும், பகல் முழுவதும் தன் மனதில் மறைந்து கிடந்த விசனத்தை வெளியிடும் பொருட்டு அவள் அப்போதைக் கப்போது இரவில் வெளிக்கிளம்பி, அருகிலிருந்த சமுத்திரக் கரைக்குப் போய் பங்களாவிற்குள்ளிருக்கும் மணல் நிறைந்த கரையில் உட்கார்ந்துகொண்டு சிந்தனை செய்து, கண்ணீர்

விடுத்துக் கலங்கிப் பொழுதைப் போக்கி நெடிய நேரங் கழித்த பின் திரும்பி வீட்டிற்கு வருவது வழக்கம்.

முன்கூறப்பெற்ற இரவில் வீட்டைவிட்டுப் புறப்பட்ட மல்லிகா சமுத்திரக் கரையை அடைந்தாள். அந்த சுந்தரி இருளில் வழியை அறியாமல் தத்தளிப்பாளென்று நினைத்து அவளது பரிதாப நிலைமையைக் கண்டிரங்கி அவளுக்கு நிலவை உதவி வழிகாட்டி இன்பமூட்டவேண்டும் என்னும் நோக்கத்துடன் வந்ததைப் போல குளிர்ந்த சந்திரன் அப்போதே வானத்தில் தோன்றினான். அவனது கிரணங்கள் சமுத்திரத்தின் நீரில் படியவே தண்ணீர் முழுதும் பொன்னீராய் மாறிப் பளபள வென்று மின்ன ஆரம்பித்தது. அலைகள் மிகுந்த கோபத்தோடு கிளம்பி கரையில் மோத ஆரம்பித்தன. தென்றல் காற்றினால் தாலாட்டப் பெற்றுத் துயில்வனபோல, மரம், செடி, கொடிகள், பட்சிகள் முதலிய யாவும் சிறிது சிறிது அசைந்து மோன நிலையிலிருந்தன. அந்த விநோதக் காட்சியில் மனதைச் செலுத்தி அதில் ஈடுபட்டவளாய் மல்லிகா கரையோரமாக அடிமேலடி வைத்து நடக்க ஆரம்பித்தாள். துக்கோஜிராவின் வீட்டிலிருப் பதை விட சமுத்திரக்கரையோரமே அவளுக்குத் தாய் வீடு போலப் பேரின்பம் ஈந்தது. புண்பட்ட அவளது மனத்திற்கு அந்த இனிய காட்சியே ஆறுதலையும் மனவமைதியையும் உண்டாக்கியது.

அவ்வாறு அவள் சிறிது நேரம் இன்புற்றிருந்த சமயத்தில், அவளது மனதில் தனது ஆதரவற்ற நிலைமையும், தானடைந்த துன்பங்களும் ஒன்றின்பின் ஒன்றாய்த் தோன்றின. தனது தந்தையின் ஞாபகமாத்திரம் அவளுக்கு நன்றாய் உண்டானதேயன்றி, தனது தாய் எப்படி இருந்தாளென்று தன் மனதில் பாவிப் பதற்குக்கூட அவள் வல்லமையற்றவளாய் இருந்தாள். தன்னை ஈன்ற சமயத்தில் தனது தாய் இறந்துபோய் விட்டாளென்பதை மாத்திரம் அவள் கேள்வியுற்றிருந்தாள். தான் திக்கற்றவளாயும், உறவினரென்று சொல்லிக்கொள்வதற்கு வேறெந்த மனித ரையும் பெறாதவளாயும் இருந்ததை நினைத்துக் கண்ணீர் விடுத் தாள்; சுயநலமே உருவாய், வெறுப்பும், கபடமும், பொறா மையும் குணமாய்ப் பெற்ற கமலா, ஸீதா முதலியோரிடத்தில் வேடர் வலையிற்பட்ட மானைப்போலத் தான் அகப்பட்டுக்

கொண்டு, விடுபடும் வழியறியாமல் துன்புறுவதை நினைத்துக் கலங்கினாள்; தனது ஆயுட்காலம் முழுதையும் அவ்வாறு தான் எப்படிக் கழித்தல் கூடும் என்று அஞ்சி பொறுக்கலாற்றாத துயர்க் கடலில் மூழ்கினாள்; அவர்கள் தன்னையும் தனது அழகையும்பற்றி இகழ்ந்து தூஷணை செய்ததை நினைத்து நினைத்து உருகினாள்; அவ்வாறு பற்பல நினைவினால் மெய்ம்மறந்தவளாய் பங்களாவின் தோட்டத்திற்குள் நுழைந்து அதன் பின்புறத்திற்கு வந்தாள்; ஒரு நாழிகை நேரமாக அவ்வாறு மெதுவாய் உலாவி நடந்து வந்தாளாதலால், கீழே சிறிது உட்கார வேண்டுமென்னும் ஆசை அவளுக்கு உண்டாயிற்று. அவள் பங்களாவின் பின்புறத்திலிருந்து தோட்டத்திலிறங்கும் படிகளின் மீதேறி, முதற்படியின் மேல் உட்கார்ந்து, ஆகாயத்தில் களங்கமற்றுத் தோன்றிய குளிர் மதியை நோக்கிப் பரவசமடைந்தாள்; முறையே, நீர்ப்பரப்பையும் ஆகாய விரிவையும் நோக்கி நோக்கிக் கடவுளது படைப்பின் இயற்கையழகில் ஈடுபட்டுக் கல்லாய்ச் சமைந்திருந்தாள்.

அவ்வாறு அரைநாழிகை வரையில் ஏகாந்தமாயிருந்து தனது நெஞ்சோடு சம்பாஷணை புரிந்திருந்தவள், ஏதோ, ஓசையுண்டானதைக் கேட்டு திடுக்கிட்டு மானைப்போல மருண்டு நாற்புறத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள்; ஒருநாளுமில்லாமல் அன்றுண்டான அரவத்தின் காரணமென்னவோவென்று திகைத்தாள். அப்போது அவளது மனதில் ஒரு விஷயம் நினைவிற்கு வந்தது. புதிய ஜெமீந்தார் அந்த மாளிகைக்கு வந்திருப்பதாக துக்கோஜிராவ் தெரிவித்ததை முற்றிலும் மறந்து தான் அங்கு வந்ததை நினைத்து அவள் வருந்தித் தனது மூடமதியை இகழ்ந்து தன்னைக் கடிந்து கொண்டாள். உடனே எழுந்து நாற்புறங்களையும் பார்த்தவண்ணம் வேகமாய்ப் படியை விட்டிறங்கத் தொடங்கினாள். அந்தச் சமயத்தில் பங்களாவின் வலது பக்கத்திலிருந்து இரண்டு மனிதர் சம்பாஷித்தவண்ணம், அவளிருந்த படியை நோக்கி வந்ததை அறிந்தாள்; அவர்களில் ஒருவர் 20, 25–வயது நிறையப் பெற்ற யௌவனப் புருஷராயும், மற்றவர் சுமார் 60 வயதடைந்த முதியவராயும் காணப்பட்டனர். சிறியவர் மிக்க அழகிய சரீரமுடையவராயும் கம்பீரத் தோற்றத்தைப் பெற்றவராயுமிருந்தார். புதிய ஜெமீந்தார் பாலியரென்று துக்கோஜிராவ்

சொன்னது நினைவிற்கு வந்தமையால் அவரே புதிய ஜெமீந்தாரென்று அவள் உடனே யூகித்துக் கொண்டாள். தான் அந்த இரவில் தனிமையில் அங்கிருந்ததைப் பற்றி அவர் என்ன நினைத்துக் கொள்வாரோ என்னும் நினைவு அவளது தேகத்தைக் குன்றச் செய்தது. அவர் தன்னைப் பார்த்து விடுவாரோ என்னும் அச்சமும் நாணமும் ஒன்றுகூடி அவளை ஒடுக்கி வதைத்தன. அவர் தன்னை யாரென்று கேட்டால், தான் என்ன மறுமொழி தருவதென்று நினைத்து நடுநடுங்கினாள். அவர் தன்னைக் காணு முன், எவ்விதமாயினும் முயன்று இடப்புறமாக பங்களாவைச் சுற்றிக்கொண்டு போய்விட வேண்டுமென்று அவள் தீர்மானித்துக் கொண்டு படிகளின் கீழே இறங்கி கல்யானையின் பக்கத்தில் மறைந்தாள். அதற்குள், அவ்விரு புருஷரும் படிகளுக்கு நாலைந்து கஜதூரத்தில் வந்துவிட்டனர். ஆதலின், அதற்குமேல் தான் நடந்தால் அவர்களது பார்வையில் தான் நிச்சயமாய்ப் பட வேண்டுமென்பதை அவள் உணர்ந்தமையால், அதற்குமேல் என்ன செய்வதென்பதை அறியாதவளாய்ச் சிறிது நேரம் தயங்கினாள்! மாதர்க்கணிகலமான நாணம், மடம், அச்சமென்னும் துணைவர்களால் வருத்தப்பட்டவளாய் மெய் பதைக்கக் கல்யானைக் கருகில் ஒன்றியொளிந்து நின்று, ''இவர்கள் படிகளில் ஏறி மாளிகைக்குள் போய்விட்டால் நான் பிழைத்தேன். படியில் ஏறாமல் மேலும் இடப்புறத்தில் வந்தால் என்னைக் கண்டு கொள்வார்களே! நான் என்ன செய்வேன்? ஈசுவரா! நீதான் இன்று என்னுடைய மானத்தைக் காக்க வேண்டும்'' என்று சுவாமியை நினைத்து தியானம் செய்தாள்.

அவ்விரு புருஷரும் தற்செயலாய்ப் படிகளில் ஏறினர். ஜெமீந்தார் முதற்படியின் மேல் நின்று கொண்டார்; வயோதிகர் அதற்கு நாலைந்து படிகளுக்குக் கீழ் மரியாதையாக நின்று முன்னவர் கேட்பதற்கு விடையளித்த வண்ணமிருந்தார்.

ஜெமீந் : ஸகாராம்! நான் பூனாவில் எத்தனையோ பங்களாவைப் பார்த்திருக்கிறேன். இவ்வளவு ரமணீயமான இடத்தை நான் இதுவரையில் பார்த்ததே இல்லை. பரசுராம பாவா நல்ல சுகபுருஷரென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இன்றுதான் அவருடைய புத்தியின் விசேஷம் நன்றாக விளங்கியது.

ஸகா : இந்த மாளிகைக்குள் நீங்கள் பார்க்க வேண்டிய இடங்கள் இன்னும் அநேகமிருக்கின்றன. அங்கேயுள்ள அதிசயங் களையும் விநோத வேலைப்பாடுகளையும் கண்டால் இன்னும் அதிகமாக வியப்படைவீர்கள். இறந்துபோன எஜமானர் தம்மு டைய சுகாநுபவத்துக்குத் தேவையான பொருட்களைச் சேகரஞ் செய்து இந்த பங்களாவை சிங்காரிப்பதிலேயே தமது ஆயுட் காலம் முழுதையும் போக்கினாரல்லவா! ஆனால் அவர் இறந்த பின் அநுபவிப்போரில்லாமையால் பூட்டப் பெற்றிருப் பதால் உட்புறம் ஒருமாதிரி ஒளி மழுங்கித் தோன்றும்; ஆனால் இதில் வசிக்க ஆரம்பித்து எல்லாவற்றையும் சுத்திசெய்து ஏற்பாடாக வைத்துக் கொண்டால் இந்த இடம் ஒரு ரிஷி ஆசிரமம்போலப் பரமாநந்தமாய்த் தோன்றும்.

ஜெமீந் : அதிருக்கட்டும். நீர் இந்த சமஸ்தானத்துக்கு சர்வா திகாரி உத்தியோகத்தில் அமர்ந்து எவ்வளவு காலம் இருக்கும்?

ஸகா : 27 வருஷத்துக்கு மேலாகிறது.

ஜெமீந் : அவர் இவ்விடத்துக்கு வந்து கடைசியாக இருந்தது எப்போது?

ஸகா : அவர் இறந்துபோவதற்கு முன் ஒரு மாசகாலம் இங்கிருந்து, இவ்விடத்திலேயே உயிர் துறந்தார்.

ஜெமீந் : அவர் தம்முடைய சொத்துக்களையும் சமஸ் தானத்தையும் மரணாந்தரசாஸனத்தில் எனக்கு எழுதி வைத்தாரே; அது இவ்விடத்தில்தானோ?

ஸகா : இல்லை இல்லை. தானதருமங்களின் பொருட்டு விநியோகம் செய்ததைத் தவிர மிகுதியிருக்கிற பொருள்கள், மாளிகைகள், ஜெமீன்கள் முதலிய இரண்டு கோடி ரூபாய் பெறுமானமுடைய ஐசுவரியத்தையும், இறந்துபோவதற்கு 2 வருஷத்துக்கு முன்பே உங்கள் பேரில் எழுதி பத்திரத்தை என்னி டம் ரகஸியமாய்க் காண்பித்தார். அந்த சாஸனத்தை அவர் இறந்த பின் அவருடைய பொக்கிஷ சாலையிலிருந்து கண்டெடுத்து நான் உங்களுக்கு அனுப்பினேன்.

ஜெமீந் : எல்லாம் சரிதான்; ஆனால், இதில் எனக்கொரு சந்தேகம் இருக்கிறது.

ஸகா : யார் மேல் சந்தேகம்?

ஜெமீந் : ஒருவர்மேலுமில்லை. இறந்துபோன ஜெமீந்தார் ஆறு மாசத்துக்கு முன்னர் எனக்கொரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் இந்த சமஸ்தானமும் சொத்துக்களும் என்னைச் சேரா வென்றெழுதியிருக்கிறார். இதோ பார்த்தீரா அந்தக் கடிதத்தை? – என்று தமது சட்டைப் பையிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து சர்வாதிகாரியிடம் கொடுத்தார்,

உடனே அவன் உள்ளே சென்று அங்கிருந்த மெழுகுவர்த்தி விளக்கொன்றை எடுத்து வந்து படியின்மேல் வைத்துவிட்டு கடிதத்தை அடியில் வருமாறு படித்தான் :–

"சிரஞ்சீவி வஸந்தராவுக்கு ஆசீர்வாதம். நான் சென்ற ஒரு மாசகாலமாய்ப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறேன். வைத்தியர்கள் என்னை முற்றிலும் கைவிட்டு விட்டார்கள். ஆகையால், நாமிருவரும் இனிமேல் சந்திப்போமென்பது சந்தேகம். எனக்குப் பிறகு, என்னுடைய ஏராளமான சொத்துக்களை எல்லாம் பெறலாமென்று நீ நினைத்துக் கொண்டிருக்கலாம். நீ என்னைக் கடைசியாகப் பார்த்தபோதும், நான் உனக்கு உதவி செய்வதாய் வாக்களித்தேன். உண்மையை நான் அப்போது உனக்குத் தெரிவிக்கக்கூடவில்லை. எப்போதும் நியாயத்திற்குப் பழுது ஏற்படக் கூடாதாகையால், சொத்துக்களையும் ஜெமீனையும் உண்மையில் யார் பாத்தியஸ்தரோ அவருக்கு எழுதி வைத்துவிட்டேன். நீ எப்போதும் ஏழ்மை நிலைமையிலிருந்து அதைத் தாங்கினவனாகையால், இதைப் பற்றி நீ அதிகமாக வருந்தமாட்டாயென்று நினைக்கிறேன். ஆனால், உன்னுடைய கடன்களைத் தீர்ப்பதற்கும் உனது ஜீவனத்திற்கும் தேவையான பொருளை உனக்கு எழுதி வைத்திருக்கிறேன். உனக்கு சலக நன்மையும் உண்டாவதாக.

பரசுராம பாவா"

என்று படித்து முடித்தான். இரண்டொரு நிமிஷநேரம் இருவரும் மௌனமாயிருந்தனர். பி[illegible], ஸகாராமராவ், "இது நிரம்பவும் ஆ[illegible]ச்சரியமாக இருக்கி[illegible] இதன்படி இன்னொரு சாஸனம் எ[illegible]தப்பட்டிருக்க வேண்டுமென ஏற்ப[illegible]ான்.

ஜெமீந் : வேறு யார் பேருக்கு அவர் எழுதியிருக்கக் கூடும்?

ஸகா : அப்படி இருக்காது. அவருக்கு என்னைத் தவிர அந்தரங்கமான மனிதன் எவனுமில்லை. அவர் வேறே சாஸனம் எழுதி வைத்திருந்தால், அதை எனக்குக் காட்டாமல் வைத்திருக்க மாட்டார். உங்களை வேடிக்கையாகப் பயமுறுத்த வேண்டு மென்று இப்படி எழுதியிருக்க வேண்டுமன்றி வேறில்லை.

ஜெமீந் : சரி! வேறே வார்சுதாரன் முன்னுக்கு வருகிற வரையில் நாம் அப்படித்தான் நினைத்துக் கொள்ள வேண்டும்.

ஸகா : தாங்கள் இரண்டு மாளிகைகளையும் பார்த்தீர்களே; எங்கே தங்குவதாய்த் தீர்மானம் செய்தீர்கள்?

ஜெமீந் : எனக்கு இன்னும் ஒரு யோசனையும் தோன்ற வில்லை. நீர் எல்லாவற்றிற்கும் விடியற்காலம் தஞ்சைக்குப் போய்ச் சேரும். நான் இன்னும் இரண்டு மூன்று நாட்கள் இங்கே இருந்து கிராமங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு தஞ்சைக்கு வந்து முடிவான எனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறேன். நேரமாகிறது; போய்ப் படுத்துக்கொள்ளும்.

ஸகா : சரி; உத்தரவு.

என்று சொல்லிவிட்டு ஸகாராம்ராவ் மாளிகைக்குள் நுழைந்து தனது படுக்கையறைக்குப் போய்ச் சேர்ந்தான். உடனே ஜெமீந்தார் படிகளை விட்டுக் கீழே இறங்கி சமுத்திரத்தின் படித்துறையை நோக்கி மெல்ல நடக்கத் தொடங்கினார். கல்யானையின் மறைவில் ஒளிந்திருந்த வண்ணம், அங்கு நிகழ்ந்த சம்பாஷணை முழுதையும் கேட்டுக் கொண்டிருந்த மல்லிகாவுக்கு அப்போதே உயிர் வந்தது. ஜெமீந்தார் படித் துறைக்குப் போய்விடுவாரென்றும், பிறகு, அவரது கண்ணில் படாமல் தான் வெளியே போய்விடலாமென்றும் அவள் நினைத்து வேகமாய் வெளியில் போகத் தயாராக நின்றாள். ஆனால், ஜெமீந்தார் நேராய்ப் போகாமல், சிறிது தூரம் போய்த் திரும்பித் திரும்பி உலாவியவண்ணம் இடப்புறமிருந்த கல்யானையை நோக்கி நடந்தார்.இனி அங்கே ஒளிந்திருப்பது தவறென்று நினைத்த மல்லிகா, அந்தஇடத்தை விட்டு வெளியில் வந்து வேகமாய் அப்பால் நடந்தாள். அதைக் கண்ட ஜெமீந்தார்,

''யார் அது? கொஞ்சம் நில்!'' என்றார். அதைக் கேட்ட மடந்தை திடுக்கிட்டுத் திகைத்து எந்த வழியாக ஓடிப்போகலாமென்னும் நினைவோடு நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தாள். அதற்குள் அவர் சமீபத்தில் வந்து சேர்ந்தார். அவள் அச்சமடைந்து நாணிக் குனிந்து அப்படியே நின்றாள்.

''நாங்கள் திடீரென்று வந்ததனால் பயந்துவிட்டாய் போலிருக்கிறது. பயப்படாதே!'' என்று அன்புடன் அவளை நோக்கிய வண்ணம் கூறிய ஜெமீந்தார்; அவளது பேரழகையும் யௌவனத்தையும் கண்டு திகைப்படைந்தார்.

மல்லி : இல்லை, இல்லை - என்று கூறியவண்ணம் மெல்ல நடக்க ஆரம்பித்தாள்.

ஜெமீந் : ஏனம்மா! இந்த பங்களாவின் காவற்காரன் எவ்விடத்தில் குடியிருக்கிறான் தெரியுமா?

மல்லி : அதோ தோட்டத்திற்கு வெளியிலிருக்கிற வீட்டிலிருக்கிறான் – என்று தன் கையால் சுட்டிக் காட்டினாள்.

ஜெமீந் : நீ அவனுக்கு ஏதாவது சொந்தமாயிருக்குமோ?

மல்லி : இல்லை, இல்லை – என்றாள்.

அவளது சுந்தர வதனத்தைப் பார்க்கப் பார்க்க அவளிடத்தில் அவருக்கு ஒருவித அன்பும் அபிமானமும் உண்டாயின.

ஜெமீந் : அப்படியானால் நான் கேட்டது என்மேல் தவறு; இரவில் அகாலத்தில் நீ இங்குத் தனிமையிலிருந்தபடியால், அப்படியிருக்குமோவென்று நினைத்துக் கேட்டேன். மனதில் வருத்தம் வைத்துக் கொள்ளாதே!

மல்லி : இல்லை, இல்லை. அப்படித் தாங்கள் என்ன கேட்டு விட்டீர்கள்? எங்களுடைய வீடு சமீபத்திலிருக்கிறது. இந்தச் சோலையில் எப்போதும் ஒருவரும் இருக்கிறதில்லை. ஆகையால், நான் அடிக்கடி நிலவில் வேடிக்கையாக இங்கே வந்து சற்றுநேரமிருந்து போவது வழக்கம். இன்றும் எவரும் இருக்கமாட்டார்களென்று நினைத்து வந்துவிட்டேன்.

ஜெமீந் : அப்படியானால் ஒருநாளுமில்லாமல் இன்று நான் இங்கே வந்ததற்கு சமாதானம் சொல்ல நானே கடமைப்

பட்டவன் ஆகிவிட்டேன். என்னுடைய பெயர் வஸந்த ராவ். இந்த ஜெமீனும் இதன் சொத்துக்களும் சமீபத்தில் எனக்குச் சொந் தமாயின. இந்த பங்களாவின் சிறப்பைப் பற்றி நான் கேள்விப் பட்டேன். இதில் வசிக்கலாமா என்பதை நிச்சயிக்கும் பொருட்டு இங்கே வந்தேன் – என்று புன்சிரிப்புடன் தெரிவித்தார்.

''மன்னிக்க வேண்டும். நான் தங்களைக் கண்டு அச்சங் கொண்டு, சென்ற அரை நாழிகையாய் இவ்விடத்திலேயே ஒளிந்துகொண்டிருந்தேன். தங்களுடைய சம்பாஷணையினால் இந்த விவரத்தை அறிந்து கொண்டேன். நான் ஒளிந்திருந்து கேட்காமல் போயிருக்க வேண்டும். தாங்கள் என்னைக் கண்டு கொள்வீர்களென்னும் அச்சத்தினால் அப்படிச் செய்யவில்லை; நான் செய்தது எனக்கே வெட்கமாயிருக்கிறது; கோபித்துக் கொள்ள வேண்டாம்'' என்று மல்லிகா உண்மையைக் கூறினாள்.

''நாங்கள் வந்தபோது நீ மறைந்ததை நானும் ஆரம்பத் திலேயே அறிந்து கொண்டேன்; நீ மறைந்து கொண்டிருந்தது எனக்கு நன்றாய்த் தெரிந்தது'' என்று யானையின் மறைவைக் காட்டினார்.

''தாங்கள் இப்படிச் செய்யலாமா? நான் ஒளிந்து கொண் டிருப்பதை அறிந்தும், தங்களுடைய குடும்ப விஷயங்களைப் பற்றிப் பிறர் காதில் விழும்படி பேசுவது தருமமா?'' என்றாள் மல்லிகா.

''இந்த மாளிகைக்கு வந்து, இதை மேன்மைப் படுத்தும் ஸ்திரீயின் மனசுக்கு எவ்வித சஞ்சலமும் உண்டாக்கக் கூடா தென்று நினைத்தே சும்மாவிருந்தேன். நாங்கள் எவ்விதமான ரகஸியத்தைப் பேசிவிட்டோம்? அப்படியொன்றுமில்லையே! ஸகாராம்ராவ் இருக்கும்போது நீ இருப்பதை வெளிப்படுத்தி னால் உனக்கு வருத்தமாயிருக்குமென்றே, நான் சந்தேகத்திற்கு இடமில்லாமல் குடும்ப விஷயத்தைப் பற்றிப் பேசினேன்'' – என்றார் ஜெமீந்தார்.

''ஆகா! அப்படியா! என்ன தங்களுடைய தயாள குணம்! முன்பின் அறியாதவளான ஏழையாகிய என் மனம் கோணக் கூடாதென்று தாங்கள் எவ்வளவு முன் யோசனையாகக் காரியம்

செய்தீர்கள்! பற்பல குடிகளைக் காக்கும் கண்ணியமும் ஏழை களிடத்தில் அன்பும் இருப்பதனாலேதான் தங்களுக்கு இந்தப் பதவி கிடைத்திருக்கிறது! இதுதான் புருஷ சிங்கத்திற்கும் அபலை ஸ்திரீகளுக்குமுள்ள பேதம். நேரமாகிறது; உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறேன்'' என்று நன்றியறிதலோடு மொழிந்துவிட்டு மல்லிகா நடக்க ஆரம்பித்தாள்.

''இன்னொரு வார்த்தை; ஒரே நிமிஷம்; எல்லாம் சரிதான்; உன்னுடைய பெயர் இன்னதென்று தெரிவிக்கவில்லையே!'' என்று அருகில் நெருங்கி நின்றுகொண்டு வஸந்தராவ் கேட்டார்.

''என் பெயர் மல்லிகா'' என்றாள் மடமங்கை.

''அப்படியா! எவ்வளவு அருமையான பெயர்! அவரவர் களுடைய யோக்கியதைக்குத் தகுந்த பெயர்தான் கிடைக்கிறது'' என்றார் ஜெமீந்தார்.

''இப்படிப் பரிகாஸம் செய்யத்தானா இவ்வளவு பிரயாசைப் பட்டு என்னை நிற்க வைத்தது?'' என்று மல்லிகா மெதுவாகத் தெரிவிக்க,

''அடடா! உன்னைப் பரிகாஸம் செய்ததாகவா நினைத்தாய்! நான் என்னுடைய பகைவனைக்கூடப் பரிகாஸம் செய்ய மாட்டேனே! உண்மையில் உன்னுடைய புத்தி விசேஷத்திற்கும் குணாதிசயங்களுக்கும் தகுந்த அழகிய பெயரென்று நினைத்தே அப்படிச் சொன்னேன். அதிருக்கட்டும்; நான் ஒரு விஷயம் கேட்கிறேன். கோபித்துக்கொள்ளாமல் பதில் சொல்லுவாயா?'' என்று மெதுவாகக் கேட்டார் ஜெமீந்தார்.

''என்ன விஷயம்?'' என்று கலங்கிய மனத்தோடு மல்லிகா வினவினாள்.

''இந்த உலகத்தின் தன்மை எப்படியிருக்கிறதென்றால், ஒருவனுக்கு ஏராளமான பொருளிருப்பதனாலேயே அவன் சுக வாழ்க்கையுடையவனென்று மதிப்பதற்கில்லை. ஒவ்வொரு வனுக்கும் ஏதாவது ஒருவிதக் குறையும் விசனமும் இருக்கின்றன. நான் பிறந்தது முதல் இதுவரையில் சந்தோஷமென்பதையே அநுபவித்தவனல்ல. எந்த விஷயத்திலும் சுகமுண்டாகுமென்று

நினைத்தால் அது முற்றிலும் துன்பத்தைத் தருவதாய் முடிகிறது. என் மனப்பிணி நீங்காமலே என்னை வருத்துகிறது. எந்த இடத்தில் இருந்தால் மனம் சந்தோஷம் அடையுமென்று நான் இது வரையில் ஊரூராய் அலைந்து திரிகிறேன். எங்கும் சுகமில்லை. இந்த இடமாவது இன்பம் தருமாவென்று பார்க்க இங்கே வந்தேன். இந்த விஷயத்தில் நீதான் எனக்கொரு யோசனை சொல்ல வேண்டும். இந்த இடத்திலிருப்பதால் குணமுண் டாகுமா?'' என்று கேட்டார் ஜெமீந்தார்.

''ஐயா! என்னைத் தாங்கள் மேன்மேலும் பரிகாஸம் செய் வதாகத் தோன்றுகிறது. நான் ஒன்றையுமறியாத அபலைப் பெண். இந்த விஷயத்தைப் பற்றி எனக்கென்ன தெரியப் போகிறது! இவ் விதமான கேள்விகளை என்னிடம் கேட்பது அழகல்ல. தங்களுக் கென்ன குறைவிருக்கிறது? சகல வைபவங்களும் நிரம்பப் பெற்ற தாங்கள் எங்கிருந்தாலென்ன? ராமன் எங்கிருந்தாலும் அது அயோத்தியல்லவா!'' என்றாள் மல்லிகா. ''உனக்கென்ன சீராட்டிப் பாராட்டத் தாய் தகப்பன் முதலிய அருமையான பந்துக் களும், அன்புடன் கூடிக் குலாவிப் பேச சிநேகிதிகளும் இருக்கி றார்கள். உனக்கொன்றுங் குறைவில்லை. உன்னைப்போல மற்ற வரையும் நினைத்து நீ சுலபமாய்ச் சொல்லி விட்டாய்'' என்று புன்சிரிப்போடு கடிந்து தெரிவித்தார் ஜெமீந்தார்.

''எனக்குத் தாயுமில்லை; தகப்பனுமில்லை; வேறே உறவி னருமில்லை. நானும் இந்த உலகில் ஏகாங்கிதான்'' என்று விசனத்தோடு மல்லிகா மறுமொழி கூறினாள். அப்போது அவ ளுடைய குரல் தடுமாற கண்களில் நீர் ததும்பியது. அதைக் கண்ட ஜெமீந்தாரின் மனமும் கலங்கியது.

''அப்படியா! உன் வரலாற்றைக் கேட்க என் மனதில் பெருத்த சஞ்சலமுண்டாகிறது. புருஷர் எவ்வளவு ஆதரவற்றவ ராயிருந்தாலும் அவர்கள் எப்படியாவது முன்னுக்கு வந்துவிடு வார்கள். உன்னைப் போன்ற யௌவன ஸ்திரீகளின் கதி என்ன வாகும்! உலகத்தின் தன்மையை அறியாத சிறுமியருக்கு எவ்வளவு விபத்துக்கள் சம்பவிக்கும்! அவற்றையெல்லாம் விலக்கித் தப்பித்துக்கொள்வது மெத்தக் கடினமான காரியம்;

மல்லிகா! இப்போதே உண்மையை உணர்ந்தேன். அன்பில்லா வீட்டிலிருப்பதைவிட, இன்பந் தரும் கடவுளுடைய சிருஷ்டிப் பொருள்களுடன் ஏகாந்தமாக இருந்து ஆநந்தமடைவதற்காகவே நீ இங்கே இரவில் வருகிற வழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறாய். நல்லது; நீ எங்கே இருக்கிறாய்? தயவு செய்து தெரிவி. உனக்கு நான் ஏதாயினும் உதவி செய்யக் கூடுமானால் செய்கிறேன்'' என்று அருமையாய்க் கேட்டார் ஜெமீந்தார்.

அதுவரையில் கபடமில்லாமல் அவ்வளவு உள்ளன்புடன் அவளது விஷயத்தில் பச்சாதாபத்தைக் காண்பித்து எவரும் பேசி அறியாதவள் ஆகையால், மல்லிகாவுக்கு அவருடன் சம்பாஷிப்பதில் ஒருவித மனக்கிலேசம் உண்டானதாயினும், புண்பட்ட அவளது மனதிற்கு அது ஒருவித ஆறுதலையும் ஆநந்தத்தையும் உண்டாக்கியது.

''ஐயா! இந்த ஊரில் துக்கோஜிராவென்று ஒருவர் இருக்கிறார். நான் அவருடைய வீட்டிலிருக்கிறேன்'' என்றாள் மடந்தை.

''ஓகோ! பூனாவிலிருந்தவரோ?'' என்றார் ஜெமீந்தார்.

''ஆம்! அவர்தான். நான் அவருடைய சிநேகிதரின் புத்திரி. எனக்கு உறவினர் எவருமில்லை. ஆகையால், அவரே என்னைக் காப்பாற்றி வருகிறார்'' என்றாள் மல்லிகா.

''அப்படியா! அவரை நான் நன்றாக அறிவேன். அவர் இன்று காலையில்கூட என்னிடம் வந்திருந்தாரே! அவருக்கு இரண்டு பெண்கள் கூட இல்லையா?'' என்றார் ஜெமீந்தார்.

''ஆம் ஆம்; இருக்கிறார்கள். எனக்கு நேரமாகிறது. நான் போகிறேன். நான் இந்த வேளையில், தனிமையில் அன்னிய புருஷருடன் பேசிக்கொண்டிருப்பது தவறு. மன்னிக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே மல்லிகா வேகமாய் நடந்து மறைந்து போய்விட்டாள்.

ஜெமீந்தாரின் மனதும் கண்களும் அவளுடன் நெடுந்தூரம் வழித்துணை சென்றன. அவள் மறைந்தவுடன் கண்கள் மாத்திரம் மனத்துடன் செல்ல வல்லமையற்றதாய்த் தோற்றுப் பின்னிட்டன.

'ஆகா! ஸ்திரீகளையே இனி கண்ணெடுத்துப் பார்ப்பதில்லையென்று நான் செய்துகொண்ட உறுதியை மறந்துவிட்டேனே! என்ன என்னுடைய பேதமை! என்னை அறியாமலேயே இவளிடத்தில் ஒருவித அன்பும், கவர்ச்சியும் உண்டாயினவே! என்ன காந்தி! என்ன பேரழகு! குணமோ இனிமையிலும் இனிமை! துன்புற்றுத் துவண்டு தடுமாறும் மனிதருடைய மனதுக்கு அமைதியும் இனிமையுமூட்டும் மருந்து மங்கையர்தாமோ! என்ன கடவுளின் அமைப்பு! துன்பமுண்டாவதும் பெண்டீரால், இன்பமுண்டாவதும் அவர்களால்'' என்று பலவாறு தமக்குள் சிந்தித்து நிலை கலங்கித் தடுமாறிய மனத்தோடு வஸந்தராவ் சமுத்திரத்தை நோக்கி நடந்தார்.

3—வது அதிகாரம்

முடவனும் கொம்புத்தேனும்

முன்னதிகாரத்தில் விவரிக்கப்பட்ட விஷயங்கள் நிகழ்ந்த தினத்திற்கு இரண்டு வாரங்களுக்குப் பிறகு, ஒருநாட் காலையில், துக்கோஜிராவின் வீட்டு உட்புறம் வழக்கத்திற்கு மாறாக நன்றாய்ச் சுத்தி செய்யப்பட்டும், கோலமிட்டு அலங்கரிக்கப் பெற்றும் இருந்தது. அதிலிருந்தோர் யாவரும் அதிக ஊக்கத் தையும், ஆவலையும் காண்பித்து அங்குமிங்கும் போய் வந்து கொண்டிருந்தனர்.

கமலா, ஸீதா ஆகிய இருவரும் சீவிச் சிங்காரித்து அழகிய உடையணிந்து பொட்டின்மேல் பொட்டிட்டுக் கண்களில் மை தீட்டிக் கொண்டவராய்க் கணத்திற்கொருமுறை கண்ணாடியில் பல்லிளித்துத் தங்களது அழகைப் பார்த்து மகிழ்வடைவதும், சமயலறைக்குட்சென்று அங்கிருந்த மல்லிகாவினிடத்தில், கூர்மையான அம்பைத் தொடுப்பதைப் போல, சுருக்கென்று தைக்கும் பற்பல கடுமொழிகளைச் சொல்லித் திரும்புவதுமாய் இருந்தனர்.

கமலா தனது தங்கையை நோக்கி, ''அடி ஸீதா! அதென்ன கண்ணாடியைப் பார்த்த மணியமாய் இருக்கிறாயே! அழகு சிந்திப் போகிறது! சிறியவர்களெல்லாம் இப்படிச் செய்தால், பெரிய வர்களின் கதி அதோகதிதான். ஜெமீந்தார் வரும் நேரமாகி விட்டது. உள்ளே போய் சமையல் என்ன நிலைமையில் இருக் கிறதென்று பார். அந்த நீலி மோசம் செய்தாலும் செய்து விடுவாள். போஜனத்துக்குத் தாமதமானால், நமக்கல்லவோ அவமானம்'' என்று அதட்டினாள். அதைக் கேட்ட ஸீதா, ''அக்கா! ஜெமீந்தார் இந்த பங்களாவில் வாசஞ் செய்ய இன்றுதான் வரப் போகிறார். இதற்குள் இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறாயே! வந்து சில நாட்களிருந்தபின் ஒருவேளை அவர் கமலாபாயின்

மேல் ஆசை வைத்துக் கலியாணம் செய்து கொண்டால் நாங்கள் என்னபாடு பட வேண்டுமோ தெரியவில்லையே!'' என்று கூறிச் சிரித்தாள்.

''பல்லக்கில் ஏறுவதற்கு ஒருவனிருந்தால், அதைச் சுமக்க சிலரிருக்க வேண்டாமா? இரண்டு கோடி ரூபாய் பெறுமான முடைய ஜெமீந்தாரின் சீமாட்டியென்றால், அது இலேசான பதவியா? அதைப் பெறுபவருக்கு எவ்வளவோ கருவமும் பெருமையும் இருப்பது சகஜந்தானே! அந்த யோக்கியதைகூட இல்லாவிட்டால் ஜெமீந்தாரை எவள்தான் கலியாணம் செய்து கொள்வாள்?'' என்று தற்பெருமை பாராட்டி மொழிந்த கமலா, சுவரில் ஆணியில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடியைத் தனது கையிலேயே எடுத்து முகத்துக்கு நேரில் வைத்துக் கொண்டு ஏற இறங்கத் தன்னைப் பார்த்தவண்ணம் பேசினாள்.

''அதிருக்கட்டும். நாம் மிகவும் ஏழையென்பது அவருக்குத் தெரியாதா? அவர் உன்னை எப்படிக் கலியாணம் செய்து கொள்வார்?'' என்று வினவினாள் ஸீதா.

''அடி முட்டாளே! அவர் இப்போதல்லவா தனிகரானார்; இதுவரையில் நம்மைப்போல் இருந்தவர்தானே. நாம் பூனாவிலிருந்தபோது, அவர் அடிக்கடி வந்து நம்முடைய அப்பாவுடன் போஜனம் செய்திருக்கிறார். அப்போது நாம் குழந்தைகளாயிருந்தோம். என்னை அவர் எத்தனையோ தடவைகளில் ஆசையோடு எடுத்து அணைத்து முத்தமிட்டிருக்கிறார். நான் அவரிடத்தில் சந்தோஷமாக விளையாடியபோது, தம்மைக் கலியாணம் செய்துகொள்ள சம்மதமாவென்று அவர் கேட்டார். அவ்வளவுதூரம் செய்தவர் இப்போது உன்னத ஸ்தானத்துக்கு வந்துவிட்டதனாலேயே நம்மை மறந்துவிடுவாரா? அப்படி ஒருநாளும் செய்ய மாட்டார்; தவிர, அவர் பாலியர்; இங்கே தனிமையில் வந்திருக்கப் போகிறார். இங்கே அவருக்கு நம்மைத் தவிர நம்முடைய ஜாதியாரில் வேறே யார் துணைவர் இருக்கிறார்கள்? நாம் அடிக்கடி பங்களாவுக்குப் போய்ப் பழகி, அவருடைய மனசைக் கவர்ந்துவிடலாம். நாம் அதிக ஏழையென்பதை ஏன் காட்டிக் கொள்ள வேண்டும். எல்லா விஷயங்களிலும் நாம் பெரிய மனிதரைப்போல டம்பமாய்க் காண்பித்துக் கொண்டால், சரியாய்ப் போகிறது. மல்லிகா வருகிறாள்.

சும்மாவிரு; அவளுக்கு இதெல்லாம் தெரியக்கூடாது'' என்றாள் கமலா. அப்போது மல்லிகா சமையலறையிலிருந்து அவர்கள் இருந்த இடத்திற்கு வந்து புன்சிரிப்புடன், ''சமையல் முடிந்து விட்டது'' என்றாள். அவள் நெடுநேரமாக நிரம்பவும் உழைத்து, விருந்திற்குத் தேவையான பக்குவங்களைத் தயாரித்தாளேனும், அவளுடைய உடம்பிலும் உடையிலும் ஒரு சிறிய மாசும் படியாதிருந்தது. அவள் சாதாரணமாக வெள்ளைச் சீட்டிப் பாவாடையும், தாவணியும், இரவிக்கையும் அணிந்துகொண் டிருந்தாளானாலும், அவளது இயற்கை அழகினாலும், குளிர்ந்த பரந்த முகத்தினாலும், மற்றவரைக் காட்டிலும் அவள் மிகுந்த வசீகரத் தன்மையைப் பெற்றிருந்தாள்.

அவளைக் கண்ட கமலா, ''அடி மல்லிகா! நீ என்ன சுத்தப் பட்டிக்காட்டு மனுஷியா இருக்கிறாயே! இப்போது வரப் போகிறவர் யார் தெரியுமா?'' என்று ஏளனமாகக் கேட்டாள்.

''யாரோ உங்கள் அப்பாவின் சிநேகிதரென்று தெரிவித்தீர் களே! அதைத் தவிர எனக்கென்ன தெரியும்? நீங்கள் சொன்னால் தானே தெரியப்போகிறது. நீங்கள் இருவரும் நன்றாகச் சிங்காரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால், கலியாணத்துக்குப் பெண் பார்க்க யாரோ வரப்போகிறதாக நினைத்தேன்'' என்று சிரித்துக் கொண்டு விடையளித்தாள் மல்லிகா.

''நாங்கள் சிங்காரித்துக் கொண்டிருப்பதில் உனக்கேன் இவ்வளவு விசனம்? உங்கள் பாட்டன் வீட்டு சொத்தா? எங்க ளுடைய சொந்த ஆடையாபரணங்களை நாங்கள் அணிந்து கொண்டிருக்கிறோம்'' என்றாள் ஸீதா.

''உங்களை யாராவது கலியாணஞ்செய்து அழைத்துக் கொண்டு போய்விட்டால், பட்டிக்காட்டாளாகிய எனக்கு பட்டணத்து நாகரிகம் கற்றுக்கொடுக்க ஒருவருமில்லாமல் போய்விடுமே என்பதுதான் என் வருத்தம். மற்றபடி சிங்காரத்தைப் பற்றி சந்தோஷமே'' என்றாள் மல்லிகா.

''ஓகோ! உன் மனது இன்னதென்பது நன்றாகத் தெரிகிறது. நீ எங்களுக்குக் கலியாணம் நடப்பதைக் கண்டு பொறுக்க மாட்டாய் போலிருக்கிறதே! உண்ட வீட்டுக்கு இப்படியா இரண் டகம் நினைத்தாய்? இருக்கட்டும்'' என்று மிகுந்த கோபத்தோடு மொழிந்தாள் கமலா.

''அக்கா! ஏன் இப்படிக் கோபித்துக் கொண்டு வாயில் வந்தவிதம் பேசுகிறாய்? உங்களுக்குக் கலியாணம் ஆவதில் என்னைக் காட்டிலும் அதிக சந்தோஷமடையக் கூடியவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். இத்தனை வருஷகாலம் என்னோடு பழகியும் என்னுடைய குணத்தை நீங்கள் அறிந்துகொள்ளாதது என்னுடைய துர்ப்பாக்கியமேயொழிய வேறில்லை'' என்று கபடமில்லாமல் விசனத்தோடு தெரிவித்தாள் மல்லிகா.

''நரி வலத்திலும் போக வேண்டாம்; இடத்திலும் போக வேண்டாம்; மேலே விழுந்து கடிக்காமல் போனால் அதுவே போதும். நீ சந்தோஷமும் பட வேண்டாம்; விசனமும் பட வேண்டாம்; சும்மாவிருந்தால் அதுவே போதும். எங்களுடைய சிநேகிதர் வரும் நேரமாயிற்று; அவரைச் சாதாரண மனிதரென்று நினைக்காதே; இரண்டு கோடி ஐசுவரியமுடையவர்; நீ அவருக் கெதிரில் நின்று, எங்களுக்கு அவமானங் கொண்டுவந்து வைக்காதே; அவர் போகிற வரையில் நீ வெளியில் தலையைக் காட்டக்கூடாது'' என்று கண்டித்துக் கூறினாள் கமலா.

அந்தச் சமயத்தில் வாசற்கதவு திறக்கப்பட்டது; முதலில் துக் கோஜிராவும், பின்னால் வஸந்தராவும் உள்ளே நுழைந்தார்கள். வேறு எவரோ வரப்போகிறாரென்று நினைத்திருந்த மல்லிகா, ஜெமீந்தாரைக் கண்டவுடன் வெட்கிக் கீழே குனிந்தவளாய் விரைவாக உள்ளே நுழைந்தாள். முன்னொரு நாள் இரவில் பங்களாவில் தானும் அவரும் தற்செயலாக சந்தித்ததும், அப்போது நடந்த சம்பாஷணையும், அவர் சொன்ன அன்பான மொழிகளும் அப்போதே நிகழ்வனபோல அவளது மனதிற் காணப்பட்டன. அவரது சுந்தர வடிவம் பச்சை மரத்தில் ஆணி அடித்ததைப்போல அவளது மனதில் பதிந்தது. இன்னதென்று விவரிக்க இயலாத ஒருவகையான குழப்பமும் அவளது மனதில் உண்டாயிற்று.

உள்ளே நுழைந்த ஜெமீந்தாரோ, அப்போதே விரிந்த தாமரை மலரைப் போல எழில் வழிய நின்ற மங்கை தம்மைக் கண்ட வுடன் மின்னற்கொடி போல மறைந்ததை நோக்கிப் பெரிதும் திகைப்படைந்தார். முன்னிரவில் கண்டபோது இருந்ததைக் காட்டிலும், அவள் அப்போது ஆயிரமடங்கு சிறந்தவளாய்க் காணப்பட்டாள். சூரியனது ஒளியைக் கண்டு கண்ணொளி

மழுங்கப் பெற்றோருக்கு மற்றெதையும் பார்க்கக்கூடாமல் போவதைப் போல அவளைப் பார்த்தவுடன், அங்கிருந்த ஏனைய மங்கையர் இருவரும் அவருடைய பார்வையில் படவில்லை. புத்தி மாறாட்டமடைந்த நிலைமையில் அவர் உள்ளே வந்தார். அவரைக் கண்டவுடன் கமலாவும் ஸீதாவும் சுருட்டி வாரிக் கொண்டெழுந்து நாணிக்கோணி ஒரு மூலையில் ஆடுகள் ஒடுங்குவதைப்போல ஒருவர்மீதொருவர் உராய்ந்து விகாரமாக நின்றனர்.

அங்குப் போடப்பட்டிருந்த விசிப்பலகையின் மேல் உட்கார்ந்துகொள்ளும்படி துக்கோஜிராவ் ஜெமீந்தாரை வேண்டினான். அவர்களிருந்த இடத்துக்குப் பக்கத்தில் மூடப்பட்டிருந்த சமையலறையின் கதவு அந்தச் சமயத்தில் கொஞ்சம் திறக்கப் பட்டது; மடிக்கப்பட்டிருந்த ஓர் இரத்தின கம்பளம் மெதுவாக வெளியில் வைக்கப்பட்டது. அதை வெளியில் வைக்குமாறு நீட்டப்பட்ட உருட்சி திரட்சி பெற்ற அழகிய சிவந்த கரம், இந்திரஜாலமோவென்னும்படி உடனே உட்புறத்தில் மறைந்தது. அந்தக் குறிப்பை அறிந்த துக்கோஜிராவ் உடனே அந்த இரத்தின கம்பளத்தை எடுத்து விசிப்பலகையின் மேல் விரிக்க, அதன் மீது ஜெமீந்தார் உட்கார்ந்து கொண்டார். கமலா, ஸீதா ஆகிய இருவரும், மல்லிகா செய்த காரியத்தை அறிந்து, அவள் மீது பெருத்த பொறாமை அடைந்தார்கள். மல்லிகாவின் புத்தி நுட்பத்தைக் கவனிக்க ஜெமீந்தார் தமக்குள் பூரிப்பை அடைந்தாரேனும், அதை வெளியிடாமல் எதிரில் நின்ற ஸ்திரீகளை நோக்கி, ''ஆகா! கமலா! ஸீதா! உங்களைப் பார்த்து எத்தனை வருஷங்களாயின! (ஆச்சரியத்துடன்) துக்கோஜி! நான் முதலில் பார்த்தவுடன் இவர்கள் வேறு யாரோவென்று நினைத்து ஏமாறிப் போனேன். குழந்தைகளாயிருந்தவர்கள் எவ்வளவு பெரியவர்களாக உயர்ந்து விட்டார்கள்!'' என்றார்.

''ஆம், ஆம், நீங்கள் பார்த்து 7, 8–வருஷங்களுக்கு மேலாகிறதல்லவா! நீங்கள் பூனாவிலிருந்து வந்திருப்பதாகக் கேள்விப் பட்ட முதல், உங்களைப் பார்க்க வேண்டுமென்று இவர்களுக்கு எவ்வளவு ஆசை தெரியுமா!'' என்றான் துக்கோஜிராவ்.

''கமலா! நான் யாரென்பது உனக்குத் தெரிகிறதா?'' என்று அன்போடு கேட்டார் ஜெமீந்தார். அதிகரித்த நாணத்தினால்,

தனது உடம்பையும், கைகால்களையும் அதிக விகாரம் செய்து முறுக்கிக் கொண்டு சற்று மௌனமாய் நின்றாள் கமலா.

''கமலா! என்ன நீ நிரம்பவும் பெரிய மனுஷி ஆய் விட்டாயே! என்னோடு விளையாடியதை எல்லாம் மறந்து விட்டாயா? ஸீதா அப்போது குழந்தையாயிருந்ததனால், அவளுக்கு ஒருவேளை என்னைத் தெரிந்திருக்காது. உனக்கு நன்றாக நினைவிருக்க வேண்டுமே!'' என்று அன்புடன் தெரிவித்தார் ஜெமீந்தார். உடனே கமலா, ''எனக்கு உங்களுடைய அடையாளம் தெரியாமல் போய்விட வேண்டுமா! அதெப்படிப் போகும்? நீங்கள் புதுப் பணக்காரர் ஆய்விட்டபடியால் உங்களுக்கு ஒருவேளை புத்தி மாறாட்டம் உண்டாகலாம்'' என்று பற்கள் யாவற்றையும் காட்டி நகைத்தவண்ணம் கமலா மறுமொழி சொன்னாள். அதுவரையில் அவளை விகாரப்படுத்திய நாணல் கோணல் முதலிய யாவும் இருந்தவிடந் தெரியாமல் பறந்து போயின; அவள் சிரித்த முகத்துடன் அவருக்கருகில் வந்து நெருங்கி நின்றாள்.

''பேஷ்! இப்போதுதான் பழைய கமலா! பணம் வந்து விட்டால் சிநேகிதரை மறப்பார்களா? நான் அப்படி மறப்பவ னாயிருந்தால், இப்போது தஞ்சையிலிருந்து நேரில் பங்களா வுக்குப் போகாமல் இங்கே போஜனத்துக்கு வருவேனா?'' என்றார் ஜெமீந்தார்.

''நீங்கள் எத்தனையோ தடவைகளில் என்னைத் தூக்கி அணைத்து முத்தமிட்டதெல்லாம் இப்போதே நடப்பன போல எனக்கு நினைவுண்டாகிறதே! ஒருநாள் தவறாமல் என்னிடம் வந்து நீங்கள் கொஞ்சாமல் போனதில்லையே! எத்தனை தடவைகளில் நீங்கள் எனக்குப் பழம் வாங்கிக் கொடுத்திருக் கிறீர்கள்!'' என்று அடக்கவொண்ணாத சிரிப்பினால் தனது உடம்பு முழுவதும் குலுங்க நகைத்துக் குழந்தையைப் போலப் பேசினாள் கமலா. அவளது மொழிகளைக் கேட்ட ஜெமீந்தாரது தேகம் வெட்கத்தினால் குன்றியது. என்றாலும், அவர் தமது முகத்தோற்றத்தை மாற்றாமல், மேலும் சம்பாஷிக்கலாயினார். செம்மறி ஆட்டைப்போலத் தனது அக்காளுடன் கூடவே தொடர்ந்து வந்த ஸீதா, ''பணக்காரனானாலும் பழைய நிலை மையை மறக்கமாட்டேனென்று சொன்னீர்களே! அக்காளை

நீங்கள் கலியாணம் செய்துகொள்வதாக எத்தனையோ தரம் சொன்னீர்களாமே; முகூர்த்தம் எப்போது வைக்கப் போகிறீர்கள்?'' என்றாள். அவ்விதமான சொற்களை எதிர்பாராத ஜெமீந்தார் திடுக்கிட்டுத் திகைப்பை அடைந்தாரேனும், அதை வெளியிற் காட்டிக் கொள்ளாமல், ''அப்படி நடக்க வேண்டுமென்று பிராப்தமிருந்தால், அதுதானே நடக்கிறது!'' என்றார்.

அதுவரையில் தனது பெண்களின் சாதுர்யமான சொற்களைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து பல்லிளித்து நின்ற துக்கோஜிராவ், ''போஜனத்துக்கு நாழிகையாகிறது. எழுந்திருக்கலாமோ?'' என்று கேட்க, ஜெமீந்தார் எழுந்தார். அதைக்கண்ட மல்லிகா கை கால் சுத்தி செய்துகொள்ள ஒரு கூஜாவில் ஜலம் கொணர்ந்து வைத்து விட்டு இரண்டு இலைகளை விரித்துப் பரிமாறினாள். புருஷர் இருவரும் இலையில் உட்கார்ந்து போஜனம் செய்கையில் ஜெமீந்தார், ''இந்தப் பெண் நிரம்ப புத்திசாலியாயிருக்கிறாளே! இவள் யார்?'' என்று துக்கோஜி ராவைக் கேட்டார்.

''இவள் பூனாதேசத்து அரண்மனையில் வேலையிலிருந்த ஜெஸ்வந்தராவ் என்ற என் சிநேகிதனுடைய மகள். அவன் இறந்துபோய்விட்டான். அப்பொழுது, அநாதையாயிருந்த இவளை 6, 7–வருஷத்துக்கு முன் அவன் என்னிடத்தில் விட்டான். அதுமுதல் இவளை நான் பாதுகாத்து வருகிறேன். அவனை உங்களுக்குக்கூடத் தெரிந்திருக்கலாம். இவள் பெயர் மல்லிகா'' என்றான் துக்கோஜிராவ். ''இவள் நன்றாகப் படித்திருந்தாலும் இவளுக்கு சமையல் காரியம், சம்பாஷணை முதலியது அவ்வள வாகத் தெரியாது. பார்வையிலிருந்தே புத்திசாலியென்று நினைப்பது எப்போதும் தவறாக முடியும். வெள்ளைத் தோலுக்கும் புத்தியின் கூர்மைக்கும் என்ன சம்பந்தம்?'' என்று சிரித்துக்கொண்டு கூறினாள் கமலா.

''கமலா! உன்னைக் காட்டிலும் இவள் அதிக புத்திசாலியென்று நான் சொல்லவில்லையே! உனக்குப் பிறகுதான் மற்றவர்கள்! நீ இதற்குள் கோபித்துக் கொள்ளாதே!'' என்றார் ஜெமீந்தார். அவ்வளவோடு மல்லிகாவைப் பற்றிய சம்பாஷணை முடிந்தது.

''இரண்டு வாரத்துக்குமுன் வந்த நீங்கள் ஒருவருக்கும் சொல் லாமல் மறுநாளே போன காரணமென்ன?'' என்றாள் ஸீதா.

''இந்த மாளிகையில் நான் எப்போதும் வசிக்கலாமென்று தீர்மானம் செய்து கொண்டேன்; தஞ்சையிலுள்ள மற்ற பொருள்களைப் பற்றி தக்க ஏற்பாடுகள் செய்துவிட்டு வரவேண்டுமென்ற எண்ணத்துடன் உடனே போனேன். அந்த வேலை நேற்றோடு முடிந்தது. இன்று சாயுங்காலம் சமையற்காரன் முதலியோருடன் ஸகாராம்ராவ் வந்து சேருவார். நீங்களும் என்னுடன் கூட வருவீர்களானால் நாம் எல்லோரும் வேடிக்கையாகப் போய்ப் பழைய காலத்து அறைகளின் விநோதங்களைப் பார்த்து சந்தோஷப்படலாம்'' என்றார் ஜெமீந்தார்.

''இந்த மாளிகையை நான் வெளியிலிருந்து பார்த்த போதெல்லாம் இதற்குள் போய்ப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எத்தனையோ தடவைகளில் உதித்தது. அது உங்கள் தயவால் இன்று நிறைவேறப் போகிறது'' என்று சந்தோஷமாகத் தெரிவித்தாள் கமலா.

அவ்வாறு பேசியவண்ணம், அவர்களது போஜனம் முடிந்தது; ஜெமீந்தார் தாம்பூலம் தரித்துக்கொண்டு இரண்டொரு நாழிகை இருந்த பிறகு துக்கோஜிராவை நோக்கி, ''பங்களாவுக்குப் போவோம் புறப்படுங்கள்!'' என்றார். அதைக் கேட்ட கமலா ஸீதா ஆகிய இருவரும், 'நான் முன்னால்' 'நீ முன்னால்' என்று புறப்பட்டார்கள். உடனே துக்கோஜிராவும் எழுந்து மல்லிகாவை அழைத்து, ''மல்லிகா! நாங்கள் எல்லோரும் பங்களாவுக்குப் போகிறோம். நீயும் வருகிறாயா?'' என்றான்.

''நான் அங்கே வந்து என்ன செய்யப் போகிறேன்? இங்கிருந்தால் ஏதாவது காரியம் ஆகும்'' என்றாள் மல்லிகா.

அதற்குள் கமலா, ''வீட்டைக் காலி செய்துவிட்டு எல்லோரும் போகக் கூடாது. இவள் இங்கேயே இருந்து பார்த்துக் கொள்ளட்டும். அங்கே வந்து என்ன செய்யப் போகிறாள்?'' என்றாள்.

''இவளுக்கு ஆசையாயிருந்தால் பிறகு ஒருநாளைக்கு வரட்டுமே! எல்லோரும் போய்விட்டால் ராத்திரி போஜனத்தை யார் தயார் செய்கிறது? இவள் வரவேண்டாம்'' என்றாள் ஸீதா.

உடனே ஜெமீந்தார் துக்கோஜிராவை நோக்கி, ''துக்கோஜி! நீங்கள் அங்கே வந்தால் இன்று திரும்பிவர முடியாது. அங்கே

சந்தோஷமாக இருந்துவிட்டு நாளைக்கு வரலாம். ஆகையால் மல்லிகாவையும் அழைத்துக் கொண்டு வாருங்கள். அவளும் இவர்களைப் போல விளையாட்டுப் பெண்தானே – மல்லிகா! நீ இங்கே என்ன செய்யப்போகிறாய்? இவர்களுடன் நீயும் புறப்படு'' என்று அன்பாகத் தெரிவித்தார். அதைக்கேட்ட மற்ற மூவரும் தமது மனத்தில் எழுந்த பொறாமையை அடக்க மாட்டாமல் சிறிது தத்தளித்தனர்; என்றாலும் அவரது சொல்லை மறுத்துப் பேச அஞ்சினவர்களாய் மௌனமாயிருந்தனர். உடனே ஜெமீந்தார் புறப்பட்டார். அவருக்குப் பின்னால் துக்கோஜிராவும் பெண்கள் மூவரும் தொடர்ந்தனர். ஐவரும் பங்களாவை நோக்கிச் சென்றனர்.

பணப் பேய்

அன்று காலையில் தஞ்சை தெற்கு ராஜ வீதியில் ஒரு வீட்டின் கூடத்தில் போடப்பட்டிருந்த விசிப் பலகை ஒன்றன் மேல் ஸகாராம்ராவ் உட்கார்ந்துகொண்டு வெற்றிலை பாக்கு முதலிய வஸ்துக்களைத் துண்டு துண்டாகச் செய்து ஒரு சிறிய பித்தளை உரலில் போட்டு டொக்கு டொக்கென்று இடித்துக் கொண்டிருந்தான். அவனது பற்கள் யாவும் அநேகாய் வீழ்ந்து போய்விட்டமையாலும், மிகுதியிருந்தவை ஆடிக் கொண்டிருந்த மையாலும் அவன் அவ்வாறு வெற்றிலை பாக்குத் துகையல் செய்து கொண்டிருந்தான். அவன் மீதிருந்த உடைகளும் வீட்டிற் குள்ளிருந்த பொருட்களும் அழுக்கடைந்தும் கிழிந்தும் பழையன வாயும் காணப்பட்டு, அவன் தரித்திர நிலைமையிலிருப் பவனோ வென்னும் ஐயமுண்டாக்கின. ஆனால் உண்மையில் அவன் தரித் திரனல்லன். பெட்டிக்குள் வைத்த பணத்தை வெளியில் எடுப்பது பெருத்த பிழையென்பது அவனுடைய பிடிவாதமான கொள்கை. அவன் அதுவரையில் பவானியம்மாள்புரம் சமஸ்தானத்தில் ஸர் வாதிகாரி வேலையில் அளவற்ற பொருட்களைக் கொள்ளையடித்து குவித்திருந்தானாயினும் அவற்றைச் செலவு செய்ய மனமற்ற வனாய்க் காசுக்குக் காசு லாபம் வைத்து பணத்தை வட்டிக்குக் கொடுப்பதையும் தொழிலாக வைத்துக் கொண்டிருந்தான். இரவிலும் பகலிலும் எந்த நேரத்திலும் பணம் பண மென்று ஜெபம் செய்து அதையே ஆகாரமாய் மதித்து அவன் உயிரை வைத்துக் கொண்டிருந்தான். முன் கூறப்பட்டபடி உட்கார்ந்திருந்த ஸகா ராம் ராவ் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு, ''பீமா! பீமா!'' என்று இரண்டு முறை கூப்பிட, உட்புறமிருந்த ஒரு யௌவ னப் புருஷன் உடனே வந்தான். அவன் சற்றேறக் குறைய 27 – வயதடைந் தவனாயும் உயரமான சிவந்த தேகத்தை உடையவனாயுமிருந்தான்.

அவனைக் கண்டவுடன், ''பீமா! கலியாணபுரம் ஜெமீந்தாரை எந்த நிலைமையில் வைத்திருக்கிறாய்? நம்முடைய யோசனை எப்போது நிறைவேறும்?'' என்றான் ஸகாராம் ராவ்.

உடனே பீமாராவ், ''அவன்தான் பெருத்த டம்பாச்சாரி என்பது தெரியுமே; அதோடு சுயபுத்தியும் கிடையாது. ஆனால் அவன் என் சொல்லை மாத்திரம் கேட்கிறான். நம்முடைய எண்ணம் அதி சீக்கிரத்தில் கைகூடும்'' என்று கூறினான். உடனே கிழவன், ''பீமா! குழந்தைப் பருவத்தில் தாய் தந்தையில்லாமல் அநாதையாயிருந்த உன்னை எடுத்து நான் எவ்வளவோ பாடு பட்டு இதுவரையில் வளர்த்தேன். அந்த நன்மையை மறவாமல் என்னுடைய விருப்பப்படி எப்போதும் நடந்து வந்தால் நீ சுகப் படுவாய். எனக்கு உன்னைத் தவிர வேறே யார் இருக்கிறார்கள்? இவ்வளவு பாடுபட்டுத் தேடும் பணமெல்லாம் உன்னைத்தானே சேரப் போகிறது. ஆனால், நான் இறப்பதற்குள், என்னுடைய முக்கியமான ஆசை நிறைவேறாவிட்டால், என் மனம் வேகாது'' என்று உருக்கமாகக் கூறினான்.

பீமன் : முக்கியமான ஆசை என்ன? – என்றான்.

கிழவன் : ஏதாவது ஒரு சமஸ்தானத்தை வாங்க வேண்டும். ஜெமீந்தார் என்ற பட்டம் பெற வேண்டும். கலியாணபுரம் ஜெமீந்தார் இப்போது என்னிடத்தில் வாங்கியிருக்கிற கடன் இருபதினாயிரத்துக்கு மேலாகிறது. இன்னும் இருபதினாயிரம் வாங்கிக் கொள்வானாகில், அது நாலைந்து வருஷத்தில் வட்டியும் முதலுமாய் லட்ச ரூபாய்க்கு வந்து விடும். அதன் பிறகு ஜெமீன் சுலபத்தில் நம்முடையது ஆகிவிடும் – என்றான்.

பீமன் : அவன் சிநேகிதர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு குதூகலமாகக் காலங் கழிக்கிறான். சூதாட்டம் முதலிய செலவு களுக்குத் தினம் நூறு இருநூறு ஆகிறது. செலவுக்குக் கையில் பணமில்லையென்றும், கொஞ்சம் கடன் வாங்க வேண்டு மென்றும் சொல்லி, யாரிடத்தில் வாங்கலாமென்று அவனே என்னைக் கேட்டான். உங்களிடத்தில் வாங்கினால் ஒரே இடமா யிருக்குமென்று நான் மெதுவாகச் சொன்னேன். வட்டியைக் கொஞ்சம் குறைக்கும்படி சிபார்சு செய்யச் சொன்னான். அப்படியே ஆகட்டுமென்று சொல்லியிருக்கிறேன் – என்று மறுமொழி கூறினான்.

கிழவன், ''நல்ல காரியம் செய்தாய்! அவனை எப்படியாவது என் வலையில் சிக்கும்படி செய்துவிடு. வட்டியைக் குறைத்துக் கொடுப்பதாகச் சொல்லி அழைத்துக் கொண்டு வா. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்'' என்றான்.

பீமன் : எப்போது அழைத்துக் கொண்டு வருகிறது?

ஸகா : நான் இப்போது பவானியம்மாள் புரத்துக்குப் போகிறேன். நம்முடைய புதிய ஜெமீந்தார் அங்கேயே இருக்கப் போகிறாராம். மாளிகையைச் சுத்தம் செய்து அலங்கரித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் கொஞ்ச வேலை மிகுதியிருக்கிறது. அதைச் செய்து முடித்துவிட்டு நாளைய தினம் திரும்பி வந்துவிடுவேன். அவனை நாளைய பகலில் அழைத்துவா – என்றான். ''சரி, அப்படியே செய்கிறேன். இரண்டு கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்குள் வஸந்தராயரையா சேர்ந்து விட்டன! என்ன அதிர்ஷ்டம்! பிறந்தாலும் இப்படியல்லவா பிறக்க வேண்டும்! – என்றான் பீமாராவ்.

''நான் இதுவரையில் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் அந்த விஷயத்திலும் இப்போது பெருத்த சந்தேகமொன்று உண்டாகிவிட்டது. சொத்து அவருக்கு நிலைக்குமோ நிலைக் காதோ என்னும் சந்தேகம் பிறந்திருக்கிறது'' என்றான் கிழவன்.

''இத்தனை நாளுமில்லாமல் இப்போது இந்தப் புதிய சந்தேகமுதித்த காரணமென்ன?'' என்றான் பீமாராவ்.

''இறந்துபோன பரசுராம பாவா முதலில் வஸந்தராவின் பேரில் இரண்டு வருஷத்துக்குமுன் ஒரு சாஸனம் எழுதி வைத்தார். இப்போது சமீப காலத்தில் அவருக்கு ஒரு கடித மெழுதி இருக்கிறார். அந்தக் கடிதத்தில், வேறொரு வார்சுதாரர் இருப்பதாயும், சொத்துக்கள் அவரையே சேருமென்றும், வஸந்த ராவுக்கு சொற்பத் தொகையே கொடுத்திருப்பதாயும் எழுதியிருக் கிறார். அதைப் பார்த்த நிமிஷம் முதல் எனக்குப் பெருத்த சந்தேகமுண்டாகி விட்டது'' என்றான் கிழவன்.

பீமன் : இதெல்லாம் பரசுராம பாவாவின் சுயார்ஜிதமான சொத்துதானே? அவர் கடிதத்தில் எழுதியிருப்பது உண்மை யானால் வேறு சாஸனம் எழுதித்தானிருக்க வேண்டும்.

ஸகா : கடிதத்தை நானே பார்த்தேன். அப்படித்தான் அவர் எழுதியிருக்கிறார்.

பீமன் : உமக்குத் தெரியாமல் வேறு பாத்தியஸ்தன் எவன் இருக்கிறான்? அவருக்குப் பிள்ளை பெண்கள் ஒன்றும் இல்லையே. அவருக்கு முன்னால் அவருடைய சம்சாரமும் இறந்துபோய் விட்டாளே.

ஸகா : நீ அவருடைய முதல் மனைவியைப் பற்றிப் பேசுகிறாய். இதில் இன்னொரு ரகஸியமிருக்கிறது. அவர் பாலியராயிருந்தபோது பூனாவில் ஓர் ஏழைப் பெண்ணைக் கண்டார்; அவள் நிரம்பவும் அழகுடையவளாயிருந்தமையால், அவள் மேல் காதல் கொண்டு அவளை அந்தரங்கமாகவே கலியாணம் செய்துகொண்டு அழைத்து வந்து பவானியம் மாள்புரத்து மாளிகையில் எவருக்கும் தெரியாமல் ரகஸியமாக வைத்திருந்தார். அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. பூனாவிலிருந்த அதன் பாட்டனிடம் அதை அனுப்பி அதற்குப் பெருத்த பணத் தொகையையும் அனுப்பினார். அங்கே அவர்கள் அந்தப் பெண்ணை வளர்த்துக் கலியாணம் செய்து வைத்தார் களாம். அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததாம். உடனே இதன் தாய் இறந்து போனாளாம். அந்தக் குழந்தையும் அவளோடு இறந்துவிட்டதாகச் செய்தி பரவியது. அது இறக்கவில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். அந்தப் பெண் உயிருடனிருந்தால் பரசுராமா பாவா ஒருகால் அதன் பேரில் ஜெமீனை எழுதி வைத்திருக்கலாம். அதைத்தவிர வேறு பாத்தியஸ்தர் எவருமில்லை.

பீமன் : அப்படியா! அந்த சாஸனத்தை எப்படியாவது நீர் கண்டுபிடித்தால் அது நமக்கு நிரம்பவும் நல்லதல்லவா.

ஸகா : ஆம் ஆம்; அந்தக் கடிதத்தைக் கண்டபின் மாளிகையில் ஓர் இடம் விடாமல் தேடிப் பார்த்தேன். அது அகப் படவில்லை. இருக்கட்டும், இன்னமும் நன்றாகத் தேடிப் பார்க்கிறேன்.

பீமன் : நீர் அதைப் பாரும். நான் அந்தப் பெண் எங்கே இருக்கிறாளென்பதைப் பற்றி விசாரிக்கிறேன். அவள் அகப்படு வாளானால், அவளைக் கலியாணம் செய்து கொள்பவனுடைய பாக்கியமே பாக்கியம்.

ஸகா : சரி! எனக்கு நேரமாகிறது. நான் இப்போது பவானியம்மாள்புரம் போகிறேன். அங்கே நான் சாஸனத்தை இன்னமும் தேடிப் பார்க்கிறேன். நீ கலியாணபுரம் ஜெமீந்தார் விஷயத்தை மறந்து விடாதே – என்று சொல்லிவிட்டு எழுந்து நல்ல உடைகளணிந்தபின் வெளியிற் போக, பீமாராவும் உடனே புறப்பட்டு கலியாணபுரம் ஜெமீந்தார் இறங்கி இருந்த ஜாகையை நோக்கிச் சென்றான்.

5—வது அதிகாரம்

ஊசியும் காந்தமும்

தங்களிடம் காட்டாத அன்பையும் பிரியத்தையும் ஜெமீந்தார் மல்லிகாவிடம் காட்டியதைக் கவனித்த கமலா ஸீதா ஆகிய இருவரும் அடிக்கடி தமக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண் டார்கள்; தங்களது தந்தையின் செவியில் அப்போதைக்கப்போது ஏதோ கோள் சொல்லிக் கொண்டார்கள். என்றாலும், அவர்கள் ஜெமீந்தாரைக் காணும்போதெல்லாம், சந்தோஷமாக இருப்ப வரைப்போல் நடித்து கபடமற்றவராய்க் காண்பித்துப் பல்லிளித்தனர்.

அன்று பகல் ஐந்து மணி நேரமிருக்கலாம். ஸகாராம்ராவ் தனது கையில் ஒரு கொத்து சாவிகளை எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு அந்த மாளிகையின் விநோதங்களைக் காட்ட, ஒவ்வோரிடமாக, அவர்களை அழைத்துக் கொண்டு சென்றான். அந்த மாளிகை ஓர் அரண்மனையைப் போல அதிக நேர்த்தி யாகவும் சிறப்பாகவும் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. அது பல நாட்களாக மூடப்பெற்றிருந்தும், அதன் உட்புறம் ஓர் அற்ப மாசுமற்றதாயிருந்தது. தரையெல்லாம் சலவைக் கல்லினால் தளவரிசை செய்யப்பெற்றும், மிருதுவான இரத்தின கம்பளங்கள் நிரந்தரமாக விரிக்கப்பெற்றும் இருந்தது. கச்சேரி மண்டபமும், புஸ்தக சாலையும், படங்களின் மண்டபமும், கிளிகளின் மண்டபமும், கொலு மண்டபமும், சயன அந்தப் புரங்களும், போஜன மண்டபமும், பளிங்கு மண்டபமும், சித்திர மண்ட பமும், விளையாட்டு மண்டபங்களும், பிறவும் விநோதமாக அமைக்கப் பெற்றிருந்தன. ஸகாராம்ராவ் அவைகளை ஒவ் வொன்றாய்க் காட்டியவாறு முன்னால் சென்றான். அங்கிருந்த அற்புதமான பொருட்களை என்றுங் கண்டறியாத கமலா ஸீதா துக்கோஜிராவ் ஆகிய மூவரும் யானையைக் கண்ட பட்டிக்

காட்டானைப் போல் அடக்கவொண்ணா ஆச்சரியமடைந்த வர்களாய்த் தம்முடனிருந்தோரையும் தம்மையும் ஒருங்கே மறந்தவராய்ப் பெருமகிழ்ச்சி காட்டி மேன்மேலும் சென்று கடைசியாகப் படங்களின் மண்டபத்தையடைந்தனர். அதில் வரிசை வரிசையாக மாட்டப்பட்டிருந்த தஞ்சை ராஜாக்களின் படங்களையும் அவர்களது பட்டமகிஷியரின் சித்திரப் படங் களையும் நேத்திராநந்தமாகக் கொண்டு எல்லோரும் திகைப் படைந்தனர். படங்களின் இடையில் ஓர் ஆள் உயரம் எழுப்பி நிறுத்தப்பட்டிருந்த பரசுராம பாவாவின் படத்தைக் கண்ட ஜெமீந்தார் பெரிதும் வியப்படைந்து, ''இதை எப்போது எழுதினீர்கள்?'' என்று கேட்டார்.

ஸகா : இரண்டு வருஷத்துக்குமுன் எழுதுவித்தோம். இதை எழுதினவனுக்கு 500 – ரூபாய் சன்மானம் கொடுத்தோம் என்றான்.

உடனே ஜெமீந்தார், ''கமலா! ஸீதா! படங்களைப் பார்த்தீர் களா?'' என்றார்.

''ஆகா! என்ன கண்காட்சி! எங்கள் வீட்டுக்கு ஓர் அடி தூரத்தில் இந்த விநோதக் களஞ்சியமிருப்பதை நாங்கள் இது வரையில் அறிந்துகொள்ளாமல் போய்விட்டோமே என்ற விசனம் உண்டாகிறது'' என்று ஆச்சரியத்தினால் வாயைப் பிளந்தவண்ணம் விடையளித்தாள் கமலா.

உடனே ஜெமீந்தார் கமலாவை நோக்கி, ''கமலா! மனித ருடைய சுபாவத்தைப் பார்த்தாயா? இப்போது சுகமனுபவிப் பதை விடுத்து, இதுவரையில் அதை அநுபவிக்கவில்லையே யென்று விசனப்பட்டு, உள்ள சுகத்தையும் குறைத்துக்கொள்வது இயல்பாக இருக்கிறதே!'' என்று சொல்லிவிட்டு, மல்லிகா எங்கிருக்கிறாளென்று திரும்பிப் பார்த்தார்; அவள் ஒன்றையுங் கவனியாமல் அதிக தூரத்தில் அலட்சியமாக நின்றுகொண்டி ருந்ததைக் கண்டார்.

''மல்லிகா! ஏன் அவ்வளவு தூரத்தில் அப்படி நிற்கிறாய்? நடப்பதற்கு அலுப்பாயிருந்தால், மிகுதியிருக்கும் இடங்களை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். திரும்பிப் போய்விடு

வோம்'' என்று மிகுந்த அன்போடு ஜெமீந்தார் தன்னை நோக்கி மொழிந்ததைக் கேட்ட மல்லிகா திடுக்கிட்டு உடனே புன் சிரிப்பைக் காண்பித்து, ''அலுப்பொன்றுமில்லை. இதோ வந்து விட்டேன்'' என்று மிருதுவாக விடையளித்து நாணிய வண்ணம் அவர்களுக்கருகில் வந்து நின்றாள்.

''எங்களுக்கில்லாத அலுப்பு இவளுக்கு மாத்திரம் வந்து விட்டதோ! இவளுக்குப் பார்க்க மனமில்லாவிட்டால், நின்று விடட்டும். நாம் எல்லா இடத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்'' என்று ஆத்திரமாகக் கூறினாள் ஸீதா.

அதைக் கேட்ட ஜெமீந்தாரது அழகிய முகம் திடீரென்று மாறுபட்டதாயினும் அவர் தமது கோபத்தை வெளியிற் காட்டாமல் மறைத்துக் கொண்டார். அதன் பிறகு அருகிலிருந்த நீர் விளையாட்டு மண்டபத்திற்குப் போயினர். அங்கு ஒரு சிறிய குளம் ஆழமாக வெட்டப்பட்டிருந்தது. சமுத்திரத்திலிருந்து, பூமியின் கீழ் கட்டப்பட்ட கால்வாய் மூலமாக ஜலம் கொண்டு வரப்பட்டு அந்தக் குளத்தில் நிரப்பப்பட்டிருந்தது. அதன் நாற்புறங்களிலும் சலவைக் கல்லினால் படித்துறைகள் கட்டப் பட்டிருந்தன. அதைச் சுற்றிலும் பூத்தொட்டிகளும் சலவைக்கல் நாற்காலிகளும் ஸோபாக்களும் ஏராளமாக நிறைந்திருந்தன. எல்லோருக்கும் முன்னால் நடந்த கமலா ஸீதா துக்கோஜிராவ் ஆகிய மூவரும் அவைகளை அலட்சியமாக மதித்து அண்டை யிலிருந்த கொலு மண்டபத்தின் விசேஷித்த அழகைக்காண ஆவல்கொண்டு விரைந்தோடினர். அதுவரையில் கண்ட விநோதங்களைக் காட்டிலும் பதினாயிரமடங்கு சிறந்த நவீனப் பொருட்களிருந்த அவ்விடத்தின் அழகில் அவர்கள் ஈடுபட்டு வியப்படைந்து தத்தம் கண்ணிற்பட்ட பொருளையே பார்த்த வண்ணம் நெடுநேரமிருந்து, மேற்செல்ல மனமற்றவராய், அதற்கப்பாலிருந்த கிளிமண்டபத்திற்கு அரை மனதோடு நடந்தனர்.

அப்போது தற்செயலாகத் திரும்பிப் பின்புறம் பார்த்த ஜெமீந்தார் மல்லிகாவைக் காணாமல் திடுக்கிட்டவராய், அதிக ஆவல் கொண்டு, திரும்பவும் கொலுமண்டபம் வந்தார். அங்கும் அவள் காணப்படாமையால், அதற்கு முன்னிருந்த நீராடு மண்டபத்திற்கு வந்தார். அங்கு ஒரு சலவைக்கல் மேடையில்,

தனது முதுகைக் கொலுமண்டபத்தின் பக்கத்தில் காட்டிய வண்ணம் உட்கார்ந்திருந்த மல்லிகாவைக் கண்டு, சந்தடி செய்யாமல் மெல்லநடந்து அவளிடம் நெருங்கிவந்து பின் புறத்தில் நின்றார். அவளை அவ்வளவு சமீபத்தில் வெளிச்சத்தில் அப்போதே அவர் நன்றாகப் பார்த்தார். ஆதலால், அவளது கட்டழகும் ஜோதி கண்கொள்ளாக் காட்சியாகவிருந்தன. அவர் அப்படியே திகைத்து ஸ்தம்பமாய் நின்று, ''ஆகா! இவள் ராஜாத்தியைப் போலல்லவா இருக்கிறாள்! குப்பையில் தாமரை பூத்ததைப் போல இவ்வளவு சிரேஷ்டமான அழகைக் கொண்ட இந்தப் பொற்கொடி, துஷ்டர்களான இந்தப் பேதையர்க ளிடத்திலா அகப்பட்டு வருந்தவேண்டும்? ஆகா! தன்னுடைய கால்களைக் கையினால் பிடித்துக் கொள்ளுகிறாளே! ஐயோ பாவம்! காலையிலிருந்து பாடுபட்டு எனக்காக விருந்து தயாரித்த அலுப்பல்லவா! புஷ்பத்தைப்போன்ற இவளுடைய மிருதுவான அங்கங்கள் எவ்விதம் நோகின்றனவோ தெரியவில்லையே! இவள் நடக்க மட்டாமல் தத்தளித்ததை முன்னமேயே நான் கவனித்தேன்; அது இப்போது நிஜமாயிற்று. நான் இப்போது இவளைக்கூப்பிட்டாலும் இவளுக்கெதிரில் சென்றாலும் இவள் உடனே எழுந்து நிற்பாள். இப்போது இவள் அடையும் இன்பத்தைக் கெடுத்த பாவியாக நான் ஆய்விடுவேன். ஆனால் நான் இப்படியே பின்புறத்தில் மறைந்து நிற்பதும் பெருத்த தவறாகும். இவள் நான் இருப்பதை அறிந்தால், என்னைப்பற்றி நிரம்பவும் கேவலமான அபிப்பிராயம் கொண்டு, என்னை துன்மார்க்கனாக மதிப்பாள். இந்த தரும சங்கடத்திற்கு என்ன செய்கிறது? சரி; இங்கு நிற்காமல் கொலுமண்டபத்திற்குப் போவதே நல்லது'' என்று தீர்மானித்துக்கொண்டு வந்த வழியே திரும்பிக் கொலுமண்டபத்தை நோக்கி நடந்தார்.

அந்தச் சமயத்தில் தற்செயலாகப் பின்புறம் திரும்பிப் பார்த்த மல்லிகா, ஜெமீந்தார் போனதைக் கண்டு திடுக்கிட்டெழுந்து மற்றவரும் அந்த வழியாகத்தான் போயிருக்க வேண்டுமென்று நினைத்து அவருக்குப் பின்புறம் நடக்க ஆரம்பித்தாள். அதை யறிந்த ஜெமீந்தார் ''மல்லிகா! ஏன் எழுந்துவிட்டாய்? இன்னும் கொஞ்சநேரம் இளைப்பாறுகிறதுதானே! நான் உன்னைக் காணாமல் திரும்பி வந்து தேடிப்பார்த்தேன். நீ சிரமபரிகாரம்

செய்துகொண்டிருப்பதைக் கண்டு, அதற்கு இடைஞ்சல் செய்யக் கூடாதென்று நினைத்துத் திரும்பிப் போனேன். நான் நடந்த ஓசை உன்னை எழுப்பிவிட்டது போலிருக்கிறது. ஆகா! என்ன பாதகம் சம்பவித்தது!'' என்று மிகுந்த அன்போடும் உண்மையான விசனத் தோடும் மொழிந்தார் ஜெமீந்தார்.

''அப்படி ஒன்றுமில்லை. நேரமாய் விட்டதே என்று நானே எழுந்தேன். அவர்கள் நிரம்பவும் தூரத்தில் போய்விட்டார் களோ?'' என்று புன்சிரிப்போடும் மரியாதையாகவும் கேட்டாள் மல்லிகா.

''அவர்கள் ஆநந்தத்தில் முழுகி மேன்மேலும் பார்த்துக் கொண்டே போகிறார்கள். அவர்கள் எல்லாவற்றையும் நன்றாய்ப் பார்க்கட்டும். பிறகு நாம் மெதுவாகப் பார்த்துக்கொள்ளலாம். நடந்தது எனக்கும் அலுப்பாக இருக்கிறது'' என்று கூறிய வண்ணம் அங்கிருந்த ஒரு மேடையின்மேல் உட்கார்ந்து கொண்டார் ஜெமீந்தார்.

அதுவரையில் தன்னிடத்தில் அவ்வளவு உள்ளார்ந்த அன்பை எவரும் காட்டியதையுணராத மல்லிகா, ஒருநாளிரவு தன்னைச் சந்தித்தது முதல் வரவர அதிகரிக்கும் ஆசையைத்தான் தன் மீது காட்டிவரும் சீமானான ஜெமீந்தாரது இனிய மொழிகளைக் கேட்பது அவளுக்குப் புண்ணில் அமிர்த ஸஞ்சீவியைச் சொரிவது போலிருந்தது. அவரது விஷயத்தில் அடக்கவொண்ணாத ஒரு வகைப் பற்றுண்டாயிற்று. ஆயினும் நாணம், மடம், அச்சம் ஆகிய உணர்ச்சிகள் அவளை ஓயாமல் வருத்தியவண்ணம் இருந்தன. அவ்வளவு உண்மையான பிரியத்தைக்காட்டிய மனிதரின் மனதிற்குத் தான் சிறிதும் வருத்தம் உண்டாக்கக் கூடாதென்று நினைத்த மல்லிகா, அவரது நோக்கத்தையறிந்து கொண்டவளாய் நின்ற வண்ணம், நாற்புறத்தையும் திரும்பிப் பார்த்து, ''ஆகா! இந்த இடத்தின் அழகு ஒன்றே போதும்! எவ்வளவு மநோ ரம்மியமாக இருக்கிறது! எல்லாம் பூர்வஜென்ம புண்ணியத் தினால் கிடைக்க வேண்டுமேயொழிய வேறில்லை. இப்படிப் பட்ட இடத்தில் இருந்தால் குணமுண்டாகுமோவென்று சந் தேகப்பட்டு, அன்றிரவு என்னைக் கேட்டீர்களே! இங்கிருப் பதைவிட விசேஷித்த பாக்கியமும் உலகத்தில் இருக்கிறதா?'' என்றாள் மல்லிகா.

"மல்லிகா! நீ கூட அறியாதவளைப் போலப் பேசுகிறாயே! ஏராளமான செல்வமும் சிறப்பும் இருந்தாலும் மனதின் அமைதி யில்லாவிட்டால், அவைகளினால் என்ன சுகம் உண்டாகப் போகிறது! செல்வமென்பது சிந்தையின் அமைதியல்லவா" என்றார் ஜெமீந்தார்.

"சற்றுமுன் தாங்கள் கமலாவுக்குச் சொன்ன புத்திமதி நினைவுக்கு வரவில்லையோ? இப்போது கிடைக்கும் சுகத்தை நினைக்காமல், இறந்த கால எதிர்காலக் குறைகளை நினைத்து வருந்தக் கூடாதென்று சொன்னீர்களே. அதை உங்கள் சொந்தக் காரியத்தில் மறந்து விடலாமோ?" என்று புன்சிரிப்போடு தெரி வித்தாள் மல்லிகா.

"மல்லிகா! உன்னுடைய கூர்மையான புத்தியும் கிரகண சக்தியும் என்னவென்று சொல்லுவேன்! பிறர் சொல்லும் புத்தியைத் தவறிவிடாமல் கவனித்து மனதில் பதியவைத்துக் கொண்டு, அதைச் சரியான சமயத்தில் பயன்படுத்த முயல்வது உத்தம குணமல்லவா! அத்தகைய நற்குணம் வாய்ந்த பெண்மணி எவ்வளவு மேலானவள்! அவளைக் காட்டிலும் விசேஷமான பொருள் உலகில் வேறுண்டா? மல்லிகா! உன்னுடைய நற் குணத்தையும், அடக்க ஒடுக்கத்தையும் கண்டு நான் பெரிதும் மனமகிழ்ந்தேன்; மெச்சினேன்! மெச்சினேன்! அன்றிரவு உன்னைக் கண்டமுதல், உன்னிடத்தில் ஒருவிதப் பற்றும் அன்பும் உண்டாகி நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரிப்பதைக் காண, அதன் காரணம், உன்னுடைய நற்குணமும் நன்மொழியுமென்றே இப்போது விளங்குகிறது. இந்த முறை உன் காரியங்களையும், பரிசுத்த குணத்தையுங்காண, இனி ஒரு கணமேனும், உன்னை விட்டுப் பிரியக்கூடாதென்னும் ஒருவித ஆவல் உதிக்கிறது" என்று கூறி மேலும் ஏதோ விஷயத்தைத் தெரிவிக்க ஆரம்பித்தார் ஜெமீந்தார்! தமது ஆவேசத்தை அடக்கிக்கொண்டு, "மல்லிகா! இப்போது நீ சொன்ன நற்புத்தியை நான் இனி மறப்பதில்லை. இறந்தகால எதிர்கால விசனங்களை மறந்துவிட இனி முயலுகி றேன். இதற்குத்தான் நற்குணம் வாய்ந்த ஸ்திரீகள் புருஷருக்குத் துணையாயிருக்க வேண்டுமென்பது. அந்தந்தக் காலத்துக்கேற்ற யோசனையை மந்திரியைப் போலச் சொன்னால் புருஷருடைய மனக்கவலைகளுக்கு அது எவ்வளவு ஆறுதலாயிருக்கும்! நான்

ஒரு விஷயம் கேட்கிறேன். கோபித்துக் கொள்ளாமலிருப்பாயா?'' என்றார் ஜெமீந்தார்.

''என்ன விஷயம்? எவ்வளவோ புத்திமானாகிய தாங்கள் பிறருக்குக் கோபம் உண்டாகக்கூடிய மொழியை ஒரு நாளும் சொல்லமாட்டீர்களே! அப்படி இருக்க, இவ்விதமான பீடிகை எதற்கு? தயவுசெய்து தெரிவியுங்கள்'' என்றாள் மல்லிகா.

''நான் இந்த மாளிகைக்கு முதலில் வந்தபோது எனக்கு இவ்விடத்திலிருக்க வேண்டுமென்னும் எண்ணம் இல்லாதிருந்தது. அன்று உன்னைக் கண்ட முதல், உத்தமியான உன்னை அடிக்கடி காணலாமென்றும், இத்தகைய நல்ல மனிதர் அருகிலிருக்கும் இந்த இடத்தில் இருப்பதனால் சந்தோஷம் அடையலாமென்றும் நினைத்தே இங்கு வந்திருக்க நான் தீர்மானித்தேன். ஆகையால், மற்றவர் வரும்போது நீயும் அடிக்கடி அந்த மாளிகைக்கு வந்தால் என் மனசுக்கு இன்பமுண்டாகும்'' என்று உருக்கமாகக் கூறினார் ஜெமீந்தார்.

''இதுதானா ஒரு பெரிய விஷயம்! இதற்குக் கோபமென்ன! தங்கள் உத்தரவுப்படியே செய்யக் காத்திருக்கிறேன். மற்றவர்கள் இங்கு வரும்போது அவர்கள் என்னையும் இங்கு அழைத்து வருவார்களானால் நான் அவசியம் வருகிறேன்'' என்றாள் மல்லிகா. ''மல்லிகா! நீ நெடுநேரமாக நின்றுகொண்டிருக் கிறாயே! அந்த மேடையின் மேல் உட்கார்ந்துகொள்'' என்று அன்புடன் வேண்டினார் ஜெமீந்தார்.

''இல்லையில்லை, பாதகமில்லை. அதோ அந்தத் தொட்டி யிலிருக்கும் ரோஜாப் பூவின் அழகைப் பார்த்துக்கொண்டி ருக்கிறேன். நான் உட்கார்ந்து கொண்டால் அது மறைந்து போகும்'' என்று புன்சிரிப்போடு கூறினாள் மல்லிகா.

''அதற்காக ஏன் நிற்கவேண்டும்? அது இதோ உன்னைத் தேடி உன் கரத்திற்கு வந்துவிடுகிறது'' என்று கூறியவண்ணம் ஜெமீந்தார், பெரிதாக மலர்ந்திருந்த அந்த ரோஜாப் புஷ்பத்தைப் பறித்து மல்லிகாவின் கையில் கொடுத்தார்.

''அடாடா! அவரவர்கள் தத்தம் இடத்திலிருப்பதே அவரவர் களது பெருமைக்கும் சுயயோக்கியதைக்கும் குறைவில்லாத காரியம். இதைப் பறித்துக் கையில் பிடித்துக்கொண்ட பிறகு இதன் மகிமையும் இதன்மேல் நாம் வைத்த அன்பும் குறைந்து

போகுமே'' என்று சிரித்துக்கொண்டே மரியாதையாக அந்த மலரை வாங்கினாள் மல்லிகா.

அதே சமயத்தில், ''ரோஜாப்பூ எனக்கில்லையா?'' என்று சொல்லிக்கொண்டு பொறாமையாலும் கோபத்தாலும் மாறுபட்ட முகத்தோடு கமலா அங்கு தோன்றினாள். அவளைத் தொடர்ந்து மற்றவரும் அங்கு வந்தனர். அவள் சொன்ன சொல்லை ஜெமீந்தார் கவனியாதவர்போல, ''ஸகாராம்! இன்னும் பார்க்கவேண்டிய இடமிருக்கிறதா?'' என்றார்.

''சயன அந்தப்புரத்தைப் பார்க்கவேண்டும். அது எதிரிலிருக்கிறது; அதிக தூரமில்லை'' என்றான் ஸகாராம் ராவ்.

''சரி! கதவைத் திறவும்; பார்த்துவிட்டுப் போகலாம்'' என்றார் ஜெமீந்தார்.

எதிரிலிருந்த அந்தப்புரத்துக் கதவை அவன் உடனே திறக்க எல்லோரும் அதற்குள் நுழைந்தனர். மற்ற இடங்களைக் காட்டிலும், அதிகமாக அதற்குள் படங்களும், நிலைக்கண்ணாடிகளும், சித்திரப் பதுமைகளும், வெள்ளியினால் செய்யப்பட்ட லால்ஷேட், குலோப், லஸ்டர் முதலிய தீபங்களும், முத்தும் இரத்தினமும் வைத்திழைக்கப்பட்டு, சித்திரத் தொங்கல்கள் நிறைந்து தந்தத்தினாலும் தங்கத்தினாலும் செதுக்கப்பட்ட மஞ்சமும் காணப்பட்டன. அவற்றைக்கண்ட எல்லோரும் பெரிதும் திகைத்து வியப்படைந்தனர். கமலா அவைகளுக்கெல்லாம் ஒரு தினம் தான் எஜமானியாகலாமென்று நினைத்தவளாய்த் தன்னையும் தனது தாழ்ந்த நிலைமையையும் முற்றிலும் மறந்திருந்தாள். அப்போது ஜெமீந்தார் கட்டிலின் கீழ்ப்பாகத்தைத் தற்செயலாகப் பார்க்க, பூட்டப்பட்ட சிறிய தங்கப் பெட்டியொன்று அங்கு இருக்கக் கண்டு நிரம்பவும் ஆச்சரியமடைந்தார். அதை வெளியில் எடுக்கும்படி அவர் உத்தரவு செய்ய, ஸகாராம் ராவ் அதை எடுத்தான். ''இதன் சாவி இந்தக் கொத்திலிருந்தால் இதைத் திறவும்'' என்றார் ஜெமீந்தார். உடனே ஸகாராம் ராவ் சாவிகளை ஒவ்வொன்றாய் நுழைத்துப் பார்த்துக் கடைசியில் ஒரு திறவுகோலால் அதைத் திறந்தான். அதில் பட்டுத் துணியால் நன்றாக மூடி வைக்கப்பட்டிருந்த ஒரு வஸ்துவைக் கண்டு அது என்னவோவென்று எல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள். ஜெமீந்தார் அதைக் கையில் வாங்கி பட்டுத் துணியை விலக்கிப் பார்க்க

அதற்குள் ஓர் அழகிய யௌவன மங்கையின் படமிருந்தது. அதன் கம்பீரத்தையும் எழிலையும் கண்ட அனைவரும் பிரமிப்படைந்தனர்.

அப்போது ''இதுதான் இறந்துபோன எஜமானருடைய இளைய பத்தினியின் படம்'' என்றான் ஸகாராம் ராவ்.

ஜெமீந்தார் அதைக் கண்டு சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்று அதையே உற்று நோக்கினார். அதன் பிறகு அவரது கண்கள் அந்தப் படத்தைவிட்டு மல்லிகாவின்மேல் திரும்பின.

அதைக் கண்ட ஸகாராம் ராவும் மல்லிகாவைப் பார்த்து ஆச்சரியமடைந்தான். அவர்கள் படத்தையும் தன்னையும் மாறி மாறிப் பார்த்ததைக் கண்ட மல்லிகா வெட்கிக் கீழே குனிந்தாள்.

''இறந்துபோன ஜெமீந்தாருடைய இளைய பத்தினியின் படத்தையும் மல்லிகாவின் படத்தையும் ஒரே சமயத்திற் கண்டோம்'' என்று கூறி ஜெமீந்தார் சிரித்தார்.

''மல்லிகாவின் படமா?'' என்று கமலா ஸீதா இருவரும் ஆச்சரியமடைந்தவர்களாய்ப் படத்தையும் அவளையும் பார்த்து, ''சே! இந்தப் படமெங்கே இவளெங்கே? இதன் காலில் ஒட்டிய தூசுக்கும் இவள் இணையாவாளா?'' என்றார்கள்.

''முழு உருவத்துக்கே இணையாகும்போது காலில் ஒட்டிய தூசுக்கு ஏன் இவள் இணையாகிறாள்? நீ சொல்வது நிஜந்தான்'' என்று கபடமாகச் சிரித்துக்கொண்டு பேசிய ஜெமீந்தார், ''ஸகாராம்! இந்தப் படத்தைப் பரசுராம பாவாவின் படத்துக்குப் பக்கத்தில் மாட்டிவிடும்'' என்றார்.

''சரி! உத்தரவுப்படியே செய்கிறேன்'' என்றான் ஸகாராம்.

அப்போது, ''நேரமாகிறது, போகலாம் வாருங்கள்'' என்றார் ஜெமீந்தார். உடனே எல்லோரும் வெளியில் வந்தனர்.

அன்றிரவு அந்த மாளிகையிலேயே அவர்கள் அனைவருக்கும் சிறப்பான விருந்து நடத்தப்பட்டது. பிறகு ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்படுத்தப்பட்ட விடுதிகளில் சுகமாகச் சயனித்துக் கொண்டனர். இரவு 11–மணி நேரமிருக்கலாம். மல்லிகா சயனித்த அறையிலிருந்த ஜன்னலின் கதவு திறந்திருந்தமையால், அதன் வழியாக குளிர்ந்த காற்று உட்புறத்தில் நன்றாக வீசியது. அதனால் அவள் திடீரென்று கண்ணை விழித்துக்கொண்டு

வெளிப்பக்கம் நோக்க, நிலவு பகலைப்போல எங்கும் தவழ்ந்து கொண்டிருந்தது. இனிமையாக வருந்தி உபசரித்து அவளை அழைத்ததைப் போலிருந்தது. அவள் மெல்லத் தனது சயனத்தை விட்டெழுந்து பின்புறமாக வெளியிற் போய், சமுத்திரத்தின் படித்துறையில் உட்கார்ந்து கொண்டாள். நிலவின் அழகினாலும், நீரின் உன்னதமான காட்சியாலும், மந்த மாருதமாய் வீசிய தென்றலின் உல்லாஸத்தினாலும், அங்கிருந்த மல்லிகை, ஜாதி, ரோஜா, பன்னீர், ஸம்பங்கி முதலிய புஷ்பங்களின் பரிமளகந்தத் தினாலும், அவள் ஆநந்தப் பரவச மடைந்தவளாய்த் தன்னை மறந்து சித்திரப் பதுமைபோல அசைவற்று உட்கார்ந்திருந்தாள்.

அந்தச் சமயத்தில் ''மல்லிகா!'' என்று தனது பெயரை யாரோ சொல்லியழைத்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு அவள் திரும்பிப் பார்க்க, ஜெமீந்தார் தன்னை நோக்கி வந்துகொண்டிருந்ததைக் கண்டு உடனே எழுந்தாள்; பின்புறத்தில் வந்து நின்ற ஜெமீந்தார், ''மல்லிகா! நீயா உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? இது உண்மை தானா? அல்லது என் மனத்திலுண்டான பொய் தோற்றமா?'' என்று நிரம்பவும் கனிவாகக் கேட்டார்.

உடனே மல்லிகா, ''தூக்கம் பிடிக்கவில்லை; ஆகையால் இங்கே வந்தேன். வந்து நெடுநேரமாய் விட்டது; நான் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தாள்.

அதைக் கண்ட ஜெமீந்தார், ''மல்லிகா! எனக்கும் தூக்கம் பிடிக்கவில்லை. ஆகையால், படங்கள் மண்டபத்தில் மாட்டப் பட்டிருக்கும் உன்னுடைய படத்தை இதுவரையில் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போதே அங்கிருந்து வருகிறேன்'' என்றார்.

''என் படமா?'' என ஆச்சரியத்தோடு கேட்டாள் மல்லிகா. ''ஆம்; எல்லாம் நீயே! முகமும் கண்களும் புருவ வில்லும் சுருட்டைத் தலைமயிரும் ஒவ்வொன்றும் அப்படியே இருக்கின்றன! கொஞ்சமும் பேதமில்லை'' என்றார் ஜெமீந்தார்.

''அதற்கும் எனக்கும் ஈடேது? நான் கேவலம் நித்திய தரித்திரனாகிய ஓர் ஏழையின் பெண். அது கோடீசுவரருடைய சீமாட்டியின் வடிவம். அதற்கும் எனக்கும் இணைசொல்வது

அந்தச் சீமாட்டியை அவமதிப்பதுபோல ஆகும்'' என்றாள் மல்லிகா.

''மல்லிகா! ஏழ்மைத் தனத்துக்கும் அழகுக்கும் என்ன சம்பந்தம்? நீயும் தகுந்த ஆடையாபரணங்களை அணிந்து கொண்டால், அதற்குமேல் ஜாஜ்வல்யமான அழகோடு நீயும் காணப்படுவாய். நீ எவ்வளவு சொன்னாலும் சரி/ எனக்கு நீ விலையில்லா மாணிக்கமாகவே காணப்படுகிறாய்'' என்றார் ஜெமீந்தார்.

''தங்கள் சித்தம் என் பாக்கியம். நேரமாகிறது. நான் போகிறேன்'' என்று வணக்கமாகச் சொல்லிவிட்டு இரண்டோரடி எடுத்து வைத்தாள் மல்லிகா.

''மல்லிகா! ஏன் இப்படி அவசரப்படுகிறாய்? தூக்கம் பிடிக்கவில்லையென்று இங்கே வந்தாய். அவர்களுடன் இருப்பது உனக்கு இன்பமற்ற வாழ்வாக இருக்கிறதென்பதை நான் கவனிக்காமலிருக்கவில்லை. ஒவ்வொரு நிமிஷத்திலும் உன் முகத்தில் விசனம் அதிகரித்தே காணப்படுகிறது. உன் மனக்குறையென்ன? அவர்கள் உன்னிடத்தில் நிரம்பவும் வெறுப்பைக் கொண்டிருப்பது நன்றாகத் தெரிகிறது. உன்னை அவர்கள் அதிகமாக வருத்துகிறார்களா? என்னிடத்தில் உண்மையைத் தெரிவிப்பதனால் பாதகமில்லை'' என்று பெருகிய அன்புடன் கேட்டார் ஜெமீந்தார்.

''அப்படியொன்றுமில்லை'' என்று சொல்ல வாரம்பித்தாள் மல்லிகா. அந்த மொழியில் பாதி நெஞ்சிற்குள்ளேயே மறைந்து விட்டது. அதன்மேல் ஒன்றையும் சொல்ல மாட்டாதவளாய் வெட்கிக் கீழே குனிந்தாள். ''இப்படி அவர்கள் நடத்துகிறார்களென்பதை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன். இதுவரையில் அதை எத்தனையோ விஷயங்களில் பரிஷ்காரமாக கவனித்தேன். பவளத்தின் மகிமை பன்றிக்குத் தெரியுமா? உன்னுடைய உண்மையான மேன்மையை அவர்களெங்கே அறியப்போகிறார்கள்?'' என்று சொல்லியவண்ணம் மேலும் அவளுக்கருகில் நெருங்கி, ''மல்லிகா! நான் உன்னை அன்று கண்டமுதலும் இன்று காலையிலிருந்தும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் உன்னைப் பற்றியே நினைத்து உருகியபடியே இருக்கிறேன். உனக்கு அவர்களுடனிருப்பது எவ்வளவு கடினமாயிருக்குமோ வென்று மனசால் பாவித்துப் பார்த்தேன்.

நான் நினைப்பதைக் காட்டிலும், நீ அதிகம் துன்புறுவது நிச்சயமாகத் தெரிகிறது. இனி ஒரு நொடியாவது நீ அவர்களுடனிருப்பது சரியல்ல; நீ அவர்களுடைய வீட்டில் இனி இருப்பது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை'' என்று மிகுந்த கவலையோடு கூறினார் ஜெமீந்தார். ''அவர்களுடைய வீட்டிலிருக்கக் கூடாதா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் மல்லிகா.

''ஆம்; நான் உண்மையாகவே பேசுகிறேன். நீ எவ்வளவோ துன்பங்களையும் துயரத்தையும் அநுபவித்துவிட்டாய். அதுவே போதும். நான் உன்னைக் கண்டமுதல் உன்னையே கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று உறுதி செய்து கொண்டேன். இன்னதென்றறியக்கூடாத ஒருவகையான ஆசை என் மனசில் தோன்றி, படிப்படியாய் அதிகரித்து வருகிறது. உன்னையே நான் என்னுடைய உயிராக மதிக்கிறேன்'' என்று அன்போடு கூறித் தமது வலக்கரத்தை நீட்டி அவளது மோவாயைப் பிடித்தார்.

அவரது இனிய மொழியைக் கேட்டுத் திகைத்து நின்ற மல்லிகா, தன்னைத் தீண்டிய அவரது கரத்தைத் தடுக்காமல் சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். அவரது கரம் பட்டவுடன் அவளது தேகம் முழுவதும் ஒருவித இன்பமும் ஆநந்தமும் பரவின. இன்பசாகரத்தில் மிதப்பவளைப்போல மயங்கிச் சிறிது நேரம் அசைவற்று அவள் நின்றாளாயினும், அடுத்த நிமிஷத்தில் ஸ்திரீகளுக்குரிய நாணம் திரும்பி மேற்கொள்ள, அவள் தனது முகத்தை இழுத்துக்கொண்டு ஓர் அடி பின்னால் நகர்ந்தாள்.

''கண்மணி மல்லிகா! அன்று நிலவில் உன்னைக் கண்ட முதல் உன் வடிவமே என் மனசில் குடிகொண்டு என்னை வருத்துகிறது. நீயே என் உயிர்நிலையாகத் தோன்றுகிறாய். என் அன்பே! எப்படியாவது நான் உன்னையே மணக்கவேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். உனக்கும் என்மேல் விருப்பந்தானா? என்னை மணப்பாயா? அல்லது என்னாயுட்காலம் முழுவதும் என்னை விசனக்கடலில் ஆழ்த்தி விடுவாயா? கண்ணே! நீ இப்போது சொல்லப்போகும் அந்த ஒரு சொல்லிலேயே என் வாழ்க்கை அடங்கியிருக்கிறது. நீ மௌனமாயிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றுகிறது. தயவுசெய்து தெரிவி!'' என்று கெஞ்சி மன்றாடினார் ஜெமீந்தார்.

6—வது அதிகாரம்

கரைபுரண்ட காதல்

மல்லிகா இன்னதென்று விவரிக்க வொண்ணாத ஒருவகை நூதன ஆனந்தத்தையும் அச்சத்தையும் அடைந்தவளாய்த் தனது வாயைத் திறக்கவும் பெரிதும் வெட்கி மௌனியாக நின்றாள். அவரை முதலிற் கண்ட தினத்திலும் அன்று காலை முதலும் அவளது மனதில் அவர்மீது ஒருவித வாத்சல்யமும் மதிப்பும் ஏற்பட்டு அதிகரித்துக்கொண்டே இருந்தன. அதுவரையில் எவரும் அவளிடத்தில் அவ்வளவு ஆழ்ந்த அன்பைக் காட்டியதில் லையாதலாலும், மற்ற எல்லோரும் பணிந்து வணங்கும் நிலைமையிலிருந்த மேன்மை தங்கிய ஜெமீந்தார் தன்னைப் பணிந்து மன்றாடி, தான் அதுவரையில் கேட்டறியாத இன்ப மொழிகளைக் கூறியபடியாலும், மல்லிகா ஆநந்தபரவச மடைந்து வியப்புற்று நின்றாள். அவளது மனத்தின் அது வரையில் திறக்கப்பட்டறியாத ஒரு புதிய சுவர்க்கலோகத்தின் கதவை அவர் உடைத்துத் திறந்து விட்டதைப்போல அவளது மனதில் ஒருவித நூதன இன்பமும் ஸஞ்சலமும் தோன்றின. அவள் வெட்கிக் கீழே குனிந்து நின்றாள்.

திரும்பவும் ஜெமீந்தார், "என் ஆசைக் கண்ணாட்டி! என் பாக்கியமே! ஒன்றும் சொல்லாமல் மௌனமாய் நிற்கிறாயே! என்மேல் கோபமா? கண்ணே! கோபிக்காதே! நான் வேறொன் றும் வித்தியாசமான காரியத்தைச் செய்யும்படி உன்னை வற்புறுத்தி உன் மனசுக்கு ஆயாசம் உண்டாக்க நினைக்க வில்லை. உன் மனத்தில் கொஞ்சமும் வருத்த முண்டாக்குமுன் நானே உயிரை விட்டுவிடுகிறேன். என் ஆருயிரே! துன்பத்தால் உன் முகம் கோண நான் ஒரு க்ஷணமும் சகித்திருக்க மாட்டேன். ஒவ்வொரு நொடியும் உன்னை சந்தோஷமாக வைப்பதற்கு முயல்வதையே நான் என்னுடைய சிறந்த பெரும் பேறாக மதிப்பேன். எங்கே? என்னை மணக்க விருப்பமிருக்கிற

தென்னும் அந்த விலைமதிப்பில்லாத மொழியை உன் வாயாற் சொல், பெண்மணி!'' என்று மேன்மேலும் ஜெமீந்தார் வருந்தி மிக்க உருக்கமாகப் பேசினார்.

''பிரபுவே! நான் என்ன சொல்லப்போகிறேன்! எனக் கொன்றும் தோன்றவில்லையே! தங்களுடைய உயர்ந்த நிலைமைக்கும் ஏழையாகிய எனக்கும் எவ்வளவு தூரம்! இது எவரும் மனசாலும் நினைக்கக்கூடாத விஷயமாக இருக்கிறதே! பரம தரித்திரம் நிறைந்த ஒரு அநாதை ஸ்திரீயை ஒரு பெருத்த ஜெமீந்தார் மணந்து கொண்டாரென்று நாளைக்கு ஜனங்கள் தங்களை இகழ்வாகப் பேசினால், அது தங்களுக்கு எவ்வளவு தலைகுனிவாக இருக்கும்!'' என்று மிருதுவாக நாணத்துடன் தெரிவித்தாள் மல்லிகா.

''என் உயிர் நிலையே! உலகத்தில் நற்குணமே பெரிதன்றி பணம் பெரிதல்ல. எனக்கு ஏராளமான செல்வமிருக்கிறது. அதை நன்றாக அநுபவிப்பதற்கு நற்குணம் நிறைந்த ஒரு மனை யாட்டியே தேவையன்றி, எனக்கு மேலும் பொருள் தேவை யில்லை. பிறர் என்ன சொன்னாலும் சரி; அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. மூட ஜனங்களுக்குப் பணமே பிரதானம். உன்னுடைய மேன்மை அவர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது!'' என்றார் ஜெமீந்தார்.

''இதுவரையில் தாங்கள் அழகில் சிறந்த எத்தனையோ மடந்தையரைப் பார்த்திருப்பீர்கள். நானென்ன அவ்வளவு விசேஷம்? என் விஷயத்தில் தங்களுக்குண்டான விருப்பத்தைக் காண எனக்கு நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்று மிகுந்த நாணத்தோடு கூறினாள் மல்லிகா.

''உண்மையே! நான் இதுவரையில் அழகில் சிறந்த மங்கையர் பலரைக் கண்டிருக்கிறேன். அவர்களில் சிலரை மணக்கவேண்டுமென்னும் ஆசையும் உதித்ததுண்டு. ஆனால், அவர்கள் வாயைத் திறந்து ஒருவார்த்தை சொன்னவுடனே என் ஆசையில் பாதி பறந்து போயிற்று. குணத்தழகைக் கண்டவுடனே மிகுதியிருந்த ஆசையும் வெறுப்பாய் மாறியது. ஆனால், உன்னிடத்தில் மாத்திரம், என் ஆசையும் அன்பும் படிப்படியாக அதிகரிக்கின்றன. உன்னுடைய குணத்தைக் காணவும், உன்

சொற்களைக் கேட்கவும், நீயே எனக்குச் சாசுவதமான இன்பத்தைத் தரக்கூடிய மனையாட்டியென்னும் நிச்சயம் என் மனசில் தானாகவே உதித்துவிட்டது. எனக்கு உயிர்ப்பிச்சை தரக்கூடிய அந்த வார்த்தையைச் சொல்லி, என்னைக் கை தூக்கி விடுவாயா? அல்லது, என்னை ஆயுட்கால முழுவதும் மனம் வருந்தி பித்தனைப்போல அலைந்து திரிய விடுவாயா? என் செல்வமே! எவருக்கும் கிடைக்காத நிதிக்குவியலே! எங்கே! உன் மனசில் உள்ளதைத் தெரிவி!'' என்று மேன்மேலும் கெஞ்சி மன்றாடினார்.

அதற்குமேல் ஒன்றையும் சொல்லமாட்டாதவளாயும், தன்னைச் சூழ்ந்து மென்மேலும் வளைத்த அவரது இன்ப வலையை விலக்க வல்லமையற்றவளாயும் மல்லிகா தனது நாவின் நுனியிலெழுந்த சொற்களை வெளியிட வெட்கி சிறிது தயங்கினாள். அடுத்த நிமிஷத்தில், ''எனக்கும் இதுவரையில் எவரிடத்தில் உண்டாகாத ஒருவிதமான பிரேமை தங்களிடத்தில் உண்டாய்விட்டது. இனி தங்களையே ஆதரவாக மதித்தேன். தாங்கள் என்னை எந்த வழியில் விட்டாலும் அது சம்மதமே'' என்று மிகவும் தடுமாறிய குரலில் தெரிவித்தாள் மல்லிகா.

அதைக் கேட்ட ஜெமீந்தார் பிரம்மாநந்தமடைந்தவராய், ''என் கண்ணே! மல்லிகா! நீ சொல்வது உண்மைதானா? நீயும் என்னைக் காதலிக்கிறாயா? இது கனவோ? அல்லது நினைவோ? என் தவப்பயனாகிய உன்னை அடைவேனா என்று ஏங்கிக் கிடந்த எனக்கு நீ மிகவும் எளிதில் கிடைத்தாயோ? இனி நான் உன்னையே என் குலதெய்வமாக மதித்து தினந்தினம் கொண்டா டுவேன். என் கனியே! என்னையே மணப்பதாக ஒரு முறை தெரிவி; அப்போதே என் செவிகளும், என் மனமும், என் தேகமும் ஒருங்கே பேராநந்தமடையும்'' என்று வேண்டி நயந்தார் ஜெமீந்தார்.

''தங்களையே மணக்கிறேன்'' என்று பெருகி வதைக்கும் நாணத்தோடு மொழிந்தாள் மல்லிகா. தேனிலும் அமிழ்திலும் மதுரமான கனிகளிலும் மிகுந்த இனிமையே வீசிய அம் மொழியைக் கேட்ட வஸந்தராவ் அடக்கவொண்ணாத காதலின் மிகுதியால் தம்மை மறந்தவராய் மல்லிகாவை வாரியெடுத்து ஆலிங்கனம் செய்து அவளது முகத்தில் முத்தமழை பொழிந்தார். முதலில் சிறிது சும்மாவிருந்த அப்பெண்மணி அஞ்சி நடுங்கி

அவரது ஆலிங்கனத்திலிருந்து மெல்ல நழுவி தன்னை விடுவித்துக்கொண்டாள். என்றாலும், அவள் முற்றிலும் புத்தி மாறாட்டமடைந்தவளாய் ஸ்தம்பித்து ஆநந்தமயமாக நின்றாள்.

''என் பிராண சுந்தரி! பயப்படாதே! என்னுடைய ஆசைப் பெருக்கினால் மெய்ம்மறந்து நான் இவ்விதம் செய்துவிட்டேன். இனி உன்னை ஸஞ்சலப்படுத்தக் கூடிய காரியம் எதையும் செய்யமாட்டேன். என்மேல் கோபங்கொள்ளாதே கண்மணி! ஆகா! என்ன என்னுடைய ஜென்மாந்தர சுகிர்தம்! என்ன பரமானந்தம்! இப்போது நான் அநுபவிக்கும் சுகத்துக்கு ஈடுமுண்டோ! என் இன்பவல்லியே! என் மனசின் நிலைமையை நீ எப்படி உணரப் போகிறாய்?'' என்றார் ஜெமீந்தார்.

''பிரபுவே! என் மன நிலைமையிலிருந்தே அது இன்னவிதமிருக்கும்மென்பது ஒருவாறு தோன்றுகிறது. ஆகா! ஸ்திரீ புருஷரின் மணமென்பது இதுவரையில் காணாத நூதனப் பேரின்பத்தையல்லவா தருகிறது! அந்தச் சொல்லே இப்படி நம்மை இன்பக் கடலில் ஆழ்த்துமானால், மணந்தபின் உண்டாகும் ஆநந்தம் எப்படி இருக்குமோ தெரியவில்லையே? – இருக்கட்டும். நான் இங்கு வந்து அதிக நேரமாய்விட்டது. போகிறேன்'' என்றாள் மல்லிகா.

''ஆகா! இதற்குள்ளா போகவேண்டும்? மதிப்பில்லா மாணிக்கமே! நாம் இங்கே வந்து ஒரு நிமிஷ நேரங்கூட ஆகவில்லையே! என்ன அவசரம்? இன்றிரவு முழுவதும் நாம் இங்கிருந்தாலும் பிரிய மனம் வருமோ? இனி உன்னைவிட்டு எப்படிப் பிரிவேன்? நீ இப்போது போனால், திரும்பவும் நான் உன்னோடு தனியாக எப்போது பேசப்போகிறேன்? காலையில் நீ துக்கோஜியின் வீட்டுக்குப் போய்விடுவாயே! அதன்பிறகு நான் என்ன செய்வேன்?'' என்று மனம் நொந்து ஏக்கங்கொண்டு தெரிவித்தார் ஜெமீந்தார்.

மல்லிகா பேசாமல் நின்றாள். மேலும் ஜெமீந்தார், ''மல்லிகா! உன்னைவிட்டு நான் ஒரு க்ஷணமும் பிரிய மாட்டேன். அதி சீக்கிரத்தில் நம்முடைய விவாகத்தை முடிக்க ஏற்பாடு செய்கிறேன். நீ வழக்கம்போல் இரவில் இங்கு வந்து எனக்குக் காட்சி தந்துவிட்டுப்போக வேண்டுகிறேன். கண்ணே! நாளைக்கு

இங்கே வருகிறேன்'' என்று குழந்தை கொஞ்சுவதைப்போலக் கேட்டார் ஜெமீந்தார்.

''அப்படியே ஆகட்டும்; போய் வருகிறேன்'' என்று சொல்லி விட்டு மல்லிகா விரைவாக நடந்து மாளிகைக்குள் நுழைந்து தனது சயனத்தையடைந்தாள்.

''என்னுடைய முன்னோரும் நானும் எத்தனையோ கோடி ஜென்மங்களில் செய்த பூஜாபலனே இவளை எனக்களித்ததன்றி வேறில்லை. இன்னும் ஒரு வாரத்துக்குள் விவாகத்தை முடித்துக் கொள்கிறேன். உயிரற்ற இந்த மாளிகைக்கு உயிர்கொடுத்து அழகுண்டாக்கக்கூடிய மடந்தை இவளேயாவாள்; அடி மல்லிகா! பரிசுத்த ஸ்வரூபிணீ!! நீ என்னை ஒரு க்ஷணத்தில் புது மனிதனாக மாற்றிவிட்டாயே! என்ன உன்னுடைய மகிமை! உலகில் கற்புடைய மங்கையைப் பெற்று இல்லற வாழ்க்கை செய்வதைக் காட்டிலும் மேலான பாக்கியம் வேறு என்ன இருக்கிறது!'' என்று தமக்குள் பலவாறு தத்துவம் பேசியவண்ணம் ஜெமீந்தார் தமது சயன அந்தப்புரத்தையடைந்தார்.

அவர்கள் போன சில நிமிஷங்களுக்குப் பிறகு, படித்துறைக் கருகில் நின்ற ஒரு மரத்தின் மறைவில் ஒளிந்திருந்த ஒருவர் ஓசையின்றி அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டு மாளிகைக்குள் நுழைந்தது நன்றாகத் தெரிந்தது.

7—வது அதிகாரம்

சொக்குப்பொடி

மறுநாட்காலையில் துக்கோஜிராவும் மடந்தையர் மூவரும் தங்களது வீட்டையடைந்தனர். ஆனால், மற்றவர் மல்லிகாவுடன் ஒரு வார்த்தையேனும் பேசாமல் கடுகடுத்த முகத்தைக் காட்டிய வண்ணமிருந்தனர். சிறிது நேரத்தில் துக்கோஜிராவ் தனது வீட்டைவிட்டுப் புறப்பட்டு ஏதோ அலுவலின்பொருட்டு வெளியிற் போய்விட்டான். முந்திய நாளிரவில் தனக்கும் ஜெமீந்தாருக்கும் நடந்த சம்பாஷணை முதலியவை கனவோ அல்லது நனவோவென்று நினைத்து மல்லிகா இன்பமும் ஏக்கமும் அடைந்தவளாய்ச் சமையலறையிலிருந்தாள்.

அப்போது கமலா ஸீதா ஆகிய இருவரும் மெல்ல சமைய லறைக்குள் நுழைந்தார்கள். கமலா எதையும் கவனியாத வளைப் போல நடித்து, ''என்ன மல்லிகா! ஏன் உன் முகம் ஒரு மாதிரியாக இருக்கிறது?'' என்று அலட்சியமாகக் கேட்டாள்.

''என் முகம் எப்படி இருக்கிறது? எப்போதுமிருப்பதைப் போலத்தானே இருக்கிறது. ஒன்றும் விசேஷத்தைக் காணேனே!'' என்று விடையளித்தாள் மல்லிகா.

''விசேஷமிருந்தாலும் நீ அதை எங்களிடத்தில் சொல்லுவாயா?'' என்று குத்தலாக மொழிந்தாள் ஸீதா. மனதில் உடனே ஒருவித ஸஞ்சலத்தையடைந்த மல்லிகா, ''என்ன இன்றையதினம் என்னை இப்படிப் பரிஹாஸம் செய்கிறீர்கள்? என்மேல் கோபம் உண்டாகும்படி நான் உங்கள் விஷயத்தில் யாதொரு குற்றமும் செய்யவில்லையே!'' என்றாள்.

''அடி மல்லிகா! மாயக்கள்ளியென்பது உனக்கே தகும். நீ பலே ஆசாமி!'' என்றாள் கமலா.

''ஊமை ஊரையழித்து விடாதா!'' என்றாள் ஸீதா. ''வாயைத் திறக்காமலிருந்தே ஒரு க்ஷணத்தில் சொக்குப்பொடி போட்டு

ஆளை மயக்கிவிட்டாளே! இப்படிப்பட்ட வேசிகள் இன்னும் நாலைந்துபேர் இருந்தால் ஊர் நாசந்தான். பிறகு தாஸிகளெல்லாம் தொழிலில்லாமல் ஓட்டம்பிடிக்க வேண்டியதுதான்'' என்றாள் கமலா.

''அக்கா! என்ன நீங்கள் தாறுமாறாகப் பேசுகிறீர்களே! இன்னதென்று விளங்கவில்லையே! தயவுசெய்து விவரமாகச் சொல்லுங்கள்'' என்று சாந்தமாக வினவினாள் மல்லிகா.

''அந்த வெட்கக்கேட்டை விவரிக்கவும் வேண்டுமா! உம்! நீ என்ன செய்வாய்? ஊர் கெட்டகேடு அப்படி இருக்கிறது'' என்றாள் ஸீதா.

''இவள் இப்படி நீலித்தனம் செய்தால் ஊர்தான் என்ன செய்யும்? யார்தான் என்ன செய்வார்கள்? வந்தபோது நம்மோடு எவ்வளவோ அன்பாகப் பேசிய ஜெமீந்தாருடைய மனசை ஒரு நொடியில் மாற்றிவிட்டாளே! இவளுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம்! வரவர, அவர் நம்மிடம் அன்பாக ஒரு வார்த்தை சொல்வதையும் விட்டுவிட்டாரே! சிரித்துப் பேசுவதையே மாற்றிவிட்டாரே!'' என்று ஆத்திரமாக மொழிந்தாள் கமலா.

''இவள்தான் எல்லாவற்றையும் தன்மேல் மாற்றிக் கொண்டாளே! அவர் இனி நம்மை ஏன் கவனிப்பார்? இவளைப் போல் கெட்டுப்போனவள் ஒருத்தியுமில்லை. பட்டப்பகலில், இத்தனை பேர் கூடவே இருக்கையில், நீராடும் மண்டபத்தில் அவரோடு தனியாக இருந்து கொஞ்சிக்குலாவி விளையாடுவதும், ரோஜாப்பூ வேண்டுமென்று கேட்டு வாங்கியணிந்துகொள்வதும், வேறு யார் செய்வார்கள்? நாம் அவ்விதம் செய்ய சம்மதிப்போமா?'' என்றாள் ஸீதா. அவர்கள் அவ்வாறு மேன்மேலும் வயிற்றெரிச்சலினால் பிதற்றியதைக் கண்ட மல்லிகா, அவர்களது மௌடீகத் தனத்தை நோக்கி கலகலவென்று நகைத்தாள். அதைக் கண்ட அவர்களிருவருக்கும் கோபத்தினால் முகம் கருத்தது.

''ஆகா! சிரித்து எங்களை ஏளனம் செய்கிறாயா? உனக்கு அவ்வளவு துணிவா?'' என்றாள் கமலா.

''குடியிருந்த வீட்டில் கொள்ளி வைப்பதைப்போல, எங்களுடைய வீட்டிலிருந்துகொண்டே எங்களைத் தூஷிக்கிறாயா? உன்னுடைய யோக்கியதை இவ்வளவுதான் என்று நாங்கள்

தெரிந்து கொண்டோமென்று நினைத்து நீ சிரித்தாயோ?'' என்றாள் ஸீதா.

''ஆம், ஆம்; அப்படித்தான் நினைத்துக்கொண்டு பரிஹாஸம் செய்கிறாள். நடுராத்திரியில் சமுத்திரக்கரையில் நடந்தது முழுதும் தெரியாதென்று நினைக்கிறாயா! எங்களை யாரென்று பார்த்துக் கொண்டாய்! நாங்கள் ஏமாறி நீ செய்ததை அறியாமலிருந்து விடுவோமென்று நினைத்தாயா?'' என்றாள் கமலா.

''இப்படித்தானா பெண்பிள்ளைகள் கொழுப்பெடுத்து புருஷருடன் காட்டிலும் மேட்டிலும் அலைந்து திரிகிறது? சே! இவளை இனி நம்முடைய வீட்டில் வைத்துக்கொண்டால் நமக்கு அவமானமும், குலஹானியும் வந்து சேரும். அரைநாழிகைகூட இனி நாம் இவளுடைய முகத்தில் விழிக்கக்கூடாது. ஸீதா! வா போகலாம்'' என்று சொல்ல இருவரும் திடீரென்று அவ் விடத்தை விட்டுப்போயினர்.

முந்திய நாளிரவில் தனக்கும் ஜெமீந்தாருக்கும் நடந்த சம்பாஷணையையெல்லாம் அவர்கள் அறிந்துகொண்டார்கள் என்பதை உணர்ந்த மல்லிகா நிரம்பவும் வெட்கிக் கீழே குனிந்தவளாய் குழம்பிய மனத்துடன் ஓய்ந்து நின்றாள்; அவர்கள் சேர்ந்துகொண்டு தனக்கு என்ன துன்பம் செய்வார்களோவென்று நினைத்து பெரிதும் அஞ்சினாள். செய்வது இன்னதென்பதை அறியமாட்டாதவளாய் அவள் அசைவற்று நின்றாள்.

கால் நாழிகைக்குப் பிறகு துக்கோஜிராவ் சமையலறைக்குள் வந்து சேர்ந்தான். வந்தவன் கடுகடுத்த முகத்தோடு மல்லிகாவை நோக்கி, ''மல்லிகா! நீ இதுவரையில் நல்ல புத்திமதியுடன் நடந்து கொண்டிருந்தாய். இப்போது எங்களுடைய பொல்லாத காலத்தினால், உனக்கு புத்திமாறாட்டம் உண்டாயிருக்கிறது. நீ இப்படிச் செய்வாயென்று நான் இதுவரையில் எதிர்பார்க்கவே இல்லை'' என்றான்.

அதைக் கேட்ட மல்லிகா மறுமொழி ஒன்றும் சொல்ல மாட்டாமல் அசைவற்று, சித்திரப் பதுமைபோல நின்றாள். அவன், ''நீ ஜெமீந்தாரிடத்தில் வைத்துக்கொண்டிருக்கும் காரியங் களை நாங்கள் நன்றாக அறிந்து கொண்டோம். அவர் எப்படிப் பட்ட மனிதர் என்பது உனக்குக் கொஞ்சமும் தெரியாது. நீங்கள்

நினைத்துக் கொண்டிருக்கும் விஷயம், என் மனசுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. கலியாணமாக வேண்டிய பெண்கள் எனக்கு இரண்டு பேர் இருக்கிறார்கள். உன்னுடைய துன்மார்க்கத்தினால் என் குடும்பத்துக்கே நீ அவமானமும் பழிப்பும் தேடி வைத்துவிட்டாய். உன்னால் இனி என் வீட்டில் எவரும் தண்ணீர்கூடக் குடிக்க மாட்டார்கள். ஆகையால், இனி ஒரு க்ஷண மேனும் இங்கிருக்கக்கூடாது. ஆனால், உன்னை அநாதையாக விட்டுவிட எனக்கு மனமில்லை, அக்கரைச் சீமையாகிய கொழும்பில் என்னுடைய சொந்தக்காரர் சிலர் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் உன்னை இரண்டொரு வருஷகாலம் விட்டு வைக்கத் தீர்மானித்துவிட்டேன். நாளையதினம் காலையில் புறப்படவேண்டும். நீ அதற்குத் தயாராக இருக்கவேண்டும். கொழும்புதான் உன்னுடைய கொழுப்பையடக்க சரியான இடம். உனக்கு வேண்டிய பணத்தை நான் அவர்கள் பேருக்கு அனுப்பி விடுகிறேன். அவர்கள் உன்னை அன்பாகப் பார்த்துக் கொள்வார்கள். நாளைக்குப் போவது நிச்சயம். தயாராக இரு'' என்று கீழே குனிந்தவாறே அழுத்தமாகச் சொல்லியவுடன் வெளியிற் போய்விட்டான்.

8—வது அதிகாரம்

ஸுகாரம்பம்

துக்கோஜி ராவ் மல்லிகாவைத் தனியாக விட்டுவந்தபோது, அம்மடந்தை கரைகடந்த துயரத்தினாலும், வியப்பினாலும் தடுமாறி செய்வதுயாதென்பதை அறியாதவளாய்க் குழம்பிய மனத்துடன் மெய்ம்மறந்து நின்றாள்; தன்னை உயிர்போல மதித்த தனதரிய காதலரான வஸந்தராவை தான் இன்னொரு முறை பார்க்கமுடியாமல் போனதைப்பற்றி நினைத்து நினைத்து உருகினாள். அவர் தன்னை 'மல்லிகா' வென்றும், 'கண்ணே' யென்றும், அவைபோன்ற வேறு பற்பல அருமையான சொற்க ளாலும் அன்பொழுக அழைத்த குரல் அவளது செவிகளில் அப்போதும் ஒலித்துக்கொண்டிருந்தது. எத்தனையோ நூறுகாத தூரத்துக்கு அப்பாலுள்ள கொழும்பு தேசத்திற்குத் தான் போய் விட்டால், அதன்பிறகு தான் என்றைக்கும் திரும்பிவர முடியா தென்பதை எண்ணியெண்ணி அவள் உயிரழிந்தாள்; தன்னை மனைவியாக்கிக்கொள்ள ஆவல் கொண்டிருந்த வஸந்தராவின் எண்ணத்தில் கடவுள் மண்ணைப் போட்டதை நினைத்து மிகவும் ஏங்கினாள்; அதுகாறும் எவ்வித ஸுகத்தையும் பிறர் காட்டும் அன்பையும் அநுபவித்தறியாதிருந்து, அப்போதே அத்தகைய பெருத்த பாக்கியத்தை தான் அநுபவிக்க எண்ணிய எண்ணம் பாழானதைப் பற்றி நினைத்து நிலைதடுமாறிச் சோர்ந்தாள்; கடவுள் பிறவிக் குருடனுக்குக் கண்களைக் கொடுத்து உலகத்தின் அழகைக்காட்டி அடுத்த நிமிஷத்தில் அவற்றைப் பறித்துக்கொண் டதைப்போல தன் கதி ஆனதை நினைத்து வாடி வதங்கி அழுதாள்; எப்போதும் மாறாத உறுதியோடு தன் மனதிற் பதிந் திருந்த வஸந்தராவின் இனிய வடிவத்தையே எங்கும் கண்டாள்.

அவ்வாறு இரண்டொரு நிமிஷத்தில் அவளது விசனம் பொறுக்கலாற்றாத உச்சநிலையை அடைந்தது. அந்த வீட்டிலி ருப்பது, நெருப்புத் தணல், பாம்புகள், தேட்கள் முதலியவற்றின்

மேலிருப்பதையொத்திருந்தது. அவள் உடனே ஒரு குடத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, வீட்டை விட்டுப் புறப்பட்டு, ஊருக்கு அரைக்கால் மைல் வடபுறத்தில் ஓடும் சிற்றாறாகிய வடவாற்றை நோக்கி நடந்து கால் நாழிகையில் ஆற்றின் படித்துறையை அடைந்தாள். அவ்விடத்தில் மனிதர் எவருமில்லாதிருந்தமையால், குடத்தைப் படிக்கட்டின்மீது வைத்துவிட்டு தானும் கீழே உட்கார்ந்துகொண்டாள். அவ்வாறு அவள் தனிமையை அடைந்தவுடன், அவளை வருத்திய எண்ணங்கள் யாவும் திரும்பவும் ஒன்றுகூடி எழுந்தன; அவள் தன்னையும் மறந்தாள்; வீட்டையும் மறந்தாள்; ஆற்றையும் மறந்தாள்; குடத்தையும் மறந்தாள்; விசனமாகிய கடலில் முழுகியவளாய்க் கண்ணீர் சொரிந்து அழுதவண்ணம் உருகி ஒய்ந்து உட்கார்ந்திருந்தாள்.

ஒரு நாழிகை நேரத்திற்குப் பிறகு, ''மல்லிகா! நீயா உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?'' என்ற இனிய சொற்கள் அவளது செவி களிற் பட்டன. அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள், எதிரில் வஸந்தராவ் சற்று தூரத்தில் வந்து நின்றார்.

''மனம்போல மாங்கலியம் என்று சொல்வது நிஜமாயிற்று. நான் உலாவும் பொருட்டு தற்செயலாக இங்கே வந்தேன். இது வரையில் நான் இந்த ஆற்றையும், இங்கே உள்ள சோலைகளையும் பார்த்ததே இல்லை. இன்று இவைகளைக் காண நிரம்பவும் மன மகிழ்ந்தேன். இந்தச் சமயத்தில் நீ இங்கே இல்லையேயென்றும், இருந்தால் அது எவ்வளவு ஆநந்தமாயிருக்குமென்றும் இப்போதே நான் நினைத்தேன். கடவுள் தன்னை நினைத்து தபசு செய்வோருக்கு முன் தோன்றி காட்சி கொடுப்பதுபோல நீ எனக்கு முன்னால் இங்கே வந்திருக்கிறாய்! தினந்தினம் இப்படி உடனுக்குடன் நீ தோன்றுவாயானால், உன்னை நான் தெய்வமாக மதித்துப் பூஜிப்பதற்குத் தடையென்ன?'' என்று சொல்லிக்கொண்டே புன்சிரிப்போடு அவளிடம் நெருங்கினார். நெருங்கி மிகவும் அருகில் வந்து அவளை உற்று நோக்க, அவளது முகவாட்டம் நன்றாகத் தெரிந்தது. அதைக் கண்டு திடுக்கிட்டு ஜெமீந்தார், ''கண்மணி! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? ஏன் இப்படி விசனப்படுகிறாய்? உன்னுடைய மனசிலுள்ளதை என்னிடம் தெரிவிக்கலாகாதா? ஆகா! நீ இப்படி வருந்துவதைப் பார்க்க நான் எப்படி சகிப்பேன்? என் ஆருயிரே!

உன் விசனத்தைத் தெரிவி. அதை விலக்கும் பொருட்டு நான் என் உயிரையுங் கொடுக்கத் தடையில்லை'' என்று உறுதியாகக் கூறினார்.

''இனிமேல் நாம் ஒருவரையொருவர் சந்திப்பதில்லை. இது தான் கடைசி முறை'' என்று விம்மி விம்மி அழுதவண்ணம் மறுமொழி கூறினாள் மல்லிகா.

''என்ன நடந்தது? ஏன் சந்திப்பதில்லை?'' என்று ஆத்திரத்தோடு கேட்டார் ஜெமீந்தார்.

''துக்கோஜிராவ் நாளையதினம் காலையில் என்னை கொழும்பு தேசத்துக்கு அனுப்பிவிடப் போகிறார்'' என்று திக்கித்திக்கி அழுத வண்ணம் கூறினாள் மல்லிகா.

அதைக் கேட்ட ஜெமீந்தார் வியப்படைந்து, ''கொழும்புக்கா? உன்னையா? எதற்காக? இது விந்தையாயிருக்கின்றதே!'' என்று கூறினார்.

மல்லிகா : நம்முடைய ரகஸியங்களையெல்லாம் அவர்கள் எப்படியோ அறிந்து கொண்டார்கள். நாம் சிநேகமாயிருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லையாம்.

வஸ : ஒகோ! அப்படியா! அதற்காக உன்னை அனுப்பி விடப் போகிறார்களா?

மல்லிகா : ஆம்.

வஸ : அங்கே போக உனக்குச் சம்மதந்தானா?

மல்லி : பிரபுவே! இப்படியும் கேட்கலாமா! இதற்கு நான் சம்மதிப்பேனா இல்லையா என்பது உங்களுக்குத் தெரியாதா?

வஸ : அப்படியானால் நீ என்னை விட்டுப் பிரிய மாட்டாயா?

மல்லி : என் உயிர்போகும்போதுதான் பிரிவேன்.

வஸ : இது நிச்சயந்தானா?

மல்லி : இன்னமும் சந்தேகமா?

வஸ : மல்லிகா! உன் அன்பையும் பிரியத்தையும் என்ன வென்று சொல்வேன்! ஆகா! என்னுடைய பாக்கியமே பாக்கி

யம்! நல்லது; நான் சொல்வதுபோல் நீ செய்வாயா? கொழும்புக்குப் போகாமல் என்னோடு கூட வந்து விடுகிறாயா?

மல்லி : (யோசனையாக) உங்களோடு வருவதா?

வஸ : ஆம்; இனியும் நீ இங்கே இருந்து இவர்களிடத்தில் துன்பப்படுவதைவிட, புறப்படு என்னோடு – தஞ்சைக்கு வந்து விடு. அங்கே அதிசீக்கிரம் நம்முடைய கலியாணத்தை நடத்தி விடலாம். அதன்பிறகு அவர்கள் உனக்கு ஒரு துன்பமும் செய்ய முடியாது. நீ எதற்கும் பயப்பட வேண்டாம். எனக்கு ஏராளமான ஐசுவரியமிருக்கிறது. உனக்கு யாதொரு குறையுமில்லை. நீ சற்று துணிவாக இந்தக் காரியத்தைச் செய்வாயானால் நீ தப்பித்துக் கொள்ளலாம்.

மல்லி : பிரபுவே! நேற்றைக்கே நான் தங்களுடைய மனைவி என்று சொல்லிவிட்டேனே. இனி இதைப் பற்றி என்னிடம் ஏன் கேட்க வேண்டும்? தங்களுடைய இஷ்டம்போலச் செய்யலாம். அதற்கு மாறாக நான் ஒன்றும் செய்ய மாட்டேன் – என்று பணிவாகவும் நாணத்தோடும் மறுமொழி கூறினாள்.

''என் உயிரே! உன் மனசை அறியவே நான் இவ்வளவு தூரம் சோதனை செய்தேன். கோபிக்காதே! நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். இன்றிரவு அவர்கள் எல்லோரும் நித்திரை செய்யும் போது ராத்திரி மூன்று மணி சுமாருக்கு அவர்களுக்குத் தெரியாமல் எழுந்து நீ சமுத்திரக் கரைக்கு வந்துவிடு. அதற்கு மேல் ஆக வேண்டியதை நான் செய்து கொள்ளுகிறேன். நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம்'' என்று கூறி, அவளைத் தூக்கி ஆவலுடன் அணைத்து முத்தமிட்டு, ''ஒருவர்மேலொருவர் கரை கடந்த காதல் கொண்டுள்ள நம்மைப் பிரிக்க அந்த ஈசுவரனாலும் முடியாது'' என்றார்.

அவரது தேனொழுகிய அந்தரங்கமான மொழியைச் செவி கொண்டு பருகியவாறே அந்த ஆநந்தத்தில் அப்படியே இரண்டொரு நிமிஷ நேரம் ஈடுபட்டு நின்ற மல்லிகா, தெளிவடைந்தவளாய் அவர் சொன்னபடியே செய்வதாய் வாக்களித்து, நேரமாயிற்றென்று கூறி, விடை பெற்று குடத்தில் நீரெடுத்துக் கொண்டு அரை மனதோடு புறப்பட்டு நடந்து போய் வீட்டையடைந்தாள்.

★ ★ ★

அன்றிரவு சற்றேறக்குறைய மூன்று மணி நேரமிருக்கலாம். எங்கும் இருள் நன்றாகச் சூழ்ந்திருந்தது. அந்தச் சமயத்தில் மல்லிகா சமுத்திரக் கரையையடைந்தாள்; அவ்விடத்தில் ஒரு பெட்டி வண்டியோடு காத்திருந்த ஜெமீந்தார், அப்போது குளிர்காற்று அதிகமாக வீசியதாகையால், தாம் கொணர்ந்திருந்த அழகிய கான்பூர் சால்வையை அவளுடம்பில் போர்த்தி, அவளை அன்போடு நடாத்தி பெட்டி வண்டியில் உட்காரவைத்து, தாமும் எதிரில் உட்கார்ந்து கொண்டார். வண்டி உடனே செல்ல ஆரம்பித்தது.

விடியற்காலம் நாலரை மணிக்கு வண்டி தஞ்சையில் வடக்கு ராஜவீதியிலிருந்த ஒரு பெரிய சத்திரத்தின் வாசலில் வந்து நின்றது. அந்தச் சத்திரம் வழிப்போக்கர்கள் தங்கும்பொருட்டு கட்டப்பட்டிருந்ததாயினும், அதன் ஒரு பாகத்தில் கோயமுத்தூர் நடேசையர் போஜனசாலை வைத்திருந்தார். அதற்கடுத்தாற்போல சத்திரத்திற்குச் சேர்ந்தவையும், வாடகைக்கு விடக்கூடியவையு மான நாலைந்து வீடுகளிருந்தன.

ஜெமீந்தார் வண்டியை விட்டிறங்கி, சில வீடுகளுக்கப்பால் ஒரு வீட்டிலிருந்த சத்திரத்து மணியகாரன் பவானிராவ் என்பவனை எழுப்பி ஏதாகிலும் காலி வீடு இருக்கிறதாவென்று கேட்க, அவன் ஒரு வீடு காலியிருப்பதாய்ச் சொல்லி அவரை அதற்குள் அழைத்துக் கொண்டு போய்க் காட்டினான். தாமும் தமது மனைவியும் அதில் சொற்பகாலமிருக்க வேண்டுமென்றும், தேவையானால், ஒரு மாதத்து வாடகை முன்னாலேயே தருவதாயும் ஜெமீந்தார் அவனிடம் கூறவே,

அவன் ''முன்பணமொன்றும் தேவையில்லை. தங்களைப் பார்க்கும்போதே பெரிய மனிதரென்பது தெரிகிறது. தங்க ளுடைய விருப்பப்படி சௌக்கியமாக இருங்கள். தங்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் தேவையோ அவைகளைச் செய்து கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். தங்களுடைய பெயரை மாத்திரம் தெரிவித்தால் அதுவே போதும். கணக்கில் பதிந்து கொள்ளுகிறேன்'' என்றான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் தமது பெயரைச் சொல்ல நினைத்தார். ஒருவேளை துக்கோஜிராவ் தம்மையும் மல்லிகா

வையும் தேடிக் கொண்டு வந்து விசாரித்து தமது இருப்பிடத்தை அறிந்துகொள்வானென்ற எண்ணமுண்டாயிற்று. அவர் தமது பெயர் மாதவராவ் என்று மாற்றி தெரிவித்தார். அதைக்கேட்டு மணியகாரன் போய்விட்டான்.

உடனே வஸந்தராவ் பெட்டி வண்டியின் கதவைத் திறந்து மல்லிகாவை அழைத்துக்கொண்டு, வண்டியைக் காலை ஆறு மணிக்கு மறுபடியும் கொண்டு வரச் சொல்லிவிட்டு, அந்த வீட்டிற்குள் நுழைந்தார். உட்புறத்தில் நாற்காலிகள் ஸோபாக்கள் முதலிய சகலமாக சௌகரியங்களும் ஏற்படுத்தப் பெற்றிருந்தமையால், அந்த வீடு அவர்களுக்கு நிரம்பவும் சுகமாயிருந்தது. மல்லிகாவை ஒரு ஸோபாவில் சயனிக்கச் செய்தபின் வஸந்தராவ் வேறொன்றில் படுத்துக் கொண்டார். அவ்வாறு இருவரும் சிறிது நேரம் நித்திரை செய்ய, பொழுது விடிந்தது.

மணியகாரனால் அனுப்பப்பட்ட வேலைக்காரியான **கன்னியம்மாள்** என்பவர் அவர்களுக்குத் தேவையான சௌகரியங்களைச் செய்தாள். அருகிலிருந்த கடையிலிருந்து சிற்றுண்டிகள் காப்பி முதலியவற்றைத் தருவித்து இருவரும் அருந்தியபின்னர், வஸந்தராவ் வேலைக்காரியை வெளியில் அனுப்பிவிட்டுத் தமது காதலியை நோக்கி, ''மல்லிகா! ஏன் உன்னுடைய முகம் ஒருவாறு வாட்டம் அடைந்திருக்கிறது? நடந்தவற்றைப் பற்றி வருத்தப் படாதே. நான் அதிசீக்கிரம் நம்முடைய கலியாணத்துக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்'' என்று அன்பாகக் கூறினார். அதைக்கேட்ட மல்லிகா இனிமை தவழ்ந்த முகத்தோடு, ''நாம் இப்போது எங்கிருக்கிறோம்?'' என்று வினவினாள்.

''இது ஒரு வாடகை வீடு. என்னுடைய சொந்த மாளிகைக்கே உன்னை அழைத்துக் கொண்டு போகலாமாவென்று நான் யோசித்தேன். அதில் ஓர் இடைஞ்சலிருக்கிறது; உன்னை ஊரிலிருந்து நானே அழைத்து வந்ததாக இப்போது துக்கோஜிராவ் அறிந்து கொள்வது நிச்சயம். நீ காணாமற் போனதைப் பற்றி அவன் போலீஸில் எழுதி வைப்பான்; உடனே, உன்னைத் தேடிக் கொண்டு என்னுடைய மாளிகைக்கு வருவான். பார்ப்போருக்கு அது ஏளனமாக முடியும். ஆகையால், நமது கலியாண முகூர்த்தம் முடிகிறவரையில் எவருக்கும் தெரியாமல் உன்னை ரகஸியமாக இந்த இடத்தில் வைத்திருக்க உத்தேசித்திருக்கிறேன்.

நான் இப்போது என்னுடைய சமஸ்தான வக்கீலிடம் போய் நான் உன்னை இப்படி அழைத்து வந்து கலியாணம் செய்து கொள்வது சட்டப்படி குற்றமாகுமா என்பதை அறிந்துகொண்டு, புரோகிதரை வரவழைத்து முகூர்த்தநாள் வைத்துக்கொண்டு வருகிறேன். அதுவரையில் நீ இங்கே ஜாக்கிரதையாக இரு; உனக்குத் தேவையானதை வேலைக்காரி செய்வாள். ஆனால் நீ இந்த விஷயத்தில் ஒரு பொய் சொல்ல வேண்டும்'' என்றார் ஜெமீந்தார்.

மல்லி : என்ன பொய்?

''உன்னைத் தனியாக அழைத்துக்கொண்டு வந்திருப்பதைப் பற்றி இங்கிருப்பவர் சந்தேகிப்பார்களாகையால், நீ என்னுடைய சம்சாரமென்று சொல்லியிருக்கிறேன் உன்னை யார் கேட்ட போதிலும் அப்படியே தெரிவித்துவிடு'' என்றார் ஜெமீந்தார்.

''என்னை மீறி என் வாயில் நிஜம் வந்து விடுமே. நான் என்ன செய்வேன்?'' என்று சஞ்சலத்தைக் காட்டிய முகத்தோடு மொழிந்தாள் மல்லிகா.

''ஐயோ! உண்மையைச் சொல்லிவிடாதே. இரண்டொரு நாளைக்கே இந்தப் பொய். அதற்குள் நான் எல்லா ஏற்பாடு களையும் முடித்து விடுகிறேன். நானும் இதுவரையில் பொய்யே சொன்னவனல்ல. ஆனால் உன்னுடைய நன்மையைக் கருதி நான் எதைச் செய்தாலும் அது குற்றமாகாது. ஆயிரம் பொய் சொல்லி, ஒரு கலியாணத்தை முடிக்க வேண்டுமென்று பாமர ஜனங்கள் சொல்வது நம்முடைய விஷயத்தில் பொருத்தமாக இருக்கிறது. இதையன்றி இன்னும் எவ்விதமான காரியம் செய்ய வேண்டி யிருந்தாலும், அல்லது நான் என்னுடைய பொருளை எல்லாம் இழப்பதாய் இருந்தாலும், என் உயிர் நிலையாகிய உன் பொருட்டு அவற்றை லட்சியஞ் செய்ய மாட்டேன்'' என்று கூறி, அவளைத் தனக்கருகிலிழுத்து ஆசையோடு ஆலிங்கனஞ் செய்து முத்தமிட்டார்.

''தங்கள் சித்தப்படியே செய்கிறேன்'' என்றாள் மல்லிகா.

''என்னுடைய பெயர் மாதவராவ் என்று சொல்லியிருக் கிறேன்; உன்னுடைய பெயரை யாராவது கேட்டால் மல்லிகா என்று சொல்ல வேண்டாம். வேறு ஏதாவது ஒரு பெயரைச்

சொல்லிவிடு. எமுனாபாயி என்று தெரிவி. நான் அதிசீக்கிரத்தில் திரும்பி வந்து விடுகிறேன். ஜாக்கிரதையாக இரு'' என்று சொல்லிவிட்டு எழுந்து வெளியே வந்தார். வாசலில் பெட்டி வண்டி தயாராக வந்து நின்று கொண்டிருந்தது. அதில் அவர் உட்கார்ந்துகொள்ள, வண்டி செல்ல ஆரம்பித்தது.

அப்போது, அவர்கள் இறங்கியிருந்த வீட்டிற்கு அடுத்த வீட்டிற்குள்ளிருந்து, தற்செயலாக வெளியில் வந்த ஒரு யௌவனப் புருஷர், வஸந்தராவ் வண்டியிற் சென்றதைப் பார்த்துத் திடுக்கிட்டு அதிசயித்தவராய் கைதட்டி அவரைக் கூவியழைத்துக்கொண்டு வண்டிபோன திக்கில் சிறிது தூரம் வந்தார். அவர் கூவியது குதிரையின் குளம்படியோசையினால், வஸந்தராவின் செவியிற் படவில்லை. வண்டி இரண்டொரு நிமிஷத்தில் நிரம்பவும் தூரத்தில் போய்விட்டது.

கைதட்டி வஸந்தராயரை அழைத்தவர் கலியாணபுரத்தின் ஜெமீந்தாரான மோகனராவ். அவர் மேலும் வண்டியுடன் செல் லாமல் திரும்பி, மணியகாரனான பவானிராவின் வீட்டிற்குப் போய் அவனை அழைத்து, ''அதோ அந்தப் பெட்டி வண்டியில் போகிறவர் இந்த வீட்டிற்குள்ளிருந்து போனாரே. அவர் இங்கே குடியிருக்கிறாரா?'' என்று ஆவலோடு கேட்டார்.

''ஆம்; இங்கே அவரும் அவருடைய மனைவியும் இருக்கி றார்கள். அந்த அம்மாள் அவருடைய பேரழகுக்கு தகுந்த ரதியாகவே நிரம்பவும் ஸொகுஸாயிருக்கிறாள்! இருவரும் விடியற்காலம்தான் வந்தார்கள்'' என்றான் மணியகாரன்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் செய்யவேண்டுவதையறியாமல் சற்றுநேரம் அப்படியே நின்றவண்ணம், ''அப்படியா! நிரம்ப சந்தோஷம்! அவர் என்னுடைய அருமையான சிநேகிதரல்லவா! அவர் இந்த இடத்திலிருப்பது நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது. நான் அவருடைய சம்சாரத்தினிடத்தில் சில விவரங் களை அறிந்து கொள்ள வேண்டும். வேலைக்காரியை அழையும்'' என்றார். மணியகாரன் உடனே போய்க் கன்னியம்மாளை அவரிடம் அனுப்பினான். ''அடீ! கன்னி! இங்கே வந்திருக்கும் அம்மாளிடம் போய், அவளுடைய புருஷரின் சிநேகிதரான கலியாணபுரம் ஜெமீந்தார் பார்க்க வந்திருக்கிறாரென்று தெரிவி'' என்றார்.

உடனே அந்த வேலைக்காரி உள்ளே போய் அவ்வாறு மல்லிகாவிடத்தில் தெரிவித்தாள். அதைக்கேட்ட மல்லிகா தனிமையிலிருக்கும் ஸ்திரீயான தன்னோடு அவர் பேச விரும்பியதைப்பற்றி நிரம்பவும் கோபமடைந்தாளேனும், அதைக் காட்ட மாட்டாமல் அடக்கிக் கொண்டு தான் பேச முடியாதென்று சொல்லியனுப்பினால், அவர் யாரோ ஒரு ஜெமீந்தாராதலால் அவரது சிநேகிதரான வஸந்தராவுக்கு தன்மீது வருத்தம் உண்டாகுமென்று நினைத்து அரைமனதோடு அவரை அழைத்து வரும்படி சொல்லியனுப்பினாள்.

அடுத்த நிமிஷம் மோகனராவ் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டு நிரம்பவும் நாணங்கொண்ட மல்லிகா கீழே குனிந்த வண்ணம் ஒரு மூலையில் நின்றாள். அங்கே கிடந்த நாற்காலி யொன்றில் மோகனராவ் உட்கார்ந்துகொண்டு, புன்சிரிப்புடன், ''நீங்கள் இங்கே வந்திருப்பதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன். பெட்டி வண்டியிலே போன உன்னுடைய புருஷரைக் கூவியழைத்தேன்; அது அவருடைய காதில் படவில்லை. அதற்குள் வண்டியும் போய்விட்டது. அவர் என்னுடைய பள்ளிக் கூடத்து சிநேகிதர். நாங்களிருவரும் பூனாவில் ஒன்றாகப் படித்தவர்கள். அவர் என்னைப் பற்றித் தெரிவித்திருப்பாரே! நான் கலியாணபுரம் ஜெமீந்தார். என்னுடைய பெயர் மோகனராவ்!'' என்றார்.

''அப்படியா நிரம்ப சந்தோஷம்! அவர்கள் கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து விடுவார்கள். தாங்கள் இங்கே இருக்கும் இடம் எதுவோ?'' என்றாள் மல்லிகா.

''நான் அடுத்த வீட்டில் இறங்கியிருக்கிறேன்; நான் ஊரிலிருந்து இங்கே வந்து ஒரு வாரமாகிறது. என்னுடைய ஜெமீன் மாளிகை யெல்லாம் இந்த ஊரிலிருந்து ஆறு மைலுக்கு வடக்கே இருக்கின்றன. நான் அடிக்கடி இந்த ஊரில் வந்து தங்குவது வழக்கம். ஆனால், எவ்வளவோ பெருத்த சீமானாகிய உன்னுடைய புருஷர் வஸந்தராவ் தமது சொந்த மாளிகையை விட்டு கேவலமான இந்த இடத்தில் வந்திறங்கினதே எனக்கு அதிசயமாக இருக்கிறது!'' என்றார் ஜெமீந்தார்.

வஸந்தராவ் தன்னை மாதவராவ் என்று சொல்லும்படி தெரிவித்தது மல்லிகாவின் நினைவிற்கு வர அவள், ''என்

புருஷருடைய பெயர் நீங்கள் சொன்னதல்லவே; வேறல்லவா; வேலைக்காரியையழைத்துக் கேட்டால் தெரிவிப்பாள்'' என்றாள். அவர் உடனே வேலைக்காரியையழைத்துக் கேட்க, அவரது பெயர் மாதவராவ் என்பது தெரியவந்தது. உடனே அவர் வேலைக்காரியை வெளியில் அனுப்பி விட்டார். தாம் யாரோ வேறொரு மனிதரைத் தமது சிநேகிதரான வஸந்தராவென்று தவறாக நினைத்துக் கொண்டதாக எண்ணி நிரம்பவும் சஞ்சலமடைந்து, ''அம்மா! சற்றுமுன் இங்கேயிருந்து போனவர் என்னுடைய சிநேகிதரான வஸந்தராயரைப் போலவே இருந்தார். ஆகையால், அவர்தானென்று நினைத்துக்கொண்டு, இங்கே வந்து இவ்வளவு தூரம் சிரமம் கொடுத்தேன். மனதில் ஆயாசம் வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு எழுந்தார்.

மல்லிகா சிறிது தடுமாற்றமடைந்தவளாய் மௌனமாக நின்றாள். அவர் தனது காதலரது சிநேகிதராதலால், அவரிடம் தான் உண்மையை வெளியிட்டால் அவரும் தங்களுக்கு அநுகூலமாயிருப்பாரேயன்றி தங்களுக்கு யாதொரு தீங்கையும் செய்ய மாட்டாரென்ற நினைத்த மல்லிகா தனது சிரத்தை மெல்ல உயர்த்தி, ''நான் சொன்னது நிஜமல்ல; அவர்களுடைய உண்மைப் பெயர் நீங்கள் சொன்னதுதான். இங்கே வந்து இறங்க நேர்ந்ததனால் வேறொரு பெயர் வைத்துக் கொண்டார்கள்'' என்று கூறினாள்.

''ஆகா! அப்படியா! எனக்கும் அந்த மாதிரி சந்தேகம் உதித்தது. அதுவே நிஜமாயிற்று. வரவர அவருடைய காரியம் எல்லாம் இப்படி ரகஸியமாகவே இருக்கிறது. கலியாணம் செய்து கொண்டதைக்கூட அவர் எனக்கு இதுவரையில் தெரிவிக்கவில்லையே!'' என்றார் ஜெமீந்தார்.

''எங்களுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை; சீக்கிரத்தில் முடியும்'' என்றாள் மல்லிகா.

அதைக் கேட்டவுடன் மோகனராவின் முகம் திடீரென்று மாறுபட்டு, அச்சத்தையும் விசனத்தையும் காண்பித்தது. சற்று நேரம் ஏதோ யோசனை செய்து, ''கலியாணம் ஆகவில்லை ஆனால் நீ அவருடன் தனியாக இருக்கிறாயோ?'' என்று வியப்போடு கூற, அதைக்கேட்ட மல்லிகாவின் மனதும் ஒருவிதமான

சஞ்சலமடைந்தது. அவள் முற்றிலும் வெட்கி அவரது முகத்தைப் பார்ப்பதும் கீழே குனிவதுமாயிருந்தாள்.

''என்ன அதிசயம் இது! நீயோ ஒன்றையுமறியாத பதிவிரதா ஸ்திரீயாகக் காணப்படுகிறாய்; உன்னுடைய முகமும் மேன்மையையும் நற்குணத்தையும் காண்பிக்கிறது. அப்படி இருக்க இவ்விதமான அக்கிரமம் நடக்குமா! நீங்கள் இங்கே எப்போது வந்தீர்கள்?'' என்றார் ஜெமீந்தார்.

''இன்று விடியற்காலம் சுமார் ஐந்து மணிக்கு வந்தோம். ஏன்? என்ன விசேஷம்?'' என்று நடுங்கிய குரலில் மல்லிகா வினவினாள்.

''கொஞ்சம் பொறு; அவசரப்படாதே; நீ சொன்ன சங்கதிகளைக் கேட்க என் மனம் பதறுகிறது. இப்படிப்பட்ட விநோதமும் உண்டாவென்னும் நினைவு என்னை வருத்துகிறது. இருந்தாலும் உள்ளதைச் சொல்லுகிறேன்; கேள்!'' என்ற அதிக விசனத்துடன் பேசினார். அவர் தமது மனதை எப்படி வெளிப்படுத்துவதென்பதை அறியாமல் சற்று மயங்கினார்; தாம் பேசாமல் போய்விடலாமாவென்று நினைத்தார். அவளை அந்த விபத்திலிருந்து விடுவிக்காமல் போவது பாவமென்ற எண்ணத்தைக் கொண்டவராய் அவர் மேலே பேசத் தொடங்கினார்.

9—வது அதிகாரம்

சனிபகவான்

ஆனால் விஷயத்தை எவ்விதம் சொல்ல ஆரம்பிப்பதென்பதையறியாதவராய்க் குழம்பிய மனதோடு மோகனராவ் சற்று பேசாமல் நின்றார். உண்மையைச் சொல்வதும் துன்பமாகத் தோன்றியது சொல்லாமற் போவதும் சரியல்லவென்று நினைத்தார். வஸந்தராயரது பாலியச் சேஷ்டைகளைப் பற்றியும், அவரது நடத்தைகளைப் பற்றியும் பலவாறு மோகனராவ் கேள்விப்பட்டிருந்தார். நற்குண நல்லொழுக்கம் நிறைந்த குடும்ப ஸ்திரீயான ஒரு யௌவன மடந்தையைக் கெடுக்கும் எண்ணத்துடன், வஸந்தராவ், அவளை ஏமாற்றி அழைத்து வந்திருக்கிறாரென்பது அவருக்கு உடனே நிச்சயமாயிற்று. அவளுக்கு நேரவிருக்கும் ஆபத்தை எப்படியேனும் தெரிவிப்பதே சரியான காரியமென்று தீர்மானித்துக்கொண்டு அவளை நோக்கி, ''நான் சொன்ன சங்கதிகளால் நீ பயந்திருப்பாய். இருந்தாலும் பாதகமில்லை; நான் உனக்கு முக்கியமாய்த் தெரிவிக்க வேண்டிய சங்கதியை இன்னும் சொல்லவில்லை. அதை உன்னிடம் எப்படி வெளிப்படுத்துவது என்று என் மனம் ஸஞ்சலப்படுகிறது'' என்றார். அவரது முகக்குறிகால், அவர் கபடமில்லாமல் உண்மையைச் பேசுவதாய்த் தோன்றியது. அதைக் கண்ட மல்லிகாவின் மனதில் ஒருவகையான கலக்கமுண்டாயிற்று. ஆனால், அதைத் தனது புன்சிரிப்பால் மறைத்துக்கொண்டு அவர் என்ன சொல்வாரோவென்று ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

''வஸந்தராவை உனக்கு நெடுங்காலமாகத் தெரியுமா?'' என்றார்.

''இல்லை; இப்போதே சமீப காலத்தில் பழக்கம் ஏற்பட்டது. இரண்டு வாரமாகத்தான் தெரியும்'' என்றாள்.

''ஆகா; என்ன ஆச்சரியம்! அவருடைய யோக்கியதாபட்டத்தை கொஞ்சமும் அறியாத நீ, இரண்டு வாரப் பழக்கத்

தில் அவரை முழுதும் நம்பி, இவ்வளவு பெருத்த காரியத்தைச் செய்யலாமா? இதை நினைப்பதே பயமாக இருக்கிறதே!'' என்றார் மோகனராவ்.

அதைக்கேட்ட மல்லிகா, தனது காதலரை தூக்ஷித்துப் பேசிய மோகனராவின்மேல் சிறிது கோபங்கொண்டவளாய், ''நீங்கள் சொல்வது எனக்கு நன்றாக விளங்கவில்லையே! அவரை நம்பினால் கெடுதல் என்ன?'' என்றாள்.

''நான் இதற்குமேல் அதிக விரிவாகப் பேசினால், உன் மனசு புண்படுமென்பது நிச்சயம். நான் குறிப்பாகச் சொல்வதை அறிந்து கொள்ள உன்னால் கூடவில்லையா? அவருடைய சொல்லை நம்பி நீ வீட்டை விட்டு ரகஸியமாக அவருடன் ஓடி வந்து விட்டாயே! அது எவ்வளவு அவமானமான காரியம் தெரியுமா? வெளியில் தெரிந்தால் எவ்வளவு வெட்கக்கேடு! இப்போது அவர் உன்னைக் கலியாணம் செய்து கொள்ளா விட்டால், நீ உன்னுடைய வீட்டுக்குத் திரும்பவும் போக முடியுமா? உன்னுடைய கற்புக்கு இன்னமும் பங்கம் ஏற்படாதிருந்தாலும், நீ யாதொரு தவறையும் செய்யாதிருந்தாலும், நீ இனி வீட்டுக்குப் போக முடியாதல்லவா?'' என்றார். அதைக் கேட்ட மல்லிகாவின் முகம் வெட்கத்தினால் கறுத்தது; கீழே குனிந்து கொண்டவளாய் கோபச் சிரிப்புடன், ''அவர்கள் கலியாணத்துக்கு முகூர்த்தம் நிச்சயிக்கப் போயிருக்கிறார்கள். ஆகையால், அதைப்பற்றி சந்தேகமே இல்லை'' என்றாள்.

''அவர் நிச்சயமாக அப்படியே செய்வாரென்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்றார்.

''அவர்களே உறுதிசொல்லி இருக்கிறார்கள்'' என்று அலட்சியமாகத் தெரிவித்தாள்.

''அவர் சொன்ன சொல் தவறாதவரென்பதை நீ நிச்சயப் படுத்திக் கொண்டாயா?'' என்றார்.

''என் விஷயத்தில் அவர்கள் ஒரு நாளும் வஞ்சம் நினைக்க மாட்டார்கள். உயிர் போவதானாலும் என்னிடம் பொய் சொல்ல மாட்டார்கள்'' என்றாள்.

''பாவம்! நீ கபடத்தையே அறியாதவள்! அவருடைய சங்கதி உனக்கெப்படித் தெரியப்போகிறது! அவருக்கு இதே தொழி

லென்பது உனக்குத் தெரியாதுபோலிருக்கிறது! யௌவன ஸ்திரீ களை இவ்விதம் வஞ்சிப்பதில் அவர் கைதேர்ந்தவரல்லவா? அவராவது உன்னைக் கல்யாணம் செய்துகொள்வதாவது! ஒரு நாளுமில்லை'' என்றார்.

அதைக்கேட்ட மல்லிகாவுக்கு கோபம் மூண்டது. ''சரிதான் போமையா! நீ பெரிய மனிதரென்று நினைத்து நான் இதுவரை யில் மரியாதையாக பதில் சொன்னேன். அவர்களுடைய குணமும், உண்மையான யோக்கியதையும் எனக்கு நன்றாகத் தெரியும். இங்கே வந்து எனக்கு இந்த உபந்நியாசம் செய்யும்படி உம்மை யார் வருந்தியழைத்தது? உமக்குக் கொஞ்சம் பைத்திய மிருக்கும் என்று நினைக்கிறேன். நல்ல வேளையில் நீர் இவ்விடத்தை விட்டுப்போம். இனி உம்முடைய சொல் ஒன்று கூட என் காதில் படக்கூடாது'' என்றாள். அதைக் கேட்ட மோக ராவ் திடுக்கிட்டு மனோ சஞ்சலத்தையடைந்தார். அவளைத் தப்பு விக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தாம் முயன்றது பயன் படாமற் போனதை நினைத்துப் பரிதாபமடைந்தவராய் அவளை நோக்கி சலிப்பாக, ''சரி; நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். பிறகு உன் தலைவிதிப்படி காரியம் நடக்கட்டும். இப்போது நான் சொல்வது உனக்குப் பிடிக்காது; என் சொல்லை அலட்சிம் செய்ததைப் பற்றி அதிசீக்கிரம் நீ தேம்பியழுவாய். உனக்கு எந்தச் சமயத்தில் எவ்விதமான உதவி என்னாலாக வேண்டியிருந்தாலும், அதை நான் செய்ய தயாராக இருக்கிறேன். இப்போது என்னுடைய நல்ல எண்ணம் பலிக்கவில்லை. எல்லாம் அவரவர் விதிப்படிதான் முடியும்? சரி நான் போகிறேன்'' என்று மனத்தளர்ச்சியைக் காட்டி மொழிந்தவராய் எழுந்து வாசற்படிக்கு நேரில் வந்தார்; அப்போது வீதியில் ஒரு மனிதர் மற்றொருவருடன் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டார்; உடனே மல்லிகாவின் பக்கமாய்த் திரும்பி, ''அம்மா! இந்த விஷயத்தை உனக்கு ருஜுப்படுத்துகிறேன். அதோ வீதியில் **கோனூர் மிட்டாதார்** நிற்கிறார். அவர் நிரம்பவும் பெரிய மனிதர்; ஒரு நாளும் பொய் சொல்லாதவர். அவரை நான் இப்போது அடுத்த வீட்டுக்குள் அழைத்துக்கொண்டு போய் அவருடைய வாயைக் கிளப்பி விடுகிறேன். நீ ஒன்று செய். பின்புறத்தில் இந்த வீட்டுக்கும் அடுத்த வீட்டுக்கும் நடுவில் ஜன்னல் ஒன்று

இருக்கிறது. அதற்கருகில் ஓசை செய்யாமல் நீ மறைவாக நின்று கொண்டிரு. வேகமாய்ப் போ; அப்புறம் பதில் சொல்லலாம்' என்று கூற, அதைக்கேட்ட மல்லிகா தன்னை மறந்தவளாய் நடந்து அந்த ஜன்னலையடைந்தாள்.

உடனே மோகனராவ் விரைவாக வெளியில் வந்து, சிரித்த முகத்தோடு, கையைத் தட்டி கோனூர் மிட்டாதாரையழைத்து "என்ன! இரண்டு மூன்று தினங்களாகக் கண்ணில் படுவதே அருமையாய்ப் போய்விட்டதே?" என்றார்.

"வேறொன்றுமில்லை. ஒரு அவசர காரியமாக கிராமத் துக்குப் போயிருந்தேன். விடியற்காலமேதான் வந்தேன்" என்றார் கோனூர் மிட்டாதார்.

"வாருங்கள்; காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம். அவசர மாய்ப் போக வேண்டுமோ?" என்று அன்பாக உபசரித்து மொழிந்தார்.

"அவசரமாகத்தான் போக வேண்டும், ஆனால் நான் இன்னும் காப்பி சாப்பிடவில்லை. இனிமேல் வீட்டுக்குப் போவதை விட அதை இங்கேயே முடித்துக் கொண்டு போகிறேன். நீங்கள் கொடுப்பதை வேண்டாமென்று சொல்லுவதேன்" என்று கூற, இருவரும் கலியாணபுரம் ஜெமீந்தார் இறங்கியிருந்த வீட்டிற் குள் நுழைந்தனர். மல்லிகா நின்ற ஜன்னலுக்கருகில் சுவரின் அப்புறத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அவர்கள் இருவரும் உட்கார்ந்துகொள்ள, வேலைக்காரன் காப்பி, சிற்றுண்டி முதலியவற்றைக் கொணர்ந்து வைத்துவிட்டுச் சென்றான். இரு வரும் அவற்றை அருந்திய வண்ணம் சம்பாஷிக்கத் தொடங்கினர். "என்ன விசேஷம்! வர வர சீட்டாட்டம் எனக்குக் கசந்துபோய் விட்டது. கிராமத்துக்குப் போய்க் கொஞ்சகாலம் இருந்துவிட்டு வருவது நல்லதென்று நினைக்கிறேன்" என்றார் மிட்டாதார்.

"நல்லதுதான்; வஸந்தராவும் கிராமத்துக்கு வந்திருக்கிறார். அங்கே நீங்களிருவரும் சந்தோஷமாகப் பொழுதைப் போக்க லாம். உங்கள் கிராமத்துக்கும் அவருடைய கிராமத்துக்கும் ஒரு மைல் தூரமிருக்குமா?" என்றார் ஜெமீந்தார்.

"அவ்வளவுதானிருக்கும். வஸந்தராவ் நல்ல அதிர்ஷ்டசாலி. இந்த அபாரமான ஐசுவரியம் இவ்வளவு சுலபத்தில் யாருக்குக்

கிடைக்கும்? அவர் பூனாவிலிருந்து வந்த பிறகு நான் இன்னும் அவரைப் பார்க்கவே இல்லை. நீங்கள் பார்த்தீர்களா?'' என்றார் மிட்டாதார்.

மோகன : இப்போதுதான் பார்த்தேன்.

கோனூர் மி : இந்த ஊரில் இருக்கப் போகிறாரோ, அல்லது பவானியம்மாள்புரத்தில் இருக்கப் போகிறாரோ என்பது தெரியவில்லை.

மோகன : எங்கிருந்தாலும் இனி அவர் கலியாணம் செய்து கொண்டு ஒரே இடத்தில் ஸ்திரமாக இருப்பாரென்று நினைக்கி றேன். இதுவரையில் அவர் தேசசஞ்சாரஞ் செய்தது போதாதா?

கோ.மி : கலியாணத்தில்அவர் அவ்வளவாகப் பிரியப்பட மாட்டாரே. கலியாணம் செய்து கொண்டால் ஒரு மனைவி, இல்லாவிட்டால், ஊரெல்லாம் மனைவியென்று நினைப்ப வரல்லவா அவர். அவர் நிரம்ப அழகுடையவராதலால், அவரைக் கண்டு மயங்காத ஸ்திரீயுமில்லை. அவருடைய வலையில் பட்டு மீண்டோருமில்லை.

மோகன : எந்த ஸ்திரீயிடத்திலும் நீடித்த பிரியம் ஏற்படாத மனிதர் கலியாணம் ஏன் செய்து கொள்ளுவார்? இதுவரையில் அவருக்குப் பெண் கொடுப்பதாக எவரும் முன்வரவில்லையா?

கோ.மி : பூனாவில் மூன்று மாசத்துக்கு முன் நடந்த சங்கதி உங்களுக்குத் தெரியாதோ? அங்கே முராரிராவ் என்னும் தன வந்தருக்கு ஒரு யௌவனக் குமரியிருக்கிறாள். அந்த முராரி ராவுக்கும் இவருக்கும் சிநேகமுண்டு. இவர் அங்கே போக்குவரத் தாயிருந்தார். அவரும் இவருடைய குணவொழுக்கங்களைக் கவ னித்துப் பார்த்து ஐந்தாறு மாசங்கள் கழித்துத் தமது பெண்ணை இவருக்குக் கலியாணஞ் செய்து கொடுக்க நினைத்திருந்தார். ஸௌமித்ராபாயி என்னும் அந்தப் பெண்ணை இவர் எப்படியோ மயக்கி, இரவில் அவளுடைய தகப்பனாருக்குத் தெரியாமல் அவளை அழைத்துக் கொண்டு வேறே ஊருக்குப் போய் ஒரு வாரம் அவளை அங்கே வைத்திருந்து, பிறகு மெதுவாக அவளை அவளுடைய வீட்டுக்குத் திருப்பியனுப்பி விட்டார். அதனால் நிரம்பவும் அவமானமடைந்த முராரிராவ், அவளைக் கலியாணம் செய்து கொள்ளும்படி இவரை எவ்வளவோ வேண்டியும் இவர்

வேண்டாமென்று மறுத்து விட்டார். அப்படிச் செய்த யோக்கி யரல்லவா இவர்?

மோகன : அப்படியா! ஸ்திரீ விஷயத்தில் இவர் அவ்வளவு துன்மார்க்கரா? நிரம்பவும் யோக்கியரென்றல்லவா இதுவரையில் நான் நினைத்திருந்தேன். பார்வையிலிருந்து ஒரு மனிதருடைய குணத்தை அறிய முடியாது போலிருக்கிறதே!

கோ.மி : அவரை நம்பினவள் மீளவே மாட்டாளென்று நான்தான் சுருக்கமாகச் சொல்லிவிட்டேனே. அவரை நம்பின குடும்ப ஸ்திரீ அதோடு நாசமடைவாளேயொழிய தப்புவ தில்லை. அவளுடைய குலம், குடும்பம், மானம் முதலிய சகலமும் போய்விடும் - என் றார்.

அந்த சம்பாஷணையைக் கேட்க மல்லிகாவின் மனம் நிரம்பவும் குழம்பியது; தலை சுழலவாரம்பித்தது. அவர்கள் தனது காதலரான வஸந்தராவைத்தான் அவ்விதம் தூஷிக்கி றார்களா, அல்லது வேறு எவரையேனும் குறித்துப் பேசுகின்றார் களாவென்று ஒரு நொடி அவள் மனது சந்தேகித்தது; புத்தியோ மாறாட்டமடைந்து மயங்கியது. அது கனவோ நினைவோ வென்று அவள் ஐயமுற்றாள். அவர்கள் தனது உயிர்காதலரது குணவொழுக்கங்களையே உள்ளபடி விவரித்தார்களென்பதும் நிச்சயமாகத் தெரிந்தது. அவளது மனமும் தேகமும் பதறிப் பறந்தன. பலவகையான எண்ணங்களின் பெருக்கைச் சகிக்க மாட்டாதவளாய், ''ஐயோ! உம்மை உயிராகவே மதித்தேனே! உலகத்தில் எனக்கு உம்மைத் தவிர யாதொரு புகலுமில்லை யென்று நினைத்து மனப்பால் குடித்தேனே! என்னுடைய எண்ணத்தில் மண்ணைப் போட்டீரோ! ஆகா! இனி என்ன செய்யப் போகிறேன்!'' என்று தனக்குள் நினைத்து நிலைகலங்கி மனக்குழப்பமடைந்து, அந்த ஜன்னலை விட்டு அப்பால் நடந்தாள்; அங்கிருந்த கான்பூர் சால்வையை எடுத்துத் தன்னைப் போர்த்தி மூடிக்கொண்டு மெல்ல வீட்டை விட்டு வெளியில் வந்து வீதியிலே எவரேனும் தன்னைக் கவனிக்கிறார்களோ வென்பதை ஆராய்ந்தவளாய் தெருவிலிறங்கி விரைவாக நடந்து மறைந்து போய்விட்டாள்.

அதன் மேலும் கால் நாழிகை வரையில் கோனூர் மிட்டாதாரும், கலியாணபுரம் ஜெமீந்தாரும் பேசிக்கொண்டிருந்த

பின்னர் முன்னவர் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார். மோகனராவ் உடனே வெளியில் வந்து அடுத்த வீட்டிற்குள் நுழைந்து மல்லிகாவைத் தேடிப் பார்த்தார். அழகிய பெண்ணுருவம் எங்கும் கண்ணிற் படவில்லை. அவர் சிறிது நேரம் யோசனை செய்தவண்ணம் அப்படியே நின்றார். ''சரி; இவருடைய வலையிலிருந்து தப்பித்துக்கொண்டு தன்னுடைய வீட்டுக்குப போய்விட்டாள் போலிருக்கிறது. ஐயோ பாவம்! ஒன்றையுமறியாத பேதை ஸ்திரீ! என்ன இளமை! என்ன சொகுஸு! போகட்டும்; எப்படியாவது தப்பித்துப் போனதே சந்தோஷம்'' என்று தமக்குள் நினைத்தவராய்த் தமது ஜாகையை அடைந்தார்.

10–வது அதிகாரம்

பெண்டாட்டிப் பித்து

தஞ்சைப் பட்டணத்திற்கு அரை மைல் தூரம் வடக்கில் வடவாறென்னும் சிற்றாறு ஓடுகின்றது. அதன் வடக்குக் கரையின் மீது கருந்தட்டான்குடி என்னும் ஊர் இருக்கிறது. அந்த ஆற்றின் கரையோரமாக நீளத்தில் சுமார் அரை மைல் தூரம் வரையில் கருங்கல் படித்துறை கட்டப்பட்டிருக்கின்றது. அதையடுத்தாற் போல் மண்டபங்களும், குளங்களும், அழகிய சோலைகளும் இருக்கின்றன. அந்த இரமணீயமான இடத்திற்கு வம்புலாஞ் சோலையென்பது* பெயர். முன் அதிகாரத்தில் குறிக்கப்பட்ட நாட்காலையில் பீமராவ் ஆற்றங்கரைக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். கடைசியாக அவனும் ஸகாராம் ராவும் சம்பாஷித்துக் கொண்டிருந்த தினத்திற்குப் பிறகு, இறந்து போன பரசுராம பாவாவிற்கு வேறே எவரேனும் வார்சு தார்கள் இருக்கிறார்களா என்பதை விசாரிப்பதிலும், கலியாண புரம் ஜெமீந்தாரை மேன்மேலும் கடன்வாங்கத் தூண்டுவதிலுமே அவன் தனது பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான். அந்த வார்சுதாரைக் கண்டு பிடித்து இரண்டு கோடி ரூபாய் பெறுமான முள்ள சொத்துக்களை அவருக்குச் சேர்ப்பித்தால், தான் அதில் பாதியாவது பெற்று விடலாம் என்று நினைத்து பெருத்த பைத் தியங்கொண்டவனாய், அதே நினைவாக யாதொரு பயனுமின்றி அவன் அலைந்து திரிந்தான். அன்று அவர்கள் சம்பாஷித்த பிறகு, பீமராவ் தனது வீட்டிற்கே போகாமலிருந்தான். ஆகையால் ஸகாராம் ராவ் ஏதாவது புதிய சங்கதி தனக்குத் தெரிவிப்பான் என்ற எண்ணங் கொண்டவனாய் அன்று தனது வீட்டிற்குப் போகும் நோக்கத்துடன் அவன் வம்புலாஞ் சோலையின் வழியாக வந்து கொண்டிருந்தான்.

---

*வம்பு – வண்டு; உலாம் – உலாவும்

அந்தச் சமயத்தில் யாரோ ஒரு ஸ்திரீ போர்வையால் தனது உடம்பை பாதாதிகேசம் வரையில் மூடிக்கொண்டு, முகத்தையும் அநேகமாய் மறைத்துக் கொண்டவண்ணம் வந்ததைக் கண்டான்; அவளது மூட்டத்திலிருந்தே அவள் தனது ஜாதியைச் சேர்ந்தவ ளென்று யூகித்துக் கொண்டான்; நடை உருவம் முதலியவற்றி லிருந்து, அவள் யௌவனப் பருவத்தினள் என்பதையும் நிச்ச யித்துக் கொண்டான்; அவளிடம் நெருங்கி, அவளது அழகைப் பார்க்க வேண்டுமென்னும் ஆசை அவனது மனதில் உதித்தது. அவன் தன்னைச் சந்தித்து அப்பாற் சென்ற மாதை நோக்கி, ''அம்மா! என்னைக் கூப்பிட்டீர்களா? நீங்கள் யார்? அடையாளம் தெரியவில்லையே!'' என்று மரியாதையாகக் கேட்டுக்கொண்டே அவளிடம் நெருங்கினான்.

அவனது சொல்லைக் கேட்ட நமது மல்லிகா திடுக்கிட்டுத் திரும்பி நின்று, தனது முகத்தை நன்றாகத் திறந்து அவனை உற்று நோக்கினாள். அவளது முகக்காந்தியையும் கட்டழகையும் கண்டு நிரம்பவும் திகைத்த பீமராவ் தனது மனோசஞ்சலத்தை மறைத்துக் கொண்டு, ''அம்மா! என்னை நீங்கள் கூப்பிட்டாற் போலிருந்ததே'' என்ற சம்சயமாகக் கேட்க, ''நான் கூப்பிட வில்லையே'' என்று சொல்லிவிட்டு நாற்புறங்களையும் அவனை யும் பார்த்து, ''இது எந்த இடம்'' என்று மிருதுவாகக் கேட்டாள் மல்லிகா.

''இதற்கு வம்புலாஞ்சோலை என்று பெயர்; ஏன்? இங்கே யாரையாவது எதிர்பார்க்கிறீர்களா?'' என்றான் பீமராவ்.

''இல்லை இல்லை'' என்று சொல்லிவிட்டு தனது முகத்தை முன்போல துணியால் மறைத்துக் கொண்டு அப்பால் போய் விட்டாள் மல்லிகா.

பீமராவ் அவளது பின்னழகைப் பார்த்தவண்ணம் அப்படியே சற்று நேரம் நின்றான். அவளைத் தொடர்ந்துகொண்டே போக வேண்டும் என்னும் எண்ணம் அவனைத் தூண்டியது. என் றாலும், அவன் அந்த ஆசையை அடக்கிக் கொண்டு தஞ்சைப் பட்டணத்தை நோக்கி நடந்து தெற்கு ராஜவீதிக்குப் போய்த் தனது வீட்டிற்குள் நுழைந்தான்.

அவனைக் கண்ட ஸகாராம்ராவ், ''நீ இங்கேயிருந்து போய் எத்தனை நாளாகிறது! நான் முக்கியமான சில சங்கதிகளை

உன்னிடம் சொல்ல வேண்டும். நீ வருவாய் வருவாயென்று இராப்பகலாய் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லி, வஸந்தராவ், துக்கோஜிராவ் முதலியோருடன் பவானியம்மாள்புரத்து அரண்மனையைச் சோதனை செய்ததையும், அங்கு பரசுராம பாவாவின் மனைவியினது படத்தைக் கண்டதையும், அதற்கும் மல்லிகாவிற்கும் இருந்த ஒற்றுமை முதலியவற்றையும் தெரிவித்தான். ''இதுதானா பிரமாதம்! ஒருத்தியைப் போல் மற்றொருத்தி இருப்பது ஒரு விசேஷமா! இதனால் நமக்கென்ன அநுகூலம் ஏற்படப்போகிறது? ஒன்றுமில்லை'' என்று அலட்சியமாகத் தெரிவித்தான் பீமராவ்.

''அப்படி நினைக்கக் கூடாது. அற்ப சங்கதி பெரிய விஷயத்தைக் கண்டுபிடிக்க உதவும். படம் அந்தப் பெண்ணைப் போலவே இருக்கிறது. அதற்கும் அவளுக்கும் சம்பந்தமில்லாவிட்டால் அவ்வளவு ஒற்றுமை ஒருநாளும் இருக்காது. தவிர, மல்லிகா என்பவளுக்கும் துக்கோஜிராவுக்கும் சொந்தமில்லை. அவளும் பூனாவிலிருந்து வந்தவள். அவளுடைய தாய் தகப்பன் யாரென்பது எவருக்கும் தெரியாது. இவற்றையெல்லாம் நன்றாக யோசித்துப் பார்'' என்றார் ஸகாராம்ராவ்.

''அதில் ஏதாவது ரகஸியமிருக்கலாம். அந்தப் படத்தையும், அவளையும் நான் பார்ப்பேனாகில், அதன் சம்பந்தத்தை உடனே சொல்லி விடுவேன். அவருடைய மாளிகையிலிருக்கிற படத்தை நான் எப்படிப் பார்க்கப் போகிறேன்?'' என்றான் பீமராவ்.

உடனே ஸகாராம்ராவ் எழுந்து தனது பெட்டியைத் திறந்து, அதற்குள்ளிருந்த அந்தப் படத்தை எடுத்து பீமராவுக்குக் காட்ட அவன் அதைக் கண்டவுடனே திடுக்கிட்டு திகைத்து ஒன்றும் பேசாமல் சற்று மௌனமாக நின்றான்.

''எப்படி இருக்கிறது பார்த்தாயா?'' என்றான் ஸகாராம்ராவ்.

''இந்தப் படத்திலுள்ள பெண்ணை நான் அரை நாழிகைக்கு முன் வம்புலாஞ்சோலையில் நேரில் பார்த்தேன். அவளுக்கும் இதற்கும் இவ்வளவு ஒற்றுமை இருப்பது அதிசயமாகத்தான் இருக்கிறது'' என்றான் பீமராவ்.

''அவள் பவானியம்மாள்புரத்தில் அல்லவா இருக்கிறாள்! நீயாவது அவளை இங்கே காண்பதாவது'' என்றான் ஸகாராம்ராவ்.

"இல்லை இல்லை. நான் பார்த்தது நிஜம்" என்று பீமராவ் உறுதியாக மறுத்துக் கூறினான்.

அப்போது வாசற் கதவை யாரோ ஓங்கி இடித்த ஓசை கேட்டது, ஸகாராம்ராவ் உடனே படத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, பீமராவையும் உள்ளே அனுப்பியபின் கதவைத் திறந்தான். வஸந்தராவ் கலங்கிய மனத்தோடும் மாறிய முகத்தோடும் தடுமாற்றமடைந்த தோற்றத்தோடும் உள்ளே நுழைந்தார்.

மல்லிகா இறங்கியிருந்த வீட்டைவிட்டு இரகஸியமாகப் புறப்பட்டு வெளியிற் போய் ஒரு நாழிகைக்குப் பிறகு வஸந்த ராவ் தமது காரியங்களை முடித்துக்கொண்டு திரும்பி வந்து சேர்ந்தார். தமது அருமைக் காதலியை விட்டு அவ்வளவு நேரம் பிரிந்திருந்ததைச் சகியாதவராய் அவளைப் பார்க்க ஆவல் கொண்டவராய் குதூகலமும் புன்சிரிப்பும் ஜ்வலித்த முகத்தோடு அவர் ஜாகைக்குள் நுழைந்தார்; கூடத்தில் அவளைக் காணா மையால், "மல்லிகா! மல்லிகா!" என்று அவளது பெயரைச் சொல்லி ஆவலுடன் ஒருதரம் அழைத்தார்; மறு மொழி இல்லை. ஒருகால் அவள் இரண்டாங்கட்டில் நீராடிக் கொண்டிருப்பா ளோவென்று நினைத்து, சற்று நேரம் பொறுமையோடிருந்தார். பத்து நிமிஷ நேரம் கழிந்தது. பிறகு அவரது மனதில் ஒரு வகையான சந்தேகமும் அச்சமும் எழுந்து வதைக்க ஆரம்பித்தன. "மல்லிகா! மல்லிகா!" என்று அழைத்துக் கொண்டு அவர் இரண்டாங்கட்டிற்குள் போய் அறையறையாய் நுழைந்தார். அவள் எவ்விடத்திலும் காணப்படவில்லை. அவரது மனதில் பெருத்த குழப்பமும் அச்சமும் உண்டாயின. எவராகிலும் அவளை வஞ்சித்து அழைத்துக் கொண்டு போய்விட்டார்களோ அல்லது துக்கோஜிராவ் தேடிக்கொண்டு வந்து கண்டுபிடித்து அழைத்துப்போய் விட்டானோ அல்லது வேறு எவ்விதமான ஆபத்தில் அவள் அகப்பட்டுக் கொண்டாளோ என்று பலவாறு சிந்தித்து வருந்தித் திகைத்தவராய் சிறிது நேரம் மௌனமாக நின்றார். வேலைக்காரியைக் கேட்கலாமென்ற ஓர் எண்ணம் உண்டாக, அவர் உடனே விரைவாக வெளியிற் சென்று அடுத்த வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த வேலைக்காரியை அழைத்து தாம் வெளியிற் போயிருந்த காலத்தில் அந்த வீட்டிற்குள் எவராகிலும் வந்ததுண்டாவென்று கேட்டார்.

அத்தகைய விஷயங்களில் புருஷரைக் காட்டிலும் பெண்டீருக்குப் புத்திக்கூர்மை அதிகமாதலால், அவர் கேட்ட கேள்வியாலும், அவரது பதறிய தோற்றம் படபடத்த சொற்கள் முதலியவற்றாலும் அவர்கள் உண்மையில் மணந்த புருஷர் பெண்ஜாதி தானோ என்ற பெருத்த சந்தேகம் உதித்தது. ஆனால் அவள் ஒன்றையும் அறியாதவளைப்போல நடித்து "ஒருவரும் வரவில்லையே!" என்றாள்.

"உள்ளே இருந்த என்னுடைய ஸம்சாரம் எங்கே போனாள் உனக்குத் தெரியுமா?" என்றார் ஜெமீந்தார்.

"ஐயோ! எனக்குத் தெரியாதே! பாயி அம்மாள் இப்போது வீட்டில் இல்லையா? நன்றாய்த் தேடிப் பார்த்தீர்களா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் வேலைக்காரி.

அதற்கு மேல் அவளுடன் விவரமாக விஸ்தரித்துப் பேசுவதில் எவ்விதமான பயனுமில்லையென்று எண்ணிய வஸந்தராவ், "சரி; அவள் தன்னுடைய சொந்தக்காரர் வீட்டுக்குப் போயிருக்கலாம். நான் வெளியில் போய்விட்டு அரை நாழிகையில் வருகிறேன். அதற்குள் அவள் வந்தால், வீட்டை விட்டு எங்கும் போகாமல் இருக்கும்படி நான் சொன்னதாகத் தெரிவி" என்ற சொல்லிவிட்டு ஊருக்குள் நடந்தார்; அவள் எங்கே போயிருப்பாள், அவளுக்குத் தெரிந்தவர்கள் அந்த ஊரில் யாரிருக்கிறார்கள் என்று பலவாறு யோசனை செய்து வருந்திய வண்ணம் விசையாக நடந்து ஊரெல்லாம் அலைந்து கடைசியாகத் தமது சர்வாதிகாரியிடம் போனால் அவன், அதைப்பற்றி தக்க யோசனை ஏதாவது சொல்லுவானென்று நினைத்து அவனது வீட்டிற்கு வந்து, முன் கூறப்பட்டபடி கதவை இடித்தார். அவன் கதவைத் திறக்க, அவர் உள்ளே நழைந்து, "என்னை யாராவது தேடிக்கொண்டு இங்கே வந்தார்களா?" என்று திடீரென்று கேட்டார்.

அவரது பதறிய தோற்றத்தையும் தடுமாறிய மொழியையும் கண்டு வியப்படைந்த ஸகாராம்ராவ், "ஒருவரும் வரவில்லையே! வருவதாக யாராவது சொல்லியிருந்தார்களா?" என்றான்.

"ஆம்-இல்லை" என்று குழம்பிய மனத்தோடு வேறிடத்தில் தமது நினைவை வைத்துக் கொண்டே வஸந்தராவ் மறுமொழி கூறினார்.

கிழவன் சற்றுநேரம் அவரை உற்றுநோக்கி, ''எஜமானே! என்ன விசேஷம்? தங்கள் முகம் ஏதோ பெருத்த ஸஞ்சலத்தை காண்பிக்கிறதே! எவ்விதமான துன்பமாயிருந்தாலும் அதைத் தெரிவித்தால் என்னாற்கூடிய உதவி செய்யக் காத்திருக்கிறேன்'' என்றான்.

''ஸகாராம்! உண்மையை எப்படித் தெரிவிப்பேன்! என் மனம் படும்பாட்டை என்னவென்று சொல்லுவேன்! நான் அதிசீக்கிரத்தில் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்தோடு அழைத்து வந்த அருமையான ஒரு பெண்ணை இழந்து விட்டேன்'' என்று விசனத்தோடு கூறினார் ஜெமீந்தார்.

''அடடா! அப்படியா! எப்போது அப்படி நடந்தது?'' என்று வியப்போடும் விசனத்தோடும் கேட்டான் கிழவன்.

''இன்று விடியற்காலம் நாங்களிருவரும் இந்த ஊருக்கு வந்தோம். சத்திரத்தைச் சேர்ந்த ஒரு விடுதியில் அவளை வைத்து விட்டு நான் இரண்டு நாழிகை நேரம் வெளியிற்போயிருந்து வந்து பார்க்கிறேன்; அவள் காணப்படவில்லை'' என்றார் வஸந்தராவ்.

''ஒருவேளை தன்னுடைய சொந்தக்காரர்களிடத்துக்குத் திரும்பிப் போயிருப்பாளோ?'' என்றான் கிழவன்.

வஸ : அங்கே போயிருக்க மாட்டாள்.

ஸகா : அவள் எனக்குத் தெரியாதவளோ?

வஸ : அவள்தான் மல்லிகா!

ஸகா : மல்லிகாவா! என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

வஸ : ஆம்! துக்கோஜிராவோடு நம்முடைய பங்களாவுக்கு வந்தாளே அவளைத் தெரியாதா? பரசுராம பாவாவின் இளைய மனைவியுடைய படத்தைப்போல இருந்தாளே அந்தப் பெண்.

ஸகா : ஓகோ! அவளா! அவளை எனக்கு நன்றாய்த் தெரியுமே! தங்களோடு வந்தவள் எங்கே போயிருப்பாள்? அதிசயமாக இருக்கிறதே! இருக்கட்டும்; நான் இப்போதே அவளைத் தேடிக் கண்டு பிடிக்கிறேன்.

வஸ : அவளைக் கண்டுபிடிப்பவருக்கு ஆயிரம் ரூபாய் சன்மானம் தருகிறேன். நீர் எப்படியாவது எனக்கு இந்த உதவி செய்ய வேண்டும்.

ஸகா : அவள் எங்கிருந்தாலும் கண்டுபிடிக்கக் கூடிய சாமர்த்தியமுள்ள மனிதன் ஒருவனிருக்கிறான். நீங்கள் பணம் கொடுக்க வேண்டாம்! அவன் கண்டுபிடித்தால், நானே அவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன்.

வஸ : அவன் எங்கே இருக்கிறான்? அவனிடம் நானும் வருகிறேனே?

ஸகா : நீங்கள் அவனிடம் வருவது நன்றாக இராது. நானே போகிறேன் – என்று எழுந்தான்.

''சரி அப்படியானால் நானும் ஒரு பக்கமாக தேடிக்கொண்டு போகிறேன். நீரும் அந்த மனிதனுமாக அவளைக் கண்டுபிடியுங்கள்; நான் போகிறேன். இதோ இந்தப் பையில் ரூபா 100 இருக்கிறது. இதை ஏதாவது அவசரச் செலவுக்கு வைத்துக் கொள்ளும்'' என்று சொல்லி பணப்பையைக் கொடுத்துவிட்டு வெளியில் போய் விட்டார் வஸந்தராவ்.

கிழவன் தனது வீட்டின் கதவை மறுபடியும் சாத்தித் தாளிட்டுக்கொண்டு, ''பீமா! பீமா!'' என்று கூப்பிட்டான். பீமன் புன்சிரிப்போடு அவனிடம் தோன்றி, ''அவர் சொன்னதை யெல்லாம் நானும் கேட்டேன்'' என்றான்.

''என்ன ஆச்சரியம்! இவரோடு வந்தவள் எங்கே போயிருப் பாள்? வஸந்தராயரும் சரியான ஆசாமிதான். பரசுராம பாவா வைப்போல இவரும் ஸ்திரீலோலராயிருக்கிறாரே! இவர் அவருக்குச் சரியான வார்சுதான். ஆனால் அந்தப் பெண் இவரை ஒரு க்ஷணத்தில் ஏமாற்றி விட்டாளே!'' என்று கிழவன் அதிசயித்துக் கூறினான்.

''நீர் நினைக்கிறபடி ஜெமீந்தார் அவ்வளவு முட்டாளல்ல; சாமர்த்தியசாலிதான்'' என்றான் பீமன்.

ஸகா : எப்படி சாமர்த்தியசாலி?

பீம : உமக்கு இதையறிந்துகொள்ளக் கூடிய புத்திக்கூர்மை யில்லையே! நம்மால் கண்டுபிடிக்க முடியாத ஒரு பெருத்த ரகஸியத்தை ஜெமீந்தார் கண்டுபிடித்து விட்டாரே.

ஸகா : என்ன ரகஸியம்?

பீம : பரசுராம பாவாவின் இரண்டு கோடி ரூபாய் பெறும் படியான சொத்துகளுக்கு யார் வார்சுதாரி என்பதை அவர் நமக்கு முன்னால் கண்டுபிடித்துவிட்டார்.

ஸகா : அது யார்?

பீம : அவள்தான் மல்லிகா.

ஸகா : அப்படியா நினைக்கிறாய்?

பீம : அதுவே நிச்சயம்! ஸந்தேகமே இல்லை. இவருடைய குரல் பாவனை முதலியவற்றிலிருந்து இதை நான் யூகித்துக் கொண்டேன். பரசுராம பாவா கடைசியாக எழுதிய சாஸனத் தையும் இவர் எடுத்திருக்கிறார்.

ஸகா : நீ சொல்வது அதிசயமாகவே இருக்கிறதே!

பீம : இல்லை இல்லை; நான் சொல்வதே உறுதி. அவரிடம் சாஸனம் அகப்பட்டு விட்டது. இந்தப் பெண்ணே அதற்கு வார்சு தாரி என்பதையும் அவர் கண்டுபிடித்திருக்கிறார். அவர் புத்தி வானாதலால் படத்துக்கும் அவளுக்குமுள்ள ஒற்றுமையிலிருந்து, மர்மத்தைக் கண்டுகொண்டார். தமது வசத்தில் வந்த ஐசுவரி யத்தைத் திருப்பிக் கொடுக்காமல் தாமே வைத்துக் கொள்வதற்கு இதுவே சரியான வழியென்று யோசனை செய்து, அவளைக் கலியாணம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டார். அவளை ரகஸியமாக அழைத்துக்கொண்டு ஓடி வந்தார். எண்ணம் முடிவடையும் சமயத்தில் ஏதோ இடைஞ்சல் வந்துவிட்டது – என்று கூறி ஏளனமாக நகைத்தான்.

ஸகா : சரி! அதெல்லாம் இருக்கட்டும்! நாம் இப்போது என்ன செய்யலாம்? ஒரு யோசனை சொல் பார்ப்போம்.

பீம : அந்தப் பெண்ணை எப்படியாவது கண்டுபிடித்து அழைத்துக்கொண்டு வந்து அவளை நான் கலியாணம்செய்து கொண்டால், நம்முடைய எண்ணம் பலித்துப் போகும். வேறு யோசனை என்ன?

ஸகா : நீ அவளைக் கலியாணம் செய்து கொள்ளுகிறதா? உனக்குப் பைத்தியமோ?

பீம : பைத்தியமென்ன? அவள் இந்த ரகஸியத்தை அறிந் திருக்க மாட்டாள். அவளை நான் எப்படியாவது கண்டுபிடித்து

இங்கே கொண்டு வந்து சந்தோஷப்படுத்திக் கலியாணம் செய்து கொள்ளுகிறேன். இரண்டு கோடி பணமும், அழகான ஒரு பெண்ணும் ஒன்றாய் அகப்பட்டால் அது புளிக்குமோ? ஆனால் நீர் ஒரு காரியம் செய்ய வேண்டும். வஸந்தராயரைத் தேற்றிச் சமாதானப்படுத்தி, ''தேடுகிறேன்'' ''தேடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே வாரும். அதற்குள் நான் காரியத்தை முடித்து விடுகிறேன். தவிர, எனக்குச் செலவுக்குப் பணம் கொஞ்சம் வேண்டும்.

ஸகா : நீ சொல்வது நல்ல யோசனைதான். அப்படியே செய்வோம். இதோ ரூ.100/- இருக்கிறது. இதைக் கையில் வைத்துக் கொள். இன்னும் தேவையானாலும் பணம் நான் தருகிறேன். உன் விருப்பம்போலச் செய். ஆனால் காரியமானவுடன் என்னை மறந்து விடாதே – என்றான்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட பீமராவ், கிழவனை ஏமாற்றுவதில்லையென்று உறுதி சொல்லிவிட்டு எழுந்து வெளியிற் சென்றான்.

11–வது அதிகாரம்

கிழவனும் கூத்தியும்

வம்புலாஞ்சோலையில் பீமராவைச் சந்தித்த பிறகு தனது சால்வையால் தன்னை நன்றாக மூடிக்கொண்டு நடந்த மல்லிகா அன்று பகல் முழுவதும் தண்ணீரும் அருந்தாமல் ஆகாரமென் பதையே முற்றிலும் மறந்தவளாய்ப் பைத்தியங் கொண்டவளைப் போல அங்குமிங்கும் அலைந்து திரிந்தாள். அவள் சென்றவிட மெல்லாம் வஸந்தராவின் வடிவத்தையன்றி வேறெதையும் காணாதவளாய் தான் இனி என்ன செய்வதென்பதையறி யாதவளாய்த் தடுமாறி அலைந்தாள். பொழுதேற ஏற, மாந்தளிர் போன்ற அவளது மெல்லிய மேனி தளர்வடைந்தது, கால்களும் சோர்ந்து நோகவாரம்பித்தன. அப்போதைக்கப்போது ஆங்காங்கு காணப்பட்ட மரங்களின் நிழலில் அவள் சிறிது உட்கார்ந்து கொள்வாள்; ஆனால் சிறிது நேரத்திற்கு மேல் உட்கார்ந்திருக்க ஸகியாதவளாய் சடக்கென்று எழுந்து மேலும் நடப்பாள். அங்ஙனம் அன்று மாலை ஆறரை மணி நேரம் வரையில் ஓய்வின்றியும் உணர்வின்றியும் நடந்து நடந்து மெய்யும் மனமும் புண்பட வாடித் துவண்டு வருந்தினாள். சோகமும் களைப்பும் தோன்றி மேலிட்டன. கண்கள் இருண்டன. மேலும் ஓர் அடி எடுத்து வைக்கும் வல்லமையற்ற நிலைமையில் அவள் ஆற்றின் படித்துறைக்கு வந்து சேர்ந்தாள்.

ஆறு நிறைய தெளிந்த பிரவாகம் சென்று கொண்டிருந்தது. மாலை வெயிலின் சென்னிறமும், படித்துறையின் தோற்றமும், ஆற்றின் இருபுறங்களிலுமிருந்த தென்னை, கமுகு, வாழை முதலிய தருக்களின் காட்சியும், தெளிந்த நீரின் சலசலவென்ற போக்கும் மிக்க இரமணீயமாக இருந்தமையால், அவை காண்போர் மனத்தையும் கண்களையும் கவர்ந்தன. மலர்களி னின்று ஒழுகிய தேனைப் பருகிய வண்ணம் கோடானுகோடி வண்டுகள் ரீங்காரம் செய்து வம்புலாஞ்சோலையென்னும்

பெயரைக் காரணப் பெயராக்கிக் கொண்டிருந்தன. மல்லிகா அந்தப் பிரம்மாநந்தமான காட்சியில் ஈடுபட்டு மெய்ம்மறந் தவளாய் படித்துறையின் ஆளோடியில் நடந்து கடைசியில் போய் நின்று தண்ணீரை நோக்கினாள். வெயிலாலும், பசியாலும், தாகத்தாலும், துக்கத்தாலும் கரைகடந்த துன்பத்தாலும் தீய்ந்து பற்றிய அவளது உடம்பில், குளிர்காற்று தாக்கியது நிரம்பவும் ஆறுதலாயிருந்தமையால் அவள் தனது சால்வையை உடம்பி லிருந்து எடுத்துச் சுருட்டிக் கையில் வைத்துக்கொண்டு நின்ற வண்ணம் கீழே குனிந்து ஜலத்தைப் பார்த்தாள். அதற்குமுன் தனது மனதிற்கு இன்பமூட்டிய பொருட்கள் யாவும் அப்போது பயனற்றவையாய்த் தனக்குக் காணப்பட்டதையும், உலகமே ஒன்றுமற்ற பாழாய்த் தோன்றியதையும் கண்டு அவள் வியப் படைந்து அவ்விதமே ஆளோடியின் கடைசியில் உட்கார்ந்து கொண்டு தனது இரண்டு கால்களையும் தண்ணீரில் தொங்க விட்டாள். அவ்விடத்தில் தண்ணீர் அவளுக்கு நிரம்பவும் சமீபத்திலிருந்ததாயினும் தரையிலிருந்து மூன்று நான்கு ஆள் உயரத்திற்கு ஜலமிருந்தமையால், அங்கு தவறி விழுந்த மனிதர் பிழைப்பது கடினம். அவ்விடத்தில் தண்ணீர், சுழல்களுடன் மிக்க வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

அந்த நிலைமையில் மல்லிகா இருந்தபோது, ஜனங்களுக்கு எவ்விதமான விபத்தும் நேராமல் தடுக்கும்பொருட்டு அங்கு நியமிக்கப்பட்டிருந்த போலீஸ் சேவகனொருவன், எங்கேயோ போயிருந்து அங்கு திடீரென்று தோன்றி ''யார் அம்மா அது? தண்ணீர் ஓரத்தில் உட்காராதே; வா இப்படி'' என்ற அதட்டிக் கூறினான். இடியோசையைப்போல திடீரென்றுண்டான அந்த அதட்டலைக் கேட்ட மல்லிகாவின் தேகம் திடுக்கிட்டு நடுங் கியது. அந்த நடுக்கத்தில், அவளது கையிலிருந்த சால்வை தவறித் தண்ணீரில் விழுந்து விட்டது. அவள் அதைக் கவனியாமல் பின்புறம் திரும்பிப் பார்த்தாள். ஆற்றின் ஓரத்தில் தான் இருப்பது பற்றி போலீஸ் வீரன் கோபித்துக் கொள்கிறான் என்பதை அறிந்து கொண்டு அவள் அவ்விடத்தை விட்டு எழுந்து வந்து படித் துறையின் வழியாக நடந்தாள். அவளது சால்வை தண்ணீரில் போனதைக் கண்ட போலீஸ் ஜெவான் அதை எடுக்கும்பொருட்டு கிழக்கு முகமாக ஓடினான்.

அப்போது அஸ்தமான சமயம் ஆகிவிட்டது. மல்லிகா தனது சால்வை போனதை நினைத்துச் சிறிதும் வருந்தாமல், கிழக்கு முகமாக நடந்து சிறிது தூரம் சென்றாள். அங்கு ஆற்றின் குறுக்கில் ஒரு பாலமும் ராஜபாட்டையுமிருந்தன. அந்தப் பாட்டை தஞ்சையிலிருந்து, ஆற்றின் வடபுறமிருந்த **கருத்தட்டாங்** குடியென்னும் ஊருக்குப் போகும் வழி. அந்த வழியை மல்லிகா அடைந்து பாலத்தைக் கடந்து கருத்தட்டாங்குடிக்குள் வந்தாள். அப்போது இரவு ஏழு மணிக்கு மேலாகிவிட்டதாகையால் எங்கும் இருள் சூழந்திருந்தது; கடைகளின் வெளிச்சத்தினாலும், ஆங்காங்கு காணப்பட்ட சர்க்கார் விளக்குகளின் ஒளியினாலும் பாதையையறிந்தவளாய் அவள் மேன்மேலும் நடந்து ஏதோ ஒரு தெருவிற்குள் வந்து சேர்ந்தாள். அப்போது இரவில் நெடு நேர மாகாதிருந்ததாயினும் வானத்தில் கருமேகம் அடர்ந்திருந் தமையால் அப்போது இரவு பத்து மணி சமயத்தைப் போல விருந்தது. அநேகமாய் எல்லா விடுகளிலும் ஜனங்கள் வாசற்கதவு களை மூடிக்கொண்டு உள்ளே போய்விட்டனர். இரண்டொரு வீடுகளில் மாத்திரமே ஜன்னல்களின் வழியாக வெளிச்சம் வெளியில் தெரிந்தது. களைத்துத் தளர்ந்து சோர்வடைந்திருந்த மல்லிகா அதற்கு மேல் நடக்க வலுவற்றவளாய் உட்கார எண்ணங்கொண்டு ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தாள். அதன் வாசற்கதவு முக்காற்பாகம் சாத்தி வைக்கப்பட்டிருந்தது. உட்புறமிருந்து கூடத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்த வெளிச்சம் ஜன்னலின் வழியாக நன்றாய்த் தெரிந்தது. மல்லிகா அதன் வழியாக உட்புறத்தை நோக்கினாள். அங்கே தோன்றின பயங் கரமான காட்சியைக் கண்டு அவள் அஞ்சி நடுங்கித் தனது சிரத்தைப் பின்வாங்கினாள். கூடத்தில் விகார ரூபத்தோடு அமைக்கப்பட்ட பல முகங்கள் சுவரில் ஆணிகளில் வரிசையாக மாட்டப்பட்டிருந்தன. அந்த முகங்கள் இராக்ஷஸ ரூபங்களாயும், முற்றிலும் பயங்கரமாயும், விரூபமாயும், கோர தந்தங்களைக் கொண்டவையாயும், நீண்ட நாவையும் சிறிய விழிகளையும் முறத்தைப் போன்ற செவிகளையும் உடையனவாயும் தோன்றி குலையை நடுக்குவித்தன. அவற்றைக் கண்ட மல்லிகா திகைத்து நடுங்கினாள். முன்னமே தளர்ந்து தள்ளாடிய நிலைமை யில் இருந்தவள் ஆதலால் அவள் அந்த விகாரமான காட்சியைக் கண்டு சகிக்க மாட்டாதவளாய் அப்படியே மூர்ச்சித்துத் திண்ணை

யில் விழுந்தாள். அதன் பிறகு நடந்ததொன்றையும் அவள் அறியவில்லை.

பிறகு அவள் மூர்ச்சை தெளியப் பெற்று விழித்துக் கொண்ட போது அந்த வீட்டிற்குள் ஒரு விசிப்பலகையின் மேல் தான் படுத்திருந்ததையும், ஓர் அழகிய யௌவன ஸ்திரீயும், 40, 45 வயதான ஒரு மனிதனும் தன்னைக் தெளிவிக்கும் பொருட்டு தனக்கு பற்பல உபசரணைகள் புரிந்ததையுங் கண்டாள். அந்தப் புருஷன், ''அம்மா! கிருஷ்ணவேணி! ஜலப்பாத்திரத்தை வாயில் வை. கொஞ்சம் தண்ணீர் குடிப்பாளானால் உடனே மயக்கம் தெளிந்து போம்'' என்றான்.

அவள் அவ்வாறே செய்துவிட்டு மல்லிகாவைப் பார்த்து, ''ஏனம்மா! இப்போது உடம்பு எப்படி இருக்கிறது? குணமாயி ருக்கிறதா?'' என்றாள்.

மல்லிகா மருண்டு மருண்டு விழித்து நான்கு திக்குகளையும் அவர்களையும் நோக்கி, ''நான் எங்கே இருக்கிறேன்? உயிரோ டிருக்கிறேனா?'' என்றாள்.

அவளிடத்தில் நிரம்பவும் இரக்கத்தைக் காண்பித்தவண்ணம் கிருஷ்ணவேணி, ''இல்லை இல்லை. நீ களைப்பினால் மூர்ச்சித்தி ருந்தாய். இப்போது கொஞ்சம் தெளிவடைந்து விட்டாய். நாங்கள் உன்னுடைய நண்பர்களே; பயப்பட வேண்டாம்'' என்று சொல்லி அவளை எடுத்துத் தனது மார்பில் சார்த்திக் கொண்டாள். அதுகாறும் பார்த்தறியாத அன்னியர்கள் அவ்வளவு அன்பாக தனக்கு உபசரணைகள் புரிந்ததைக் கண்ட மல்லிகா அடக்கவொணா நன்றியறிதலைத் தனது கண்ணீர்ப் பெருக்கால் வெளியிட்டாள்.

அவ்வாறு கால்நாழிகை நேரம் கழிந்தபிறகு, மல்லிகா தனது சுயநிலைமையை அடைந்தாள். தான் பவானியம்மாள்புரத்தில் எவ்வித மாறுபாடுமில்லாமல் ஒரேவிதமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த நாட்களையும், அப்போதிருந்த தனது மாறுபட்ட நிலைமையையும், தானடைந்த துன்பங்களையும் நினைத்தாள். ஒரு நாளும் கண்டறியாத பிற மனிதருக்கிடையில் தான் தற்செயலாக வர நேர்ந்ததையெண்ணி வெட்கினாள். அவளது முகவாட்டத்தைக் கண்ட கிருஷ்ணவேணி, ''அம்மா! இங்கே வந்ததைப் பற்றி நீ ஏதோ மனோவேதனைப் படுகிற

தாகத் தோன்றுகிறது. கவலைப்படாதே; நாங்கள் அன்னியர்கள் என்று நினைக்காதே; நீயும் என்னைப்போல ஒரு ஸ்திரீயல்லவா. உனக்கு வந்த துன்பம் எனக்கு வந்ததல்லவா. நீ இனிமேல் எங்கும் போக வேண்டாம்; எங்களுடனேயே இருந்து விடு'' என்று அன்பொழுகக் கூறினாள். அதைக்கேட்ட மல்லிகா நன்றியறிவின் பெருக்கும் இன்பமும் அடைந்தவளாய், ''அம்மா! இவ்வளவு அன்புக்கு நான் எப்படி அருகமானேன்? இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்! இந்த உலகில் எனக்கு உற்றோர் பெற்றோர் ஒருவருமில்லை. அநாதையான என்னை இவ்வளவு அன்போடு யார் உபசரிக்கப் போகிறார்கள்!'' என்று வாய குழற உரை தடுமாற உருக்கமாகக் கூற, அப்போது அவளது கண்களினின்று கண்ணீர் தாரைதாரையாகப் பெருகி வழிந்தது. அதைக் கண்டு சகியாத கிருஷ்ணவேணி அவளை அன்போடு அணைத்துக்கொண்டு மல்லிகா ஏதோ பல விசனங்களால் புண்படும் மனத்துடன் இருப்பதாக அறிந்து அவளை மேலும் பல பல கேள்விகளால் வருத்துவது பாவமென்று நினைத்து தன்னைப் பற்றிய வரலாற்றைத் தெரிவிக்கத் தொடங்கினாள். ''அம்மா! நீ இனி கவலையென்பதையே விட்டுவிடு; உனக்கு யாதொரு குறைவுமில்லாமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். எங்களுக்கு ஏராளமான ஐசுவரியமில்லாவிட்டாலும், நானும் அதோ நிற்கும் என் பிதாவும் சம்பாதிக்கும் பொருள் நாங்களும் இன்னும் பலரும் நிரம்பவும் சௌக்கியமாகக் காலம் கழிக்க போதுமானதாக இருக்கிறது. ஆகையால், நீயும் இருப்பதைப் பற்றி எங்களுக்குச் சந்தோஷமேயொழிய அதைப்பற்றி சிறிதும் கவலையே இல்லை. இறந்து போன நமது ராஜாவின் பட்ட மகிஷிகளான பாயிஸாகேப்புகள், பூனா தேசத்திலிருந்து எங்களை வருவித்து தங்கள் அரண்மனைக்குள் நாடகம் (Drama) நடத்தும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சென்ற ஆறுமாச காலமாக நாடகங்கள் நடைபெற்று வருகின்றன. அதில் என் தகப்பனார் சித்திர வேலை செய்கிறவர். படுதாக்கள், பதுமைகள், வேஷங்களுக்கு வேண்டிய முகங்கள் முதலியவற்றைச் செய் வதில் இவர் நிரம்பவும் கைதேர்ந்தவர். அங்கே நடிப்பவர்களுள் நானும் ஒருத்தி'' என்றாள். அவளது கடைசி வாக்கியத்தைக் கேட்ட மல்லிகா திடுக்கிட்டாள். தான் ஒரு தாசியின் வீட்டிற்கு வந்து சேர நேர்ந்ததை நினைத்து மல்லிகா வருந்தினாள்.

அவளது அழகிய முகம் மாறியது; தேகம் சோர்வடைந்தது. அந்தக் குறிப்பையறிந்த கிருஷ்ணவேணி, ''அம்மா! ஏன் உன் முகம் இப்படி மாறுபட்டது? நான் நாடகம் ஆடுகிறவள் என்று சொன்னவுடன் ஏதோ ஒருவித வித்தியாசத்தைக் காட்டுகிறாயே? கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக நாடகம் ஆடும் கூத்தாடிக ளென்று எங்களை எண்ண வேண்டாம். நாங்கள் மகாராஷ்டிர வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இந்த நாடகத்தில் சேர்ந்திருப்பவர்கள் எல்லாரும் இல்லறம் நடத்தும் குலஸ்திரீகளேயன்றி விபசாரி களல்ல. அரண்மனையிலுள்ள பாயிசாகேப்புகள் புருஷர்கள் நடனர்களாக நடிப்பதைப் பார்க்கக் கூடாதென்று எங்களை தயாரித்திருக்கிறார்கள். தவிர, நாடகம் பார்ப்பதற்கு அரண் மனையின் சிப்பந்திகள், பாயிஸாகேப்புகள், அவர்களுடைய பந்துகளான முக்கியமான சில பெரிய மனிதர்கள் ஆகிய இவர்களைத் தவிர பொது ஜனங்கள் எவரும் வரக்கூடாது. நாடகம் அரண்மனையின் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகையில் நடக்கிறது. ஊருக்குள் பொதுவான இடத்தில் நடப்பதல்ல'' என்றாள். அதைக்கேட்ட மல்லிகா ஒருவாறு திருப்தியடைந்தவளாய், ''அம்மா! நான் வித்தியாசமாக நினைத் ததைப் பற்றி மன்னிக்க வேண்டும்!'' என்று நிரம்பவும் பணிவாக நயந்து வேண்டினாள். உடனே கிருஷ்ணவேணி, ''அதிருக் கட்டும்; உன்னுடைய பெயரென்ன?'' என்றாள். மல்லிகா உடனே தனது பெயரைத் தெரிவிக்க, கிருஷ்ணவேணி, ''நிரம்பவும் சரியான பெயர்தான்; அந்தப் பெயர் உனக்கு நன்றாகப் பொருந் துகிறது. என்னுடைய பெயரையறிய நீ விரும்புகிறதாக உன் முகம் காட்டுகிறது. என்னுடைய பெயர் கிருஷ்ணவேணிபாயி'' என்றாள்.

அந்தச் சமயத்தில் அவளது தந்தை, ''குழந்தாய்! நாழிகை யாகிறது! மல்லிகா களைத்துப் போயிருக்கிறாள். சீக்கிரம் போஜ னத்துக்கு அழைத்துக்கொண்டு போ!'' என்றான். அதைக் கேட்ட கிருஷ்ணவேணி அவளை அன்போடு உள்ளே அழைத்துக் கொண்டு போய் மாதுரியமான போஜனம் பரிமாறி உண்பித்து, அன்றிரவு சுகமான சயனத்தில் படுத்துக் கொள்ளச் செய்து, தானும் படுத்துத் துயின்றாள்.

12–வது அதிகாரம்

இந்திரசபா

மல்லிகா அன்றிரவு நெடும்நேரம் வரையில் நித்திரையின்றி விழித்துக் கொண்டிருந்தாள். அவளது தேகம் விவரிக்க இயலா வகையில் களைப்படைந்து தளர்வெய்தி இருந்ததாயினும், கிருஷ்ண வேணி அவளுக்குச் செய்த அன்புமயமான சைத்யோபசாரங்கள் மனதிற்கு எவ்வளவோ ஆறுதலுண்டாக்கக் கூடியனவாயிருந்தும், அங்கு கிடைத்த சௌகரியமான போஜனம், சயனம் முதலியவை அவளது தேகத்திற்கு எவ்வளவோ இன்பகரமானதாயிருந்தும், அவள் தனது பரிதாபகரமான ஆதரவற்ற நிலைமையையும், தனது எண்ணங்களெல்லாம் ஒரு நொடியில் மண்ணாய்ப்போகத் தனக்கு ஏற்பட்ட மாறுபாட்டையும் நினைத்து நினைத்து துயரக் கடலில் ஆழ்ந்திருந்தமையால், பலவகைப்பட்ட மனவெழுச்சி யால் நெடுநேரம் சென்றது; கடைசியில் அவளது கண்ணிமைகள் சோர்வினால் தாமே இறுக மூடிக் கொள்ளத் தொடங்கின. சில நிமிஷங்களில் துயிலும் தோன்றி அவளை மேற்கொண்டது. அன்றிரவு முழுவதும் கனவு முதலிய எத்தகைய சலனமுமில் லாமல் அவள் கடுந்துயிலில் ஆழ்ந்தாள்.

மறுநாட் காலையில் அவள் விழித்துக் கொண்டபோது சூரியன் நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, மல்லிகா பெரிதும் வெட்கமடைந்தாள். பிறர் தன்னைக் கண்டு ஏளனம் செய்வார்களோவென்ற அச்சங் கொண்டவளாய் அவள் எழுந்திருக்க முயன்றாள். தேகத்தில் நோவும் சோர்வும் நிறைந்திருந்தமையால், அவள் தனது நினைவின் படி தேகத்தை அசைக்கக் கூடவில்லை என்றாலும், கடுமுயற்சி செய்து விரைந்து எழுந்து தனது உடைகளைச் சீர்திருத்திக் கொண்டாள். இனி தான் எவ்விடத்திற்குப் போவது, என்ன தொழிற் செய்வது என்னும் எண்ணங்கள் அவளது மனதில் உதித்தன. உலக அநுபவமறியாத அநாதையான அந்த யௌவன மங்கை அவ்விஷயங்களைப்பற்றி

என்னவிதமான தீர்மானத்தைச் செய்யக் கூடும்? அவள் ஒன்றை யுமறியாது சஞ்சலமடைந்திருந்த சமயத்தில், கிருஷ்ணவேணி புன்னகை தவழ்ந்த முகத்தோடு அவளிடம் வந்து, ''அம்மா மல்லிகா! நீ நிரம்பவும் அலுத்திருந்தாயே! இதற்குள், அவசரப் பட்டு ஏன் எழுந்தாய்? இன்னம் கொஞ்ச நேரம் படுத்திருந்தால் உடம்பு சரியான நிலைமைக்கு வந்துவிடுமே?'' என்றாள். மல்லிகா, ''அப்படியொன்றுமில்லை. உடம்பு சரியாய்த்தானிருக் கிறது. பொழுது விடிந்து நிரம்ப நேமாகி விட்டதாகையால், படுக்கையில் இருக்கப் பிடிக்கவில்லை. எழுந்துவிட்டேன்'' என்றாள்.

''அப்படியானால் சரி; வா! முகத்தை சுத்தி செய்து கொள். காபி, சிற்றுண்டி முதலியவை தயாராக இருக்கின்றன. கொஞ்சம் சாப்பிடலாம்'' என்று சொல்லி, மல்லிகாவை அழைத்துக் கொண்டு போய் அவளுக்கு உபசரணை செய்து, அவளை உண்பித்த பிறகு, அவர்கள் இருவரும் கூடத்திற்கு வந்தார்கள். அவ்விடத்தில் அடுத்த நாடகத்திற்குத் தேவையான ஊர்வசி முதலியோரின் இறகுகள் தயாரித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றிற்கு வர்ணம் வைத்துக் கொண்டிருந்த கிருஷ்ண வேணியின் தகப்பன், அவர்களைக் கண்டவுடன், ''அம்மா மல்லிகா! உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று அன்பாக விசாரிக்க, அவள் சிறிது நாணத்தோடு, ''சரியாகவே இருக்கிறது. இவ்வளவு அன்பான மனிதர்களிடத்தில் என்னைக் கொண்டு வந்து விட்டது அந்தக் கடவுளேயன்றி வேறில்லை'' என்றாள். அப்போது கிருஷ்ணவேணி அங்கே கிடந்த இறகுகளில் ஒன்றை எடுத்து அதற்கு வர்ணம் பூச ஆரம்பித்தாள். அவள் அதை முடிக்கும் வரையில் அதைக் கவனமாக பார்த்துக் கொண்டிருந்த மல்லிகா, தானும் அவர்களுக்கு உதவி செய்வதாகத் தெரிவித் தாள். கிருஷ்ணவேணி அவளுக்கு அநுபோகம் போதாதென்றும், வர்ணங்களைக் கைகளிலும், உடைகளிலும் பூசிக்கொள்வா ளென்றும், ஆகையால் அந்த வேலை செய்ய வேண்டாமென்றும் மறுத்துக் கூறினாள். என்றாலும், மல்லிகா தானும் முயன்று பார்ப்பதாகச் சொல்லி, ஓர் இறகை எடுத்து வைத்துக்கொண்டு வர்ணம் பூச ஆரம்பித்தாள். அவள் அந்த வேலை செய்ய அன்றே ஆரம்பித்தாளாயினும், பல வருஷங்கள் பழகினவளைப்போல

மிகுந்த திறமையாகவும், வர்ணங்களைச் சேதம் செய்யாமலும், கை, உடைகள் முதலியவற்றில் அற்ப மாசும் ஏற்படாமலும், அந்த வேலையைச் செய்து முடித்தாள். அதைக் கண்ட கிருஷ்ண வேணியும் அவளது தகப்பனும் பெரிதும் வியப்படைந்தனர். கிருஷ்ணவேணி, ''நாம் தலைமுறை தலைமுறையாக இந்தத் தொழிலைச் செய்கிறோம். இவள் கண்ணால் பார்த்தவுடனே கையால் செய்து விட்டாளே! இவளல்லவா புத்திசாலி!'' என்று வியந்து கூற, அவளது தகப்பன், ''ஆம்; இவள் மிகவும் சீக்கிரத் தில் இந்த வேலையில் சாமர்த்தியசாலியாகிவிடுவாள்; சந்தேக மில்லை'' என்று கூற, அவ்வாறு கொண்டாடப்பட்ட மல்லிகா, வெட்கமடைந்தவளாய், ''நான் செய்வது நன்றாக இல்லை யென்று பரிகாசம் செய்கிறீர்கள் போலிருக்கிறது?'' என்றாள். ''இல்லை இல்லை; நாங்கள் உண்மையாகவே பேசுகிறோம்'' என்றான் அந்த மனிதன். அவ்விதம் சம்பாஷணை நடந்த சமயத்தில் கிருஷ்ணவேணி எதையோ நினைத்துக் கொண்ட வளைப்போல திடுக்கிட்டெழுந்து, ''அப்பா! நான் சுத்தமாக மறந்து விட்டேன். இன்று காலையில் நாடகத்தை ஒத்திகை பார்க்க வேண்டுமென்பது ஏற்பாடு. நான் போக வேண்டும். போய்விட்டு அதிசீக்கிரம் வந்து விடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே தனது வெள்ளைத் துப்பட்டியை எடுத்து சிரம் முதல் கால்வரையில் தன்னை மூடிக்கொண்டவளாய் மல்லி காவைப் பார்த்து, ''மல்லிகா! நீயும் வருகிறாயா? அவ்விடத்தில் வேடிக்கை பார்த்துவிட்டு சீக்கிரமாக வந்து விடலாம்'' என்றாள். மல்லிகா தெருவிலும், ஜனங்களுக்கு மத்தியிலும் போக வேண்டுமேயென்னும் எண்ணத்தினால் சிறிது பின்வாங்கி னாளேனும், கிருஷ்ணவேணியின் விருப்பத்திற்கு விடை தர எண்ணாதவளாய், வருகிறேனென்று தலையை அசைத்தாள். அவள் அரை மனதோடு ஒப்புக் கொண்டதைக் கண்ட கிருஷ்ண வேணி, ''உனக்கு மனமில்லாவிட்டால் வர வேண்டாம். நீ வந்தால் அது எனக்கு துணையாயிருக்கும். வேடிக்கையாகப் போய்விட்டு வரலாமே என்று சொன்னேன்; வேறொன்று மில்லை. நீ இங்கேயே சுகமாக இரு. நான் போய்விட்டு அதி சீக்கிரத்தில் வந்து விடுகிறேன்'' என்று கூறியவண்ணம் புறப் பட்டாள். உடனே மல்லிகா, ''இரு இரு; இதோ நானும் வருகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து, தனக்கு

அவள் முதல் நாளிரவில் கொடுத்த துப்பட்டியை எடுத்துத் தனது தேகத்தை நன்றாக மூடிக்கொண்டு புறப்பட, இருவரும் வெளியில் வந்தார்கள்.

அவ்வாறு நடந்து அரைநாழிகையில் அவர்கள் தஞ்சை வடக்கு வீதியிலிருந்து ஒரு பெருத்த மாளிகையின் வாசலையடைந்தனர். கிருஷ்ணவேணி, "இந்த மாளிகை அரண்மனையைச் சேர்ந்தது. இதற்குள்ளேதான் ஒத்திகை நடப்பது வழக்கம். மற்றவர்களும் வந்திருப்பார்கள். வா உள்ளே போகலாம்" என்று சொல்ல, அவள் முன்னும் மல்லிகா பின்னுமாக இருவரும் உள்ளே நழைந்தனர்; அநேக வாசல்கள் தாழ்வாரங்கள் கூடங்கள் முதலிய வற்றைக் கடந்து கடைசியாக ஒரு பெருத்த மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். அந்த இடம் நாடகக் கொட்டகையைப் போலவே படுதாக்கள் முதலியவற்றால் நன்றாக அலங்கரிக்கப் பெற்றி ருந்தது. அங்கு பல யௌவன ஸ்திரீகளும் வயதான சில புருஷ ரும் மூலைக்குச் சிலராக நின்று குதூகலமாய்ப் பேசி நகைத்துக் கொண்டிருந்தனர். அதைக் கண்ட கிருஷ்ணவேணி தமது உபாத்தியாயர் (சூத்திரதார்) இன்னமும் வரவில்லையென்று ஊகித்துக் கொண்டவளாய் மல்லிகாவைப் பார்த்து, "அதோ உயரமாக நிற்கிறாளே, அவளுடைய பெயர் தமயந்திபாயி; அவள்தான் முக்கியமான ஸ்திரீ வேஷம் போட்டுக் கொள்பவள். இப்போது நாங்கள் இந்திர சபா என்னும் நாடகத்தை தயார் செய்து கொண்டிருக்கிறோம். அதில் அவள்தான் ஊர்வசியாக நடிக்கப் போகிறாள். அவளைப்போல எவரும் நடிக்க முடியா தென்பது ஜனங்களின் அபிப்ராயம். அதோ அநேக தடித்த தேகத்துடன் நிற்கிறாளே, அவள்தான் சந்தனு மகாராஜனாய் நடிக்கப் போகிறாள்" என்று சொல்லிக்கொண்டே அவர்களுக் கருகில், மல்லிகாவுடன் நெருங்கினாள். அங்கிருந்தோர் அனை வரும், புதிதாக வந்த மல்லிகாவைப் பார்த்து வியப்படைந்து, அவள் யாவளென்பதை அறிந்து கொள்ள ஆவல் கொண்டு கிருஷ்ணவேணியிடம் வந்து அவளைச் சூழ்ந்து கொண்டனர். அந்த சமயத்தில் உபாத்தியாயர் கோவிந்தசாமி ராவ் என்பவர் கனைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார். அவரது கனைப்பைக் கேட்ட அனைவரும் மந்திரவாதியின் மாத்திரைக் கோலைக் கண்டு, நாகம் தனது படத்தை மூடிக் கொண்டு கீழே வீழ்ந்து விடுவதைப்போல தத்தம் இடத்திற்குப் போய் ஒடுங்கி நின்றனர்.

அவர், நன்றாக உயர்ந்து தடித்த கம்பீரமான சிவந்த அழகிய தேகத்தையும், பரந்த முகத்தையும் பெற்றவர். அவர் பார்வை யிலேயே, பலரை அடக்கி ஆளக்கூடியவர் என்னும் ஒருவித மேன்மை அவரிடத்தில் நன்றாக விளங்கியது. அவரே தென்னிந் தியாவில் நாடகத்தை (டிராமாவை) நாகரிகமான முறையில் முதன் முதலாக ஆரம்பம் செய்தவர். அவரது புகழைப் பற்றி அறியாதவர் எவருமில்லை. ஆதலால், அவரைக் குறித்து விரிவாக எழுதுதல் மிகையாகும்.

அவர் தோன்றியவுடன் அவர்களை நோக்கி, ''என்ன! எல்லாரும் சிரித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்களே! நாடகம் இன்னம் இரண்டு வருஷமிருக்கிறதென்று எண்ணமோ? இன்னம் இரண்டு வாரங்கூட இல்லையே! பாடங்களைப் படிக்காமல் இப்படித்தானா விளையாடுகிறது? எல்லாரும் வாருங்கள்'' என்றார். அதைக் கேட்ட யாவரும் ஒருவகையான அச்சத்தை யடைந்தவர்களாய்த் திரைக்குட் சென்றனர். கிருஷ்ணவேணி, ''மல்லிகா! நீ இங்கேயே இரு. நான் இதோ வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே நடந்தாள். உள்ளே ஹார்மோனிய வாத்தியத்தின் ஒலி மிக்க இனிமையாக எழுந்தது; திரை உயர்த்தப்பட்டது. இந்திரனது சபையில் அரம்பை மேனகை திலோத்தமை முதலியோர் நாட்டியம் செய்து சம்பாஷிக்க ஆரம்பித்தனர். அப்போது, ''ஊர்வசியைக் காணோமே! அழைத்து வாருங்கள்'' என்று இந்திரன் ஆக்ஞாபிக்க, ஒரு கந்தருவன் அவளை அழைத்துவரப் போகிறான். உடனே திரை விடப்படுகிறது. அடுத்த காட்சியில் ஆகாயத்திலிருந்து விடுபட்ட சில கம்பிகளின் வழியாக ஊர்வசி கீழே பூலோகத்தில் இறங்கி சந்தனு மகாராஜனிருந்த காட்டிற்கு வருவது காட்டப்பட்டது; பிறகு வேறு பல காட்சிகள் நடித்து காட்டப் பெற்றவுடன் ஒத்திகை முடிவடைந்தது. இரண்டொரு நிமிஷத்தில் கிருஷ்ண வேணி மல்லிகாவினிடம் வந்து சேர்ந்து, ''ஆய்விட்டது; வா போவோம்'' என்று கூறி அவளை அழைத்துக்கொண்டு வாசலை நோக்கி நடந்தாள். வாசற் கதவண்டை வந்தபோது கிருஷ்ண வேணி திடீரென்று நின்றாள். அதைக் கண்ட மல்லிகா, ''என்ன விசேஷம்?'' என்று கேட்க, அவள், ''அதோ ஒரு புருஷன் நிற்கிறானே. அவனைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை''

என்றாள். மல்லிகா அவன் யாவனென்னு நிமிர்ந்து பார்த்தாள். அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஒரு வண்டிக்கருகில் ஒரு யௌவனப் புருஷன் நின்றதைக் கண்டாள். முதல் நாள் தான் வம்புலாஞ் சோலையிற் கண்ட மனிதன் அவனேயென்று அவளுக்கு ஒரு நினைவுண்டாயிற்று. ஆகையால், அவளும் வெளியிற் போகாமல் வாசற்படிக்குள்ளேயே நின்றாள். அவன் அவ்விரு மடந்தையரையும் கவனிக்கவில்லை.

''அவன் யார் தெரியுமா? தமயந்திபாயின் சிநேகிதன்; அவளைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறவன். அவளுக்காக வண்டி வைத்துக்கொண்டு தயாராக நிற்கிறான். அவன் பார்வைக்கு லட்சணமாக இருந்தாலும், என்ன காரணத்தினாலோ அவனிடத்தில் எனக்கு ஒருவித வெறுப்புண்டாகிறது'' என்றாள் கிருஷ்ணவேணி. அந்தச் சமயத்தில் தமயந்திபாயி வெளியிற் சென்று, வண்டிக்கருகில் நின்ற பீமராவைக் கண்டு புன்னகை செய்து, ''வந்து நிரம்ப நேரமாயிற்றோ?'' என்றாள். ''இல்லை இல்லை; இப்போதே வந்தேன். ஆனால் அவசரமான காரியம் ஒன்று இருக்கிறது. நான் போக வேண்டும். நீ வண்டியில் உட்கார்ந்துகொள்; வண்டிக்காரன் உன்னுடைய வீட்டுக்கு ஓட்டிக் கொண்டு போவான். நான் இன்று உன்னோடு வர முடியாது'' என்றான்.

''உனக்கு எப்போதும் அவசர காரியந்தான்! இருக்கட்டும்; என்னோடு வீட்டிற்கு வந்து உடனே போய்விடலாம். கால் நாழிகையாகாது. அதற்குள் தலை போய்விடாது'' என்றாள் தமயந்தி.

பீமராவ், ''இல்லை இல்லை; மற்ற நாளைப்போலில்லை. இன்று உண்மையில் அவசரமான ஒரு காரியம் இருக்கிறது. வண்டியில் உட்கார்ந்துகொள். நீ நல்ல பெண்ணல்லவா; சொன்ன படி கேள்'' என்று நயந்து வேண்டி அவளை வண்டியில் உட்கார வைக்க, வண்டி புறப்பட்டது.

''சரி; அப்படியானால் சீக்கிரம் வந்து விட வேண்டும்'' என்று தமயந்திபாயி சொல்லிக் கொண்டே மறைந்தாள்.

பீமராவ் உடனே வேறொரு வண்டியில் ஏறிக்கொண்டு டவுன் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டச்சொல்ல, வண்டி அந்தத் திசையை நோக்கிச் சென்றது.

''அப்பா! தொலைந்தான்! மல்லிகா! வா போகலாம். என்ன உன்னுடைய முகம் ஒருவிதமாக மாறுபட்டு விட்டதே?'' என்றாள் கிருஷ்ணவேணி.

''என் முகம் மாறியா இருக்கிறது?'' என்றாள் மல்லிகா.

''ஆம்; முற்றிலும் மாறிவிட்டது. இவனை இதற்கு முன் உனக்குத் தெரியுமா?'' என்றாள் கிருஷ்ணவேணி.

''இவனை நேற்றுதான் பார்த்தேன். எனக்கு இவனைத் தெரியாது. இவனைக் கண்டவுடன் நேற்றைய விஷயங்கள் நினைவுக்கு வந்தன; வேறொன்றுமில்லை'' என்று சொல்ல, இருவரும் சம்பாஷித்துக்கொண்டே தமது ஜாகையை நோக்கி நடந்தார்கள்.

13—வது அதிகாரம்

மல்லிகாவின் பிணம்

தான் எந்தக் காரியத்தையாகிலும் செய்வதாக ஒப்புக் கொண்டால், அதை உடனே செய்து முடிப்பது நிச்சயமென்று தன்னைப் பற்றி ஸகாராம் ராவிடத்தில் புகழ்ந்து பேசும் குண முடைய பீமராவின் சாமர்த்தியம் ஒரு நாளில் வெட்ட வெளிச்ச மானது. மல்லிகாவைத் தான் எப்படியாகிலும் கண்டு பிடிப்ப தாகச் சொல்லி விட்டுப் புறப்பட்ட அவன் வம்புலாஞ்சோலை, கோவில்கள், குளங்கள், சத்திரம், சாவடிகள், போஜன சாலைகள் முதலிய சகலமான இடங்களிலும் தேடி, அவளைக் காணமாட் டாதவனாய் வருந்திய வண்ணம் தமயந்தி பாயிக்கு வண்டி அமர்த்தி அவளையனுப்பிவிட்டு, கீழ்க்கோட்டை சாவலிலுள்ள டவுன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்து அருகிலிருந்த இன்ஸ்பெக்டர் மாணிக்க வாசக நாடாரைக் கண்டான். அவர் மிகுந்த மனோதிடமும் தேகபலமும் பொருந்தியவர் என்பது அவரது சலனமற்ற முகத்திலிருந்தும், கேதத்தின் உருத்தி திரட்சி முதலியவற்றிலிருந்தும் வெளியானது. பீமராவ் அவரிடம் போய், "ஐயா! என் தங்கையைக் காணோம். அவளைத் தேடிக்கொண்டு வந்தேன்" என்றான். அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் உள்ளே போய், ஒரு நமூனாவை (அச்சு பாரத்தை) எடுத்து வந்து, அதில், காணாமற் போனவரின் அங்க அடையாளங்கள் வயது முதலிய விவரங்களை எழுதிக் கொடுக்கும்படிக் கூற, அவன் அதிலிருந்த கேள்விகளுக்கெல்லாம் விடையெழுதி கையெழுத்துச் செய்து கொடுத்தான். அதை அலட்சியமாக ஏற இறங்கப் பார்த்த இன்ஸ்பெக்டர், அதட்டிய குரலில் "537" என்ற ஓர் எண்ணைக் கூப்பிட, உடனே ஒரு போலீஸ் சேவகன் பிரஸன்னமாகி, "என்ன எஜமாங்களே!" என்று அவருக்கெதிரில் அடங்கியொடுங்கி, இராமர் பட்டாபிஷேகப் படத்தில் ஆஞ்சநேயர் நிற்பதைப்போல நின்றான். அவனோடு பேசாமலே அவர் அந்தக் காகிதத்தை

அவனிடத்தில் கொடுக்க, அவன் அதைப் பெற்றுக்கொண்டு உள்ளே போய் வல்லம், மகார் நோம்புச் சாவடி, கருந்தட்டான்குடி, வெண்ணாற்றங்கரை, திருவையாறு முதலிய ஊர்ப் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு அந்த சங்கதியை டெலிபோன் மூலமாகத் தெரிவித்தான். உடனே கருந்தட்டாங்குடியிலிருந்து கிடைத்த மறுமொழியை அவன் ஒரு காகிதத்தில் எழுதி அந்த இன்ஸ்பெக்டரிடம் கொணர்ந்து கொடுத்தான்.

அதை வாசித்த நாடார், ''ஐயா! நீர் உடனே கருந்தட்டான்குடி ஸ்டேஷனுக்குப் போம்; அவசரம்;. இங்கே தாமதிக்க வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு, எழுந்து உள்ளே போய் விட்டார். தான் நிரம்பவும் விசனப்படுவதாக நடித்த பீமராவ் உடனே புறப்பட்டு கருந்தட்டான்குடிக்குப் போய் அங்கிருந்த ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டர் அப்துல் ஹை ஸாயப்புவைக் கண்டு, விவரத்தை அவரிடம் தெரிவித்தான். அதைக் கேட்ட சாயப்பு அதிக விசனத்தோடு உள்ளே போய் அங்கிருந்த நனைந்த சால்வையொன்றைக் கொணர்ந்து காட்டினார். அதைக் கண்ட பீமராவ், ''ஐயோ! இது என் தங்கையின் போர்வையல்லவா! இது எங்கே அகப்பட்டது. இவள் இப்போது எங்கே இருக்கிறாள்? நேற்று முதல் அவளைக் காணாமல் நானும் என் குடும்பத்தாரும் தவிக்கும் தவிப்பு சுவாமிக்கே தெரிய வேண்டும். என் மனம் பதைக்கிறது? சீக்கிரம் தெரிவியுங்கள்'' என்றான். அதைக் கேட்ட ஹை சாயப்பு மிகுந்த விசனத்தோடு, ''ஐயா! நீங்கள் அந்தப் பெண்ணை ஏதாவது வருத்தினீர்களா?'' என்றார்.

''அப்படியொன்றுமில்லையே! என்ன விஷயம்?'' என்றான் பீமராவ்.

''சரி; எப்படி இருந்தாலென்ன. காரியம் மிஞ்சிப் போய் விட்டது. நேற்று சாயங்காலம் இந்தப் பெண் ஆற்றில் விழப் போனதை போலீஸ் சேவகன் ஒருவன் தடுத்தான். அப்போது அவளுடைய உடம்பிலிருந்த இந்தச் சால்வை மாத்திரம் ஆற்றில் விழுந்தது. அதை அவன் எடுத்து வந்தான். அதற்குள் அந்தப் பெண் எங்கேயோ போய்விட்டாள். நேற்றிரவு 12 மணிக்கு அவளுடைய பிணம் படித்துறையில் ஒதுங்கியிருந்ததைக் கண்டு பிடித்தோம். உடனே அதை எடுத்து தஞ்சை சர்க்கார் வைத்திய சாலைக்கு (ஜெனரல் ஆஸ்பிடலுக்கு) அனுப்பினோம்'' என்றார்.

அதைக் கேட்ட பீமராவ், ''ஓ'' வென்று கதறியழ ஆரம்பித்தான். அவனடைந்த பரிதாப நிலைமையைக் கண்ட சப் இன்ஸ்பெக்டர் இரக்கங்கொண்டு, ''ஐயா! மிஞ்சிப் போன காரியத்தைப் பற்றி வருந்துவதில் பயனென்ன? பிணத்தை அதி சீக்கிரம் புதைத்து விடுவார்கள். நீர் என்னோடு வாரும்; உம்மை வைத்தியசாலைக்கு அழைத்துக்கொண்டு போய்க் காட்டுகிறேன்'' என்று சொல்லி ஒரு குதிரை வண்டியை வரவழைத்து, போர்வையுடன் வண்டியில் ஏறிக் கொண்டு பீமராவையும் உட்காரச் செய்தார். அரை நாழிகை நேரத்தில் வண்டி தஞ்சை மணிக்கூண்டிற்கு அருகிலிருக்கும் வைத்தியசாலையின் வாசலில் வந்து நின்றது. இருவரும் கிழே இறங்கி வைத்தியசாலைக்குட் போய் ஓர் சவத்தைக் கண்டார்கள். பீமராவ் துடிதுடித்தவனாய் அதை நோக்கி விரைவிலோடி அதன் முகத்தைத் திறந்து பார்த்தான். அது ஒரு ஸ்திரீயின் சவமாகக் காணப்பட்டதாயினும், அது இன்னாருடையதென்றே அடையாளம் கண்டுகொள்ளக்கூடாததாயிருந்தது. ஆனால், அது மல்லிகாவினுடையதல்லவென்து மாத்திரம் பீமராவுக்கு நன்றாகத் தெரிந்தது. தான் செய்ய நினைத்திருந்த தந்திரத்திற்கு அநுகூலமாயிருக்குமென்று நினைத்துக்கொண்ட பீமராவ், இறந்து போனவள் மல்லிகாவென்றே உறுதிப்படுத்திவிடத் தீர்மானித்துக் கொண்டான். அவன் அந்த முகத்தைப் பார்த்தவண்ணம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறியழுது கண்ணீர் விட்டான். ''ஐயோ! அடுத்த வாரத்தில் கலியாணம் நிச்சயித்திருந்தோமே! உன்னுடைய மணவோலை பிணவோலையானதோ! பாவி! மோசம் செய்து விட்டாயே! எங்கள் வயிற்றிலெல்லாம் நெருப்பை மூட்டிவிட்டாயே!'' என்று பலவாறு புலம்பினான். அங்கிருந்த இன்ஸ்பெக்டர் முதலியோர் கண்களில் நீர் ததும்பும் படி சோகரசம் காட்டி நாடகம் நடித்தவனாய், ''ஐயா! இவளுடைய சால்வையை இவள் மேலேயே போட்டு நன்றாக மூடி விடுங்கள். நான் போய் எங்கள் மனிதரை அழைத்துக்கொண்டு வருகிறேன்''என்று சொல்லி நயந்து வேண்டினான்.

ஹை சாயப்பு, தமது கையிலிருந்த கான்பூர் சால்வையால் அந்தப் பிணத்தை நன்றாக மூட, பீமராவ் பொறுக்கக் கூடாத விசனக்குறியோடு வெளியில் வந்து தெற்கு ராஜவீதியை நோக்கி வேகமாய் ஓடினான்.

வைத்தியசாலையில் இருந்தவர்கள் தன்னைக் காணக்கூடாத மறைவிற்குப் போனபிறகு, அவன் தனது விசனக் குறியை மாற்றிக் கொண்டான். மல்லிகா இறந்து விட்டதாக வஸந்தராவ் ஸகாராம்ராவ் ஆகிய இருவருக்கும் தெரிவித்து விட்டால், பிறகு வஸந்தராவ் அவளைப் பற்றிக் கவனிப்பதை விட்டு விடுவார் என்றும், தான் பிறகு மல்லிகாவைக் கண்டு அவளை மணந்து, அவளது ஐசுவரியத்தையெல்லாம் அபகரித்து விடலாமென்றும் நினைத்துக்கொண்டு அவன் தனது வீடு போய்ச் சேர்ந்தான். அங்கு அவனது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஸகா ராம்ராவ், ''என்ன விசேஷம்? சிறுக்கி அகப்பட்டாளா?'' என்றான்.

''ஆம்; அவளுடைய பிணந்தான் அகப்பட்டது. வைத்திய சாலையில் கிடக்கிறது'' என்றான் பீமராவ். ''பிணமா! என்னடா பைத்தியமா? வேறு யாராவது இறந்திருக்கலாம்'' என்றான் ஸகாராம்ராவ்.

''இல்லை இல்லை. நிச்சயமாக அவளே ஆற்றில் விழுந்து இறந்து போய்விட்டாள். வஸந்தராவ் இங்கே வந்தால் அவரை உடனே அழைத்துக்கொண்டு போய்ப் பிணத்தைக் காட்டும்; அதன் மேலிருக்கும் சால்வையைப் பார்ப்பதே போதுமானது. ஆனால், இதில் நான் ஒரு பொய் சொல்லியிருக்கிறேன். பொய் வெளியாய்விடப் போகிறது. அதிக நேரம் தாமதிக்காமல் பார்த்துவிட்டு வந்து விடுங்கள்; நான் ஒரு அவசர காரியமாகப் போய்விட்டு வருகிறேன்'' என்றான். அந்தச் சமயத்தில் வாசற் கதவை யாரோ இடித்தார்கள். பீமராவ் உடனே புறப்பட்டுப் போய்விட்டான்.

14–வது அதிகாரம்

பிணமும் பித்தரும்

மல்லிகா எங்கு போய்விட்டாளோ, அவளுக்கு என்ன துன்பம் சம்பவித்ததோ என்ற நினைவினாலும், மன வேதனையினாலும் தமது ஆசையெல்லாம் நிராசையாயொழிந்து போனதேயென்ற விசனத்தினாலும் நிரம்பவும் தளர்வடைந்து வருந்தியவராய், செய்வது இன்னது என்பதை அறியாதவராய் வஸந்தராவ் பைத்தியம் கொண்டவரைப் போலானார். ஒரு நிமிஷ நேரமும் சும்மாவிராமல் அவர் அங்கும் இங்கும் அலைந்தோடி அவளைத் தேடினார். விஷம் தலைக்கேறுவதைப்போல, ஒவ்வொரு நொடியிலும் அவரது வியாகுலமும், வேதனையும், ஆவலும் மலைபோலப் பெருகின. மல்லிகா காணாமற் போன பிறகு அவர் ஜல பானமும் செய்தவரல்லர். அன்றிரவு முற்றிலும் நித்திரையென்பதே கொள்ளாமல், ஊர் முழுவதும் அலைந்து திரிந்ததால், அவரது மிருதுவான மேனி சோர்வடைய, தலை சுழல, கண்கள் இருண்டன. அத்தகைய பரிதாபகரமான நிலைமையில், அவர் ஸகாராம்ராவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். கிழவனது முகத்தை உற்று நோக்கியவண்ணம் , "ஏதாவது சங்கதி தெரிந்ததா? உம்முடைய முகக்குறியிலிருந்து ஏதோ விசேஷம் இருப்பதாகத் தெரிகிறது. சீக்கிரம் தெரிவியும். நல்லாதாயிருந்தாலும் சரி; கெட்டதாயிருந்தாலும் சரி" என்றார் வஸந்தராவ். அவரது பரிதாபகரமான நிலைமையைக் கண்ட சர்வாதிகாரி பெரிதும் அச்சங் கொண்டவனாய், "பிரபுவே! உண்மையைச் சொல்ல நாவெழவில்லை. என்ன செய்வேன்! அவ்வளவுதான் நமக்குப் பிராப்தம். இனி அதை மறந்து விடுங்கள்" என்றான்.

"கெட்ட சாமாசாரத்தைக் கேட்டறிந்து கொள்வதே நல்லது. இல்லா விட்டால், மனவேதனை முன்னிலும் அதிகரிக்கும். ஆகையால் தயவுசெய்து சீக்கிரம் தெரிவியும்" என்று கூறிய வண்ணம் வஸந்தராவ் சர்வாதிகாரியின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''பிரபுவே! அவள் இறந்து போய்விட்டாள். அவளுடைய பிணம் சர்க்கார் வைத்தியசாலையில் கிடக்கிறது'' என்று நிரம்பவும் தடுமாறிய குரலில் தெரிவித்தான் சர்வாதிகாரி.

திடீரென்று உண்டாகும் பேரிடியோசை ஒருவனது தேகத்தை எப்படி நடுக்குவிக்குமோ, அப்படி அந்தச் செய்தியால் அவரது சரீரம் ஆடியசைந்தது. அவரது மனதில் அச்சமும் விசனமும் தோன்றின. கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. மூர்ச்சித்து வேரற்ற மரம்போல் அவ்விடத்திலேயே விழுந்து விட்டார். அதைக் கண்டு பெரிதும் திகைப்பையும் நடுக்கத்தையும் அடைந்த சர்வாதிகாரி, உடனே ஈரத்துணியால் அவரது முகத்தைத் துடைத்து, உபசரணை செய்ய, சிறிது நேரத்தில் அவர் கண்களைத் திறந்துகொண்டு எழுந்து உட்கார்ந்து கன்றைப் பிரிந்த தாய்போலக் கோவெனக் கதறியழுதார்; தமது உன்னத பதவியை மறந்து, சர்வாதிகாரியைக் கட்டிக்கொண்டு வாய் விட்டுப் புலம்பி, பெருத்த விசனமானது பெரிய மனிதனையும், சிறிய மனிதனையும் ஒரே நிலைமைக்குக் கொண்டு வரும் என்பதைக் கண்கூடாய்க் காட்டி, மல்லிகாவின் பிரேதம் கிடந்த இடத்திற்கு தன்னை உடனே அழைத்துப் போகும்படி அவனிடம் கேட்டுக் கொண்டார்.

சர்வாதிகாரி அதற்கிணங்கி உடனே அவரை அழைத்து நடத்திக்கொண்டு வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தான். இரு வரும் வைத்தியசாலைக்குள்ளிருந்த ஓர் இருண்ட அறையில் நுழைய, அங்கு கிடத்தி வைக்கப்பட்டிருந்த பிரேதம் கண்ணில் பட்டது. அதன் மீது மூடப்பட்ட சால்வையைப் பார்த்தவுடன் வஸந்தராயரது தேகம் பதைத்தது. தாமும் மல்லிகாவும் பவானி யம்மாள் புரத்திலிருந்து புறப்பட்ட அன்றிரவு, தமது அருமைக் கண்மணியின் மேல் தாம் அதைப் போர்த்தியது நினைவுக்கு வந்தது. அவள் இறந்தாளென்பதை அதுவரையில் உண்மையாக நம்பாத அவரது மனதில், அவள் இறந்துவிட்டாளென்னும் விஷயம் நிதரிசனமாகப் பதிந்தது. அவர் அலங்கோலமாகப் பாய்ந்து கதவருகில் விழுந்து, வாய் விட்டுக் கதறினார். அந்த உடம்பைத் தமது கையால் அணைத்துக் கொண்டார். அதன் முகத்தை மறைந்திருந்த சால்வையைச் சிறிது விலக்கி முகத்தைப் பார்க்க முயன்றார். முகம் அடையாளங் கண்டு பிடிக்கக் கூடா

வகையில் மாறுதலடைந்து மிக்க விகாரமாக இருந்தது. அதைக் காண சகியாதவராய், அவர் உடனே சால்வையால் முகத்தை மூடிவிட்டு தமது தலையில் கைகளால் மோதிக்கொண்டு பிரலாபித்து சிறிது நேரம் புலம்பியழுத பிறகு அவ்விடத்தை விட்டெழுந்து வெளியில் வந்து, தாம் மெய்ம்மறந்திருப்பதாயும், தம்மை வண்டியில் வைத்து வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும்படியாயும் சைகை செய்துவிட்டுச் சோர்ந்து படியின்மேல் உட்கார்ந்துகொண்டார். உடனே ஸகாராம் ஒரு வண்டியமர்த்த, இருவரும் அதில் ஏறிக்கொண்டு வஸந்தராயரது மாளிகைக்குச் சென்றனர். அங்கு போய் தமது கட்டிலில் படுத்த வஸந்தராவ் மூன்று நாட்களுக்குப் பிறகே தமது கண்களைத் திறந்தார். தேகத்தில் கடுமையான ஜுரம் உண்டாயிருந்தது. அவர் எழுந்திருக்கவும் சக்தியற்றவரானார்; ஆகாரம் நித்திரை முதலியவற்றை முற்றிலும் துறந்தார்; தமது உடம்பிலும் உயிரிலும் வெறுப்புக் கொண்டவராய்த் தத்தளித்துக் கிடந்தார்; அவ்வித நிலைமையில் பல வாரங்கள் படுத்த படுக்கையாயிருந்து இளைத்துத் துரும்பாக மெலிந்து போனார்; மல்லிகாவை நினைத்து நினைத்து உருகினார்; தம்மைப் பிறர் தூக்கி வைக்கும் நிலைமையை அடைந்தார். சர்வாதிகாரி, திறமை வாய்ந்த ஒரு வைத்தியனைக் கொண்டு அவரைச் சௌக்கியப்படுத்த, தன்னால் இயன்ற வரையில் முயன்றான். ஆனால், அவர் தம்மை விட்டுப் பிரிந்து போன மல்லிகாவிடம் தாமும் போய்ச் சேர்ந்தாலன்றி தனது மனப்பிணி நீங்காதென்றும், தாம் உயிரை விட்டு விட வேண்டுமென்றும் நினைத்து அவர் தமது தேகத்தைச் சிறிதும் கவனியாமல் விட்டு விட்டாராயினும், அவனின்றி ஓரணுவும் அசையாதென்பதற்கு இணங்க, இந்த உடம்பை நமது இச்சைப்படி ஆக்கவும், அழிக்கவும் எவராலும் ஆகாது. ஆகையால், அவரது பிணி அதிகரித்ததேயன்றி அவரது உயிர் நீங்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல சிறிது எழுந்து நடக்கும் நிலைமைக்கு அவர் வந்தார். என்றாலும், அவர் இன்னாரென்று எவரும் அடையாளங் கண்டு கொள்ளக் கூடாவிதமாக மெலிவடைந்து ஒரு கிழவனைப் போலானார்.

தமது ஆருயிர்க் காதலியிருந்த இடத்தில் தாம் இனி இருந்தால் தமது விசனம் ஒரு நாளும் குறையாதென்று நினைத்து எங்கேயாகிலும், அறிமுகமற்ற புதிய இடத்திற்குப் போய் விட வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டார்; தமது சர்வாதி

காரியை அழைத்து மாளிகை, பங்களா, ஜெமீன், கிராமங்கள் முதலியவற்றை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறி, அவரிடம் யாவற்றையும் ஒப்புவித்தார்.

தாம் சென்னப் பட்டணம் போய் அங்கு சொற்பகாலமிருந்து பார்க்கலாமென்று யோசனை செய்து கொண்டவராய் அவர் அவ்விடத்திற்குப் போகப் புறப்பட்ட சமயத்தில், துக்கோஜிராவ், அவரைப் பார்க்க வந்திருப்பதாக வேலைக்காரன் தெரிவிக்க, அவனை உள்ளே அழைத்து வரும்படி மறுமொழி சொல்லி அனுப்பினார். அடுத்த நிமிஷத்தில் துக்கோஜிராவ் உள்ளே வந்து நின்றான்.

வஸ : துக்கோஜி! என்ன விசேஷம்? வந்த காரியமென்ன? - என்றார்.

துக்கோ : வேறு எதற்காக வரப்போகிறேன்? அந்தப் பெண் விஷயமாகத்தான் வந்தேன். யாதொரு துர்நடத்தையையும் அறியாத அந்தப் பெண்ணின் விஷயத்தில் தாங்கள் இப்படிச் செய்யலாமா? அவள் உலகத்தையே அறியாத பேதையல்லவா! - என்றான்.

வஸ : இந்த விஷயத்தில் என்னைக் கண்டிக்க வந்தாயோ? நீங்கள் அவளை நடத்திய அருமை எனக்கு நன்றாகத் தெரியும்; போய்விட்டு வா; எனக்கெதிரில் நிற்க வேண்டாம் - என்று கடுமையாக மொழிந்தார்.

துக்கோ : ஆயிரமிருந்தாலும், நீங்கள் இப்படி அவளுக்கு மானஹானி உண்டாகக் கூடிய காரியத்தில் பிரவேசித்திருக்கக் கூடாது.

வஸ : (கோபத்தோடு) ஆயிரமிருந்தாலும், பதினாயிர மாகாது! போ ஐயா! போ. உன்னை யார் இங்கே வரச் சொன்னது? மரியாதையாக வெளியில் போய்விடு. இல்லா விட்டால் வேலைக்காரன் வெளியில் போக வழி காட்டுவான் - என்றார்.

அதைக்கேட்ட துக்கோஜிராவ் பெரிதும் வெட்கி அவமானம் அடைந்து மறுமொழி ஒன்றும் சொல்ல மாட்டாமல் வெளியிற் போய்விட்டான். அன்றிரவே வஸந்தராவ் புறப்பட்டு சென்னைக்குப் போய்ச் சேர்ந்தார்.

15—வது அதிகாரம்

தளுக்கும் குலுக்கும்

இரண்டொரு வாரத்தில் மல்லிகா சித்திரவேலையில் மிகுந்த சாமர்த்தியசாலியாயினாள். கிருஷ்ணவேணியும், அவளது தந்தையும் ஒரு நாளில் எவ்வளவு வேலை செய்து முடித்தார்களோ, அதைக் காட்டிலும் மல்லிகா அதிகம் செய்ய ஆரம்பித்தாள். கிருஷ்ணவேணியும் அவளது தந்தையும் இயற்கையிலேயே நற்குணமும் பிறரிடத்தில் அன்பும் உள்ளவர்கள். மல்லிகாவின் அருமை பெருமைகளையும், நற்குண நல்லொழுக்கம், உழைப்புக் குணம், புத்தி நுட்பம், சிறந்த பேரழகு முதலிய வற்றையுங் காண, அவர்களிருவரும், ஒவ்வொரு தினமும் பெருகிய அந்தரங்கமான அன்போடும், ஆசையோடும், மிகுந்த மதிப்போடும் அவளைப் பெரிதும் அன்போடு நடத்திக் கொண்டாடி வந்தனர். சிறிது நேரம் மல்லிகாவைக் காணாவிடில் அவர்களுக்குப் பொழுதே போவதில்லை. கிருஷ்ணவேணி அவளைத் தனது இளைய சகோதரிபோல அருமையாக மதித்துச் சீராட்டினாள். அவள் ஒத்திகைக்குப் போன போதெல்லாம் மல்லிகாவையும் தன்னுடன் கூடவே அழைத்துப் போவாள். அவள் அடிக்கடி விசனத்தில் ஆழ்ந்திருப்பதாய்க் காணப்படும்போதெல்லாம் கிருஷ்ணவேணி அவளை ஆதரத்துடன் தேற்றி அவளுக்கு ஆறுதல் கூறுவாள்.

அவள் அதிகமாக உழைத்ததைக் கண்டு பொறாமல் தந்தையும், மகளும் அவளை அடிக்கடி கடிந்து கொள்வார்கள். மல்லிகா அவர்களோடு இருந்த காலத்தில் தனது விசனத்தைப் பாராட்டாமல் அவர்களுடன் சந்தோஷமாக இருக்க முயலுவாள்; தனியாக இருந்த காலத்தில் அவளது மனதில் மறைந்து கிடந்த ஆறாத் துயரமானது அடக்கவொண்ணா உரத்தோடு பொங்கி எழுந்து அவளை மேற்கொள்ளும். புறத்தோற்றத்திற்கு மாத்திரம் அவளது

மேனி அழகுடையதாய் இருந்ததாயினும், விசனமென்னும் கறை யான் அவளது மனதை அரித்துத் தின்று கொண்டே வந்தது.

அவர்களது நிலைமை இவ்விதமிருக்க, இந்திரசபா நாடகத்தின் கடைசி ஒத்திகை நாள் வந்தது. கதை முழுவதையும் நாடக தினத்தில் எப்படி நடத்துவார்களோ, அப்படியே அன்று வாத்தியங்களோடும், அவரவர்களுக்குரிய வேஷங்களோடும் நடிப்பது வழக்கம். ஆதலால், எல்லோரும் அன்று இரண்டு மூன்று நாழிகைக்கு முன்பாகவே நாடக சாலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். வழக்கம்போல மல்லிகாவும், கிருஷ்ணவேணி யுடன் சென்றாள். மல்லிகா தன்னை எவரும் அறியக் கூடா தென்னும் எண்ணத்தோடு தனது பெயரை ஸஞ்சலாட்சி என்று மாற்றிக் கொண்டாள்.

அன்று, தமயந்திபாயி, தான் முக்கியமான ஸ்திரீ வேஷந் தரித்து நடித்து நல்ல பெயரெடுக்கப் போவது பற்றியும், தன்னை மீறியவர் எவருமில்லையென்னும் நினைவினாலும் பெரிதும் செருக்கடைந்தவளாய் மிக்க உல்லாஸமாகக் குலுக்கி மினுக்கி நடந்து வந்தாள்; காண்போர் யாவரையும் அலட்சியமாக மதித்து ஏளனம் செய்து கொண்டேயிருந்தாள். ஒவ்வொரு நாளும் அவள் மல்லிகாவைப் பார்த்திருந்தாளாயினும், அவளை மதித்து அவளிடம் பேசியதில்லை. அன்றைய தினம் அவள் தனிமையில் திரைக்கு வெளியில் உட்கார்ந்திருந்தபோது அங்கு வந்து, "நீ ஒவ்வொரு நாளும் கிருஷ்ணவேணியோடு வருகிறாயே. உனக் கும் அவளுக்கும் என்ன சொந்தம்?" என்று கேட்டாள். "நான் அவளுடைய தங்கை" என்றாள் மல்லிகா. "ஓகோ அப்படியா! அதனால்தான் இணைபிரியாத காதலரைப் போலிருக்கிறீர்களோ! அதிருக்கட்டும். நான் ஒரு சங்கதி சொல்லுகிறேன். அதை உன்னுடைய பிரியமான அக்காளுக்குத் தெரிவி. அவளுக்கு இப்போதுதான் திலோத்தமை வேஷம் கொடுத்திருக்கிறார்கள். கம்பத்தைப்போல வந்து நிற்பதே அந்த வேஷக்காரி செய்ய வேண்டிய வேலை. அதை நடிப்பதற்குள் அவளுக்குத் தலை திரும்பி விட்டது; அவள் கொண்டிருக்கும் இறுமாப்புக்கு அளவில்லை. இன்னும் முக்கியமான சிறந்த வேஷங்களைக் கொடுத்து விட்டால், அவள் என்ன செய்வாளோ தெரியவில்லை; தலைகீழாகத்தான் நடப்பாள். கொஞ்சம் நிதானமாக நடக்கச் சொல்" என்றாள் தமயந்தி.

''என்னுடைய அக்காள் ஒருநாளும் அப்படி அகம்பாவம் கொள்பவள் அல்ல. இன்னொரு முறை அப்படிச் சொல்ல வேண்டாம்'' என்று மல்லிகா அலட்சியமாகவும், கண்டிப்பாகவும் மறுமொழி சொல்லிவிட்டு அருவருப்போடு அப்புறம் திரும்பிக் கொண்டாள். அவள் தன்னை அவ்வாறு அவமதித்ததனால் வருந்திய மனத்தோடு தமயந்தி உட்புறம் சென்றாள்.

சற்று நேரத்தில் கோவிந்தசாமி ராவ் ஒத்திகையை ஆரம்பித்தார். அன்றைய தினம் ஒத்திகையைப் பார்க்கும் பொருட்டு அரண்மனையிலிருந்து நூற்றுக் கணக்கில் பெண்டீர் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

நாடகம் ஆரம்பமாயிற்று. ஒவ்வொருவரும் தத்தம் வேஷத்திற்குரிய விதம் அதிக திறமையைக் காட்டி நடித்தனர். தமயந்தி கந்தருவ ஸ்திரீயைப்போல் இறகுகளோடும், மற்ற நேர்த்தியான ஆடையாபரணங்களோடும், நேத்திராநந்தமாக, ஆகாயத்திலிருந்து விடப்பட்டிருந்த கம்பிகளின் வழியாக கீழே இறங்கினாள். அவள் கம்பியைப் பிடித்துக் கொண்டு வந்ததைப் போல் காட்டாமல், அந்தரத்தில் பறந்து வந்தவள்போல அழகாய் வந்தாள். அவள் வந்த அற்புதமான காட்சியைக் கண்ட பெண்டீர் யாவரும் அதிசயித்துக் கைகொட்டி ஆர்ப்பரித்துத் தத்தம் சந்தோஷத்தை வெளியிட்டனர். அவள் பூமியில் இறங்கி சிறிது நேரம் பேசிய பிறகு திரும்பவும் கம்பியைப் பிடித்துக் கொண்டு மேலே ஏற முயன்றாள். பூமிக்கும், மேலே திரைகட்டியிருந்த மூங்கில் பரணிற்கும் உள்ள உயரம் 15 அடிக்கு மேலிருந்தது. பரணிற்கு சமீபத்திற் போய் திரையில் ஜாலரில் மறைந்த தமயந்தி அகம்பாவத்தினாலும் இறுமாப்பினாலும் தன்னை மறந்தவளாய்ச் சிறிது தனது கைப்பிடியை விட்டு விட்டாள். உடனே அவள் ஆகாயத்திலிருந்து வீரிட்ட சப்தத்துடன் பூமியில் வந்து விழுந்தாள். உடம்பில் பட்ட அடியால் எலும்புகள் நொறுங்க, வாயில் இரத்தம் ஓடி வந்தது. அதைக் கண்ட எல்லோரும் திக்பிரமை கொண்டு பயந்து, அலறி ஓடிவந்து அவளை வளைத்துக் கொண்டனர். அதனால் அங்கு பெருத்த குழப்பமுண்டாயிற்று. கோவிந்தசாமிராவ் ஓடோடியும் வந்து தமயந்தியைத் தூக்கியெடுத்தவராய் அந்த நாடகசாலையின் உட்புறத்தைக் கடந்து அதன் வாசலிற் கொணர்ந்து தெருவில்

நின்று கொண்டிருந்த குதிரை வண்டிகளில் ஒன்றில் அவளைக் கிடத்தினார். அவருடன் தொடர்ந்து வந்த மனிதரின் முக்கியமான வேறு இருவரையும் வண்டியில் உட்கார வைத்து உடனே சர்க்கார் வைத்தியசாலைக்கு வண்டியை ஓட்டும்படிச் சொல்ல, வண்டிக் காரன் அவ்வாறே அதிவிரைவாக வண்டியை ஓட்டிச் சென்றான்.

வாசலிலிருந்து உள்ளே வந்த கோவிந்தசாமிராவின் முகம் பெரிதும் விசனத்தைக் காண்பித்தது. என்ன செய்வதென்பதை அறியாதவராய் திரைக்குள்ளிருந்த ஒரு நாற்காலியில் சாய்ந்தார். அன்று அதற்கு மேல் ஒத்திகை இல்லையென்று சொல்லி, வந்திருந்த ஜனங்களை அனுப்பிவிட்டு; தமது சிரத்தில் கையை வைத்துக்கொாண்டு சிந்தனையில் ஆழ்ந்தார். மறு நாள் தசராப் பண்டிகையாதலால், அன்றிரவு அரண்மனையில் பாயிஸாகேப்பி களுக்கு எதிரில் நாடகம் நடத்த வேண்டிய கட்டாயமிருந்தது. முக்கியமான ஸ்திரீ வேஷக்காரிக்கு அத்தகைய விபத்து வந்து விட்டமையால், நாடகத்தை எப்படி நடத்துவதென்பது பற்றி அவர் கவலையில் ஆழ்ந்தார். இந்திர சபாவில் நிரம்பவும் திறமை யோடு நடிக்க வேண்டிய முக்கியமான ஊர்வசி வேஷத்தை ஒரு நாளில் கற்றுக் கொண்டு நடிக்கத் தகுந்த அபார சக்தி வாய்ந்தவள் ஒருத்தியுமில்லையென்று அவர் உறுதியாக நினைத்தாராயினும் ஒருவேளை தெய்வச் செயலாக எவளாயினும் அகப்பட மாட்டாளா என்ற ஒரு மூட நம்பிக்கையைக் கொண்டவராய் இருந்தார். அந்தச் சமயத்தில் அவருக்கெதிரில் கிருஷ்ணவேணி யுடன் பேசிக் கொண்டிருந்த மல்லிகாவைப் பார்த்தார். அவளது பேரழகையும், வசீகரமான தோற்றத்தையும் அப்போதே அவர் நன்றாக உற்று நோக்கினார். அதுவரையில் அவள் கிருஷ்ண வேணியுடன் வந்து போய்க் கொண்டிருந்ததைப் பார்த்திருந்தார்; அவளது சிநேகிதை என்று நினைத்துக் கொண்டு, அவளை அதிகம் கவனியாமலிருந்தார். இப்போது அவளைப் பார்த்தவு டன் அவரது மனதில் ஒருவித எண்ணம் உதித்தது. உடனே கிருஷ்ணவேணியை மெதுவாகத் தம்மிடம் அழைத்தார். அவள் தனியாக வர, அவளை மறைவான ஓர் இடத்திற்கு அழைத்துப் போய், "கிருஷ்ணவேணி! உன்னோடு கூட வந்திருக்கிறாளே, அவள் யார்?" என்று நயமாகக் கேட்டார்.

"அவள் என்னுடைய சிநேகிதை" என்றாள் கிருஷ்ணவேணி.

கோவி : பெயரென்ன?

கிரு : ஸஞ்சலாட்சி.

கோவி : (சிறிது யோசனை செய்து) நாளைய தினம் நம்முடைய நாடகம் அவசியம் நடக்க வேண்டுமே. என்ன செய்கிறது? தமயந்திக்கு இப்படி ஆபத்து வந்துவிட்டதே! இவளுக்கு அந்த வேஷத்தைக் கொடுத்தால் நடிப்பாளா? - என்று பொதுவாகக் கேட்டார்.

கிரு : அவள் நிரம்பவும் கூர்மையான புத்தியுடையவள் தான்.. ஊர்வசியாக நடிக்கக் கூடியவளென்பதைப் பற்றி கொஞ்சமும் சந்தேகமில்லை. அவ்வளவு சாமர்த்தியமுடையவளே! ஆனால், இவள் சம்மதிப்பாளோ மாட்டாளோ; அதுதான் சந்தேகம்.

கோவி : அவளைச் சம்மதிக்கச் செய்ய வேண்டியது உன் பொறுப்பு. நீதான் அவளைச் சரிப்படுத்த வேண்டும். இந்த உதவியை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன் - என்றார்.

அவர் அவ்வளவு தூரம் நயந்து சொல்வது நிரம்பவும் அருமையாதலால், கிருஷ்ணவேணி உடனே மல்லிகாவிடத்தில் ஆத்திரத்தோடு ஓடி வந்து, ''மல்லிகா உன்னுடைய அதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்லுவேன்! நீ ஊர்வசியாக நடிக்க வேண்டுமென்று வாத்தியார் கேட்டுக் கொள்ளுகிறார். நாங்களெல்லோரும் எவ்வளவோ காலம் ஆவலோடு எதிர்பார்க்கக் கூடிய அதிர்ஷ்டம் உனக்குத் தானாகவே வந்திருக்கிறது. மாட்டேனென்று சொல்லாமல் நீ எப்படியாவது சம்மதிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாளைக்கு அவசியம் நடக்க வேண்டிய நாடகம் நின்று போய் விடும் போலிருக்கிறது! இதனால் வாத்தியாருடைய தயவும் பிரியமும் நமக்குப் பூரணமாக ஏற்படும்'' என்றாள்.

எதிர்பாராத அந்தச் செய்தியைக் கேட்ட மல்லிகா திடுக்கிட்டுத் திகைப்படைந்து மௌனமாக நின்றாள்.

கிரு : என்ன பிரமாதமாக யோசனை செய்கிறாயே? சரிதானென்று ஒப்புக் கொள்.

மல்லி : ஒப்புக் கொள்வது சுலபந்தான்; அது மாத்திரம் போதுமா? அது எல்லாவற்றிலும் முக்கியமான வேஷமல்லவா.

அதை நடிக்கும் சாமர்த்தியம் நமக்கு வேண்டாமா? எனக்கென்ன தெரியும்?

கிரு : அந்தச் சாமர்த்தியம் உன்னிடத்தில் உண்டென்பதை நான் இத்தனை நாள் உன்னோடு பழகி அறிந்து கொள்ளா விட்டால், என்னைப்போல முட்டாளும் உண்டா? நம்முடைய வாத்தியார், ஒருவருடைய முகத்திலிருந்தே அவருடைய திறமையை ஒரு க்ஷணத்தில் அறிந்து கொள்ளக் கூடியவர். அவரே உன்னைத் தேர்ந்தெடுக்கும்போது இதில் தவறே இருக்காது. அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்; பேசாமல் ஒப்புக்கொள்.

மல்லி : நீ இவ்வளவு சொல்லும்போது நான் தடுத்துச் சொல்லுவேனோ? ஒரு நாளுமில்லை. தவிர, இதில் நீங்களெல்லோரும் சேர்ந்திருப்பதினால், ஸ்திரீயின் கற்பு நாணம் முதலியவைகளுக்கு பழுது ஏற்படுமென்ற கவலையுமில்லை. ஆனால் நான் புதியவள்; ஒரு நாளும் நாடக மேடையில் ஏறியவ ளல்ல. இன்னும் அதிக நாட்களுமில்லை. நாளைய தினம் கடைசி நாடகம். இனிமேல் ஒத்திகைகளும் நடக்க வழியில்லை. வேஷமோ முக்கியமானது; பார்க்க வருபவர்களோ அற்பமானவர் களல்ல; இவர்களைப் பற்றியே நிரம்பவும் பயமாக இருக்கிறது.

கிரு : இவைகளைப் பற்றி நமக்குக் கவலையே வேண்டாம். நம்முடைய வாத்தியார் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்; கவலைப்படாதே!

மல்லி : (அரை மனதோடு) அப்படியானால் சரி; உன்னிச்சைப் படியே ஆகட்டும் - என்றாள்.

அதைக் கேட்ட கிருஷ்ணவேணி சந்தோஷ மிகுதியால் குதித்துக் கொண்டு ஓடி கோவிந்தசாமி ராவிடத்தில் மல்லிகா வின் சம்மதியைத் தெரிவிக்க, அவர் உடனே அன்பான குரலில், ''அம்மா ஸஞ்சலாட்சி! இப்படி வா!'' என்று அழைத்தார். அவள் அவருக்கருகில் ஒருவித அச்சத்தோடும் மரியாதையோடும் நாணத்தோடும் சென்றாள். ஒரு காகிதத்தில் எழுதப்பட்டிருந்த ஊர்வசி வேஷத்தின் பாடத்தை அவர் அவளிடத்தில் கொடுத்து, ''நீ எப்படியாவது சிரமப்பட்டு இதை இன்றைக்குள் மனப் பாடம் செய்ய வேண்டும். நாளைக்குப் பகலிற் கடைசியாக ஓர் ஒத்திகை வைத்துக் கொள்வோம்'' என்று நயமாக வேண்டிக் கொண்டார்.

''நான் இத்தனை நாளாக கிருஷ்ணவேணியோடு இங்கே வந்து பார்த்துக் கொண்டிருந்தேனல்லவா; எனக்கு இது மாத்திரம் அல்ல, மற்ற எல்லோருடைய பேச்சும் மனப்பாடம் ஆய்விட்டது. ஆகையால், நான் இதைப் படிக்க வேண்டிய அவசியமே இல்லை'' என்றாள்.

அதைக் கேட்ட கோவிந்தசாமி ராவின் ஆநந்தத்திற்கும், அவளது விஷயத்தில் ஏற்பட்ட வியப்பிற்கும் அளவில்லை. ''பலே! உன் சாமர்த்தியமே சாமர்த்தியம்! மூளை இருந்தாலும் இப்படியல்லவா இருக்க வேண்டும். நாங்களெல்லோரும் எதற்குப் பிரயோசனம்'' என்று அவளைப் பெரிதும் புகழ்ந்து, அதை ஒப்புவிக்கும்படி கேட்க, அவள் நாடகத்தில் ஊர்வசி எப்படி அழகாய் நடிக்க வேண்டுமோ அவ்விதம் சமயோசிதமான அபிநயங்களோடு நடித்த வண்ணம், தத்ரூபமாய் பாடத்தை ஒப்புவித்தாள். அதைக் கண்ட கோவிந்தசாமிராவ் பூரித்து புளங் காகிதமடைந்து தம்மை மறந்தார். அவள் தமயந்தியைக் காட்டிலும் பதின் மடங்கு விசேஷமாக நடித்ததைக்காண அவர் அடைந்த வியப்பிற்கும், திகைப்பிற்கும் எல்லையில்லை. ''என்னுடைய கவலை நீங்கியது; ஒத்திகையை இன்றைக்கே முடித்து விடுவோம்'' என்று கூறி, திரும்பவும் ஒத்திகையைத் தொடக்கத் திலிருந்து ஆரம்பித்து, நாடகத்தைக் கடைசி வரையில் நிறை வேற்றினார். அங்கிருந்தோர் தமயந்தி இல்லையென்பதைப் பற்றி சிறிதும் நினைக்கவேயில்லை; அன்று முழுதும் அடக்கவொண் ணாத பெருமகிழ்ச்சியடைந்திருந்த கோவிந்தசாமிராவ், அன்று நடந்த விஷயங்களையெல்லாம் அரண்மனை பாயிஸாகேப்பு களுக்குச் சொல்லியனுப்பினார்.

16–வது அதிகாரம்

புதிய ஊர்வசி

தசரா தினத்தன்று மாலை ஆறு மணி முதல் ஒன்பது மணி வரையில் நாடகம் நடத்தப் படுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நடிப்போர் அனைவரும் அன்று பிற்பகல் மூன்று மணிக்கே அரண்மனையின் பின்புறத் தோட்டத்தில் அமைக்கப் பட்டிருந்த கொட்டகைக்கு வந்து சேர்ந்து தம்மை நேர்த்தியாக அலங்கரித்துக் கொள்வதே வேலையாகச் செய்து கொண்டிருந்தனர். அன்று முழுதும் மல்லிகாவின் மனது, கரை கடந்த ஸஞ்சலத்தை அடைந்த வண்ணமிருந்தது. அவ்வளவு சொற்ப காலத்தில் தனது வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுபாடுகளைப் பற்றி நினைத்தும், தான் அன்று ஒரு கால் அவமானப்பட நேருமோ வென்று நினைத்தும் பெரிதும் கவலையும் அச்சமும் அடைந்தவளாய்த் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

அந்தக் கொட்டகையில், நாடகம் பார்க்கும் ஜனங்களிருக்கும் இடமானது, நீளத்தில் இரண்டு பாகமாகத் தடுக்கப்பட்டு, இரண்டு பாகத்திற்கும் இடையில் இரண்டாள் உயரம் திரையால் மூடப்பட்ட தட்டிகள் வைக்கப் பெற்றிருந்தன. ஒரு பக்கத்தில் இருப்பவரை மறு பக்கத்தில் இருப்பவர் பார்த்தல் கூடாத காரியமாயிருந்தது. அதில் ஒரு பக்கத்தில் அரண்மனை பாயிஸா கேப்புகளும், இன்னம் அரண்மனையைச் சார்ந்த ஸ்திரீகளும் உட்காருதல் வழக்கம். மற்ற பாகத்தில் அரண்மனை உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும், முக்கியமான சில மகாராஷ்டிர ஜெமீந்தார்களும், நடிப்பவர்களின் சொந்தக்காரர்களும் உட்கார்ந்தார்கள். எங்கும் விளக்குகள் சூரியன் உதயமானதைப்போலப் பளீரென்று பிரகாசித்தன.

மணி ஆறு அடிக்கும்போதே, இனிமையான சங்கீதத்தின் ஓசை எழுந்தது. கோவிந்தசாமிராவ் தாளத்தை நிரம்பவும் அலட்

சியமாகத் தட்டிக் கொண்டே இராமஸ்தோத்திரம் செய்யத் தொடங்கினார். அன்று தமயந்திபாயிக்குப் பதிலாக வருபவள் அவளைக் காட்டிலும் அழகிற் சிறந்தவளென்றும், அவளைக் காட்டிலும் அதிக திறமையோடு நடிக்கப் போவதையும் கேள்வியுற்ற ஜனங்கள் அவள் எப்போது வரப் போகிறாள் என்று மிகுந்த ஆவலுடன் அவளது வருகையை எதிர்பார்த்திருந்தனர். சிறிது நேரத்தில், ஊர்வசி வர வேண்டிய காட்சி ஸமீபித்தது. எல்லோரும் இமை கொட்டாமல் மேடையையே பார்த்தவண்ண மிருந்தனர். அவள் வருவதற்கு அடையாளமாக ஒரு தில்லானா வாசிக்கப்பட்டது. அடுத்த நிமிஷத்தில், ஆகாயத்திலிருந்து ஒரு கந்தருவ ஸ்திரீ இறகுகளுடன் பறந்து வெகு அழகாய்க் கீழே வந்து சேர்ந்தாள். அவளது ஜாஜ்வல்லியமான பேரழகைக் கண்ட ஜனங்கள் பிரமிப்படைந்து பேச்சு மூச்சற்று உட்கார்ந்திருந்தனர். அவள் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வந்ததே தெரியாமல் பறந்து வருவதைப் போல சாமர்த்தியமாக வந்து சேர்ந்ததைக் கண்ட ஜனங்கள் அனைவரும் வியப்படைந்தனர். அதுவரையில் இருந்த ஓசையெல்லாம் அடங்க சப்தமே இல்லாமல் ஒடுங்கியது. பூமியில் வந்தவுடன் அவள் பேச ஆரம்பித்தாள். அவள் ஸாதாரணமாகப் பேசியதே பாடுவதைப் போல செவிகளுக்கு மிக்க இனிமையாக கோகிலத்வனியைப் போலக் கேட்டது. அவள் ஸந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ஊர்வசியின் மனநிலைமையை நன்றாக வெளிப்படுத்தி அழகாய் மொழிந்தது ஜனங்களின் செவிகளைவிட்டு அகலாமல், அமிர்தம் சொரிவதைப் போலிருந்தது. எல்லோரும் அடக்கவொண்ணாத சந்தோஷத்தினால் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தனர். அந்தக் காட்சி முடிய, அவள் உள்ளே போனவுடன், கோவிந்தசாமி ராவ் மனங்கொள்ளா மகிழ்வோடு ஓடி வந்து, ''ஸஞ்சலாட்சி! நீ பெருத்த புகழை சம்பாதித்துக் கொண்டாய். இத்தனை வருஷமாக இங்கு நடித்தவர்களுள் ஒருத்தியாவது உன்னைப்போல நடித்ததேயில்லை. உன்னை பாயிஸாகேப்புகள் பெரிதும் மெச்சிக் கொள்ளுகிறார்கள்'' என்று சொல்லிவிட்டு அப்பால் நடந்தார். அடுத்த நிமிஷத்தில் கிருஷ்ணவேணி ஓடோடியும் வந்து மல்லிகாவை மிகுந்த ஆசையோடு கட்டித் தூக்கி இறுக ஆலிங்கனம் செய்து கொண்டு தனது பெருமகிழ்வைத் தெரிவித்தாள்.

பிறகு, மல்லிகா தோன்றிய ஒவ்வொரு காட்சியிலும் அவள் வரும்போதும், பேசும்போதும், பாடும்போதும், உள்ளே போகும் போதும், ஜனங்களது மனதை அவள் காந்தத்தைப் போலக் கவர்ந்து தன் வசமாக்கினாள். அவர்கள் தம்மை முற்றிலும் மறந்து அடிக்கடி பெருத்த கரகோஷம் செய்த வண்ணமிருந்தனர். அவள் முதல் நாள் கற்றுக்கொண்டு மறு நாள் அவ்வளவு பெரும் புகழ் சம்பாதித்ததைப் பற்றி எல்லோரும் அதிசயித்தனர்.

ஜனங்களில் ஆண்பாலரிருந்த இடத்தில் கோனூர் மிட்டாதார் உட்கார்ந்திருந்தார். அவர் வந்த சிறிது நேரத்தில் பீமராவ் வந்து சேர்ந்தான். அவன் தமயந்திக்குச் சொந்தக்காரனென்னும் பாத்தியத்தினால் ஒவ்வொரு நாடகத்திற்கும் உள்ளே வர அநுமதி பெற்றிருந்தான். அன்று அவனது மன நிலைமை எப்படி இருந்ததென்பதைச் சிறிது கவனிப்போம். அவன் பல நாட்களாக மல்லிகாவைத் தேடிக் காணாமல், மனவருத்தமடைந்தவனாய் தனது எண்ணம் பலியாமற் போய்விட்டதைப் பற்றி ஏங்கி, ஓரிடத்தில் தரித்து நில்லாமல் பைத்தியங் கொண்டவனைப் போல அலைந்து திரிந்து கொண்டிருந்தான்; வைத்திய சாலையிலிருந்த தமயந்தியை அடிக்கடி பார்த்துப் பெரிதும் விஸனப்படுபவன் போலப் பாசாங்கு செய்துவிட்டு வந்து விடுவான். அவன் ஒவ்வொரு நாடகத்தையும் விடாமல் பார்த்தவனாதலால், அவனது மனம் அதிலும் செல்லவில்லை. என்றாலும், அன்று நாடகத்திற்குப் போனால் சற்று நேரமாகிலும் தனது மனோ வியாதி நீங்கிவிடும் என்னும் நினைவோடு அங்கு வந்தான். கோனூர் மிட்டாதார் இருந்ததைக் கண்டு அவருக்கருகில் வந்து உட்கார்ந்து ஸம்பர்ஷித்துக் கொண்டிருந்தான். நாடகம் ஆரம்பத்தின் சில நாட்கள் வரையில் அவன் அதைக் கவனியாமல் நிரம்பவும் அலட்சியமாக எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தான். ஊர்வசி வரப்போகிறாளென்று ஜனங்கள் ஆவலுடனிருந்த போதும், அவன் அதைக் கவனிக்காமல் இருந்தான். மல்லிகா தோன்றி சிறிது நடித்தவுடன் ஜனங்கள் செய்த கரகோஷத்தைக் கண்டு அவன் அவளைப் பார்த்தான்; உடனே திடுக்கிட்டு உற்று நோக்கினான்; சந்தேகப்பட்டுத் தனது கண்களைத் துடைத்துக்கொண்டு திரும்பவும் பார்த்து, அவள்தான் மல்லிகாவென்று தெரிந்து கொண்டான்.

"ஆகா! கடைசியாக இவள் இவ்விடத்திலா இருக்கிறாள்! இன்று என் நல்ல வேளைதான் இங்கு என்னைக் கொண்டு வந்து விட்டது!" என்று பெரிதும் மகிழ்ச்சியடைந்தவனாய், எப்போது நாடகம் முடியுமோவென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். மல்லிகாவின் திறமையைக் கண்ட ஜனங்கள் ஒவ்வொரு காட்சியிலும் அவள் செய்த அற்புதச் செயல்களைத் திரும்பக் காண்பிக்கும்படி கேட்டுக் கொண்டமையால், அன்று நாடகம் முடிய இரவு பத்து மணி நேரமாயிற்று. அது முடிவடைந்தவுடன் பாயிஸாகேப்புகள் மல்லிகாவிற்கு ஒரு தங்கத் தோடாவைப் பரிசளித்தனர். அதன் பிறகு கூட்டம் கலைய, எல்லாரும் தத்தம் இருக்கைக்குச் சென்றனர். நாடகக் கொட்டகையின் பின் புறத்தில், நடிப்போரின் உபயோகத்திற்காக ஒரு சிறிய வழி விடப்பட்டிருந்தது. வழக்கமாகப் பீமராவ் அவ்விடத்திற்குப் போய் நின்று கொண்டிருந்து தமயந்தியை அழைத்துப் போவான்; அம்மாதிரியே அன்றைய தினம் அவ்விடத்திற்குப் போய் நின்று கொண்டிருந்தான். சற்று நேரத்தில் கிருஷ்ணவேணியும் மல்லிகாவும் வெளியில் வந்தார்கள். அதற்கு முன் அவளது தந்தை வந்திருப்பான். அன்றைய தினமும் அப்படியே வரும்படி கிருஷ்ணவேணி ஏற்பாடு செய்திருந்தாள். ஆகையால், அவன் வந்திருப்பான் என்னும் எண்ணத்தோடு ஆவலுடன் கிருஷ்ணவேணி நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தாள். அவன் எங்கும் காணப்படவில்லை. கால் நாழிகை நேரம் வரையில், அவர்கள் அங்கு நின்று அவனது வரவை எதிர்பார்த்தனர். அந்தச் சமயத்தில் அரண்மனை வேலைக்காரனொருவன் குடி வெறியினால் மயங்கி தட்டித் தடுமாறி ஆடிக் கொண்டு வந்து அவர்களுக்கெதிரில் கீழே விழுந்தான். அதைக் கண்ட மங்கையர் இருவரும் அச்சங் கொண்டு நடுங்கி நின்றனர்.

நிகழ்ந்தவற்றை சற்று தூரத்திலிருந்தபடியே கவனித்த பீமராவ் உடனே மெல்ல அவர்களுக்கெதிரில் வந்து, "கிருஷ்ணவேணி பாயி! பயப்பட வேண்டாம்; நானிருக்கிறேன். இவன் குடி வெறியினால் மயங்கி விழுந்திருக்கிறான். நீங்கள் வீட்டுக்குப் போகாமல் ஏன் நிற்கிறீர்கள்? எங்கே பெரியவர்?" என்றான். கிருஷ்ணவேணி அவனைக் கண்டு நாணமடைந்து சற்று தூரம் விலகினாள். ஆயினும், அந்தச் சமயத்தில் அவனுக்கு

மறுமொழி சொல்லாமலிருப்பது பிசகென்று நினைத்து, ''வழக்கமாக வருகிறவர் இன்னும் வரவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை. இவ்வளவு நேரமான பிறகு இனி வருவாரோ மாட்டாரோ தெரியவில்லையே!'' என்று நிரம்பவும் கிலேசத்தோடு தெரிவித்தாள். அதைக் கேட்ட பீமராவ், ''நீங்கள் இதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். இதோ நான் துணையாக வருகிறேன். போவோம் வாருங்கள்'' என்றான்.

''ஐயோ பாவம்! உமக்கு அவ்வளவு சிரமம் கொடுக்கக் கூடாது'' என்றாள் கிருஷ்ணவேணி.

''சிரமமொன்றுமில்லை; அரை நாழிகைக்குள் உங்களை வீட்டில் கொணர்ந்து விட்டுவிட்டு நான் வந்து விடுகிறேன்'' என்று வற்புறுத்திக் கூறினான் பீமராவ்.

''யார் இவ்வளவு தூரம் உதவி செய்யப் போகிறார்கள்! இருந்தாலும் உமக்கு இவ்வளவு சிரமம் கொடுக்க வேண்டியிருப்பதைப் பற்றியே நான் கவலைப்படுகிறேன்'' என்று சொல்லியவண்ணம் கிருஷ்ணவேணி நடக்க ஆரம்பித்தாள். அவளை அடுத்தாற்போல மல்லிகா தொடர்ந்து நடந்து சென்றாள். தான் துணை வருவதற்கு அவர்கள் சம்மதித்து விட்டார்கள் என்றுணர்ந்த பீமராவ் அவர்களைத் தொடர்ந்து நடந்தான்.

அவ்விதம் மூவரும் மௌனமாக சற்று தூரம் நடந்தனர் அபபடி மௌனமாக நடப்பது சரியல்லவென்று நினைத்த கிருஷ்ணவேணி, ''ஏன் ஐயா! இன்று நீர் நாடகம் பார்த்தீரா?'' என்றாள்.

''ஆம்; பார்த்தேன். ஆனால், நான் உன்னைப் வஞ்சப் புகழ்ச்சி செய்வதாக நினைக்கக் கூடாது. இன்று நீ நிரம்பவும் அழகாக நடித்தாய்! எனக்கு உன் விஷயத்தில் எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?'' என்றான் பீமராவ்.

''என்னுடைய வேஷமிருக்கட்டும்; அதுதான் மகா பெரிய வேஷமாயிற்றே! ஸஞ்சலாட்சியின் வேஷம் எப்படி இருந்தது?'' என்றாள் கிருஷ்ணவேணி.

''ஊர் முழுவதும் அதைப் பற்றிப் புகழும்போது, நான் அதைச் சொல்ல வேண்டுவதில்லை'' என்று மறுமொழி சொல்லிவிட்டு,

நிரம்பவும் தந்திரமாக மல்லிகாவைப் பற்றி அதிகமாக ஒன்றும் பேசாமல் சம்பாஷணையை வேறு விஷயத்தில் பீமராவ் திருப்பினான். அவ்விதம் உரையாடியவண்ணம் அவர்கள் மூவரும் கருந்தட்டாங்குடிக்கு வந்து சேர்ந்தனர்.

''இதுதான் எங்களுடைய தெருவு. இனிமேல் நாங்களே போய்விடுகிறோம். நீர் இன்னும் சிரமப்பட வேண்டாம். நீர் செய்த உதவிக்கு நாங்கள் என்ன பதில் உதவி செய்யப் போகிறோம். ஏன் ஸஞ்சலாட்சி! நீ சொல்'' என்றாள் கிருஷ்ணவேணி.

''ஆம் உண்மைதான்!'' என்ற மெதுவாக மறுமொழி சொன்னாள் மல்லிகா.

''இவ்வளவு தூரம் நான் வந்தும், உங்களை வீட்டில் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்க்காமல் போவது பிசகு'' என்று சந்தோஷமாகத் தெரிவித்தான் பீமராவ்.

அதன் பிறகு இரண்டொரு நிமிஷத்தில் அவர்கள் மூவரும் கிருஷ்ணவேணியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். அது அவர்கள் முன்னிருந்த சிறிய வீடல்ல. மல்லிகா வந்த பிறகு அதில் இடம் போதவில்லையென்று அவர்கள் வேறொரு சிறிய மெத்தை வீட்டிற்கு மாற்றிக் கொண்டார்கள். கிருஷ்ணவேணி கதவை இடித்தவுடன், வேலைக்காரக் கிழவி வந்து கதவைத் திறந்து விட, இரண்டு மங்கையரும் கூடத்திற்குப் போயினர். அங்கு ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கிருஷ்ணவேணியின் தந்தை ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டு வேறொரு நாற்காலியில் தனது கால்களை நீட்டிய வண்ணம், 'அம்மா' 'அப்பா' என்று அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். அதைக் கண்ட கிருஷ்ணவேணி நிரம்பவும் பதைபதைத்தவளாய், ''என்ன சங்கதி?'' என்று கேட்டுக்கொண்டே கிழவனுக்கருகில் விரைவாகச் சென்றாள்.

''கிழவனுக்கு விசேஷமொன்றுமில்லை. உங்களை அழைத்துக் கொண்டு வரப் புறப்பட்டு மெத்தையிலிருந்து கீழே இறங்கினேன். கால் வழுக்கிக் கீழே விழுந்தேன்'' என்றான்.

''ஐயையோ! கால் போய்விட்டதா?'' என்று சொல்லிய வண்ணம் ஆவலோடு சென்று காலிற்கருகில் உட்கார்ந்து அதை உற்று நோக்கினாள் கிருஷ்ணவேணி. ''இல்லை இல்லை;

கொஞ்சம் சுளுக்கிக் கொண்டிருக்கிறது. அதிகமாக நடக்க முடியவில்லை'' என்றான் கிழவன். அந்த ஸமயத்தில் பீமராவும் உள்ளே வர, உடனே கிருஷ்ணவேணி, ''இன்று இவருடைய உதவியாலேதான் நாங்கள் வீடு வந்து சேர்ந்தோம்'' என்று அவனைக் காட்ட, கிழவன் திரும்பி அவனைப் பார்த்து, ''ஓகோ! அப்படியா! பீமராவா! வாடா அப்பா! நீ வந்தது நிரம்பவும் அருமை! வா; இந்தப் பலகையில் உட்கார்'' என்று உபசரிக்க, பீமராவ் அப்படியே உட்கார்ந்து கொண்டு அவனது காலின் சுளுக்கைப் பற்றி நிரம்பவும் கவலையோடு விசாரணை செய்தான்.

அதற்குள் கிழவி, எல்லோருக்கும் போஜனத்திற்கு இலைகள் போட ஆரம்பித்தாள். கிருஷ்ணவேணி பீமராவை பார்த்து, ''இன்னும் போஜனம் ஆகவில்லைபோலிருக்கிறது. இப்படியே அப்பாவுடன் உட்கார்ந்து போஜனம் செய்து விட்டுப் போகலாமே'' என்றாள். உடனே கிழவனும் அன்போடு அவனை வற்புறுத்த, அவன் அதற்குச் சம்மதித்தான்.

அன்று அதிர்ஷ்டம் அவனுடைய சார்பிலிருந்தது. கொட்டகைக்கருகில் குடிவெறியன் வந்ததும், வீட்டில் கிழவன் மெத்தைப் படியிலிருந்து விழுந்ததும் பீமராவுக்கு மிக்க அநுகூலமாக முடிந்தன. அந்த வீட்டிற்குள் வந்து அவர்களுடன் அவ்வளவு அன்னியோன்னியமாகப் பேசிப் பழக, அவன் எத்தனையோ மாதங்கள் முயன்றாலும் அது அவ்வளவு ஸுலபத்தில் முடிந்திராது. அவன் நிரம்பவும் தந்திரியாதலால் கிழவனிடத்திலும், கிருஷ்ணவேணியிடத்திலுமே அதிக கவனமாய்ப் பேசினானேயன்றி, அவன் மல்லிகாவைக் கவனித்துப் பேசியதாகக் காட்டிக் கொள்ளவில்லை. போஜனமான பிறகு அவன் தனது வீட்டிற்குப் போகப் புறப்பட்டான்.

''உம்முடைய கால் சீக்கிரம் சௌக்கியமாகி விடும் என்று நினைக்கிறேன். ஆனால், இன்னம் நாலைந்து நாட்களுக்கு நீர் நடக்க முடியாதென்று தோன்றுகிறது. இந்த நாடகம் நன்றாயிருக்கிறதென்று இதையே திரும்ப நாளைக்கும் வைத்திருக்கிறார்களாம். நாளைக்கு இவர்களை நானே கொண்டு வந்து விடுகிறேன். நீர் இந்த நிலைமையில் சிரமப்பட்டுக் கொண்டு வர வேண்டியதில்லை'' என்றான்.

“நிரம்ப சந்தோஷம்! இந்த உபகாரம் யார் செய்யப் போகிறார்கள்?” என்றான் கிழவன். உடனே பீமராவ் கிருஷ்ணவேணியைப் பார்த்துப் புன்னகை செய்து, விடை பெற்றுக் கொண்டு, மல்லிகாவிடத்திலும் தான் போய் வருவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டு வெளியில் நடந்தான்.

பிறகு மல்லிகா மெத்தையின் மேல் தனது படுக்கைக்குச் சென்றாள். பீமராவின் அழகிய முகமும் அவனது மரியாதையான மொழிகளும் அவன் காட்டிய எதிர்பாராத அன்பும் அவளுடைய நினைவில் அடிக்கடி வந்து தோன்றின. அவற்றை அலட்சியமாக விலக்க முயன்றும் திரும்பத் திரும்ப அவைகள் பிடிவாதமாக அவளது மனதில் உதித்தன. ஆனால், அவைகள் அவளது மனதிற்கு இன்பத்தையாவது, துன்பத்தையாவது உண்டாக்கவேயில்லை; சிறிது நேரத்தில் அவளது மனதில் வஸந்தராவின் உருவமும் நினைவும் தோன்றி அதைக் கவர்ந்து கொண்டன. தான் அவரையே யாவரிலும் விசேஷமாக மதித்து, மானம் முதலியவற்றை இழந்து அவரோடு வந்து மோசம் போனதை நினைத்து அவள் பெரிதும் வருந்தினாள். என்றாலும், அவர்மீது வைத்த காதல் தனது மனமும் தேகமும் அழிந்தாலன்றி மாறாதென்பதை மாத்திரம் உறுதியாக வைத்துக் கொண்டாள். தான் இனி வேறு புருஷரைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்ட வண்ணம் அவள் துயிலிலாழ்ந்தாள்.

17–வது அதிகாரம்

கடைமுக ஸ்நானம்

நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்த நிலவில் பீமராவ் பெரிதும் குதூகலமும் பூரிப்புமடைந்தவனாய்த் தன்னை மறந்து நடந்தான். தான் எவ்வளவோ பாடுபட்டு எத்தனையோ நாட்களாகத் தேடிய மல்லிகாவை தான் தற்செயலாகக் கண்டு பிடித்ததும், இரண்டொரு நாழிகைக்குள் அவளுடன் பழக்கம் செய்து கொண்டதும் தெய்வச் செயலினால் என்றே உறுதியாக மதித்தான். தனக்கு அவள் மனையாட்டியாக வாய்ப்பதற்கு அது நல்ல சகுனமென்று நினைத்தான். அதுவரையில் அவளது ஏராளமான செல்வத்தைக் கருதியே அவளைத் தேடினான். அன்று அவளது பேரழகைக் கண்ட முதல் அவள் மீது கடுமோகங் கொண்டு எப்படியாகிலும் அவளைத் தான் மணந்தாலன்றித் தனக்கு இந்தப் பிறவியில் வேறு யாதொரு சார்த்தகமும் இல்லை என்று நினைத்தான். எவ்விதமாகிலும் தந்திரஞ் செய்து அவளது மனதைக் கவர எண்ணங் கொண்டான்.

மறு நாள் மாலை ஆறு மணிக்கே அவன் கிருஷ்ணவேணியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்; மங்கையர் இருவரும் அப்போது நாடகக் கொட்டகையில் இருப்பார்களென்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்ததாயினும், அவர்களில்லாத காலத்தில் வந்ததைக் கொண்டு, மல்லிகா தன்னை யோக்கியன் என்று மதிப்பாளென்று எண்ணினான்; கிழவனுடன் ஒருமணி நேரம் வரையில் மிக்க அன்னியோன்னியமாகப் பேசிக் கொண்டிருந்தபின், ''உமக்கு இன்னம் இரண்டு மூன்று நாட்களில் சௌக்கியமாகி விடும். கடைமுக ஸ்நானம் இன்றைக்கு நான்காம் நாள் வருகிறது. நாமெல்லோரும் வேடிக்கையாக திருவையாற்றுக்குப் போய் காவிரி ஸ்நானம் செய்து விட்டுத் திரும்பி வருவோம். உம்முடைய தேகத்துக்கும் அது ஆரோக்கியமாக இருக்கும். நான்

பெட்டி வண்டி கொண்டு வருகிறேன். திருவையாற்றில் ஆற்றின் ஓரத்தில் எனக்கு ஒரு மெத்தை வீடு இருக்கிறது. அதில் ஸுகமாக இறங்கி ஒரு நாள் இருந்துவிட்டு வரலாம்'' என்றான் பீமராவ்.

"நீ எப்போதும் தாராள மனதுடையவன் என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், உன் பொழுதை வீணாக்க எனக்கு மனமில்லை'' என்றான் கிழவன். பீமராவ் சிரித்துக் கொண்டு, "எனக்கு என்ன தாசில் உத்தியோகமா? ஒரு நாளில் 24 மணி நேரமும் எனக்கு ஒழிவுதான். அதை எப்படிக் கழிப்பதென்பதை அறியாமல் நான் அவஸ்தைப் படுகிறேன். புண்ணிய ஸ்தலத் திற்குப் போவதிலா நம்முடைய காலம் வீணாய்ப் போகும்? அதைப் பற்றிக் கவலை வேண்டாம். நாம் அவசியம் போக வேண்டும். நான் அன்று வண்டியோடு தவறாமல் வந்து சேரு வேன். நீங்கள் மூவரும் தயாராக இருக்க வேண்டும்'' என்றான்.

"கிருஷ்ணவேணி கூட திருவையாற்றுக்குப் போக வேண்டும் என்று பல தடவைகளில் ஆசையோடு சொல்லியிருக்கிறாள். ஆகையால், இதைக் கேட்டவுடன் அவள் நிரம்பவும் சந்தோஷ மடைவாள். ஆனால், ஸஞ்சலாட்சியின் குணம் வேறு மாதிரி யானது. அவள் அதிகமாக சந்தோஷப்படுவதுமில்லை. வீணாகப் பேசுவதுமில்லை. அவளுக்கு விளையாட்டுகளில் விருப்பமே யில்லை. ஆகையால், அவள் வருவதுதான் சந்தேகம்'' என்றான் கிழவன்.

"அவள் வந்தால் நீங்கள் போவதாயும், வராவிட்டால் பிரயாணத்தை நிறுத்தி விடுவதாயும் தெரிவித்தால், அவள் அவசியம் வருவாள்'' என்று சொல்லியவண்ணம் பீமராவ் புறப் பட்டு அரண்மனைத் தோட்டத்திற்குப் போய், இரண்டு ஸ்திரீ களையும் அழைத்துக் கொண்டு திரும்பவும் கருந்தட்டான்குடிக்கு வந்து சேர்ந்தான். அப்போது சாதாரணமான இரண்டொரு வார்த்தை களைத் தவிர, அதிகமாக எதையும் அவன் பேசவில்லை.

கடைமுக தினத்தன்று காலை ஆறுமணிக்கு கிருஷ்ணவேணி யின் வீட்டு வாசலில் ஒரு பெட்டி வண்டி வந்து நின்றது. பீமராவ் வண்டியை விட்டிறங்கி, அவர்கள் யாவரும் மெத்தையின் மேல் இருந்ததையறிந்து, அங்கு விரைவாகச் சென்றான். முதலில் மல்லிகா எதிர்ப்பட்டாள். அவளை நோக்கி, "புறப்படவில்

லையா?'' என்று புன்சிரிப்போடு கேட்டான் பீமராவ். அவள், ''நான் வரவில்லை'' என்று நாணத்துடன் சொல்லிவிட்டு அப்பால் போய்விட்டாள்.

திருவையாற்றுக்குப் புறப்படத் தயாராக அலங்காரம் செய்து கொண்டிருந்த கிருஷ்ணவேணி அதைக் கேட்டு, ''அப்படி யானால் ஒருவரும்போக வேண்டாம். அவள் வராமல் நமக்கு மாத்திரம் என்ன திருவையாறு வேண்டியிருக்கிறது. ஸஞ்சலாட் சிக்கு எப்போதும் ஒரே பிடிவாதந்தான். கெட்ட காரியத்துக்கும் அப்படியே; நல்ல காரியத்துக்கும் அப்படியே. இதுதான் ஒவ்வொரு சமயத்தில் அருவருப்பைத் தருகிறது'' என்று கடுமை காட்டிய முகத்தோடு குறையாகக் கூறினாள்.

''சே! அப்படியல்ல! அவள் காரணமில்லாமல் ஒரு நாளும் பிடிவாதம் செய்பவளல்ல. ஏதாகிலும் காரணமிருக்கலாம். அவள் மனசுக்கு விரோதமாக நாமேன் செய்ய வேண்டும்; ஒருவேளை அவளுக்கு என் மேல் ஏதாவது வருத்தமிருக்கலாம்'' என்றான் பீமராவ்.

''இல்லை இல்லை; அப்படியொன்றுமில்லை. வரக்கூடா தென்பதல்ல. எங்கும் போகாமல் வீட்டிலிருப்பதே எனக்கு பரம ஸுகமாக இருக்கிறது'' என்றாள் மல்லிகா.

''சரி; அப்படியானால் நீர் திருவையாற்றுக்குப் போய் எங்களுக்கும் சேர்த்து ஸ்நானம் செய்து விட்டு வாரும்'' என்று கூறியவண்ணம் கிருஷ்ணவேணி மிக்க அழகாய் எடுத்துக் கட்டப் பட்டிருந்த தனது தலைப்பின்னலை ஆத்திரத்தோடு அவிழ்க்கத் தொடங்கினாள். அதைக் கண்ட மல்லிகா பெரிதும் மனக்கிலேசம் அடைந்தவளாய், ''அடடா! என் மேல் நீங்கள் இவ்வளவு வருத்தப்படுவதாய் இருந்தால் நான் இதோ வந்து விட்டேன். நான் அவசியம் வர வேண்டுமென்று என் விஷயத்தில் நீங்கள் இவ்வளவு அந்தரங்கமான அபிமானம் வைத்திருப்பதைக் கவனியாமல் அதற்குப் பிரதி உபகாரமாக உங்கள் மனசுக்கு வருத் தத்தையா உண்டாக்குவது? நானும் வருகிறேன். புறப்படுங்கள்'' என்று எழுந்தாள் மல்லிகா. உடனே கிருஷ்ணவேணியின் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. அவளும் குதித்துக் கொண்டு எழுந்தாள். பிறகு கால் நாழிகையில் நால்வரும் வண்டியில்

உட்கார்ந்து கொள்ள, அது திருவையாற்றை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

அன்றைய தினம் காலைப் பொழுது மிக்க மனோக்கியமாக இருந்தது. செல்லும் வழி முழுதும், பல ஆறுகளும், வாய்க்கால் களும் குறுக்கிடுதலும், பக்கங்களிலெல்லாம் தென்னை, கமுகு, வெற்றிலை முதலியவற்றின் தோட்டங்கள் அழகாய்க் காணப் படுதலும், நெல், மஞ்சள், கரும்பு முதலிய பயிர்கள் பசுமை யாகத் தோன்றுதலும் பிரம்மாநந்தமாக இருந்தன. மிருதுவான குளிர்ந்த காற்று வீசி மனதை ஊக்கி இன்பத்தில் ஆழ்த்தியது. அதற்கு முன் ஒரு நாளும் பெட்டி வண்டியில் சவாரி செய்தவர்கள் அன்றாகையால், அவர்கள் அவ்வித அழகான காட்சிகளைக் கண்டு பரவசம் எய்தினர். ஆனால், மல்லிகாவிற்கோ அவளது மனதில் மறைந்து கிடந்த விசனம் அடிக்கடி தோன்றி அவளது உல்லாசத்தைக் குலைத்தது. கிருஷ்ணவேணி மெய்ம்மறந்து நகைத்து குழந்தையைப் போல விளையாடி ஹாஸ்யமாகப் பேசி யாவரிடத்திலும் பரிஹாசம் செய்து கொண்டே சென்றனள். கிழவனும் அவர்களுடன் குழந்தையைப் போலத் தனது மன மகிழ்ச்சியைத் தோற்றுவித்தான். அவர்கள் மூவருக்கும் பீமராவிடத்தில் ஒருவித அன்பும் அபிமானமும் ஏற்பட்டன. நெடுநாட் பழகினவளைப் போல கிருஷ்ணவேணி அவனோடு நிரம்பவும் தாராளமாக விளையாடிப் பரிஹாசம் செய்யத் தொடங்கினாள். அவன் கிருஷ்ணவேணியிடத்திலும் கிழவனி டத்திலும் நிரம்பவும் உறவு பாராட்டி தாராளமாகப் பேசிய வண்ணம் சென்றானாயினும், மல்லிகாவிடத்தில் பேசிய போதெல்லாம், அவன் தனது குரலை நிரம்பவும் பட்சமாகவும், மரியாதையாகவும் மாற்றி அடக்கியவண்ணம் அப்போதைக்கப் போது எதையாகிலும் மொழிந்த வண்ணம் சென்றான். திருவையாற்றில் காவிரியாற்றின் வடகரையின் மேல் வரிசையாக மெத்தை வீடுகளும், மண்டபங்களும் இருந்தன. அவற்றிலிருந்து பின்புறமாக ஆற்றிற்குள்ளிறங்கி ஸ்நானம் செய்ய கருங்கல் படித்துறைகள் அழகாக அமைக்கப்பட்டிருந்தன. அவ்விடத்தில் அவர்கள் தங்குவதற்கு பீமராவ் ஒரு மெத்தை வீட்டை அமர்த்தி யிருந்தான். அதற்குள் அவர்கள் நால்வரும் சென்றனர். ஆறு நிறைய தெளிந்த ஜலம் அழகாகப் போய்க்கொண்டிருந்தது.

அவ்வீடுகளின் பின்புற வாசற்படிகள் வரையில் ஆற்றின் ஜலம் எட்டியிருந்தது மிக்க வேடிக்கையாக இருந்தது. அரை நாழிகையில் எல்லோரும் ஆற்றில் ஸ்நானம் செய்தான பிறகு, மெத்தையிற் சென்று உட்கார்ந்து கொண்டனர். அருகில் பளபளப்பாக ஓடிய விஸ்தாரமான நீர்ப்பரப்பை அந்த மேன்மாடத்திலிருந்து பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. எதிர் பக்கத் துறையில் யௌவன ஸ்திரீகளும் புருஷரும் வரிசை வரிசையாக நின்று வஸ்திரங்களைத் துவைத்து ஸ்நானஞ் செய்வதும், அந்தணர் முதலியோர் விபூதி உருத்திராக்ஷங்களுடன் மண்டபங்களிலும் அரசமரத்தடிகளிலும் பத்தி பத்தியாக உட்கார்ந்து ஜெபம் செய்வதும் மனோரம்மியமாக இருந்தன.

பீமராவ் தனது நண்பர்களுக்கு நல்ல முதல் தரமான விருந்து செய்யும்படி ஒரு போஜனசாலையில் ஏற்பாடு செய்திருந்தான். ஆகையால், அங்கிருந்து பஞ்சபக்ஷிய பரமான்னத்துடன் மாதுரியமான போஜனம் வீட்டிற்கே வந்து சேர்ந்தது. பீமராவும் கிழவனும் ஒரு பக்கமாகவும், பெண்களிருவரும் சற்று தூரத்திலும் சாப்பாட்டிற்கு உட்கார்ந்தனர். அன்று கிடைத்த போஜனத்தைப் போல் அவ்வளவு சிறந்ததை அவர்கள் தங்களது ஆயுட்காலத்திலேயே கண்டவர்கள் அல்லாதலால், அவர்கள் அடைந்த ஆநந்தத்திற்கு அளவில்லை. அப்போது தாங்கள் தெய்வலோகத்தில் இருப்பதாகவே அவர்கள் நினைத்துக் கொண்டனர்.

கிருஷ்ணவேணி, ''நம்முடைய ஆயிசுகாலம் முழுவதும் இப்படியே ஒவ்வொரு நாளும் திருவையாற்றுக்கு வந்து போஜனம் செய்தால் எப்படி இருக்கும் தெரியுமா! உலகத்தில் இவ்வளவு இன்பங்கள் இருக்க, இவற்றை விட்டு நாம் உழைப்பதிலேயே காலத்தை வீணாக்குகிறோமே?'' என்றாள். மல்லிகா பெருமூச்சு விட்டாள். பீமராவ் உடனே புன்னகை செய்து, ''சரியான கேள்வி! நாம் எப்போதும் சந்தோஷமாக இல்லாதது நம்முடைய குற்றமேயொழிய வேறல்ல'' என்றான்.

''ஆனால், தினந்தினம் திருவையாற்றில் நான் விருந்து சாப்பிடாததும் என்னுடைய பிசகுதானோ?'' என்று பரிஹாஸமாகக் கேட்டாள் கிருஷ்ணவேணி.

பீம : ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் இன்பம்; உனக்கு இந்த ஊரில் தினம் விருந்து சாப்பிட வேண்டும்.

கிரு : விருந்து சாப்பிடுவது மாத்திரம் சுகப்படாது. தினம் பெட்டி வண்டியில் வர வேண்டும். ஆற்றங்கரையின் ஓரத்தில் இப்படி மெத்தை வீட்டில் இறங்கியிருந்து போஜனம் செய்ய வேண்டும்.

பீம : நீ சொல்வது சரிதான். ஆனால் சில மனிதரை சுவர்க்க போகம் நிறைந்த இடத்தில் வைத்தாலும் அவர்களுக்குச் சந்தோஷமே உண்டாவதில்லையே; அதற்குக் காரணமென்ன?

கிரு : பைத்தியம் பிடித்தவர்களை அடைக்கும் வைத்தியச் சாலைக்குத்தான் அவர்களை அனுப்ப வேண்டும்.

பீம : (புன்சிரிப்போடு) அப்படியானால் நம்முடைய ஸஞ்சலாட்சியை அங்கே அனுப்ப வேண்டுமென்று சொல்லு வாய் போலிருக்கிறதே! அதற்கு மேலே சொல்ல எனக்கு அச்சமாக இருக்கிறது.

கிரு : மனசில் நினைப்பதை மறைக்க வேண்டாம். சொல்லி விடும். இவள் என்ன கடித்தா முழுங்கி விடுவாள்? இவள் மனமும், குணமும் இவர் பார்க்கும் பார்வையைப்போல, அவ்வளவு கொடுமையானவையல்ல. தைரியமாகச் சொல்லும்.

பீம : (அன்போடு) ஸஞ்சலாட்சி! உன்னுடைய விருப்பம் எது? எப்படி இருப்பது ஸுகம்?

மல்லி : (மெதுவாக) உலகப் பற்றையெல்லாம் மறந்து, சும்மா இருப்பது ஸுகம்.

பீம : பேஷ்! சரியான சங்கதி! நாமெல்லோரும் எந்த விஷயத்தையும் மனதில் வைத்துப் பாராட்டுவதை இன்பமாக நினைக்கிறோம். ஸஞ்சலாட்சி எல்லாவற்றையும் மறப்பதே ஸுகமென்கிறாள். இதை நமக்கு வேறு யார் கற்றுக் கொடுக்கப் போகிறார்கள்?

கிரு : இந்த விருந்தை நான் ஒருநாளும் மறக்கமாட்டேன்.

பீம : இதை மறக்காமலிருக்க நீ அதிக சிரமப்பட வேண்டு வதில்லை. அதிசீக்கிரத்தில் இவ்விடத்தில் வேறொரு விருந்துக்கு ஏற்பாடு செய்கிறேன். விருந்து ஒன்றன்மேல் ஒன்றாகக் கிடைத் தால், இந்த நினைவு உன் மனசை விட்டு ஒருநாளும் நீங்காது என்றான்.

அவ்விதம் உரையாடியவண்ணம் அவர்கள் தங்களது போஜனத்தை முடித்துக் கொண்டனர்.

அன்றைய பகலெல்லாம், அவ்வூரிலிருந்த கோவில்கள், குளங்கள், கடைகள், முதலியவற்றையும், அருகிலுள்ள **தில்லை ஸ்தானம்** முதலிய சப்த ஸ்தலங்களையும் தரிசனஞ் செய்துவிட்டு, அன்றிரவும் அவ்விடத்தில் தங்கியிருந்து மறுநாள் விடியற்காலை ஊருக்குப் போக வேண்டுமென்று அவர்கள் தீர்மானம் செய்து கொண்டனர்.

அவ்வாறே அவர்கள் அன்று பகலில் பார்க்க வேண்டிய இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு இரவில் அந்த மெத்தை வீட்டில் தங்கினார்கள். பகலில் வந்ததைப் போலவே இரவிலும் நேர்த்தியான போஜனம் வந்து சேர்ந்தது. அவர்கள் மிகுந்த களிப்போடு போஜனம் உட்கொண்டனர்; அருகிலிருந்து ஜன்னலின் வழியாக அடிக்கடி ஆற்றை நோக்கி ஆநந்தம் எய்தினர். இரவில் தண்ணீரின் குளிர்ச்சி அதிகமாக உட்புறத்தில் வீசியதாதலின், அங்கு சகிக்கவொண்ணாத குளிர் உண்டாயிற்று; அவ்வீட்டில் இரண்டு காந்த விளக்குகள் நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஆற்றின் அக்கரையில் தோன்றிய எண்ணிறந்த விளக்குகளைப் பார்த்துக் கொண்டும் சம்பாஷித்துக் கொண்டும் இருந்த பின்னர், அவர்கள் சயனித்துக் கொள்ள நினைத்தனர்; அப்போது பீமராவ் கிழவனிடத்தில் ஒரு போர்வையைக் கொடுத்து விட்டு, சற்று தூரத்திலிருந்த கிருஷ்ணவேணிக்குப் பின்புறமாகப் போய் அவள்மீது ஒரு சால்வையைப் போர்த்தினான். அவள் மிக்க சந்தோஷமாக அதை ஏற்றுக் கொண்டாள்.

அதன் பிறகு, அடுத்த ஜன்னலில் நின்று கொண்டிருந்த மல்லிகாவுக்கும் அவ்விதமே பீமராவ் ஒரு சால்வையை போர்த்த முயன்றான். அவள், நாணத்தோடு அப்பால் விலகி, அவளுக்குப் பழைய விஷயங்கள் நினைவுக்கு வந்தன. பவானியம்மாள்புரத்து சமுத்திரக்கரையில் வஸந்தராவ் தன் மீது சால்வையைப் போர்த்தியதும், அவரது சம்பந்தமான மற்ற விஷயங்களும் ஒன்றின் பின் ஒன்றாக நினைவிற்கு வந்தன. அவர் அப்போது எங்கிருக்கிறாரோ, தன்னைப் பற்றி நினைப்பதையே விட்டு விட்டாரோ, தாம் புரிந்த வஞ்சகத்தைப் பற்றி நினைத்து அவர் கழிவிரக்கம் கொள்ளுகிறாரோ, அல்லது, வேறொரு மங்கை

யோடு உல்லாஸமாகப் பொழுதைப் போக்குகிறாரோவென்று அவள் பலவாறு நினைத்து மெய்ம்மறந்து நின்றாள். அவளுக்குத் தெரியாமல், பீமராவ், அவளது முகத்தழகைக் காந்த விளக்கின் வெளிச்சத்தினால் நெடுநேரம் உற்று நோக்கினான். அவனது மனதில் பலவிதமான துன்மார்க்க நினைவுகள் தோன்றின. "இவளை மனைவியாக அடையாத ஜென்மமும் ஜென்மமா? இவளை அணையாத சரீரம் இருந்தென்ன இறந்தென்ன? தகாத காரியத்தைச் செய்தாயினும் எப்படியாவது இவளை மணப்பதே புருஷார்த்தம்'' என்று தனக்குள் தீர்மானம் செய்து கொண்டவனாய், விசனமே குடிகொண்ட அவளது முகம், பார்வை முதலியவற்றில் தனது வஞ்சக மொழியால், காதல் தீயை மூட்ட முயன்றான்.

அன்றைய பகல் முழுதும் அலைந்த அலுப்பினாலும், போஜன மிகுதியாலும், கிழவன் உடனே நித்திரையில் ஆழ்ந்து விட்டான்; மேற்சொன்ன காரணங்களாலும், அன்று முழுதும் ஓயாத உற்சாகத்தையும் குதூகலத்தையும் காட்டியதாலும் கிருஷ்ணவேணியும் தளர்வடைந்து கடும் நித்திரையில் ஆழ்ந்து விட்டாள். பீமராவ் ஒருவனே நித்திரை வராமையால் தவிப்பவனைப் போலப் பாசாங்கு செய்து, "இவர்கள் எவ்வளவு பிரம்மானந்தமாகத் தூங்குகிறார்கள் பார்த்தாயா? எனக்கும் உனக்கும் ஏன் தூக்கம் வரமாட்டேனென்கிறது?'' என்று சொல்லிக்கொண்டே மல்லிகா இருந்த இடத்திற்குச் சென்றான். அவள் திடுக்கிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவளது கண்களிலிருந்து கண்ணீர் ஓடி வந்தது வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது. அதைக் கண்ட பீமராவ் மிகுந்த விசனத்தோடும், அன்போடும், "ஸஞ்சலாட்சி! ஏன் இப்படி விசனப்படுகிறாய்? உன்னைப் பார்த்த என் மனம் சகிக்கவில்லையே! ஆற்றைப் பார்ப்பதைப் போலத் திரும்பிக் கொண்டு ஏதோ பழைய சங்கதியை அநாவசியமாக நினைத்து விசனப்படுவது சரியா?'' என்று சொல்லிக்கொண்டே அவளிடத்தில் நெருங்கினான்.

மல்லி: நான் விசனப்படுவதைக் காண உமக்கேன் விசனம் உண்டாகிறது? உமக்கென்ன குறைவிருக்கிறது? நீர் உம்முடைய சந்தோஷத்தைக் குறைத்துக் கொள்வதேன்? நீர் எப்போதும் சந்தோஷ புருஷரென்று கிருஷ்ணவேணி அடிக்கடி சொல்லி இருக்கிறாளே.

பீம : (புன்சிரிப்போடு) கிருஷ்ணவேணி உலகத்தையே அறியாத சிறிய பெண். என்னுடைய மனசின் அந்தரங்க நிலைமை அவளுக்கெப்படித் தெரியப்போகிறது! என்னுடைய விசனத்தை அவள் எப்படி அறியப்போகிறாள்! எல்லாருடைய விசனமும் அப்படித்தான்; ஒருவரைப் பற்றி உலகத்தார் நினைப்பது தோன்று அவர் உண்மையிலிருப்பது வேறு விதம். நீ அன்று ஊர்வசியாக நடித்ததைக் கண்ட ஜனங்கள் எல்லோரும் உன்னைப் போல பாக்கியவதி ஒருத்தியுமில்லை என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால், உன்னிடம் நெருங்கிப் பார்ப்பவருக்கல்லவா உன்னுடைய உண்மையான நிலைமை நன்றாகத் தெரிகிறது.

மல்லி : என்னைப் பார்த்தால் விசனப்படுபவள் போலவா இருக்கிறது? அப்படியொன்றுமில்லையே!

பீம : நான் உன்னுடைய மனசிலிருக்கும் ரகஸியங்களை அறிய விரும்புவதாக நீ நினைக்க வேண்டாம். ஆனால், உன்னைக் காணும் போதெல்லாம் என் மனம் சகிக்க முடியாத ஏதோ விசனத்தை அடைகிறது. உன்னுடைய வேதனையின் காரணத்தை அறியாவிட்டாலும், அதன் பளுவைக் குறைக்க வேண்டுமென்று என் மனம் துடிக்கிறது. அன்று உன்னை ஊர்வசியாகப் பார்த்தபோதே, உன்னிடத்தில் விளக்க முடியாத ஒரு சக்தி என் மனதைக் கவர்ந்துவிட்டது. அன்று உன்னைக் கண்ட நிமிஷத்திலேயே உன்னோடு நெருங்கவும் பழகி என்னைப் போல உன்னிடத்தில் வேறொன்றுமறியா அன்பும் பிரியமும் உண்டாயின. உன் விசனமும் சந்தோஷமும் என்னுடையவைபோலத் தோன்றுகின்றன. நீ விசனப்பட்டால் அது என் மனசில் சுருக்கென்று தைக்கிறது; உன் கண்களில் நீர் ததும்புகிறது. நீ சந்தோஷப்பட்டால் என் தேகம் பூரிக்கிறது. இனி நான் உன்னை எப்படி மறப்பேன்? இவ்வளவு தூரம் பழகிய பிறகு உன்னை விட்டுப் பிரிந்து அன்னியனைப் போலிருக்க எப்படி முடியும்? ஆகையால் இனிமேலும் எப்போதும் இந்த சிநேகிதம் நீடித்திருக்க வேண்டும். நீ என்னை மறக்கக் கூடுமா? உன்னுடைய விசனத்தை மாற்ற முயல்வதே எனக்குப் பெரிதும் இன்பத்தைத் தருகிறது. நீ என்னை இனி விலக்கக் கூடாது. நான் செய்யும் உதவியை எல்லாம் நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று மிகுந்த உருக்கமாகக் கூறினான்.

அதைக் கேட்ட மல்லிகா சற்று நேரம் மௌனமாக இருந்தாள். அவனது வார்த்தைகள் அவளது செவிகளில் தொனித்துக் கொண்டே இருந்தன. ''எனக்கு உதவி செய்ய உம்மால் ஆகாது'' என்று மிருதுவாக விடையளித்தாள் மல்லிகா.

பீம : ஸஞ்சலாட்சி! அப்படிச் சொல்லாதே. என்னால் எவ் விதமான உபயோகமுமில்லை என்று நினைக்காதே. துரும்பும் பல் குத்த உதவுமல்லவா? உன்னுடைய விசனம் இன்னதென்று தெரிவி; என்னை அலட்சியம் செய்யாதே - என்று நிரம்பவும் அன்போடு விடையளித்தான்.

மல்லி : இல்லை; இல்லை நான் உம்மை அலட்சியம் செய்யவில்லை. ஆனால், நான் என் மனசை ஒருவரிடத்திலும் வெளியிட மாட்டேன். விசனத்தை மறக்க ஏதாவது மருந்திருந் தால் சொல்லும்.

பீம : விசனத்தைச் சந்தோஷத்தால் மறக்க வேண்டும்; வேறு விஷயத்தில் நாம் நமது மனதைச் செலுத்த வேண்டும். வேறு விஷயத்தில் உண்டாகும் சந்தோஷமே நம்முடைய மனசை மாற்றக் கூடிய மருந்து. உனக்கு இல்லறமென்னும் ஆநந்தத்தை உண்டாக்கினால் இந்த விசனம் மாறிப் போகும். அதை உண்டாக்கும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டால், ஆகா! உன் விசன மெல்லாம் ஒரு நொடியில் பறந்து போகாதா - என்று நிரம்பவும் பரிவாகப் பேசிக் கொண்டே அவளுக்கருகில் நெருங்கி நின்று கொண்டு, நயந்த குரலில், ''ஸஞ்சலாட்சி! நான் உண்மையைச் சொல்லுகிறேன். கோபித்துக் கொள்ளாதே! என் மனசை உள்ளபடி உனக்குத் தெரிவிக்கிறேன். உன் விஷயத்தில் எனக்கு உண்டாயிருப்பது சாதாரணமான ஆசையல்ல. அதை எப்படி வெளியிடுவேன்! எப்போதும் உன்னை விட்டுப் பிரியாமலிருந்து உன்னைச் சந்தோஷமாக வைத்திருப்பதே எனக்குப் பெருத்த பாக்கியமாகத் தோன்றுகிறது. கண்ணே! நீ என்னைக் கலியாணம் செய்து கொள்வதாக ஒப்புக் கொள்வாயானால் உன்னுடைய விசனத்தை ஒரு நொடியில் போக்குவேன். ஸஞ்சலாட்சி! என்னை நம்பு. ஆயிசு பரியந்தம் உனக்கு ஸௌகமுண்டாகும். ஆகா! உன்மேல் உண்டாயிருக்கும் காதலை இனி நான் எப்படி மாற்றுவேன்! ஸஞ்சலாட்சி! நீ என்னைப் காப்பாற்ற வேண்டும்''

என்று கூறியவண்ணம் அவளது கையைப் பிடித்தான். அந்தப் பிடி, நெருப்பால் சுடுவதைப் போலிருந்தது.

அவள் முதலில் திகைத்துச் சிறிது நேரம் சும்மாவிருந்தா ளாயினும், அடுத்த நிமிஷத்தில் அவள் தனது கையை இழுத்துக் கொண்டு அப்பால் நகர்ந்தாள். தனது விஸனத்தின் காரணத்தை அவனிடத்தில் ஒருவாறு தெரிவித்துத் தன் மீது அவன் கொண்ட காதலை விலக்கும்படி அவனை அவள் பெரிதும் வேண்டிக் கொள்ள, அவனும் அவளை அதற்கு மேல் வற்புறுத்தாமல், அவளது வேண்டுகோளுக்கு இணங்க நேர்ந்தது. என்றாலும், அவன் தனது சிநேகத்தை மாத்திரம் விலக்காமலிருக்கும்படி வேண்ட, அவள் அதை மாத்திரம் ஒப்புக் கொண்டாள்.

18-வது அதிகாரம்

தமயந்தியும் வஸந்தராவும்

[illegible]திகாரத்தின் சங்கதிகள் நிகழ்ந்த ஒரு மாதத்திற்குப் பிறகு ஒரு நாட் காலையில் வஸந்தராவ் சென்னையில் கடற்கரையோரமாக மணலில் போய்க் கொண்டிருந்தார். அவர், பைத்தியக்காரனைப்போல் எதையோ பார்ப்பதும், விசனப்படுவதும், பெருமூச்சு விடுவதும், தாமே பேசிக் கொள்வதும், கோபச் சிரிப்புக் கொள்வதுமாக நடந்தார். அப்போது, அருகிலிருந்த பாட்டையில் வந்து கொண்டிருந்த ஒரு வண்டியில் பூட்டப் பட்டிருந்த குதிரை எதையோ பார்த்து மிரண்டு, வண்டியை முன்னால் இழுத்துச் செல்லாமல், திடீரென்று நின்று பின்புறத்திலும், வலப் பக்கத்திலும், இடப் பக்கத்திலும் தள்ள ஆரம்பித்தது. வண்டிக்காரன் அதை அடக்கி முன்னால் நடத்த எவ்வளவு முயன்றும் அது பலிக்கவில்லை. கடைசியாக வண்டி ஒரு பெருத்த பள்ளத்திற்குள் போய் விழுந்து விடும்போலிருந்தது. அதைக் கண்டவுடன் வண்டிக்குள்ளிருந்த ஒரு ஸ்திரீ கோவெனக். கூச்சலிட ஆரம்பித்தாள்.

அந்தக் கூக்குரலைக் கேட்ட வஸந்தராவ் திடுக்கிட்டு, ஓடோடியும் சென்று, குதிரையின் கடிவாளத்தைப் பிடித்திழுத்து வண்டியைப் பாட்டையின் நடுவிற்குக் கொண்டு வந்து விட்ட பிறகு, உள்ளே பார்க்க, தமயந்திபாய் வண்டிக்குள் இருந்ததைக் கண்டு திகைப்படைந்தார். அவள் தஞ்சையில் கம்பியிலிருந்து வீழ்ந்து அடிபட்டு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட பிறகு சொற்ப காலம் அங்கிருந்தாள். அவ்விடத்தில் சீக்கிரம் சௌக்கியமாகாதென்னும் காரணத்தினால் அவள் சென்னையில் பெரிய வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டாள். அங்கே பல வாரங்கள் இருந்த பின் அவளது உடம்பு நன்றாக சௌக்கியமடைந்தது. என்றாலும், தினந்தினம் கடற்கரையில் காற்று வாங்கினால் தேகத்தில் பலமுண்டாகும் என்று வைத்தியன்

சொல்லியிருந்தானாகையால், அவள் வழக்கமாக அங்கு போய்க் கொண்டிருந்தாள். தமயந்தி வஸந்தராவை நன்றாக அறிவாளா கையால், அவரைக் கண்டு மரியாதையாக, "தாங்களா இந்த ஆபத்தில் எனக்கு உதவியது! இதுவும் ஓர் அதிர்ஷ்டந்தான்! இன்றைக்கு என்னுடைய உயிரைத் தாங்கள்தான் காப்பாற்றி னீர்கள்?" என்றாள்.

"என்னவோ! எல்லாம் தெய்வசங்கல்பம்; நம்மாலாவ தென்ன! பாம்பை மிதித்தால் சாவரோ, விதித்தால் சாவரோ என்று சொல்லுவார்கள். அதைப்போல, இதெல்லாம் நம்முடைய செயலா?" என்றார்.

"இந்தக் குதிரை மறுபடியும் இடக்குச் செய்தாலும் செய்யும். தாங்களும் இதில் உட்கார்ந்துகொண்டு, என்னுடைய வீடு வரையில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்தால், பெருத்த உபகாரமாயிருக்கும்!" என்றாள்.

"அது ஒரு பெரிய காரியமா? அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிக்கொண்டே, அவர் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். கால் நாழிகையில் வண்டி தம்பு செட்டி வீதியில் அவளிறங்கியிருந்த மெத்தை வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தது.

இருவரும் கீழே இறங்கிய பின் வஸந்தராவ், "நான் போய் விட்டு வருகிறேன்" என்றார். தமயந்தி புன்சிரிப்போடு நயமாக, "இவ்வளவு தூரம் வந்தவர்கள் உள்ளே வராமல் போகக் கூடாது. தயவுசெய்து உள்ளே வந்து ஐந்து நிமிஷ நேரமாவது இருந்து விட்டுப் போக வேண்டும்" என்று வேண்டினாள். அவர் நிரம்ப வும் இளகிய மனதைக் கொண்டவராதலால், மறுத்துப் பேச மாட் டாமல் அதற்கிணங்கி உள்ளே நடந்தார். அங்கு போடப்பட் டிருந்த நாற்காலியொன்றில் உட்காரும்படி தமயந்தி அவரை வேண்ட, அவர் அவ்விதமே உட்கார்ந்தார்.

உடனே தமயந்தி உள்ளே போய் அடுத்த நிமிஷத்தில் காப்பி சிற்றுண்டி முதலியவற்றுடன் திரும்பி வந்து அவற்றை அவருக்கு முன்னாலிருந்த மேஜையின் மேல் வைத்து அருந்தும்படி வேண்டினாள்.

அதைக் கண்ட வஸந்தராவ் லஜ்ஜையடைந்து, "என்னுடைய உடம்பு சரியான நிலைமையிலில்லை. போஜனத்தைத் தவிர,

மற்றவற்றை நிறுத்தி ஒரு மாசத்திற்கு மேலாகிறது. இருந்தாலும் உன்னுடைய திருப்தியின் பொருட்டு கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன்'' என்று கூறியவண்ணம், அவற்றில் சிறிதளவு உட் கொண்டார். அவளது நற்குணத்தையும், அன்பையுங் காண அவருக்கு அவளிடத்தில் ஒருவித அபிமானமுண்டாயிற்று.

''நீ கம்பியிலிருந்து விழுந்ததைக் கேள்விப்பட்டு நான் நிரம்ப விசனமடைந்தேன். நீ இங்கே வந்திருப்பது எனக்கு இது வரையில் தெரியாது! நல்ல வேளையாக நீ சௌக்கியமடைந் தாயே! இந்தக் கண்டத்துக்கு நீ தப்பியது, உன்னுடைய முன்னோர் செய்த புண்ணியத்தினாலேதான்! நீ எப்படி விழுந்தாய்?'' என்றார்.

தமய : இப்போது இருப்பதைப் பார்த்தால், நானே விழுந்ததாக நினைப்பதற்கில்லை. அவர்கள் வேண்டுமென்றே என்னைக் கீழே தள்ளி விட்டிருக்கலாமென்று நினைக்கிறேன். வேறொருத்தியை எனக்குப் பதிலாக கொண்டுவந்து வைக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவர்கள் இப்படிச் செய்திருக் கலாம் என்று நினைக்கிறேன். எனக்குப் பதிலாக வந்திருக்கி றாளே அவளை நீங்கள் பார்த்தீர்களா?

வஸ : நான் பார்க்கவில்லையே! அவளுடைய பெயர் என்ன?

தமய : அவளுடைய பெயர் ஸஞ்சலாட்சியாம். அவள் யாரென்பதும், எந்த ஊரென்பதும் ஒருவருக்கும் தெரியாது. அவள் இதற்கு முன் நாடக மேடையிலேயே ஏறியவல்லவாம். நான் விழுந்த பிறகே அவள் ஆடத் தொடங்கினாளாம். இப்போது ஊரார் எல்லோரும் அவளுடைய நினைப்பே நினைப் பாகக் கொண்டு பைத்தியம் பிடித்து அலைகிறார்களாம்.

வஸ : ஆம்; நானும் அவளைப் பற்றிக் கேள்விப்பட்டேன். இப்போதுதான் உனக்குச் சௌக்கியமாய் விட்டதே; நீ ஏன் ஊருக்குத் திரும்பிப் போகக் கூடாது?

தமய : அந்த ஊருக்குப் போகவே என் மனசுக்குப் பிடிக்க வில்லை. அங்கிருப்பவர்கள் எல்லோரும் என் விஷயத்தில் வஞ்சகஞ் செய்து விட்டார்கள். அவர்களுடைய முகத்தில் விழிப்பது கூடப் பாவம்.

வஸ : உன் மேல் அப்படி யாருக்கு விரோதம்? கோவிந்த சாமிராவுக்கா? அவர் எனக்கு நிரம்ப வேண்டியவர். அவராய் இருந்தால் நான் அவரைச் சரிப்படுத்தி விடுகிறேன். அவர் என்னுடைய சொல்லை அவசியம் கேட்பார்.

தமய : இல்லை இல்லை; அவர் நிரம்பவும் யோக்கியர். வேறொரு பாதகனிருக்கிறான். அவனை நான் கல்யாணம் செய்து கொள்ள நினைத்திருந்தேன். அவனையே என்னுடைய ஐசுவரியமாக நான் மதித்தேன். என்னுடைய உயிரைக் கூட அவன் பொருட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தேன். ''நீ எனக்கு வேண்டாமென்று கூட அவன் என்னிடம் சொல்லாமல், எனக்கு விரோதியாக வந்த அந்த ஸஞ்சலாட்சியோடு சிநேகம் செய்து கொண்டான்; ஓயாமல் அவளுடைய சேலைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டே அலைகிறானாம். அந்த விசனத்தினால் நான் உயிரை விட்டாலும் பீமராவ், என்னைப் பற்றி நினைப்பான் என்பது தோன்றவில்லை. அங்கே போய் இன்னம் அதிகமாக விசனப்படுவதை விட நான் இங்கேயே இருப்பதே நல்லது.

வஸ : பீமராவையா கலியாணம் செய்து கொள்ள நினைத்தாய்? நான் சொல்வதைப் பற்றி வருத்தப்படாதே. அவன் உன்னை விட்டதே உன்னுடைய அதிர்ஷ்டம் என்று நான் நினைக்கிறேன்.

தமய : உண்மையாயிருக்கலாம். ஆனால், நல்லவனோ கெட்டவனோ அவன்மேல் நான் ஆசை வைத்து விட்டேன். ஸ்திரீ ஜாதிக்குப் புத்தியேது? யோக்கியதையற்றவனைத்தான் நாங்கள் அதிகமாக விரும்புகிறது. எனக்கு அவன்மேல் எவ்வளவு ஆசையிருந்ததோ அவ்வளவும் இப்போது வெறுப்பாக மாறி விட்டது. இருக்கட்டும்; காலம் வரும். அப்போது அவனுக்குப் புத்தி கற்பிக்கிறேன்; என்னுடைய குடும்ப விஷயங்களைச் சொல்லி தங்களுக்கு விசனமுண்டாக்க மனமில்லை. தாங்கள் இந்தப் பக்கம் எப்போதாவது வந்தால் இங்கே அவசியம் வந்து விட்டுப் போக வேண்டும்.

வஸ : அப்படியே ஆகட்டும்; நான் தங்கசாலைத் தெருவில் 1501-ம் இலக்கமுள்ள வீட்டில் இறங்கியிருக்கிறேன். எந்த விஷயத்திலாவது என்னுடைய உதவி உனக்குத் தேவையானால்,

அவ்விடத்துக்குச் செய்தி சொல்லியனுப்பு. நேரமாகிறது. நான் போய்விட்டு வருகிறேன்.

என்று சொல்லிவிட்டு வஸந்தராவ் எழுந்து தமது ஜாகைக்குப் போய்விட்டார். தமயந்தியோடு அவர் சம்பாஷித்துக் கொண்டிருந்தபோது, அவரது மனதில் மல்லிகாவின் நினைவு வந்து விட்டது; அவரது பிரிய நாயகியின் உருவமே அன்று முழுவதும் அவரது மனதை விட்டகலாமல் குடிகொண்டிருந் தமையால், அவர் அன்று போஜனத்திற்கும் எழுந்திருக்காமல் அதே தியானமாகப் படுத்திருந்தார். தமது பிரிய சுந்தரி இறந்த பின், தாம் இந்த உலகிலிருப்பதில் ஒரு பலனுமில்லை என்று நினைத்து நினைத்து அவர் இந்தி உலக விஷயத்தில் முற்றிலும் வெறுப்பை அடைந்தார்; ஆகாரம் நித்திரை முதலியவற்றை அலட்சியம் செய்தார். அவ்விதம் நாலைந்து நாட்கள் கழிய, அவரது தேகம் நிரம்பவும் தளர்ச்சி அடைந்தது; அவர் ஒரு துரும்பாக மெலிந்து போனார். அந்த நிலைமையில் கடற் கரைக்குப் போக வேண்டும் என்ற நினைவு அவருக்கு உண்டாக அவர் மெல்ல எழுந்து நடந்து கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்; மணலின் மீது சிறிது நேரம் நடந்தார். ஆகாரம் நித்திரை முதலியவை இல்லாமையால் கண்கள் இருண்டன; காது அடைத்தது; சிரம் சுழன்றது. அவர் மயங்கி அப்படியே பாட் டையில் ஓரத்தில் விழுந்து மூர்ச்சித்தார். அப்போது அருகில் வந்து கொண்டிருந்த ஒருவன் அதைக் கண்டு பயந்து கூச்சலிட் டான்; வழக்கப்படி குதிரை வண்டியில் வந்த தமயந்தி அவ்விடத் தில் உண்டான கூக்குரலைக் கேட்டு, அந்தப் பக்கத்தில் உற்று நோக்கினாள். வஸந்தராவ் விழுந்து கிடந்ததைக் கண்டு பதை பதைத்தவளாய் வண்டியை விட்டிறங்கி ஓடி வந்தாள். வண்டிக் காரனும் அவளுடன் கூடவே தொடர்ந்து வந்தான்.

"அடாடா! இவருக்கு என்ன துன்பமோ தெரியவில்லையே? மெதுவாகத் தூக்கி வண்டியில் வையுங்கள்" என்று தமயந்தி சொல்ல, வண்டிக்காரனும், அங்கு முதலில் கூச்சலிட்டவனும் அவரைத் தூக்கி வண்டியில் விட்டனர். அவளும் அருகில் உட்கார்ந்து கொண்டு, வண்டியைத் தங்கசாலைத் தெரு 1501-ம் இலக்கமுள்ள வீட்டிற்கு ஓட்டச் சொல்ல, 15- நிமிஷத்தில் வண்டி அங்கு போயிற்று. அங்கிருந்த வேலைக்காரர்களின் உதவியால்

தமயந்தி அவரை வீட்டிற்குள் கொண்டு போய் அவரது படுக்கையில் விட்டு உடனே ஒரு வைத்தியனைத் தருவித்தாள்.

வைத்தியன் அவரது கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, ''அடடா! கையில் நாடியே இல்லையே! பிழைத்தால் மறு ஜென்மந்தான்!'' என்றான். அதைக் கேட்ட எல்லோரும் பெரிதும் திகிலடைந்தனர். ''இருக்கட்டும்; நாம் முயன்று பார்க்கலாம். நான் போய் இரண்டு விதமான மருந்துகள் அனுப்புகிறேன். ஒன்றை ஒரு மணி நேரத்துக்கு ஒரு துளியாக விட்டுக் கொண்டிருக்க வேண்டும். இன்னொன்று தைலம்; அதை இவருடைய மார்பில் விட்டுத் தேய்த்துச் சூடுண்டாக்க வேண்டும். அதையே செய்து கொண்டிருங்கள். நான் சாயங்காலம் வந்து பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய் மருந்துகளை அனுப்பினான். அவன் கூறியபடி தமயந்தி மருந்துகளைப் பிரயோகம் செய்து கொண்டிருந்தாள். அங்கிருந்த அவரது வேலைக்காரர்கள் அனைவரும் பெரிதும் வியாகுலமடைந்தவர்களாய் தமயந்தியின் சொற்படி செய்து கொண்டிருந்தார்கள். வைத்தியன் திரும்பவும் மாலையில் வந்து கையைப் பிடித்துப் பார்த்து, ''இப்போது கொஞ்சம் நாடி அடித்துக் கொள்ளுகிறது. உயிரிருக்கிறது. ஆனால், இன்றிரவு முழுதும் யாராவது இவருக்கருகில் விழித்திருந்து இதே மருந்துகளைப் பிரயோகம் செய்ய வேண்டும்'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

தமயந்தி அவரை விட்டகலாமல் அன்றிரவு முழுதும் அவருக்கருகில் இருந்து மருந்துகளைப் பிரயோகம் செய்து கொண்டிருந்தாள். விடியற்காலம் மூன்று மணி நேரத்திற்கு அவர் வாயைத் திறந்து, ''மல்லிகா! மல்லிகா! என்னை விட்டுப் போய்விட்டாயே! மல்லிகா! நானும் வருகிறேன். என்னையும் உன்னிடம் அழைத்துக் கொள்'' என்று ஓயாமல் பிதற்ற ஆரம்பித்தார்; தமயந்தி நிரம்பவும் ஸஞ்சலமடைந்தவளாய் அதைக் கேட்டுக்கொண்டே அருகில் இருந்தாள். மல்லிகா யாராயிருக்கலாம் என்ற சந்தேகம் அவளது மனதில் தோன்றியது. அவள் அவரது காதலியாயிருக்கலாமோ என்று தமயந்தி நினைத்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் சிறிதளவு பாலை அவரது வாயில் ஊற்றினார்கள். அதில் மிகவும் சொற்பமே உள்ளே சென்றது. அவ்விதம் இரண்டு

மூன்று நாட்கள் செல்ல, அடுத்த நாள் இரவு, தமயந்தி வழக்கம் போல அவருக்கு அருகில் உட்கார்ந்திருந்தபோது, அவருக்குத் தமது சுய நினைவு நன்றாக உண்டாயிற்று. அவர் கண்களை விழித்துப் பார்த்து, ''நீயா இருக்கிறாய்! நீ எப்படி வந்தாய்? எத்தனை நாட்களாக இருக்கிறாய்?'' என்றார். உடனே தமயந்தி நடந்தவற்றையெல்லாம் ஆதியோடந்தமாகத் தெரிவிக்க, அவருக்குத் தமயந்தியினிடத்தில் உண்டான நன்றி விசுவாசத்திற்கு அளவே இல்லை. ''தமயந்திபாயி! உனக்கு நான் எப்படி என்னுடைய நன்றியறிதலைக் காட்டப் போகிறேன்! ஆகா! ஸ்திரீகளின் குணமே குணம்! உங்களுடைய அன்பே அன்பு! இத்தனை நாட்களாக நீ தூக்கமில்லாமலும் ஒழுங்காக ஆகாரமில் லாமலும் இருக்கிறாயே! இதனால் உனக்கு ஏதாவது வியாதி வந்து விட்டால் என்ன செய்கிறது? தயவு செய்து நீ அப்பால் போய் சற்று நேரம் படுத்துக் கொள்'' என்ற வற்புறுத்திக் கூற அவள் அப்பாற் சென்று சயனித்துக் கொண்டாள். மறுநாட் காலையில் வஸந்தராவ் விழித்துக் கொண்டபோது வழக்கம் போல தமயந்தி தமக்கருகில் கவலையோடு நின்று கொண்டிருந் ததைக் கண்டு, ''அடடா! இதற்குள் தூங்கி எழுந்து விட்டாயா? என் விஷயத்தில் எவ்வளவு கவலை! என்னுடைய உயிரை நீ காப்பாற்றியதைப் பற்றி நான் சந்தோஷப்படவில்லை. அதிக மாகப் பழக்கமில்லாத என் விஷயத்தில் நீ உன்னுடைய உடம்பை வதைத்துக் கொண்டு, பல நாட்களாக ஆகாரம் நித்திரை இன்றி வருந்தி இங்கே இருந்து, நீ காட்டும் அந்தரங்க அபிமானத்தைப் பற்றித்தான் உன்னை நான் தெய்வமாக மதிக்கிறேன். நீ என்னுடைய செல்வத்தை எல்லாமே கேட்ப தானாலும், நான் கொடுத்து விடுவேன். என் மனம் உன் விஷயத் தில் அவ்வளவு அபாரமான அபிமானத்தைக் கொண்டிருக்கிறது'' என்றார்.

''அப்படி நானொன்றும் பெரிய காரியம் செய்து விடவில் லையே! மனிதர் ஒருவருக்கொருவர், சாதாரணமாகச் செய்து கொள்ள வேண்டிய காரியந்தானே இது! மிருகங்கள் கூட தமக்குள் ஒன்றிற்கு ஏதாவது விபத்து நேர்ந்து விட்டால், எவ்வளவோ வருந்தி அதை உபசரிக்கின்றனவே! அப்படி இருக்க மனிதர் உதவுவது ஒரு பெரிய காரியமா? தாங்கள் இதை அடிக்கடி பாராட்டிப் பேசுவது எனக்கு வெட்கமாக இருக்கிறது'' என்றாள்.

''சரி; நீ இதற்காக கிலேசப்பட வேண்டாம்; நான் இதைப் பற்றி இனி வாயால் பேசுகிறதில்லை. அதிருக்கட்டும்; ஒரு காரியம் செய். என் தலையணையின் கீழ் ஒரு திறவுகோலிருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு போய், அதோ இருக்கும் மேஜையைத் திற. அதில் காகிதம் பேனா முதலியவை இருக்கின்றன. தஞ்சையிலிருக்கும் என்னுடைய சர்வாதிகாரிக்கு, நான் இவ்விடத்திலிருக்கிறேன் என்பதைப் பற்றி ஒரு கடிதம் எழுதி அனுப்ப வேண்டும்'' என்றார்.

தமயந்தி அப்படியே ஆகட்டும் என்று கூறிய வண்ணம் அவரது தலையணைக்கு அடியில் இருந்த சாவியை எடுத்துக் கொண்டு போய் மேஜையை அடைந்து, அவரது சொற்படி ஒரு கடிதம் எழுதி, தபாலுக்கு அனுப்பிவிட்டுத் திரும்பவும் திறவுகோலை முன் இருந்த இடத்தில் வைக்கும்பொருட்டு வந்து தலையணையை முன்னிலும் சிறிது அதிகமாகத் தூக்கினாள். அதன் கீழ், சற்றுத் தூரத்தில், ஒரு படம் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டாள். அதில் ஒரு ஸ்திரீ வடிவத்தின் பாதி உடம்பு அவளுக்குத் தெரிந்தது. அதை எடுத்துப் பார்க்க ஆவல் கொண்ட தமயந்தி அதை வெளியில் மெல்ல இழுத்துப் பார்த்துப் பெரிதும் வியப்படைந்தாள். அவரே படம் எழுதுவதில் கைதேர்ந்த நிபுணராதலால், அவர் மல்லிகாவை விட்டுப் பிரிந்த தமது ஞாபக சக்தியிலிருந்தே அவளை ஒரு படம் எழுதி வைத்துக் கொண்டு அதை அடிக்கடி பார்த்து ஆறுதலடைவதும், பிறகு அதைத் தலையணையின் கீழ் வைப்பதுமாய் இருந்தார். தமயந்தி அந்தப் படத்தை உற்று நோக்கிய பிறகு முன் இருந்த இடத்தில் அதை வைத்துவிட்டு, ''நீங்கள் மல்லிகா மல்லிகா என்று தூக்கத்தில் பிதற்றினீர்களே! இந்தப் படத்தில் இருப்பவர் தான் அந்த மல்லிகாவோ?'' என்று நயமாகக் கேட்டாள்.

வஸ : ஆம்; இவள்தான்! நான் அப்படியா பிதற்றினேன்?

தம : ஆம்; அநேகம் தடவை பிதற்றினீர்கள். தங்களை வஞ்சித்தவள் இவள்தானே? தங்களை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தவளும் இவள்தானே? - என்றாள். அதைக் கேட்டவுடன் அவருக்குப் பெருத்த ஆத்திரம் உண்டாயிற்று. ''இவள் என்னை வஞ்சிப்பதாவது? அப்படி உன்னிடத்தில் யார் சொன்னது?'' என்றார்.

தம : தாங்களே பலதடவைகளில் சொன்னீர்களே. என்னை இப்படித் தவிக்கவிட்டுப் போய்விட்டாயே! என்னை இப்படி வஞ்சிக்கலாமா! என்று பலவாறு பிதற்றினீர்களே.

வஸ : அப்படியா!

தம : ஆம். அதிலிருந்துதான், அவள் தங்களுடைய ஆதரவிலிருந்து தங்களை வஞ்சித்து ஓடி விட்டதாக நினைத்தேன்.

வஸ : அடடா! இவளைப் பற்றி அப்படி நினைக்காதே! இவள் இறந்து போய் விட்டாள். அதனால் எனக்கு இப்படிப் பட்ட விசனம் ஏற்பட்டது. அதைத்தான் நான் அப்படிச் சொன்னேனேயன்றி, அவள் உயிருடனிருக்கையில் என்னை வஞ்சிக்கவில்லை.

தம : அவள் இறந்து விட்டாளா? மறுபடியும் தங்களுக்கு மனக்குழப்பம் உண்டாயிருக்கிறதா? தங்களுக்கு தஞ்சாவூரிலிருந்து கடிதம் கூட வரவில்லையே. இவள் இறந்து போய் விட்டாள் என்பது எப்படித் தெரிந்தது?

வஸ : கடிதம் எதற்கு? நான் தஞ்சாவூரை விட்டுப் புறப்பட்டு இந்த ஊருக்கு வருவதற்குச் சில தினங்களுக்கு முன்பாகவே இவள் இறந்து போய் விட்டாளே.

தம : என்ன ஆச்சரியம்! தாங்கள் இந்த ஊருக்கு வந்த பிறகு இவளை நான் பார்த்தேனே! இவள் இறந்து போகவாவது!

வஸ : நீ வேறு யாரைப் பற்றியோ சொல்லுகிறாய்? இவளுடைய பிரேதத்தை நான் கண்ணால் பார்த்து விட்டு வந்திருக்கிறேன்? நீ புதிய சங்கதியாகச் சொல்லுகிறாயே! இவள் இன்னாளென்பது உனக்கு எப்படித் தெரியும்?

தம : இந்தப் படத்தில் இருக்கிறவள்தானே மல்லிகா?

வஸ : ஆம்.

தம : அப்படியானால் இவள் நிச்சயமாக உயிருடன் இருக்கிறாள். இவள் தங்களை வஞ்சித்து விட்டாளென்பது நிஜம் என்றாள்.

அதைக் கேட்ட வஸந்தராவின் மனம் பெரிதும் குழப்பமடைந்தது. ஒன்றுக்கொன்று மாறுபாடான பலவித எண்ணங்கள்

அவரது மனதில் தோன்றி வருத்தின. அந்த வேதனையைப் பொறுக்க மாட்டாதவராய் அவர் திரும்பவும் சோர்வடைந்து நித்திரையில் ஆழ்ந்தார்.

மல்லிகாவே அவரை விட்டு வந்து ஸஞ்சலாட்சி என்னும் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறாள் என்றும், நடந்தவை எல்லாம் பீமராவின் சூதென்றும், தமயந்தி உறுதியாக நினைத்தாள். ஆனால், அவர் மல்லிகாவின் பிரேதத்தைப் பார்த்ததாகச் சொன்னது மாத்திரம் அவளது மனதில் ஒருவகையான சந்தேகத்தை உண்டாக்கிய வண்ணமிருந்தது. அவ்வாறே குழம்பிய மனதோடு அவள் நின்று கொண்டிருந்தாள்.

19—வது அதிகாரம்

மல்லிகாவின் புதிய கணவன்

குறவன் பறவைகளைப் பிடிப்பதற்கு வலை விரிப்பதைப் போல் பீமராவ் தனது வஞ்சக வலையை விரித்து அதில் மல்லிகாவை வீழ்த்த மிகவும் பொறுமையாகவும், தந்திரமாகவும் விடா முயற்சி செய்து வந்தான். அவன் தன்னைப் பிடிக்கும் பொருட்டு வலை விரிக்கிறான் என்பதை மல்லிகா உணர்ந்தாள். ஆகிலும் அவள் அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வல்லமையற்றவளாய் இருந்தாள். திருவையாற்றில் அவன் தனது மனதை வெளியிட்டபோதே அவள் அவனது சிநேகத்தை விலக்கியிருக்க வேண்டும். அவ்விதம் செய்யாமல் அலட்சியமாக இருந்ததனால், அவள் அவனை அதன் பிறகு கண்டித்து விலக்கக் கூடாமல் போயிற்று. ஆனால், அவன் அதன் பின்னர் அவளிடம் வந்த போதெல்லாம், சாதாரணமான சிநேகிதனைப் போல வந்து கொண்டிருந்தானே அன்றி, திருவையாற்றில் நடந்த விஷயத்தை அவளுக்கு நினைவூட்டக் கூடிய வார்த்தை ஒன்றையும் சொல்லாமல் நிரம்பவும் தந்திரமாக அவன் நடந்து கொண்டான். அவனது உண்மையான மனநிலைமை எப்படிப்பட்டதென்பதை அவள் நன்றாக அறிவாள். அவள் கடின மனதுடையவள் அல்ல. ஆனால், அவளது காதல் முழுவதையும் வஸந்தராவ் கவர்ந்து சென்றமையால், அவளுக்கு வேறு எந்தப் புருஷர் மீதும் விருப்ப முண்டாகவில்லை. என்றாலும், பீமராவ் சலியா மனத்தோடு, கடுமுயற்சி செய்து, அவளிடம் மிகுந்த அன்பையும் மரியாதை யையும் காட்டி வந்தான். அவன் அவ்விதம் செய்து வந்தது, அவளது மனதில் சிறிது சிறிதாகப் பதிந்து கொண்டே வந்தது.

அரண்மனையிலோ நாடகம் நடைபெற்று வந்தது. அதில் மல்லிகா முக்கியமான ஸ்திரீ வேஷக்காரியாக ஒவ்வொரு நாளும் வந்து நடித்து மிகுந்த புகழ் பெற்றனள். அவளது கீர்த்தி நாலா-

பக்கங்களிலும் பரவியது. கடைசியாக, சதாரம் என்னும் நாடகம் தயாராகி வந்தது. ஒரு நாட் காலையில் மல்லிகாவும் கிருஷ்ண வேணியும் தமது வீட்டில் வேடிக்கையாகப் பேசிக் கொண் டிருந்த போது, அந்த ஊரில் வெளியாகி வந்த ஜனாநுகூலன் என்னும் பத்திரிகையைக் கிழவன் படித்துக் கொண்டிருந்தான்.

கிழவன் : மல்லிகா! இதோ பார்; இந்தப் பத்திரிகையில் உன்னைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது - என்று சொல்லிய வண்ணம் பத்திரிகையை நீட்ட, கிருஷ்ணவேணி ஆவலோடு எழுந்து பாய்ந்து அதை வாங்கி, அடியில் வருமாறு அதிலிருந்து படித்தாள். ''அரண்மனையின் இராஜப் பெருமாட்டிகளுக்காக நாடகம் நடைபெறும் கொட்டகையில் சில தினங்களில் பட்டாபிஷேகம் நடக்கப் போவதாகக் கேள்விப்படுகிறோம். இடை நடுவில் ''சதாரம்'' என்னும் ஒரு நாடகத்தை நடிக்கப் போகிறார்களாம்; எல்லோராலும் கொண்டாடப்பட்ட ஸஞ்ச லாட்சி, அதில் சதாரமாக வந்து, இதுவரையில் எவரும் நடிக்கா விதம் நிரம்பவும் அற்புதமாக நடிக்கப் போகிறாளென்று கேள்விப்படுகிறோம். நாடகம் முடிவடைவதைப் பற்றியும், ஸஞ்சலாட்சி முதலியோரை இனிப் பார்க்க முடியாமல் போவது பற்றியும் அரண்மனை ஜனங்கள் பெரிதும் வருந்துகிறார்கள்.''

கிரு : யார் இதை எழுதியிருப்பார்கள் என்பது தெரிகிறதா? பீமராவ்தான் எழுதியிருக்க வேண்டும். வேறு யார் இவ்வளவு சிரத்தையாக எழுதப் போகிறார்கள்? என்று சொல்லிக் கொண்டே அதற்கடுத்தாற்போலிருந்த சங்கதியை தனது மனதிற் குள்ளாகவே படித்தாள். ''ஆகா! வஸந்தராவ் கூடவா! பலே! வேடிக்கைதான்'' என்றாள். அந்தப் பெயரைக் கேட்டவுடன் மல்லிகா திடுக்கிட்டு, ''என்ன அது? வாசி கேட்கலாம்'' என்றாள். கிருஷ்ணவேணி அடியில் வருமாறு படித்தாள். ''சென்னையிலிருந்து ஒருவர் தெரிவிக்கிறார்:- பவானியம்மாள் புரத்தின் புதிய ஜெமீந்தார் வஸந்தராவ் ஏதோ பிணியினால் திடீரென்று சென்னைக்கு வந்தவர், படிப்படியாக நிரம்பவும் இளைத்து உருமாறிப் போனார். அந்த நிலைமையில் அவர் கடற்கரைக்கு வந்து கொண்டிருக்கையில் சோர்ந்து கீழே விழுந்து மூர்ச்சித்தார். அந்தச் சமயத்தில் அங்கே வந்த ஒரு யௌவன ஸ்திரீ அவரைத் தனது வண்டியில் வைத்து வீட்டிற்கு அழைத்துப் போய்

இராப்பகலாய் அவருக்கருகிலிருந்து சிகிச்சை செய்து அவரது உயிரைக் காப்பாற்றினாளாம். அவள் யாவளென்பதை அறிய இதைப் படிப்போர் விரும்பலாம். தஞ்சை அரண்மனையில் நடைபெற்ற பூனா தேசத்து நாடகத்தில் ஸ்திரீ வேஷம் தரித்து நிரம்பவும் பெயர் பெற்ற தமயந்திபாயி, கம்பியிலிருந்து விழுந்தவள், சென்னையில் பெரிய வைத்திய சாலைக்கு வந்ததாக முன்னரே தெரிவித்தோமல்லவா. அவளது தேகம் சௌக்கியமடைந்தபின் ஒரு நாள் வண்டியில் வந்தபோது அவளே வஸந்தராவை எடுத்துக் காப்பாற்றினாள். அவர்களிரு வரும் இப்போது சௌக்கியமடைந்து விட்டனர். அவர்கள் ஒருவர் மீதொருவர் கொண்டிருக்கும் ஆழ்ந்த அன்பை நோக்க, அவ்விருவருக்கும் கலியாணம் நடக்கும்போலிருக்கிறது. இனியா கிலும் அந்த ஜெமீந்தார் ஊரூராய் அலையாமல், தமது சமஸ்தானத்தில் தங்கியிருந்து குடிகளுக்குத் தேவையான நன்மை களைச் செய்வாரென்று நம்புகிறோம் – **பொய்யாமொழியன்.**

என்று படித்தாள் கிருஷ்ணவேணி. அதைக் கேட்ட மல்லிகாவின் மனம் குழம்பியது; முகம் மாறியது; அறிவு பேதலித்தது. அவளது கண்களுக்கு முன்பாக அந்த அறையும் அதிலிருந்த வஸ்துக்களும் சுழலுவதைப்போல் இருந்தன. அவள் பிறரிருந்ததை கவனியாமல் மெய்மறந்து சாய்ந்து விட்டாள்.

“ஆகா! தமயந்திக்கு எவ்வளவு அதிர்ஷ்டம் பார்த்தாயா! ஒரு சாதாரணப் பள்ளிக்கூட வாத்தியாரின் மகள் பெரிய ஜெமீந் தாரியாகப் போகிறார்களாமே!” என்று வியப்போடு கூறினாள் கிருஷ்ணவேணி. அதற்கு மல்லிகா எவ்வித மறுமொழியும் சொல்லாமல், “ராத்திரியெல்லாம் கண் விழித்ததனால் எனக்கு உடம்பு ஒரு மாதிரியாக இருக்கிறது. நான் கொஞ்ச நேரம் படுத்துக் கொள்ளுகிறேன்” என்று சொல்லிக் கொண்டே எழுந்து போய் ஒருபக்கத்தில் படுத்துக் கொண்டாள்.

மறுநாட் பகலில், கிருஷ்ணவேணியும் அவளது தந்தையும் தமது சொந்தக் காரர் ஒருவரது வீட்டிற்குப் போய்விட்டு மாலையில் வருவதாகச் சொல்லிப் போயினர். மல்லிகா தனது விசனத்தை அடக்க, அதைப் பற்றி நினைப்பதே கூடாதென்று உறுதி செய்து சதாரத்தின் பாடத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அப்போது யாரோ வாசற்கதவைத் தட்டிய ஓசையைக் கேட்டு,

அவள் அரை மனதோடு எழுந்து சென்று கதவைத் திறந்தாள். பீமராவ் வெளுத்து விசனத்தைக் காண்பித்த முகத்தோடு உள்ளே நுழைந்தான்.

மல்லி : உடம்பு கொஞ்சம் அசௌக்கியமோ? முகம் ஒரு மாதிரியாக இருக்கிறதே - என்றாள்.

பீம : அப்படி ஒன்றுமில்லை. அவர்கள் எங்கே காணோம்?

மல்லி : அவர்கள் சொந்தக்காரர் வீட்டுக்குப் போயிருக்கிறார்கள். ஏன் நிற்கிறீர்கள்? உட்காருகிறதுதானே.

பீம : (விசனத்துடன்) இல்லை. நான் போக வேண்டும். உன்னிடத்தில் கடைசியாக சொல்லிக் கொண்டு போக வந்தேன்.

மல்லி : (நலிந்த சிரிப்போடு) கடைசியாக சொல்லிக் கொள்ளுகிறதா? எங்கே பிரயாணம்? இனி இங்கே வருவதில்லையா?

பீம : (விசனத்துடன்) ஆம்; இந்த ஊரை விட்டு எங்கேயாகிலும் போய்விடுவதே நல்லது. இந்த ஊரிலிருப்பது எனக்குப் பொறுக்கக் கூடாத வேதனையை உண்டாக்குகிறது. வேறு எங்கேயாகிலும் போனால் என் மனநிலைமை மாறுபடலாமென்று நினைக்கிறேன்.

மல்லி : இதைக் கேட்க எனக்கு நிரம்பவும் விசனமாக இருக்கிறது. எந்த ஊருக்குப் போவதாக உத்தேசம்?

பீம : ஏதாவது ஓர் ஊருக்கு; இதைத் தவிர வேறு எந்த ஊராயிருந்தாலும் சரி; ஆனால் எங்கே போனாலும் உன்னைப் பற்றி ஒரு க்ஷணமும் விடாமல் நினைத்துக் கொண்டுதான் இருப்பேன். உன்னுடைய க்ஷேமநலத்தைப் பற்றி அடிக்கடி விசாரித்துக் கொண்டுதான் இருப்பேன். நீ இந்த நாடகத்தில் அடைந்த புகழினால் உன் பெயர் எல்லாருடைய வாயிலும் இருக்கிறது. ஆனால் நீ என் மனசிலேயே இருக்கிறாய். இனி உன்னை நான் திரும்பவும் எப்போது காண்பேனோ? - என்றான். அப்போது அவன் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகி வழிந்தது. அவன் அழுகையினால் தடுமாறிய குரலில், ''நான் போகலாமா?'' என்று கேட்டான். அதைக் கண்ட மல்லிகா, நிரம்பவும் கலக்கமடைந்து மறுமொழி சொல்ல மாட்டாதவளாய்

ஸஞ்சலமடைந்திருந்ததை அவன் உணர்ந்தான். "நான் போகு முன் உன்னிடத்தில் உண்மையைத் தெரிவித்து விட்டுப் போகிறேன். உன் மேல் நான் கொண்ட காதலை எப்படியாவது மாற்ற வேண்டும் என்று என்னால் கூடியவரையில் முயன்றேன். அது பலிக்கவில்லை. இந்த வேதனையை ஒரு க்ஷணமும் என்னால் பொறுக்க முடியவில்லை. இந்த வேதனையை மறப் பதாக உனக்கு வாக்குறுதி செய்து கொடுத்தேன். ஆனால், இந்த ஆசைப் பேய் என்னைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டது. இந்த ஊரை விட்டுப் போனால் ஒரு வேளை அது மாறுமோ என்று பார்க்கத் தீர்மானித்திருக்கிறேன். அதன் பிறகு திரும்பி வந்து உன்னிடத்தில் சாதாரணப் பழக்கமுள்ளவனைப் போல நடந்து கொள்ளுகிறேன். நீ இங்கே க்ஷேமமாய் இருக்க வேண்டும் என்று ஈசுவரனை நான் ஸதாகாலமும் தியானித்துக் கொண்டிருப் பேன். போய் வரலாமா?" என்று கூறிய வண்ணம் நடக்க ஆரம்பித்தான்.

நிரம்பவும் தயாள குணமுடைய மல்லிகா, அவனது பரிதாப மான நிலைமையைக் கண்டு பெரிதும் இரக்கம் கொண்டு, "இப்படி வாருங்கள்; போகலாம்" என்று தடுமாறிய குரலில் அவனை அழைத்தாள்.

பீம : ஏன் என்னைக் கூப்பிடுகிறாய்? நீ கூப்பிடுவதால், என் மனசில் திரும்பவும் ஏதோ ஒரு வித நம்பிக்கை உண்டாக்கு கிறாய். அதனால் மேலும் துன்பமே அல்லாது, நான் கடைத்தேற மார்க்கமில்லை - என்று கூறினான். அப்போது அவனது கண் களில் கண்ணீர் வழிந்தது.

அதைக் கண்ட மல்லிகா முற்றிலும் ஸஞ்சலம் அடைந்து, "சற்று பொறுங்கள், போகலாம்" என்றாள். அவளது உதடுகளும் அங்கங்களும் தென்றலில் அசையும் மாந்தளிரைப்போல நடுங்கின.

பீம : வீணாக என்னை அதிகமான விசனக் கடலில் ஆழ்த்தி வதைப்பதானால் கூப்பிட வேண்டாம்; என் எண்ணத்தைப் பூர்த்தி செய்வதானால் கூப்பிடு - என்று சொல்லிக்கொண்டே அவளிடம் நெருங்கினான்.

மல்லி : நின்று நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என் மேல் ஆசை வைத்திருப்பதாகவும், உங்களைக் கலியாணம்

செய்து கொள்ள வேண்டுமென்றும் சொல்லுகிறீர்களே. நான் என்னுடைய மனசையெல்லாம் வேறொருவர் மீது வைத்து மதியிழந்தவளாயினேன். இப்போது அதை மாற்ற முடிய வில்லை. தானாகக் கனியாத பழத்தைத் தடியால் அடித்துக் கனியவைப்பது போல, இயற்கையான பிரியமில்லாத ஒரு பெண்ணைக் கட்டிக் கொள்வதில், உங்களுக்கு என்ன சுகம் இருக்கப் போகிறது? ஸ்திரீ புருஷருக்கு பரஸ்பரம் உண்மையான அன்பில்லா விட்டால் அந்தக் கலியாணம் என்ன பலனைத் தரப் போகிறது? உண்மையான அன்பில்லாத ஸ்திரீயை மணக்க உங்களுக்கு விருப்பந்தானா?

பீம : எனக்கு விருப்பந்தான். நீ என்னுடைய மனைவி யானால், உன்னுடைய மனசில் குடிகொண்டிருக்கும் விசனமெல் லாம் ஒரு நொடியில் பறந்து போகும்படி நான் செய்கிறேன். கலியாணம் செய்து கொள்ளுகிறேன் என்று ஒரு வார்த்தை சொல். அது போதும் - என்று சொல்லிக்கொண்டே மோகத்தினால் ஆவேசங் கொண்டவனாய் அவளைப் பிடித்து அணைக்க முயல, அவள் அப்பால் விலகினாள்.

பீம : கண்ணே! பிரிய சுந்தரி! இதற்குத்தானா என்னைக் கூப்பிட்டாய்? எங்கே? கட்டிக் கொள்வதாய்ச் சொல்லிவிடு. அப்படிச் சொன்னதைப் பற்றி ஒரு நாளும் நீ விசனப்படாமல் இருக்கும்படி நான் உன்னை அவ்வளவு அன்பாக நடத்துகிறேன். உன்னையே என்னுடைய குலதெய்வமாக மதித்து உன்னை என் மனமாகிய கோவிலில் வைத்து ஸதாகாலமும் பூஜிக்கிறேன் என்று கையை நீட்டி அவளது மோவாயைப் பிடிக்கச் சென்றான்.

மல்லி : (அருவருப்போடு அப்பால் நகர்ந்து) இந்தப் பாழுங் கலியாணத்தில் என்னதான் இருக்கிறதோ தெரியவில்லையே! அதைப் பற்றி இவ்வளவு வேதனை என்ன?

பீம : வெளியில் போன என்னைக் கூப்பிட்டு இப்படி வதைக்கிறாயே கண்ணே! இனியும் பிடிவாதம் செய்தால் இப் படியே உன் காலடியில் நான் என்னுடைய நாவைப் பிடுங்கிக் கொண்டு உயிரை விட்டு விடுவேன் - என்று தத்தளித்து நயந்து மன்றாடினான்.

அதைக் கண்ட மல்லிகா சகிக்க மாட்டாதவளாய், ''அப்படி யானால் சரி; கலியாணம் செய்து கொள்ளுகிறேன்'' என்று தனது

விருப்பத்திற்கு விரோதமாகச் சொல்லி விட்டாள்; அதைக் கேட்ட பீமராவ் அளவற்ற ஆநந்தம் கொண்டவனாய் மெய்ம்மறந்து போனான்.

அவள் அவ்வாறு சொன்னது கனவோ நினைவோ என்று அவன் சந்தேகித்தான்; அவளைக் கண்ணேயென்றும் முத்தே யென்றும் உயிரேயென்றும் தெய்வமேயென்றும் பலவாறு தோத்திரம் செய்தான். அவ்வாறு அரை நாழிகை நேரம் அவன் கரை கடந்த சந்தோஷத்தினால் பிதற்றியிருந்த பின், தான் அவசர மாய் வெளியில் போய்விட்டு வருவதாகச் சொல்லி அவளிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியிற் சென்றான்.

சென்றவன் தனது மனோரதம் நிறைவேறியதை நினைத்து நினைத்துப் பூரிப்படைந்தவனாய்த் தன்னை முற்றிலும் மறந்து நடந்தான். தனது தந்திரத்தினாலும், பொறுமையினாலும் இரண்டு கோடி ரூபாயும், ஜெமீனும், அழகிற் சிறந்த பவளக் கொடி போன்ற ஒரு பெண்மணியும் வரப் போவதை எண்ணி ஆநந்த சாகரத்தில் மிதந்து நடந்தான்.

தான் அவளை மணப்பதற்குமுன் அதற்குத் தேவையான பணத்தைச் சேகரஞ் செய்ய நினைத்து கலியாணபுரம் ஜெமீந்தார் வீட்டிற்குச் சென்றான். அங்கு அவனும் கோனூர் மிட்டாதாரும் வழக்கம் போல பணம் வைத்து ரங்குபர்லா என்னும் சூதாட்டம் ஆடிக் கொண்டிருந்தனர்.

பீமராவைக் கண்டவுடன் கலியாணபுரம் ஜெமீந்தாரான மோகனராவ், ''பீமா! எங்கே இரண்டு மூன்று நாட்களாக உன்னைக் காணோம்? நீ இல்லாமல் பொழுதே போகவில் லையே. வா; ஓர் ஆட்டம் போடலாம்'' என்று சொல்லி அவனுடன் சூதாட ஆரம்பித்தார். அன்றிரவு 12-மணி நேரம் வரையில் அவ்விரண்டு பிரபுக்களும் அவனுடன் சூதாடி, இரண் டாயிரம் ரூபாய் நோட்டுகளைத் தோற்றனர். பீமராவ் அவற்றை எடுத்துக் கொண்டு குதூகலமாகத் தனது வீடுபோய்ச் சேர்ந்தான்.

மறுநாட் காலையில் கலியாணபுரம் ஜெமீந்தார் ஸகாராம் ராவின் வீட்டிற்கு வந்தார். ஒரு நாளும் வராத பெரிய மனிதர் அன்று தனது வீட்டுக்கு வந்ததைக் கண்ட ஸகாராம், ''வர வேண்டும், வர வேண்டும்'' என்று உபசாரஞ் செய்து உட்கார

வைத்து, ''வரவு நிரம்பவும் அபூர்வமாக இருக்கிறது! இந்தக் சேவகனால் என்ன காரியம் ஆக வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன். சொல்லலாம்'' என்றான்.

அதைக் கேட்ட மோகனராவ் பெரிதும் மகிழ்ச்சியடைந்து, ''எனக்கு அவசரமாகப் பதினாயிரம் ரூபாய் வேண்டும்'' என்றார்.

''இதுதானா பிரமாதம்! இதோ தருகிறேன்'' என்று மறு மொழி கூறியவண்ணம் ஸகாராம் தனக்கு அருகிலிருந்த ஓர் இரும்புப் பெட்டியைத் திறந்தான். அதில் பணப்பையின் மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு படத்தை எடுத்து வெளியில் வைத்து விட்டு, பணத்தை எடுத்து எண்ணினான். அப்போது அருகி லிருந்த மோகனராவ் படம் யாருடையதென்பதைப் பார்த்தார். அதில் அழகிய ஒரு பெண்ணின் உருவம் வரையப்பட்டிருந்தது, அவர் அதன் பேரழகைக் கண்டு நிரம்பவும் வியப்படைந்தார். அருகிலிருந்த ஸ்திரீயைத் தான் எப்போதோ பார்த்ததாக அவருக்கு நினைவுண்டாயிற்று. இமை கொட்டாமல் அதையே அவர் கவனித்தார். அதன் கண்களின் வசீகரமும், உதடுகளில் தவழ்ந்த புன்சிரிப்பும் அவரது மனதைக் கவர்ந்தன. ''இந்தப் படம் நிரம்ப அழகாயிருக்கிறதே! இது யாருடையது?'' என்று மோகனராவ் வினவ, ஸகாராம்ராவ், ''இது இறந்து போன என்னுடைய தங்கையின் படம்'' என்று தாமதமின்றி விடையளித்தான். ஆனால், உண்மையில் அது பரசுராமபாவாவின் இளைய மனைவியினது படம். வஸந்தராவுக்குத் தெரியாமல் அவன் அதை இரகசியமாக எடுத்து வந்து ஒளித்து வைத்திருந்தான்.

மோ : இந்தப் படத்தின் மேல் எனக்கு நிரம்ப ஆசையாக இருக்கிறது. இதை நான் எடுத்துக் கொள்ளலாமா? - என்று புன் சிரிப்போடு கேட்டார்.

சகா : இதை அடிக்கடி பார்ப்பதனால் நான் என்னுடைய விசனத்தை மறந்து வருகிறேனே - என்று அசட்டு நகையோடு கூறினான்.

மோ : நீர் கொடுக்கும் பணத்தில் 100-ரூபாய் இந்தப் படத்துக்காகப் பிடித்துக் கொண்டு மிகுதியைக் கொடும். முழுத் தொகையையும் என் பேரில் கடன் எழுதிக் கொள்ளும். நீர் மறுக்காமல் இதை எனக்கு அவசியம் கொடுக்க வேண்டும்.

உனக்குத் தேவையானபோது என்னுடைய ஜாகைக்கு வந்து இதைப் பார்த்துக் கொள்ளலாம்.

சகா : சரி; நீங்கள் அவ்வளவு தூரம் ஆசைப்படும்போது நான் கொடுக்காமலிருப்பது பிசகு; எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிய வண்ணம் 9,900 ரூபாயையும் அந்தப் படத்தையும் எடுத்து அவரிடம் கொடுத்து விட்டு, ஒரு புஸ்தகத்தில் ரூ.10,000-க்கு அவரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டான்.

உடனே பணத்தையும் படத்தையும் எடுத்துக்கொண்டு மோகனராவ் தமது ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தார்.

20–வது அதிகாரம்

வைரத்தினும் கடிய மனம்

தமது ஜாகையை அடைந்த மோகனராவ் படத்தை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு இமை கொட்டாமல் அதையே பார்த்தவண்ணமிருந்தார். அவரது மனதில் திடீரென்று ஒரு நினைவுண்டாயிற்று. ''ஓகோ! இது வஸந்தராவிடத்திலிருந்து நான் விடுவித்த பெண்ணைப் போலல்லவா இருக்கிறது! இது அவளே! சந்தேகமில்லை. இதை ஸகாராம் தன்னுடைய சகோதரியின் படமென்று சொல்லுகிறானே! அப்படியானால் வஸந்தராவினால் கொண்டுவரப் பட்ட பெண் ஸகாராம்ராவின் வேறொரு தங்கையாயிருப்பாளோ! அவளை நான் கால் நாழிகை நேரமே பார்த்திருந்தேனாயினும், அவளுடைய பேரழகும் வசீகரமான தோற்றமும் அவளிருந்த பரிதாபகரமான நிலைமையும் என் மனதில் என்றும் மாறாவிதமாகப் பதிந்து விட்டமையால் இதைக் கண்டவுடன் எனக்கு இவ்வளவு ஆசை உண்டாகிவிட்டது'' என்ற பலவாறு தமக்குள்ளாகவே பேசிக் கொண்டார்.

அதன் அடியில் எவரது பெயராகிலும் எழுதப் பட்டிருக்கிறதா என்று அதை அவர் நன்றாகச் சோதனை செய்து பார்த்தார். அதில் எவ்விதமான குறிப்பும் காணப்படவில்லை; அதை உற்று நோக்கிய வண்ணம் நெடுநேரம் இருந்தபின் அவர் அதைத் தமது பீரோவில் வைத்துப் பூட்டப் போகையில், அதன் கருமையான கண்கள் உண்மையில் உயிருடன் இருப்பவைபோலக் காணப் பட்டன. ஆகையால் அதைத் திரும்பவும் ஒருமுறை பார்க்க ஆசை கொண்டவராய், தம்மை மறந்து அதன் முகத்தில் ஒரு முத்தமிட்டார். அடுத்த நிமிஷத்தில் தான் செய்த பைத்தியக்கார வேலையை நினைத்து வெட்கமடைந்தவராய், அவர் அதை பீரோவில் வைத்துப் பூட்டினார்.

சதாரம் என்னும் நாடகம் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன், கடைசி ஒத்திகை நடந்தது. அன்று மல்லிகா மிகவும் திறமையாக நடித்ததைக் கண்ட கோவிந்தசாமி ராவ், ''இன்றைக்கே இவ்வளவு நன்றாக இருக்கிறதாகையால், நாடகம் கடைசி நாளில் முதல் தரமாக இருக்கும். ஆனால், உனக்கு எல்லாம் வைர நகைகளாய் இருக்க வேண்டும். இங்கிருக்கும் நகைகளில் சிறந்தவைகளை நான் உனக்காகப் பொறுக்கி வைக்கிறேன்'' என்று சொல்லி முடித்தார். அங்கு காத்திருந்த பீமராவ் அதன் பிறகு அவர்களை அழைத்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

மறுநாட் காலையில் பீமராவ் அவர்களது வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டவுடன் கிருஷ்ணவேணி குதூகலமாக மெத்தைக்கு ஓடினாள். அதைக் கண்ட பீமராவ், ''மல்லிகா படித்துக் கொண்டிருந்தால் அதைக் கெடுக்க வேண்டாம்'' என்றான்.

''புருஷனிடத்தில் உல்லாஸமாகப் பேசுவதைவிட படிப்பது தான் இன்பமோ?'' என்று பரிஹாஸமாகப் பேசிக் கொண்டே கிருஷ்ணவேணி மேலே போய் மல்லிகாவைக் கீழே அனுப்பினாள்.

கீழே இறங்கி வந்த மல்லிகாவைக் காணும்போதே பீமராவின் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது.

''ஸஞ்சலம்! நீ சதாரமாக வந்து நடிக்கும்போது, அது எவ்வளவு அழகாக இருக்கும் என்பதை இப்போதே நான் மனசால் பாவித்தேன்; ஆகா! நான் அடையும் பிரம்மாநந்தத்தை என்னவென்று சொல்வேன்! கடைசி ஒத்திகையில் நீ நடித்ததில் பாதி நடித்தாலும், அது நேத்திராநந்தமாக இருக்கும்'' என்றான்.

மல்லி : (நாணத்தோடு) நன்றாயில்லாமல் போனால் எவ்வளவு அவமானம் உண்டாகும்! அதன் பிறகு நான் வாத்தியார் முகத்திலும் விழிக்க மாட்டேன் - என்றாள்.

பீமராவ் : கண்ணே! அதிருக்கட்டும்; இதோ பார். இதில் வாத்தியார் சொன்னபடி வைர நகைகள் இருக்கின்றன - என்று கூறிய வண்ணம் ஒரு சிறிய நகைப்பெட்டியை அவளிடம் கொடுத்தான். அதை மல்லிகா மெதுவாக எடுத்துத் திறந்தாள்; அதற்குள்ளிருந்த நகைகளைக் கண்டு மூக்கின் மேல் விரலை

வைத்து, ''என்ன அழகு! என்ன ஜ்வலிப்பு! பளபளவென்று நட்சத்திரங்களைப் போலிருக்கின்றனவே! காதுக்குக் கம்மல், மாட்டல், மூக்குப் பொட்டு, கழுத்துக்குப் பதக்கம், அட்டிகை, நெற்றிச்சரம், ஆகா! எத்தனை நகைகள்! எல்லாம் பூர்த்தியாக இருக்கின்றனவே! இவைகளைப் பார்ப்பவர் உண்மையான வைர மென்று சொல்வார்களே அன்றி, சூது நகைகளென்று ஒருகாலும் சொல்ல மாட்டார்கள். வாத்தியார் என்மேல் எவ்வளவு அபிமானம் வைத்திருக்கிறார்! - என்றாள்.

பீம : வாத்தியார் என்பதற்குப் பதில் பீமராவ் என்று மாற்றிச் சொல்ல வேண்டும் - என்றான்.

மல்லி : (ஆச்சரியத்துடன்) அப்படியானால் இவைகளை நீங்களா வாங்கினீர்கள்? எவ்வளவு நன்றாயிருக்கின்றன! உண்மை வைரமா? அல்லது சூது வைரமா?

பீம : (புன்சிரிப்புடன்) உண்மை வைரங்கள்!

மல்லி : (ஆச்சரியத்துடன்) அப்படியானால் இவைகளின் விலை ஆயிரக்கணக்கில் இருக்குமே! இவ்வளவு விலையில் ஏன் வாங்க வேண்டும்? இவைகள் ராஜ ஸ்திரீகளுக்கல்லவா தகுந்த வையாய்க் காணப்படுகின்றன. சாதாரண மனுஷியான எனக்கு இவைகளால் என்ன உபயோகம்?

பீம : நீ என்னுடைய ராஜாத்தியல்லவா? இவைகளை அணியத்தகுந்தவள் உன்னைக் காட்டிலும் மேலானவள் எவள் இருக்கிறாள்? அழகில் ஆந்தையை வெல்லும் பெண்கள் எல்லாம் எவ்வளவோ அகம்பாவங் கொண்டு மினுக்கிக் குலுக்கி மயக்கு கிறார்களே. உன்னுடைய மேன்மை உனக்குத் தெரியவில் லையே? என்றான்.

அதைக் கேட்ட மல்லிகா அவனையும் நகைகளையும் மாறி மாறிப் பார்த்து, ''நீங்கள் இவ்வளவு ஐசுவரியந்தரென்று நான் இதுவரையில் நினைக்கவே இல்லை'' என்றாள்.

''ஏதோ ஈசுவரன் தயவால் கொஞ்சம் ஐசுவரியமிருக்கிறது; உன்னை மாத்திரம் அடைந்து விடுவேனாகில், எனக்கு மிஞ்சிய தனவந்தன் ஒருவனும் இருக்க மாட்டான்'' என்று புன்சிரிப் போடு இரண்டு பொருள்பட மொழிந்தான். அவன் தன் மீது

வைத்திருந்த அபிமானத்தையும் ஆழ்ந்த காதலையும் கண்ட மல்லிகா, அடக்கவொண்ணா நன்றியறிதலைக் காண்பித்தவளாய், "இவைகளுக்கெல்லாம் நான் என்ன பதில் செய்யப் போகிறேன்?'' என்றாள்.

''உன்னையே எனக்குக் கொடுத்து விட்டாயே! நீ இன்னம் பதில் வேறு செய்ய வேண்டுமா? அதைப் பற்றிக் கவலைப் படாதே. இவைகளை எடுத்துக் கொண்டு போய் ஜாக்கிரதையாக வை. நான் போய் மறுபடி வருகிறேன்'' என்று சொல்லி விட்டு அவளிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டான்.

''இவர் இவ்வளவு காதலையும் அன்பையும் காட்டியும் என் மனம் கொஞ்சமாவது இளகவில்லையே! இவர் மேல் கொஞ்சமும் ஆசை உண்டாகவில்லையே! என் மனம் என்ன பாழ்த்துப் போய் விட்டதா!'' என்று நினைத்தவண்ணம் மல்லிகா மேன் மாடத்தில் இருந்த கிருஷ்ணவேணியிடம் சென்று நகைகளை அவளிடம் காட்டினாள். அவள் அவைகளைக் கண்டு பெரிதும் பிரமிப்பை அடைந்து, திகைத்து அப்படியே ஸ்தம்பித்துக் கால் நாழிகை நேரம் வரையில் மௌனமாக இருந்தபின், ''இவைகளின் விலை பதினாயிரத்துக்கும் மேல் இருக்குமே! பீமராவ் லட்சப் பிரபுவாய் இருக்க வேண்டும்'' என்றாள்.

''அது என்னவோ எனக்குத் தெரியாது; ஆனால், இதில் அவர் இவ்வளவு பணத்தைச் செலவழித்தது அநாவசியம். என் மனம் இவைகளை நாடவில்லை. சூது வைரமே நாடகத்துக்குப் போதுமானது'' என்றாள் மல்லிகா.

''அடி மல்லிகா! உன்னைப் போன்ற அபூர்வமான பெண்களை நான் இதுவரையில் கண்டதே இல்லை. வைரங்களைக் கண்டு கூட உன் மனம் இளகவில்லையே! இது என்ன ஆச்சரியம்!'' என்றாள் கிருஷ்ணவேணி.

21–வது அதிகாரம்

அக்கினி பகவானுக்கு விருந்து

சதாரம் என்னும் நாடகம் நடந்த இரவு மல்லிகா நிரம்பவும் திறமையோடு நடிக்கப் போகிறாள் என்னும் செய்தி ஊர் முழுவதும் பரவியதாகையால், அன்று கொட்டகையில் மூச்சு விடுவதற்கு இடமில்லாமல், அரண்மனையைச் சேர்ந்தோரும், அவர்களது பந்துக்களும் வந்து நிறைந்து விட்டனர். அதுவரையில் மல்லிகா எடுத்துக் கொண்ட வேஷங்கள் மிகவும் சொற்பமானவை. சதாரமோ ஆரம்ப முதல் கடைசி வரையில் வந்து சிருங்காரம், சோகம், சாகசம் முதலிய பலாம்சங்களைக் காண்பித்து நிரம்பவும் அருமையாக நடிக்க வேண்டியது. ஆகையால் அன்று அவளது வல்லமையை கண்டறிய வேண்டும் என்று ஜனங்கள் அவளது வருகையை மிகுந்த ஆவலுடன் எதிர் பார்த்திருந்தனர். கிருஷ்ணவேணியும் மல்லிகாவும் அன்றைய வேலை எப்படி முடியுமோ என்று பெரிதும் கவலை கொண்டிருந்தனர். அன்று மல்லிகா முதல் தரமான ஆடைகளையும், வைர நகைகளையும் அணிந்து கொண்டு பளீரென வீசும் காந்த விளக்கின் ஒளியில் தேஜோமயமாக கந்தருவ ஸ்திரீயைப் போலத் தோன்றினாள்.

அவள் அந்தக் காட்சியில் வந்த இரண்டொரு வார்த்தைகள் சொன்னபோதே ஜனங்கள் கைகொட்டி ஆர்ப்பரித்தனர். அதன் பிறகு அவள் வரும்போதும், போகும் போதும் சோகரசம் காண்பித்த போதும், 'பேஷ் ' என்றும் 'பலே' என்றும் சொல்லி கரகோஷம் செய்தவண்ணம் இருந்தனர்.

உள்ளே இருந்த கோவிந்தசாமி ராவ், அவளுக்கு உண்டான கீர்த்தியைப் பற்றி மிகவும் பூரிப்படைந்து, அவள் வரும்போதெல்லாம் அவளைப் புகழ்ந்து உற்சாகப்படுத்தினார்.

பிறகு சவுக்கம் வாங்கிய அரசன் சதாரத்தை மணத்திற்கு வற்புறுத்தியதையும் அதற்கு அவள் இணங்காமல் மறுத்துப்

பேசியதையும் கண்ட ஜனங்கள் அனைவரும் நிரம்ப வியப்பு அடைந்தனர்.

முதல் வரிசை நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்த பீமராவ் தனது காதலிக்கு உண்டான பெரும் புகழைப் பற்றி அடைந்த ஆநந்தத்திற்கு அளவில்லை. அவளது பேரழகையும் திறமை யையும் இனிய வசனத்தையும் கர்னாமிர்தமான சங்கீதத்தையும் கண்டு அநுபவிக்க, அநுபவிக்க, அவனது காதலின் தீ மூண்டு தலைக்கேறியது. அவன் பித்தனைப் போல் ஆனான். ஆனால், பிறர் அவளைப் பார்த்து ஆர்ப்பரித்ததையும், கை கொட்டிய தையும், அவளது அழகைப் பற்றிப் பேசியதையும், அவளை உற்று நோக்கியதையும் காண அவன் சகிக்கவொண்ணாத பொறாமை அடைந்தான். ''இந்த ஆடுகள் ஏன் இப்படிக் கூச்ச லிடுகின்றன! இவள் ஒரு குடும்ப ஸ்திரீ அல்லவா; பாயிஸா கேப்புகளின் தயவுக்காக இப்படி நடிக்கிறாள் என்பதை உணராமல், வயிற்றுப் பிழைப்புக்காக ஆடும் கூத்தாடியைப் போல் அல்லவா மதிக்கிறார்கள். மட்டிகள்! சே! இவர்களுக்கு முன்னால் இனி என்னுடைய கண்ணாட்டியை அனுப்புவதே தவறு. பொழுது விடியட்டும்; நாளை முதல் நாடகத்திற்கே வர வேண்டாம் என்று சொல்லி இவள் வருவதைத் தடுத்து விட்டு, இந்த வாரத்திற்குள் கலியாணத்தையும் முடித்து விடுகிறேன்'' என்று கோபத்தோடும் பொறாமையோடும் பலவாறு தனக்குத் தானே பிதற்றிப் பல்லைக் கடித்தவண்ணம் இருந்த சமயத்தில் சவுக்கம் வாங்கிய அரசன் அவளை வற்புறுத்தியதைக் கண்டு, சிறிதும் சகியாதவனாய், ''சே! என் உயிருக்குயிரான ஸுந்தரியை, எவனோ வற்புறுத்துவதை நான் பார்த்துக் கொண்டிருப்பதா! இன்றிரவு எப்படியாவது ஒழியட்டும். நான் வெளியிற் போய் விடுகிறேன்'' என்று நினைத்துக் கொண்டு எழுந்து வெளியில் போய் விட்டான்.

அன்றைய நாடகத்திற்குக் கலியாணபுரம் ஜெமீந்தார் மட்டும் வரவில்லை. அவரது நண்பர் யாவரும் ஸஞ்சலாட்சியின் வேஷத்தைப் பார்த்து ஆநந்திக்கப் போய் விட்டமையால், அவருக்குப் பொழுது போவது நிரம்பவும் கடினமாக இருந்தது. அவர் தமக்குப் பொழுது போகாத சமயத்தில் ஸகாராமனிடத்தில் வாங்கிய படத்தை எடுத்து வைத்துக் கொண்டே இருப்பதும்,

மெய்ம் மறந்து அதனிடம் பேசுவதும், அதை முத்தமிடுவதும் வழக்கம். அவ்விதமே அன்று நாடகம் நடந்த சமயத்தில் அவர் தமது ஜாகையில் படத்தைக் கையில் வைத்துக் கொண்டு, "அடி கட்டழகி! உன் மனசில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாயோ தெரியவில்லையே! நீ ஏன் இவ்வளவு துக்கத்தோடு புன்னகை செய்கிறாய்? நீ எவ்வளவுதான் சிரிக்க முயன்றாலும், உன்னை உள்ளூர வருத்தும் விசனம் நன்றாக வெளியில் தெரிகிறதே! உன்னைப் போல் இருந்த யௌவன மங்கையைக் கண்டதனால், நான் உன்னுடைய படத்தை இப்படி வைத்துக் கொண்டு, வாயில் வந்தவிதம் பிதற்றுவதைப் பற்றி நீ உயிருடனிருந்தால் என்ன சொல்ல மாட்டாய்! பைத்தியம் பிடித்தவனென்று என்னை மதித்து சிரிப்பாயோ, அல்லது என்னுடைய பரிதாபகரமான நிலைமையைப் பற்றி என் விஷயத்தில் இரக்கங் கொள்வாயோ! நீ முற்றிலும் இளகிய மனசுடையவள் என்பதை உன்னுடைய முகம் நன்றாகக் காட்டுகிறது. அடி என் சீமாட்டி! நீ அவசியம் என்மேல் இரக்கமே கொள்வாய். சந்தேகமில்லை'' என்று சொல்லிக்கொண்டே சிறிது நேரம் அதை உற்று நோக்கிய வண்ணமிருந்தார்.

"சே! நான் எவ்வளவு மடையனாகி விட்டேன்! எனக்கிருந்த நல்ல அறிவெல்லாம் எங்கேயோ போய்விட்டதே! நான் ஒரு படத்தின் மேல் இவ்வளவு மோகங் கொண்டு, அதனுடன் நெடு நேரம் இப்படி சம்பாஷிப்பதை என்னுடைய சிநேகிதர்கள் கண்டால், என்னைப் பற்றி என்ன நினைக்க மாட்டார்கள்! நான் இந்தப் பைத்தியத்தை இன்றோடு விலக்க வேண்டும். அடி கண்மணி! நீ இப்படி எனக்கெதிரில் எப்போதும் இருக்க முடியாது. நீ பீரோவுக்குள் போய் அங்கே இருக்க வேண்டியதுதான் முடிவு. உன்னை இரண்டு மாச காலம் வெளியில் எடுக்காமல், பீரோவில் பூட்டி வைத்தால், உன்னையும் உன்னைப் போலிருந்த அந்தப் பெண்ணையும் நான் சுத்தமாக மறந்து விடுவேன். இதுவே சரியான காரியம். போ உள்ளே'' என்று சொல்லியவண்ணம் அவர் படத்தை பீரோவில் வைத்துப் பூட்டினார்.

என்றாலும் அவருக்குப் பொழுது போவது மிகவும் கடினமாகத் தோன்றியது. "யாவராலும் புகழப்படும் அந்த ஸஞ்சலாட்சியை நாமும் பார்த்துவிட்டுத்தான் வருவோமே''

என்ற ஒரு நினைவு அவரது மனதில் உண்டாயிற்று. சில நிமிஷங்களில் அந்த நினைவு உறுதிபட, அவர் அவ்விதமே செய்யத் தொடங்கி, வீட்டை விட்டுப் புறப்பட்டு வேகமாய் நடந்து அரண்மனைத் தோட்டத்திலுள்ள நாடகக் கொட்டகையை அடைந்தார். கொட்டகையின் வாசலில் இருந்த ஒருவன், "உள்ளே நிற்பதற்குக் கூட இடமில்லையே" என்று சொல்ல, "இன்றைக்கென்ன இவ்வளவு கூட்டம்?" என்றார் மோகனராவ். "ஆகா! இன்றைக்கு ஸஞ்சலாட்சி நடிப்பதைப்போல, இது வரையில் எவரும் நடித்ததும் இல்லை, இனி நடிக்கப் போவதும் இல்லை. அவ்வளவு சுகமாய் இருக்கிறது! அவளைப் பார்க்காத கண்களும் கண்களா?" என்றான் அங்கிருந்த வேறொரு மனிதன்.

அதைக் கேட்ட மோகனராவுக்கு உள்ளே போகவேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது. "எப்படியாகிலும் வழி செய்து கொண்டு போய்ப் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே நுழைந்து நாற்காலிகள் இருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். எவ்விடத்திலும் நிற்பதற்குக் கூட இடம் இல்லாதிருந்தது. ஆயினும், ஒரு நாற்காலி மாத்திரம் காலியாக இருந்தது. அதைப் பார்த்த மோகனராவ் அதில் உட்காரும் எண்ணத்துடன் அதற் கருகில் சென்றார். அதன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் மோகன ராவுக்கு அறிமுகமானவர். காலியாயிருந்த நாற்காலியில் பீமராவ் உட்கார்ந்திருந்ததாயும், அப்போதே அவர் எழுந்து வெளியிற் போனதாயும் அவர் தெரிவித்தார். "அப்படியானால் நல்லதுதான்; இதில் நான் உட்காருகிறேன்; அவன் வந்தால் நிற்கட்டும்" என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தார் மோகனராவ்.

அந்தச் சமயத்தில் சதாரத்தின் கணவன் ஆணுடைகள் குதிரைகள் முதலியவற்றுடன் வந்தான். சதாரத்தைக் காணாமையால் அவன் அவ்விடத்தில் படுத்து நித்திரை செய்ய, அந்தச் சமயத்தில் திருடன் வந்து நிரம்பவும் வேடிக்கையாக நடித்தான். பிறகு மேன் மாடத்தில் சதாரம் மிகுந்த விசனக்குறியுடன் உட்கார்ந்திருப் பதாகக் காட்டினார்கள். அவள் தனது கணவன் கீழே வந்திருக்க மாட்டானென்றும், சிறிது நேரங் கழித்து கீழே இறங்கலாம் என்றும் சொல்லிவிட்டு உட்கார்ந்தாள்.

அவளைக் கண்ட மோகனராவின் மன நிலைமையை விவரித்தல் கூடாத காரியம். தனது படத்திலிருந்த ஸ்திரீயே

அவ்விடத்திலும் இருப்பதைக் காணவே, அவர் தமக்கு உண்மையில் பைத்தியம் பிடித்து விட்டதாக மதித்தார். ''நான் உண்மையில் நாடகம் பார்க்கிறேனா? அல்லது என்னுடைய ஜாகையில் உள்ள படத்தைப் பற்றிக் கனவு காண்கிறேனா?'' என்று திகைத்தார். தமது கண்களை நம்பாமல் அவற்றை நன்றாகத் துடைத்துக் கொண்டார். சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்து திரும்பவும் அவைகளைத் திறந்து பார்த்தார். அதே வடிவம் மாறாமல் மேன் மாடத்தில் இருந்தது. அவள் பேசிய குரல் குயிலோசையைப் போல அவரது காதில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. வஸந்தராவினால் அழைத்து வரப்பட்ட மங்கையின் குரலும் அந்தக் குரலும் ஒன்றாகயிருந்தன. வஸந்தராவ் அழைத்து வந்தவளே ஸஞ்சலாட்சி என்றும், தாம் விடுவித்த பிறகு, அவள் நாடகத்தில் சேர்ந்து கொண்டிருப் பதாகவும் அவர் உத்தேசித்தார்.

அவ்விதம் நினைத்து அவர் இமை கொட்டாமல் அவளையே உற்று நோக்கியவண்ணம் இருந்தார். அப்போது இருளைக் காண்பிக்கும் பொருட்டு விளக்குகள் எல்லாம் பக்கப் படுதாக் களுக்கு அப்புறம் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. தற்செயலாக மோகனராவ் ஒரு பக்கப் படுதாவை பார்த்தபோது புகையைப் போன்ற ஏதோ வஸ்து கொடி போலக் கிளம்பியதை அவர் கவனித்தார். அது படிப்படியாய்ப் பெரியதாகத் தெரிந்தது. அவள் மீதிருந்த தமது நினைவை அவர் அப்போதே அதன் மேல் திருப்பி அது என்னவென்று கவனித்தார். புகையெழுந்த இடத்தி லிருந்து பக்கப் படுதாவில் அடுத்த நிமிஷத்தில் நெருப்புப் பற்றிக் குபீரென்று எரிய ஆரம்பித்து மேல் கூரை வரையில் எட்டிக் கொட்டகையிலும் நெருப்புப் பிடித்துக் கொண்டது. அப்போதுதான் ஜனங்களும் அதைக் கவனித்தார்கள். உடனே எல்லோரும் ''நெருப்பு! நெருப்பு!'' என்று கூச்சலிட, அந்த ஓசை சமுத்திர கோஷத்தைப் போல எழுந்தது. எல்லோரும் அஞ்சித் திகைத்து தத்தம் இடத்திலிருந்து அவசரமாக எழுந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் எண்ணத்துடன் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு வெளியில் ஓட முயன்றார்கள். ஒருவர் மீது ஒருவர் விழுந்து துகையலாயினர். நாற்காலிகளின் கீழ் மனிதரும் மனிதரின் மேல் நாற்காலிகளுமாக உருண்டு, எழுந்திருக்கக்

கூடாமல் பலர் தத்தளித்தனர். கொட்டகையின் சிறிய வாசல் வழியாக அத்தனை ஜனங்களும் ஒருவர் பின் ஒருவராய் ஒழுங்காகப் போதலே நெருக்கமாகவும், உபத்திரவமாகவும் இருக்குமென்றால், எல்லோரும் ஒரே காலத்தில் வெளியில் போக நினைத்து விரைவாக ஓடி அழுத்தினால், அப்போது உண்டாகும் குழப்பத்தையும், நாசத்தையும் மனதால் பாவிக்க வேண்டுமே அன்றி வாயால் விவரிப்பது பலியா முயற்சியாகும்.

இரண்டொரு நிமிஷத்தில் படுதாக்களில் எல்லாம் நெருப்புப் பிடித்துக் கொள்ள, நாடக மேடை முழுவதும் நெருப்பும் புகையும் சூழ்ந்து கொண்டன. மேடையிலிருந்த யாவரும் அவ்விடத்தை விட்டு வெளியில் ஓடிப் போயினர். தூங்கிக் கொண்டிருந்தவன் போல படுத்திருந்த சதாரத்தின் புருஷனாகிய அரசனும், திருடனும், மற்றவரும் தம்மை மறந்து, கோவிந்தசாமி ராவுக்குப் பயப்படாமல் தத்தம் வேஷத்துடன் வெளியில் ஓடினர். அவ்விதம் ஓடிய அவர்கள் மல்லிகா உட்கார்ந்திருந்த மேன் மாடத்திற்கு ஏறிப் போகும் பொருட்டு உட்புறத்தில் வைக்கப்பட்டிருந்த ஏணியில் தடுக்கி விழுந்து, அதைக் கீழே தள்ளிவிட்டு அப்பால் போயினர். மல்லிகாவைச் சுற்றி நாற் புறங்களிலும் நெருப்பும் புகையும் சூழ்ந்து கொண்டன. அவள் கீழே இறங்கப் பார்த்தாள்; ஏணி காணப்படவில்லை. அவள் பெரிதும் கலக்கமும் திகைப்பும் அடைந்தாள். கீழே குதிப்பதற்கும் அந்த இடம் நிரம்பவும் உயரமாக இருந்தது. அதைக் கண்ட மல்லிகா, தனக்கு அன்றோடு முடிவு காலம் வந்து விட்டது என்று தீர்மானித்துக் கொண்டு ஜனங்களைப் பார்த்து, "உங்களுக்குப் பயமில்லை. மெதுவாய்ப் போங்கள்; மெதுவாய்ப் போங்கள்" என்று உரக்கக் கூவினாள். அதைக் கேட்ட மோகனராவ் நிரம்பவும் பதறி, "நீ அங்கே நிற்காதே; கீழே குதித்து விடு; கீழே குதித்து விடு" என்று கூச்சலிட்டார்.

"நான் இனி பிழைப்பதேது? இதோடு என் ஆயுசு முடிந்தது" என்று மறுமொழி சொல்லிவிட்டு மல்லிகா சும்மாவிருந்தாள். அதற்குள் நெருப்புத் தணல்கள் அவள் மீது விழ ஆரம்பித்தன. பெருத்த ஆரவாரத்தோடு மோகனராவ் மேடையின் மீது பாய்ந்து நெருப்பிற்குள் புகுந்து அங்கு விழுந்து கிடந்த ஏணியை நிறுத்தி அதன் மேல் ஏறி, "இங்கே வா!" என்று கூறியவண்ணம் குழந்தையை எடுப்பதைப் போல அவளைக் கட்டித் தூக்கினார்.

22–வது அதிகாரம்

பொரியலும் வறையலும்

அதற்கு முன் பழக்கமில்லாத ஓர் அன்னிய புருஷர் தன்னைக் கட்டித் தூக்கியதால் உண்டான லஜ்ஜையையும் சங்கடத்தையும் பொறாமல் மல்லிகா பெரிதும் வருந்தித் தத்தளித்தாள். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலியவற்றால் நிரம்பவும் துன்ப முற்றாள். தான் நெருப்பினிடையில் அகப்பட்டுக் கொண்டதை அவள் மறந்தவளாய் ஜனங்கள் படும் பாட்டைக் கண்டு, ''மெதுவாகப் போங்கள்; மெதுவாகப் போங்கள்'' என்று கூச்ச லிட்டாள். மோகனராவ் அவளைத் தூக்கிக் கொண்டு விரைவாக ஏணியின் வழியாய்க் கீழே இறங்கினார். அவள் உட்கார்ந்திருந்த மேல் மாடம் எல்லாம் நெருப்புப் பிடித்துச் சூழ்ந்து கொண்டி ருந்தமையால், அவர்கள் நெருப்பின் ஜ்வாலை வழியாகவே கீழே இறங்கினார்கள். இறங்கிய பின் மோகனராவ் அவளைத் தூக்கிக் கொண்டு பக்கப் படுதாக்களின் வழியாக ஜனங்களிருந்த இடத்திற்கு வந்து விட நினைத்தார். ஆனால், ஜனங்கள் வெளியில் போக மாட்டாமல் தத்தளித்ததைக் கண்டு அங்கு வருவதில் எவ்விதமான பயனும் இல்லை என்று மோகனராவ் உணர்ந்தாராயினும், தப்பிப் போக வேறு வழியில்லாததைக் கண்டு அவ்விடத்திற்கே வந்துவிடலாம் என்னும் எண்ணத்தோடு அவர் அவளைத் தூக்கிக்கொண்டு முதலில் வலது பக்கத்திற்குப் போனார். அங்கிருந்த பக்கப் படுதாக்களிளெல்லாம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தமையால், அந்த ஜ்வாலைக்குள் நுழைந்து போவதற்குக் கூடவில்லை. பிறகு அவர் இடப்பக்கத்தில் ஓடினார். அங்கு மேல் பக்கத்தில் கொட்டகையில் நெருப்புப் பிடித்து அதன் ஒரு பாகம் தீய்ந்து கீழே விழுந்து கிடந்தமையால், அவ்விடத்திலும் வழி இல்லாமல் போயிற்று. அதற்குள் மல்லிகா, தன்னைத் தீய்த்த தணலின் வெப்பத்தைப் பொறாமல் தவித்துத் தத்தளித்து மூர்ச்சையடைந்தாள்.

அவர்கள் நாடக மேடையின் முன்புறமாக வெளியில் போக முடியாமல் போகவே, பின்புறத்தில் ஒரு வழியிருந்தாலன்றி, அவர்கள் நெருப்பிற்கு இரையாக வேண்டியதே முடிவாக இருந்தது. பின்புறத்தில் வழி ஏதாகிலும் இருக்கலாம் என்னும் எண்ணத்தோடு மோகனராவ் அவளைத் தூக்கிக் கொண்டு பின்புறத்தில் ஓடினார். எங்கும் புகையும் நெருப்புமாய் இருந்த மையால், போகும் வழியை அறிய மாட்டாமல், குறுக்கே இருந்த கயிறுகளிலும், மூங்கிற் கம்பங்களிலும், கட்டைகளிலும், பள்ளங்களிலும் தடுக்கி அவர் மல்லிகாவோடு விழுந்து எழுந்தார். அவ்விதம் தடுமாறிய வண்ணம் சகிக்கவொண்ணாத துன்பமடைந்து அவர் கொட்டகையின் கடைசிக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கு ஏதாகிலும் வழி இருக்குமோவென்று அவர் நோக்க, அவ்விடத்தில் கொட்டகை ஒரு சுவரில் போய் முடிவ டைந்தது. ஆனால், சுவருக்கும் கொட்டகைக்கும் இடையில் இரண்டு முழ அகலத்தில் இடைவெளி விடப்பட்டிருந்தது. அது சிறிய சந்தைப் போல் இருந்தது. அதுவரையில் அப்போது நெருப்பு எட்டாம லிருந்தது.

அவர்கள் அங்குச் சென்றவுடன் அந்த இடைவெளியின் வழியாக உள்ளே நுழைந்த குளிர்காற்று மல்லிகாவின் வெதுப்பப் பட்ட உடம்பில் படவே, அவள் தனது கண்களை விழித்துக் கொண்டு, ''நான் இப்போது எங்கே இருக்கிறேன்?'' என்றாள்.

குயிலோசை போன்ற அந்தக் குரலொலி அவரது காதில் பட்டவுடன், அவருக்குப் பழைய நினைவுகள் தோன்றின. ''முன்னொரு நாள் இவளைச் சத்திரத்தில் விடுவித்தேன். இன்று நான் இவ்விடத்துக்கு வந்தது, இவளை இரண்டாம் முறை விடுவிப்பதற்குத்தான் போலிருக்கிறது. இதுவும் ஓர் அதிர்ஷ் டந்தான். இவளுடைய ஆபத்துச் சமயங்களில் இவளைக் காப்பாற்ற கடவுள் என்னையே பொறுக்கி எடுப்பதன் காரண மென்ன? இதில் ஏதோ அந்தரங்கமான கருத்து அடங்கியிருக் கிறது'' என்று நினைத்தார். அவள் வாயைத் திறந்து பேசிய போது அவரது படத்திற்கு உயிர் வந்ததைப் போல ஓர் எண்ணம் அவரது மனதில் தோன்றியது. தாம் எதிர்பாராத விதமாக, அவள் தனது மார்பின் மீதிருந்ததைக் காண அவருக்கு ஒருவித லஜ்ஜை உண்டாயிற்று. அவள் திரும்பவும் கண்ணைத் திறந்து, ''நாம் இன்னமும் கொட்டகையிலா இருக்கிறோம்'' என்றாள்.

"ஆம்; பயப்பட வேண்டாம்! எப்படியாவது நான் உன்னுடைய உயிரைக் காப்பாற்றி விடுகிறேன்'' என்று மோகனராவ் அவளுக்குத் தைரியம் கூறினார்.

"இது கொட்டகையின் பின்புறம் அல்லவா? இங்கே சுவர் அல்லவா இருக்கிறது! வழி இல்லையே! எப்படி வெளியில் போகிறது? நெருப்பு இதோ வந்துவிட்டதே! இரண்டொரு நிமிஷத்தில் கொட்டகையே விழுந்து விடும் போலிருக்கிறதே!'' என்று மல்லிகா அச்சத்தோடு கூறினாள்.

அதைக் கேட்ட மோகனராவ் நிமிர்ந்து அந்தச் சுவரின் மேற் புறத்தைப் பார்த்தார். அது மூன்றாள் உயரத்திற்குமேல் இருந்தது. அந்தச் சுவரின் வழியாக கூரையின் மீது ஏற யாதொரு மார்க்கமும் இல்லாமலிருந்தது. அவர்கள் கூரையின் மீது போகாமல் சற்று நேரம் தாமதித்தால், கொட்டகை முழுவதும் அப்படியே அவர்கள் மீதில் விழுந்து, அவர்களைச் சாம்பலாக்குவது நிச்சயமாய் இருந்தது. முதலில் மேன் மாடத்திலிருந்த மல்லிகாவை இறக்கிய ஏணி எங்கிருக்கிதென்று அவர் உற்று நோக்கினார். அது அதிக தூரத்தி லிருந்ததும் தவிர அதற்குப் போகும் வழி முழுதும் புகையும் நெருப்புமாய் இருந்தன. இடை வழியிலிருந்த படுதாக்களும், மூங்கில்களும், கொட்டகையும் எரிந்து கொண்டிருந்தன. அந்த ஆபத்தான நிலைமையில் இருதலைக்கொள்ளி எறும்பு போலி ருந்த மோகனராவ் நிரம்பவும் பதைத்து நின்றார். அவருக்குத் தாம் இறப்பதைப் பற்றி கவலையே கிடையாது. மல்லிகாவின் மாந்தளிரை ஒத்த மேனியில் ஒரு சிறிய நெருப்புப் பொறி படுவதும் அவருக்குச் சகிக்க வொண்ணாத காட்சியாக இருந்தது. படிப்படியாக ஜ்வாலை பெருகி, எங்கும் பரவி அவர்கள் மீது வீச ஆரம்பித்தது. கொட்டகையின் கடைசி வரையிலும் நெருப்புப் பிடித்துக் கொண்டது. அவளது அழகிய மேனியில் நெருப்புப் பொறி விழாமல் அவர் தமது வஸ்திரத்தால் மூடித் தமது மறைவில் அவளை வைத்துக் கொண்டு, தமது முதுகுப் பக்கத்தைக் கொட்டகைப் பக்கம் திருப்பிக்கொண்டார். நெருப்பு நிரம்பவும் கடூரமாக எழுந்துமோதி தம்மிடம் வந்ததைக் காண, அவரது தேகம் துடித்தது. என்ன செய்வதென்பதை அறியாமல் அவர் பதைத்து நின்றார். அடுத்த நிமிஷத்தில் நெருப்பு தம்மை மூடிக் கொள்ளும் போலிருந்ததைக் கண்ட மோகனராவ், "நாம்

இனி செய்யக் கூடியது ஒன்றுமில்லை. அந்த ஏணியை எடுத்தா லன்றி தப்ப வேறு வழியில்லை'' என்றார்.

''அதை எப்படி எடுக்கிறது? நெருப்புக்குள் புகுந்தல்லவா எடுக்க வேண்டும். அதற்குள், பாதி உடம்பு எரிந்து போகுமே!'' என்றாள் மல்லிகா.

''இருந்தாலும் பாதகமில்லை; நான் போகிறேன்; எப்படி யாவது நீ மாத்திரம் தப்புவது போதும்'' என்று சொல்லி ஏணியை நோக்கி ஓடப் பார்த்தார்; பிரம்மாண்டமாயிருந்த நெருப்பிற்குள் நுழைய அஞ்சி சிறிது பின்வாங்கினார். போக வேண்டாம் என்று மல்லிகாவும் அவரைத் தடுத்தாள். இரண்டொரு நிமிஷத்தில் அவர்களை ஜ்வாலை தகிக்க ஆரம்பித்தது. அவள் அதைப் பொறாமல் புழுவைப் போலத் துடித்துத் தத்தளித்ததைக் கண்ட மோகனராவ், தனது மனதை உறுதிப்படுத்திக் கொண்டு ஒரே பாய்ச்சலாக நெருப்பிற்குள்ளே பாய்ந்து, ஏணி இருந்த இடத்திற்குப் போய், அதை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். தெய்வச் செயலாக ஏணியில் நெருப்புப் பிடிக்காமல் இருந்தது. அவர் தீயில் முழுகி வந்தமையால், அவரது தேகம் முழுதும் வெந்து வெதும்பிப் போய்க் கொப்பளித்தது. தலை மயிர், மீசை, புருவம் முதலியவை கருகி உதிர்ந்து போயின. தேகம் முழுதும் நெருப்பாக எரிந்தது.

அவர் உடனே ஏணியை சுவரில் நிறுத்தி அதில் மல்லிகாவை விரைவாக ஏற்றினார். அவள் அதன் வழியாக விரைந்தேறி ஓட்டின் மேல் போய் நின்று கொண்டு, சீக்கிரம் வந்துவிடும்படி அவரையும் அழைக்க, அவரும் ஏறி ஓட்டிற்குப் போய்ச் சேர்ந்தார். ''தப்பினோம் பிழைத்தோம்'' என்று சொல்லிக் கொண்டே, அவர்கள் அந்தக் கூரையின் உச்சி வரையில் சென்றனர். ஆனால், அந்தக்கூரையின் அப்புறத்தில் இறங்க மார்க்கமில்லை. கூரையின் உச்சிக்கப்பால் அரண்மனையின் மதில் நின்று கொண்டிருந்தது. அது அந்த உச்சி மேட்டின் மேல் ஒரு பனை உயரமிருந்ததா கையால், அதன் மேல் ஏறுவது கூடாத காரியமாய் இருந்தது. தவிர மதிலுக்கப்புறம், பள்ளமாதலால் அதன் மேல் ஏறுவதால் யாதொரு பயனும் இல்லாதிருந்தது. ஆகையால், கொட்டகை முழுதும் எரிந்து அடங்கும் வரையில் அவர்கள் கூரையின் மீதிருந்து, பிறகு அதே வழியாக இறங்கி வர வேண்டும் என்பதே

முடிவாகத் தோன்றியது. ஆதலால், அவர்கள் கலங்கி ஓட்டின் மீது நின்றனர். இரண்டொரு நிமிஷத்தில் கொட்டகை முழுதும் பற்றிக் கொண்டு இடியோசை போன்ற வெடிச் சத்தங்களுடன் எரிய, அதன் ஜ்வாலை ஆகாயத்தை அளாவியது. நெருப்புத் துண்டுகள் ஆகாயமெல்லாம் நிறைந்தன. அந்தப் பெருத்த சொக்கப் பானைக்கு மிக்க அருகிலிருந்தமையால் அவர்கள் பட்ட பாட்டைச் சொல்ல நாவெழவில்லை. ஆதலால், படிப் போரே அரை மனதால் பாவித்துக் கொள்வது நன்று. அவர்களிரு வரும் அவ்விதம் நெருப்பில் வறுபட்டவண்ணம் ஒரு நாழிகை நேரம் ஓட்டின் மீது மதிலோடு மதிலாக ஒட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

அங்ஙனம் அவர்களது நிலைமை அப்படி இருக்க, ஜனங்கள் வெளியில் போவதற்குள் பலர் நசுக்குண்டனர்; பலர் கை கால்களை இழந்தனர்; எண்ணிறந்தோர் பாயிஸா கேப்புகளிருந்த இடத்தில் கூட்டம் இல்லாதிருந்தமையால், அவர்கள் ஸுலபமாக அரண்மனைக்குள் போய்ச் சேர்ந்து, நெருப்பை அணைக்கும்படி ஜனங்களைத் தூண்ட, எல்லோரும் குடங்களை எடுத்துக் கொண்டு ஓடி பக்கத்தில் இருந்த குளத்தில் இறங்கி ஜலமெடுத்து வந்து நெருப்பில் பெய்தார்கள். அவர்கள் எவ்வளவோ பாடு பட்டு முயன்றும், நெருப்பு அடங்காமல் மகா உக்கிரமாகப் பற்றி எழுந்து பரவியது. சிலர் தமது கைகளில் அகப்பட்ட பொருட் களை வெளியில் எடுத்துப் போயினர். பலர் ஓலமிட்டு அலறினர். வெளியில் போன ஜனங்கள் கொட்டகை முழுவதும் எரிந்ததைக் கண்டு, "ஐயோ! ஸஞ்சலாட்சியைக் காணோமே! அவள் தப்பி னாளோ இல்லையோ தெரியவில்லையே!" என்று கூக்குரலிட்டு அங்கும் இங்கும் ஓடி ஓடிப் பார்த்தனர். எவ்விடத்திலும் அவளைக் காணாமல் அவர்கள் மகா சங்கடமான துன்பக் கடலில் ஆழ்ந்தனர். அவளைத் தவிர மற்ற எல்லா நடிகர்களும் கோவிந்த சாமி ராவும் தப்பி வந்திருந்ததைக் கண்ட ஜனங்கள் அவளுக்காக மிகுந்த விசனமும் இரக்கமும் கொண்டு ஏங்கித் தவித்தார்கள். கொட்டகை முழுவதும் எரிந்து கீழே விழுந்து அடங்கும் வரையில் ஜனங்கள் எல்லோரும் அவ்விடத்தை விட்டுப் போக மனமற்றவராய் அப்படியே நின்று கொண்டிருந்தனர். கொட்டகை முழுதும் எரிந்து வீழ்ந்த பின், நெருப்பு தணியவே சிலர் தற்

செயலாக ஓட்டின் மீது பார்க்க, இங்கு இருவர் விழுந்து கிடந்ததைக் கண்டு சந்தோஷத்தினால் பெரிதும் ஆரவாரம் செய்து அங்கிருந்தது யாவரென்பதை அறிய எண்ணி உரக்கக் கூவி பார்த்தனர். மறுமொழி கிடைக்கவில்லை. அவர்கள் இறந்திருப்பார்களோ என்று சந்தேகித்த ஜனங்கள் அங்கு ஏறிப் பார்க்க வேண்டுமென்னும் ஆவல் கொண்டனர். உடனே அவர்கள் குடம் குடமாக ஜலத்தைக் கொணர்ந்து கவிழ்த்து நெருப்பை அணைத்து அவர்கள் இருந்த இடத்திற்கு வழி செய்யத் தொடங்கினர். அதற்குள் வேறொருவன் அரண்மனைக்குள் ஓடி, ஓர் ஏணியை எடுத்து வந்தான். சிலர் நிரம்பவும் பிரயாசைப் பட்டு வழி செய்து கொண்டு, சுவரினருகில் சென்று ஏணியை அதன் ஓரத்தில் நிறுத்தினார்கள். வேறு சிலர் அதன் வழியாக ஏறிக் கூரையை அடைந்து நெருங்கிப் பார்க்க, அங்கு ஸஞ்ச லாட்சியும், வேறொரு யௌவனப் புருஷரும் உச்சி மேட்டில் விழுந்து கிடந்ததைக் கண்டனர். காணவே, அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா அல்லது இறந்து போய் விட்டார்களோ என்று உற்றுப் பார்த்தனர். இருவருக்கும் நாடி மெதுவாக அடித்துக் கொண்டிருந்தது. ஆனால், இருவரும் பேச்சு மூச்சின்றி மெய்ம்மறந்து விழுந்து கிடந்ததாக ஏற்பட்டது.

உடனே அம்மனிதர் மெதுவாக இருவரையும் கீழே இறக்கி கொட்டகை இருந்த இடத்தை விட்டு வெளியில் கொணர்ந்தனர். அப்போது மல்லிகாவைத் தூக்கி வந்த பீமராவ் பெரிதும் வியப்ப டைந்தவனாய், ''அவர் கலியாணபுரம் ஜெமீந்தாரல்லவா'' என்றான். அதைக் கேட்ட ஜனங்களும் ஆச்சரியம் அடைந்தனர். இரண்டு வண்டிகள் வரவழைக்கப்பட்டன. ஒவ்வொன்றில் ஒவ் வொருவராக இருவரும் விடப்பட்டனர். மோகனராவ் இருந்த வண்டி அவரது ஜாகைக்கும், மல்லிகா இருந்த வண்டி கருந் தட்டான்குடிக்கும் போய்ச் சேர்ந்தன.

23—வது அதிகாரம்

மல்லிகாவின் மூன்றாம் கணவன்

நெருப்பினால் வெதுப்பப்பட்ட இருவரும் சௌக்கிய மடைந்து தேறி தமது சுயநிலைமைக்கு வர ஒரு வாரமாயிற்று. மோகனராவ் தமது உணர்வைப் பெற்றவுடன் கேட்ட முதற் கேள்வி, "ஸஞ்சலாட்சி உயிரோடிருக்கிறாளா?" என்பதே. அவள் உயிரோடிருக்கிறாள் என்றும், அநேகமாய் சௌக்கியமடைந்து விட்டாள் என்றும் அறிந்த பிறகே, அவருக்கு உயிரும் நல்ல உணர்வும் தமது இயற்கையான மகிழ்ச்சியும் திரும்பின. தான் நன்னிலைமை அடைந்த மறுநாளே, அவள் இருந்த தெரு, வீட்டு இலக்கம் முதலிய விவரங்களை அறிந்து கொண்டு, அங்கு போய் அவளைப் பார்க்க ஆவல் கொண்டு அவர் கருந்தட்டான்குடிக்கு வந்தார்.

வந்தவர் கிருஷ்ணவேணியின் வீட்டை அடைந்து கதவைத தட்ட அதைத் திறந்த கிருஷ்ணவேணி அவரது முகத்தில் நெருப்பு சுட்டதனால் உண்டாயிருந்த வடுக்களைக் கண்டு, அவரே கலியாணபுரம் ஜெமீந்தாரென்பதை யூகித்துக் கொண்டாள். உடனே நாணமும் ஒருவித ஸந்தோஷமும் அடைந்தவளாய், மலர்ந்த முகத்தோடு அவரை நோக்கி, "வர வேண்டும், வர வேண்டும், ஸஞ்சலாட்சி சௌக்கியமடைந்து விட்டாள். மெத்தை யின் மேல் இருக்கிறாள். அவளுடைய உயிரைக் காப்பாற்றிய ஜெமீந்தாரவர்கள் தாங்கள் தானே?" என்றாள் கிருஷ்ணவேணி.

அதைக்கேட்ட ஜெமீந்தார் மறுமொழி கூறத் தயங்கி புன் சிரிப்போடு, "ஆம்; நான்தான் மோகனராவ்; அவளை நானா காப்பாற்றினேன்? சுவாமியல்லவா காப்பாற்றினார்" என்றார்.

உடனே கிருஷ்ணவேணி மோகனராவை நிரம்பவும் மரி யாதையாக உபசரித்து உள்ளே அழைத்துக் கொண்டு போய் ஒரு நாற்காலியில் உட்காரச் செய்தாள். அவரது விஷயத்தில் அவளுக்கு

உண்டான பெருமைக்கும் வியப்பிற்கும் மதிப்பிற்கும் அள வில்லை. ''பிரபுவே! ஏழைகளாகிய எங்களைத் தாங்கள் ஒரு பொருட்டாக மதித்து இவ்வளவு தூரம் வந்தீர்களே! அந்த அன்பு ஒன்றே போதுமே! அன்று நெருப்பில் தாங்கள் ஸஞ்சலாக்ஷிக்குப் புரிந்த உதவியையும், அவள் உயிரைக் காப்பாற்ற தாங்கள் செய்த அபூர்வச் செயல்களையும் அவள் எனக்கு விவரமாகத் தெரிவித் தாள். புருஷர் இருந்தால் இப்படியல்லவா இருக்க வேண்டும். புருஷ சிங்கமென்பது தங்களுக்கே தகும். தங்களுடைய தைரியம் யாருக்கு வரும்! அதனாலேதான் இந்த ஊர் முழுவதிலும், தங்களைப் புகழாத மனிதரே இல்லை. தங்களை நாங்கள் ஒருநாளும் மறக்க மாட்டோம்'' என்று சொல்லிக் கொண்டே தனது நன்றியறிவின் பெருக்கை அடக்க மாட்டாதவளாய் ஆநந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

மோகன : (சிறிது வெட்கி) நான் என்ன பிரமாதமான காரியம் செய்து விட்டேன்! போதும். இதைப் பற்றி மேன்மேலும் சொல்ல வேண்டாம் - என்றார்.

கிரு : சரியான காரியம்! எங்களுக்குக் கண்ணிலும் அருமை யான ஸஞ்சலாக்ஷியின் உயிரைக் காப்பாற்றிய தங்களுடைய பேருதவியைப் பற்றி புகழக் கூடாதென்றால், அந்த உத்தரவுக்கு யார்தான் கீழ்ப்படிவார்கள்? தங்களுடைய உயிரைக் கூட மதியாமல் அவள் மீது ஒரு நெருப்புப் பொறியும் படக் கூடா தென்று தங்களுடைய தேகத்தால் அவளை மறைத்து, அவ்வளவு அன்போடு காப்பாற்றிய தங்களை எத்தனை தரம் புகழ்ந்தாலும் எங்கள் மனம் திருப்தியடையுமா! ஆசையடங்குமா! இனி இந்த உயிரழிந்து, இந்த நாக்கு சாம்பலானாலன்றி, இதைப் பற்றி நாங்கள் சொல்லாமல் இருக்க முடியாது – என்றாள்.

மோகன : அதிருக்கட்டும். உன்னுடைய பெயர் என்ன?

கிரு : என்னுடைய பெயர் கிருஷ்ணவேணி. எங்களுக்கும் ஸஞ்சலாக்ஷிக்கும் யாதொரு உறவும் இல்லாவிட்டாலும், அவள் என்னுடைய சகோதரியைப் போல இருந்து வருகிறாள்.

மோகன : அவளுடைய உடம்பில் நெருப்புப் பட்ட புண் ஏதாவது இன்னமும் இருக்கிறதா?

கிரு : புண்படவில்லை; நெருப்பின் ஜ்வாலையைத் தாங்க மாட்டாமல் தேகம் முழுதும் வெதும்பிப் போய் விட்டது. இப்போது சௌக்கியமாய் விட்டது. ஆனால், அவளுக்குண்டான இந்த ஆபத்தைப் போல உலகத்தில் எவளுக்கும் உண்டா யிருக்காது; இதோ நான் போய் அவளை அனுப்புகிறேன் என்று சொல்லியவண்ணம், மெத்தையின் மீது சென்றாள். அடுத்த நிமிஷம் மல்லிகா நாணத்தோடு கீழே இறங்கினாள்.

அவளது முகம் வெளுத்திருந்தது. வலது செவிக்கருகில் நெருப்புப் பொறி பட்டு, அவ்விடத்தில் வெண் சிவப்புப் புள்ளியாக ஒரு வடு இருந்தது. நெற்றிக்கு மேல் சில இடங்களில் தலைமயிர் பொசுங்கிப் போய், திரும்பவும் வளர்ந்து, சுருண்டு சுருண்டு நெற்றியில் விழுந்தது. அதனால் அவளது அழகு முன்னிலும் பன்மடங்கு அதிகரித்துத் தோன்றியது. அவர் வந்திருக்கிறார் என்பதைக் கேட்டவுடன் அவளுக்குண்டான ஆநந்தத்திற்கு அளவில்லை. தெய்வத்தைக் கண்டதைப்போல அவரிடத்தில் அவளுக்கு ஒருவித பக்தியும் விசுவாஸமும் பொங்கி எழுந்தன. அவள் தனது மனதிற்கொண்ட நன்றியறிதலின் பெருக்கு அவளது முகத்தில் நன்றாக ஜ்வலித்தது. அவ்வித நிலைமையிலிருந்த மல்லிகாவைக் காணவே, மோகனராவின் மனமும் பலவித எண்ணங்களைக் கொண்டு பொங்கியெழுந்தது. வாய் குழறிப் போயிற்று.

மல்லி : என்னுடைய உயிரைக் காப்பாற்றியது ஒன்று; அது போதாதென்று இப்போது என்னுடைய தேக ஸ்திதியைப் பற்றி விசாரிக்க வந்தது இன்னும் விசேஷமானது! ஆகா! தங்களுடைய உதார குணத்தை என்னவென்று சொல்லுவேன்! இவைகளுக் கெல்லாம் இந்த ஏழை என்ன பதில் செய்யப் போகிறேன்! தங்களுடைய பேருதவியால், நான் ஒரு சிறிய காயங்கூடப் பெறாமல், இப்போது உயிரோடிருக்கிறேன். இல்லாவிட்டால் இந்நேரம் இந்த உடம்பு சாம்பலாயிருக்கும் - என்று சொல்லியவண்ணம் அவரை வியப்போடு உற்றுநோக்கி அவரது முகத்திலிருந்த தழும்புகளைக் கவனித்து,

"அடாடா! முகமே பொசுங்கிப் போய்விட்டதே! உடம்பு முழுதும் தீய்ந்து தோலுரிந்து போயிருக்கிறதே! மயிரெல்லாம் போய்விட்டதே! ஐயோ பாவம்! எனக்காக எவ்வளவு பாடுபட்டி

ருக்கிறீர்கள்! தங்களுடைய பேருதவியை நான் ஒரு நிமிஷம் மறந்தாலும், தெய்வம் எனக்கு அநுகூலம் செய்யாது; நரகமே எனக்குப் பலிதமாகும்'' என்றாள்.

மோக : மகா உதவி! ஆபத்திலிருக்கும் பிறரைக் காப்பாற்ற மனிதர் கடமைப்பட்டிருக்கிறார்களே! அப்படி இருக்க, இதற்கு இவ்வளவு புகழென்ன?

மல்லி : என் விஷயத்தில் தாங்கள்தான் பேசும் தெய்வம்! நாம் இரண்டு முறை சந்தித்தோம். முதல் தடவை, நான் செய்த முட்டாள் காரியத்திலிருந்து என்னைத் தப்புவித்து என்னுடைய மானத்தைக் காப்பாற்றினீர்கள். இப்போது அகால மரணத்திலிருந்து என்னுடைய பிராணனைக் காப்பாற்றினீர்கள். என் மனசிலுள்ள நன்றியறிவின் பெருக்கை நான் எப்படி வெளிப்படுத்தப் போகிறேன்! இவைகளுக்கெல்லாம் நான் எவ்விதம் நன்றி செலுத்துவதென்பது தோன்றவில்லை.

மோக : (புன்சிரிப்போடு) அப்படியானால், நான் செய்தவைகளுக்குப் பதில் செய்ய உத்தேசிக்கிறாயா?

மல்லி : தாங்கள் செய்த உதவிக்குச் சமமாக நான் செய்யக்கூடிய காரியம் இந்த உலகில் இருக்கிறதா?

மோக : நான் செய்ததாகச் சொல்லும் உதவியைக் காட்டிலும் ஆயிரமடங்கு விசேஷமான உதவி ஒன்று உன்னிடம் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அந்த உதவியைச் செய்யும்படி நான் கேட்டால், நீ உடனே தடையில்லாமல் செய்வாய் போலிருக்கிறதே?

மல்லி : ஆகா! ஆக்ஷேபணை என்ன! என்னால் ஆகக்கூடியதானால், அவசியம் செய்துவிட்டு மறு வேலை பார்ப்பேன். இந்த உயிரே வேண்டுமானாலும் இதோ எடுத்து தங்களுடைய பாதத்தடியில் வைத்து விடுகிறேன் - என்றாள்.

அதைக் கேட்ட மோகனராவின் மனம் பதைத்தது. முகம் பல வித மாறுபாடுகளை அடைந்தது. அவர் ஏதோ ஒரு விஷயத்தைத் துணிந்து கேட்க நினைத்தார்; அவ்வாறு கேட்கக் கூடாதென்று நினைத்துச் சிறிது தயங்கினார்; மேலும் தூண்டப்பட்டு அதைச் சொல்ல நினைத்தார். அவளை முதன்முதற் கண்டபோதே அவளிடத்தில் அவருக்கு ஒருவிதமான விருப்பம் உண்டாயிற்று.

பிறகு படத்தைப் பார்க்கப் பார்க்க அவள் மீதுண்டான விருப்பம் காதலாகக் கனிந்து விட்டது. அதனால் அவர் பைத்தியம் கொண்டவரைப் போலானார். நாடகக் கொட்டகையில் நடந்த சம்பவங்களுக்குப் பிறகு அவர் அவளை மணக்காவிட்டால், தமது உயிரையே விட்டுவிடுவதாகத் தீர்மானித்திருந்தார். அவளையடைவதில் தமது ஜெமீன் முழுவதும் போய்விடுவதா யிருந்தாலும், அதனால் விசனம் உண்டாகாதென அவர் மதித்தார். அவள் ஏழையாயிருந்தாலும், அவளையே தாம் மணக்க வேண்டு மென உறுதி செய்து கொண்டவராய் அன்று அவளிடம் வந்தார்.

''நான் சொல்வதிலிருந்து அது இன்னதென்பது உனக்கு விளங்கவில்லையா? ஆம்; எப்படி விளங்கப்போகிறது? நான் திடீரென்று சொல்லுவதால், உனக்கு அது தெரிய நியாயமில்லை. அதிருக்கட்டும்; நாம் முதலில் சந்தித்தது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?'' என்றார் மோகனராவ்.

அவரது வார்த்தைகளையும் முக வேறுபாடுகளையும் கவனித்த மல்லிகாவின் மனதில், ஒருவித ஸஞ்சலம் தோன்றியது; நாணமுற்ற அந்த மாது, ''ஆம்; நினைவிருக்கிறது'' என்றாள்.

உடனே மோகனராவ், ''எனக்கு அது இப்போதே நடப்பதைப் போல இருக்கிறது. அதன் பிறகு தினம் நான் அதையே நினைத்துக் கொண்டிருந்தேன். கனவிலும் நினைவிலும் நீயே என் மனசில் தோன்றி நின்றாய். உன்னைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் எவ்வளவோ முயன்றேன். தீப்பற்றிய அன்றிரவு தற்செயலாகவே நான் உன்னைக் கண்டேன். முதலில் உன்னைக் கண்டநாள் தொட்டு உன்னையே மணக்க வேண்டு மென்னும் ஆசை மாறாமல் என் மனசில் வேரூன்றி இருக்கிறது. நான் ஒரு பெரிய ஜமீனுக்கு எஜமானன் என்பது உனக்குத் தெரியும். எனக்குத் தகுந்த வேறொரு ஜெமீந்தாருடைய மகளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஊரார் சொல்வதை நான் அசட்டை செய்துவிட்டேன். உன்னையே அடைய வேண்டு மென்று என் மனம் தாகப்படுகிறது. இனி நான் வேறு எந்த ஸ்திரீயின் முகத்தையும் பார்க்க மாட்டேன். இது ஸத்தியம்'' என்று உறுதியாகவும் உருக்கமாகவும் கூறினார்.

அதைக் கேட்ட மல்லிகாவின் சந்திர பிம்பம் போன்ற முகம் வாட்டமடைந்தது. அவளது மனம் பட்ட துன்பம் அவளது

முகத்தில் நன்றாகத் தெரிந்தது. "அடடா! நான் என்ன மறு மொழி சொல்லப் போகிறேன். ஈசுவரா! இதுவும் உன்னுடைய சோதனையா!" என்று பெருமூச்சு விட்டு தனக்குள் மொழிந்து கொண்டாள்.

அவளது முகத்தையும் சொல்லையும் நன்றாகக் கவனித்த மோகனராவ், "என்னுடைய இச்சை பூர்த்தியாவதற்கு ஏதோ இடைஞ்சல் இருப்பதாகத் தெரிகிறது. நம்பிக்கையை விட்டுவிட வேண்டியதுதானா? எவ்வளவுதான் நான் பணக்காரனாயிருந் தாலும், இவ்வளவு பேரழகும், புத்திசாலித் தனமும் உள்ள உனக்கு என்மேல் விருப்பமுண்டாக வேண்டுமென்பது என்ன கட்டாயம்" என்றார்.

மல்லி : (விசனமாக) அப்படிப்பட்ட எண்ணம் ஒன்று மில்லை, தங்களை அடைய எவள் புண்ணியம் செய்திருக் கிறாளோ அவளுக்கல்லவா அந்தப் பாக்கியம் கிடைக்கும். என் அதிர்ஷ்டம் எவ்வளவென்பது என்னுடைய தற்கால நிலைமையி லிருந்தே தெரியவில்லையா? துரதிர்ஷ்டமே உருவாய் வந்த நான் தங்களுடைய அன்பிற்கும் ஆசைக்கும் எப்படி உரிமையுடை யவளாகப் போகிறேன்?

மோக : நீ என்னைப் பரிஹாஸம் செய்கிறாய் போலிருக்கிறது.

மல்லி : பரிஹாஸமல்ல; உண்மையே; நான் தங்களிடம் பரிஹாஸம் செய்தால், உடனே என் தலையில் இடி விழுந்து விடாதா? உண்மையில் அதல்ல. தங்களுடைய நண்பரை நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்பது நிச்சயமாய் விட்டது. ஆகையால், இனி என்னால் செய்யக்கூடியது ஒன்று மில்லை. மன்னிக்கவேண்டும்.

மோக : (முகம் மாறுபட்டவராய்) என்னுடைய நண்பர் யார்? கோனூர் மிட்டாதாரா?

மல்லி : இல்லையில்லை.

மோக : (சிறிது யோசனை செய்து) பீமராவோ?

மல்லி : ஆம்; ஆம்.

மோக : (திகைப்பும் வியப்புமடைந்து) ஓகோ! அப்படியா! நம்முடைய பீமராவையா கலியாணம் செய்துகொள்ளப் போகி

றாய்! அவனும் நிரம்ப யோக்கியமானவன்தான். அவன் இது வரையில் இந்தச் சங்கதியை என்னிடம் சொல்லாமலிருந்து விட்டானே! ஆகா! அவனுடைய அதிர்ஷ்டம் யாருக்கு வரும்? அவனுடைய அதிர்ஷ்டத்தையடைய என் உடல் பொருள் இன்பம் ஆகிய மூன்றையும் கொடுக்க வேண்டுமானாலும் நான் கொடுத்து விடுவேன். இனி ஆயிரம் சொல்வதிற் பயனென்ன? சரி; கவலைப்படாதே; அதுவும் நல்ல சம்பந்தந்தான். நீ சௌக்கியப் படுவாய். ஆக்ஷேபணையில்லை. உன்னை நான் அடைந்தா லென்ன? அவன் அடைந்தாலென்ன? வித்தியாசமொன்று மில்லை. இனி எப்போதாவது உனக்கு என்னிடம் எவ்வித உதவி தேவையானாலும் நான் அதைச் செய்யத் தடையில்லை. எப்படியாவது நீ சுகமாயிருக்கிறாய் என்பதைக் கேட்பதே எனக்கு இன்பம்! நான் போய்விட்டு வருகிறேன்'' என்று கூறியவண்ணம் எழுந்தார்.

மல்லிகா ஸஞ்சலத்தினால் பெரிதும் வருந்திய மனத்தி னளாய்க் கீழே குனிந்து நின்று, ''பிரபுவே! என்மேல் ஆயாசம் கொள்ளக் கூடாது. நான் என்ன செய்வேன்? என்னுடைய அதிர்ஷ்டப்படிதானே எல்லாம் எனக்குக் கிடைக்கும். எனக்கு உயிரைக் கொடுத்த தங்களுக்கு, இந்த அற்பமான காரியத்தைச் செய்யக் கூடாதவளாய்ப் போய்விட்டேன். இதை மனசில் வைக்கக்கூடாது. எப்போதும் தங்களுடைய தயவும் அபிமா னமும் மாறாமல் இந்த ஏழையின் மேலிருக்க வேண்டும்'' என்றாள். அவளது கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகக் கீழே வழிந்தது.

மோக : (மிகவும் கலங்கி) அப்படி வித்தியாசமாக நினைக் காதே; இனி நான் உன்னை என்னுடைய சொந்த சகோதரியைப் போல பாவிப்பனேயொழிய வேறல்ல. கவலைப்படாதே – என்று சொல்லிவிட்டு மெல்ல வெளியில் வந்தார்.

வந்த மோகனராவ் தமது ஆசை முற்றிலும் நாசமடைந்ததை நினைத்து விவரிக்கவொண்ணா விசனக்கடலில் ஆழ்ந்தவராய்ப் பலவித எண்ணங்களில் தம்மை மறந்து எங்கெங்கோ அலைந்து கடைசியாகத் தமது ஜாகையை அடைந்து சயனத்திற் போய்ப் படுத்துக் கொண்டார். ஒருவன் இன்பமான கனவு காண்பதி லிருந்து விழித்துக் கொண்டு கனவு போய்விட்டதே என்று விசனப்படுவதைப் போலத் தமது எண்ணம் நிறைவேறாமல்

போனது பற்றி நெடுமூச்செறிந்து கண்ணீர் விடுத்துக் கலங்கினார். அதுவரையில், அவள் ஒருத்தி மீதே முதல் பார்வையில் அவருக்கு விருப்பமுண்டாயிற்று. தஞ்சையிலிருந்த மகா சிறப்பும் வனப்பும் வாய்ந்த எத்தனையோ பெண்களிடத்திலும் அவருக்கு அவ்வளவு பிரேமை உண்டானதேயில்லை. அவ்வளவு விசேஷ மான சிறப்பையும் வசீகரத்தன்மையையும் பெற்ற ஸ்திரீ தமக்கு இல்லாமற் போனது, இந்த உலகமே அவருக்குப் பாழ்த்துப் போனதாகத் தோன்றியது. இனி தாம் உயிரை வைத்திருப்பதில் தமக்கு யாதொரு சுகமுமில்லையென்று பலவாறு நினைத்து அவர் ஆறாத் துயரில் ஆழ்ந்தார். ஆனால், அத்தனை துன்பங்க ளிலும் தமது ஆப்த நண்பனான பீமராவுக்கு அவள் வாய்த்தது ஒருவித ஆறுதலாக இருந்தது. அவ்வாறு நினைத்தபடியே அவர் நெடுநேரம் சயனித்திருந்தது, நிரம்பவும் தளர்ச்சியடைந்தவராய் அவளது நினைவை ஒழித்துவிட வேண்டுமென்று உறுதி செய்து கொண்டவராய் உடனே எழுந்து, பீரோவிலிருந்த படத்தை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, இமைகொட்டாமல் அதை நோக்கியவண்ணமிருந்தார். கடைசி முறையாக அதை ஒருதரம் முத்தமிட வேண்டுமென்னும் ஆசை அவரது மனத்தில் உதித்தது. சே! பிறனுடைய மனைவியை முத்தமிட நினைப்பது பிசகு! அந்த ஸுகமும் ஒரு ஸுகமாகுமா? அது பெருத்த பாவமேயன்றி ஒருநாளும் இன்பமாகாது'' என்று தமக்குள் வாதித்து தம்மைத் தாமே கண்டித்து அந்த ஆசையை அடக்கிக் கொண்டார். ''அடி! என் பேடன்னமே! எப்போதும் விசனமும் புன்சிரிப்பும் நீங்காத உன்னுடைய முகம் இனி என்னுடையதல்ல. நீ வேறொருவ னுடைய பொருளாய் விட்டாய். இதுவரையில் நான் உன்னோடு தனிமையில் பேசிக் கொஞ்சிக் குலாவியதைப் போல இனிமேலும் செய்வது தவறு. உன்னை நான் வைத்திருந்தால், என் மனசில் துன்மார்க்கமான நினைவுகள் உண்டாகின்றன. ஏ பூங்கொடியே! நீயும் நானும் இனி அரைநொடியும் ஒன்றாயிருக்க முடியாது. நாம் உடனே பிரிந்து போவதே உத்தமம்'' என்று கூறியவண்ணம், கரைகடந்த விசனம் கொண்டவராய், அந்தப் படத்திலிருந்த ஆணிகளைக் கழற்றிவிட்டு, சட்டத்தை ஒவ் வொன்றாகப் பிரித்து எதிரில் எரிந்து கொண்டிருந்த வெந்நீர் அடுப்பில் எறிந்தார். அவர் அதன் நான்கு சட்டங்களையும் பிடுங்கவே, படம் வேறு கண்ணாடி வேறு பின்புறத்திலிருந்த

பலகை வேறாய்ப் போயின. ஆனால் படத்திற்கும், பலகைக்கும் இடையில் இருந்த ஒரு காகிதமடிப்பு அப்போது கீழே விழுந்தது. அதைக் கண்ட மோகனராவ், வியப்பும் திகைப்பும் அடைந்து அதை எடுத்துப் பிரித்தார். அதற்குள் ஒரு தஸ்தாவேஜு நிரம்ப வும் ஒழுங்காக மடித்து வைக்கப்பட்டிருந்தது. அவரது ஆச்சரியம் முன்னிலும் அதிகரித்தது. அவர் உடனே அதைப் பிரித்து, அதில் எழுதப்பட்டிருந்தது என்ன என்பதைக் கவனித்துப் படித்தார். ''பவானியம்மாள்புரத்து ஜெமீந்தார் பரசுராமபாவா எழுதிய மரணாந்த சாஸனம்'' என்று அது ஆரம்பித்தது. ''அடடா! இதென்ன கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போலிருக்கிறது!'' என்று அதிசயித்துக் கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்து விட்டார்.

24–வது அதிகாரம்

பக்காத் திருடன்

சாசனம் முதலிய பத்திரங்களைப் பற்றிய விவரங்களை அதிகமாக மோகனராவ் அறிந்தவர் அன்றாதலின், அவரது மனதில் ஒருவகையான அச்சமும் வியப்பும் குடி கொண்டன. பவானி யம்மாள் புரம் ஜெமீந்தாரின் மரணாந்தசாஸனம் அதிலிருக்க வேண்டிய காரணமென்ன என்று அவர் சந்தேகித்து பெரிதும் மயங்கினார். அதை மேலும் படித்துப் பார்க்க வேண்டும் என்னும் ஆசை அவரைத் தூண்டியது. அவர் எதை எடுத்துப் படிக்க ஆரம் பித்தார். அது ஏழெட்டுப் பக்கங்கள் உடையதாயும், நிரம்பவும் நெருக்கமாக எழுதப் பெற்றதாயும் இருந்தது; அவர் அதன் முதற்பாகத்தை வாசிக்க முயன்றார். அதில் வருஷம், மாசம், தேதி, தகப்பன் பெயர், ஜாதி, மதம், தொழில் முதலியவை களும், நான்கு எல்லைகளும், மேற்படி மேற்படி என்ற சொற் களும் அடிக்கடி வந்ததைக் காண, அவருக்கு அதை வாசிப்பது நிரம்பவும் கடினமாக இருந்தது. அதில் யாதொரு அர்த்தமும் இன்பமும் அவருக்கு ஏற்படவில்லை. அவர் அவ்விதம் தத்தளித்திருந்த சமயத்தில் அவர் இருந்த அறையின் கதவை ஒரு வேலைக்காரன் தட்டினான். தாம் ஏதோ பெருத்த குற்றம் செய்ததை பிறர் கண்டு கொண்டதைப்போல திடுக்கிட்டு அச்ச மடைந்த மோகனராவ் படம் சாஸனம் முதலியவற்றை விரை வாக எடுத்து பீரோவின் மேல் வைத்து விட்டு, கதவைத் திறக்க, வேலைக்காரன் அவரை வணங்கி, ''எஜமானே! **ஸுலைமான் ஸாயப்பு** வந்திருக்கிறான்'' என்றான்.

மோகனராவ் புதிதாக ஒரு ஸாரட்டும் குதிரையும் வாங்க உத்தேசித்திருந்தார். வியாபாரி ஸுலைமான் அவற்றை அவரது பார்வைக்காக கொண்டு வந்திருந்தான். அந்தச் சங்கதியைக் கேட்டவுடன் மோகனராவ் பெரிதும் உற்சாகமடைந்தவராய்க் குதித்துக் கொண்டு எழுந்துவெளியிற் சென்றார். அதன் பிறகு

படம், சாஸனம் முதலியவற்றை அவர் சுத்தமாக மறந்து விட்டார்.

அவர் வெளியிற் போய் வண்டி குதிரை முதலியவற்றை நன்றாகச் சோதனை செய்து பார்த்த பின், குதிரையின் ஓட்டத் தைப் பரீட்சை செய்ய எண்ணி 10, 12 மைல் தூரம் சவாரி செய்து பார்க்க வேண்டும் என்று ஸாயப்புவிடம் தெரிவிக்க, அவன் அதற்கு இணங்க, இருவரும் வண்டியில் உட்கார்ந்து கொண்டார் கள். உடனே ஸாயப்பு வண்டியை ஓட்டிக் கொண்டு போய் விட்டான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவரது வேலைக்காரன் வெந்நீர் அடுப்பைப் பார்க்கும்பொருட்டு உள்ளே சென்றான். அது எரியாமலிருந்ததைக் கண்டு, பக்கங்களில் விலக்கிக் கிடந்த படத்தின் சட்டங்களையும், விறகுகளையும் காகிதத் துண்டுக ளையும் அவன் பொறுக்கி அடுப்பில் போட்டு, அதை எறியச் செய்துவிட்டு வெளியில் வந்து உட்கார்ந்தான்.

அப்போது பீமராவ் அவனிடம் வந்து, ''எஜமான் எங்கே?'' என்று வினவினான். அவர் போன விவரத்தை வேலைக்காரன் தெரிவித்தான். தனது கலியாண விஷயத்தை அவரிடம் தெரி வித்து, தனது மனைவியின் உயிரை அவர் காப்பாற்றியதைக் குறித்து அவரை ஸ்தோத்திரம் செய்துவிட்டுப் போக எண்ணி பீமராவ் அவ்விடத்திற்கு வந்தான். வேலைக்காரனது சொல்லைக் கேட்ட பீமராவ், ''எஜமானர் வேறு எங்கேயும் போகவில் லையே? சீக்கிரம் வந்து விடுவாரல்லவா?'' என்றான்.

''இன்னும் அரை நாழிகையில் வந்து விடுவார். உள்ளே போய் உட்காருங்கள்'' என்றான் வேலைக்காரன்.

உடனே பீமராவ் மோகனராவின் அறைக்குள் நுழைந்து, அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, அவரது வரவை எதிர்பார்த்திருந்தான். அவ்வாறு அரை நாழிகை நேரம் கழிந்தது; சும்மா உட்கார்ந்திருந்தது, அவனுக்கு மிக்க துன்பகரமாய் இருந்தமையால், அவன் எழுந்து அந்த அறையில் உலாவத் தொடங்கினான். அங்கிருந்த பீரோ, ஓர் ஆள் உயரத்திற்குக் குறைவாக இருந்தமையால், அதன் மேற்புறத்தை அவன் தற் செயலாகப் பார்க்க அவ்விடத்திலிருந்த படத்தைக் கண்டு

ஆசையோடு அதை எடுத்துப் பார்த்தான். அது பவானியம்மாள் புரத்து ஜெமீந்தார் பரசுராம பாவாவினது இளைய மனைவியின் படம் என அறிந்தான். அதை ஸகாராமன் எடுத்துக் கொணர்ந்து, தனது பெட்டியில் வைத்திருந்ததை அவன் அதற்கு முன் பார்த் திருந்தவனாதலால் அதை அங்குக் காணவே அவனுக்கு நிரம் பவும் ஆச்சரியம் உண்டாயிற்று. "இந்தப் படம் இவ்விடத்திற்கு வர வேண்டிய காரணமென்ன?" என்று யோசனை செய்த வண்ணம் அப்படியே சிறிது நேரம் அசைவற்று நின்றான். "பணப் பைத்தியம் பிடித்த கிழவன் ஒருவேளை இதை இவருக்கு விற்றிருப்பானோ" என்ற சந்தேகம் உண்டாயிற்று. அதற்குப் போடப்பட்டிருந்த சட்டங்களில் ஒன்று கீழே கிடந்ததையும், அதன் துண்டுகள் அருகிலிருந்த அடுப்பிற் கிடந்ததையும் அவன் கண்டான். "இதென்ன மோகனராவுக்கு பைத்தியம் பிடித்து விட்டதா! சட்டங்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு, இந்தப் படத்தை இப்படி தனியாக ஏன் எடுத்தார்?" என்று தனக்குள் அதிசயித் தான். அப்போது பீரோவின் மேலிருந்த வேறொரு காகித மடிப்பு காற்றினால் பறந்ததைக் கண்டு அதையும் பீமராவ் ஆவலோடு எடுத்து அதை உற்று நோக்கினான். அது ஒரு தஸ்தாவேஜியாய் இருந்ததைக் காணவே அடக்க ஒண்ணாத ஆச்சரியமும் ஆவலும் கொண்டு, அவன் அதை விரைவாகப் படிக்க ஆரம்பித்தான். முதற் பக்கத்தைப் படிக்குமுன், அதுவே காணாமல் போயிருந்த பரசுராம பாவாவின் மரணாந்த சாஸனமென்பதை அறிந்து கொண் டான். அவனது தேகம் வெடவெட என்று நடுங்க ஆரம்பித்தது. அவன் அதிக விரைவாக பத்திரம் முழுவதையும் ஐந்து நிமிஷத் தில் படித்தான். வஸந்தராவுக்கும், தானதருமங்களுக்கும் கொடுக் கப்பட்டவை போக, மிகுதியான இரண்டு கோடி ரூபாயும் ஜெமீன் கிராமங்கள் முதலிய ஸகல பொருட்களும் அவரது பேர்த்தி மல்லிகாவுக்கே கொடுக்கப்பட்டிருந்ததைக் கண்ட பீம ராவ் ஆநந்தக் கூத்தாடினான்; தான் நினைத்த விதமே எல்லா விஷயமும் நிறைவேறியதை நினைத்துப் பெருங் களிப்படைந் தான்; தான் அவளை முதலில் மணந்த பிறகே, அந்த இரகசியத்தை அவளிடம் வெளியிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண் டான்; தானும் ஒரு பெருத்த ஜெமீந்தார் ஆவது நிச்சயமென்று எண்ணி எண்ணிப் பூரித்துப் புளகாங்கிதமடைந்து ஆநந்த சாகரத்தில் ஆழ்ந்தான்.

அவனது மனதில் கோடாநுகோடி எண்ணங்கள் உதித்தன. அந்த சாஸனத்தை அவ்விடத்தில் வைத்து விடுகிறதா, அல்லது எடுத்துக் கொண்டு போய் விடுகிறதா, மோகனராவ் அதைப் படித்திருப்பாரோ என்று அவன் ஐந்து நிமிஷம் வரையில் பலவாறு யோசனை செய்தான். கடைசியாக ஒரு வித தீர்மானத் திற்கு வந்தான். அந்தப் பத்திரத்தில் கடைசிப் பக்கம் எழுதாமல் காலியாக விடப்பட்டிருந்தது. ஆகையால் அவன் அதை எடுத்து நெருப்பில் பிடித்து அது முக்கால் பாகம் வரையில் எரிந்தவுடன் அதை நெருப்பிற்கு வெளியில் இழுத்துப் போட்டு விட்டான். அது மிகுதியும் எரியாமல் அவிந்து போய் அவ்விதமே கிடந்தது. படத்தை பீரோவின் மேல் வைத்து விட்டு, அவன் சாஸனத்தை வெளியில் தெரியாவிதமாக தனது மடியில் சொருகிக் கொண்டு, ஒன்றையும் அறியாதவனைப்போல திரும்பவும் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

அதன் பிறகு சிறிது நேரத்தில் மோகனராவ் வந்து சேர்ந்தார். ''ஓகோ!பீமராவா! என்ன நீ கண்ணிலேயே படுகிறதில்லையே! கலியாண சந்தோஷமோ?'' என்று புன்சிரிப்போடு மோகனராவ் அவனுடன் சம்பாஷிக்கத் தொடங்கினார்.

பீமராவ் விநயமாக, ''எல்லாம் இவ்விடத்து தயவுதான். நீங்கள் ஸஞ்சலாக்ஷியின் உயிரைக் காப்பாற்றாவிட்டால், எனக்கு இந்த சந்தோஷம் எங்கிருந்து உண்டாகப் போகிறது?'' என்றான்.

''அதிருக்கட்டும்; இதைப் பற்றி இதுவரையில் என்னிடத் தில் நீ ஏன் தெரிவிக்கவில்லை? நீ வர வர நிரம்பவும் கபடியாய் விட்டாயே!'' என்றார் மோகனராவ்.

''அப்படி ஒன்றுமில்லையே! என்னுடைய கலியாணத்தைப் பற்றி நானே சொல்லிக் கொள்ள வெட்கமாய் இருந்தது. தவிர, இதைக் கோனூர் மிட்டாதார் முதலியோர் அறிந்தால் என்னைப் பரிஹாசம் செய்வார்களென்று நினைத்து இதுவரையில் சொல் லாமல் இருந்து விட்டேன். அதற்காகவே இப்போது வந்தேன். மன்னிக்க வேண்டும்'' என்று நயமாக மொழிந்தான் பீமராவ்.

''சரி; போனது போகட்டும். நீ அவளைக் கலியாணம் செய்து கொள்வதைப் பற்றி எனக்கு எவ்வளவு சந்தோஷம் என்பதை சரியானபடி வெளியிட முடியவில்லை. எப்போது முகூர்த்தம் பார்த்திருக்கிறாய்?'' என்றார் மோகனராவ்.

"மணமென்றால் பணமென்று அர்த்தமல்லவா! பணம் கிடைத்தால் இந்த மாசத்திலேயே முடித்து விட வேண்டும்" என்றான் பீமராவ்.

"பீமராவ்! அதைப் பற்றி நீ கவலைப்படாதே; உனக்குத் தேவையான பணம் நான் தருகிறேன். கலியாணச் செலவு என்னுடையதாக இருக்கட்டும். ஆயிரம் ரூபாய் போதுமா?" என்றார் மோகனராவ்.

அதைக் கேட்ட பீமராவ் மிகுந்த நன்றியறிதலைக் காட்டி, "அவ்வளவு போதும்! தங்களுடைய உதாரகுணம் யாருக்கு வரும்! மேன்மைக்குணம் என்பது இந்த ஓர் இடத்திலேதான் இருக்கிறது" என்று பலவாறு அவரை ஸ்தோத்திரம் செய்தான். அதைக் கேட்டு நிரம்பவும் ஸந்தோஷமடைந்த மோகனராவ், சிறிது நேரங் கழித்து படத்தைப் பற்றி நினைத்துக் கொண்டு, "பீமராவ்! ஓர் ஆச்சரியம் கேட்டாயா?" என்றார்.

பீம : என்ன அது?

மோக : இதோ இந்தப் படத்தைப் பார்த்தாயா? (படத்தை எடுத்துக் கொடுக்கிறார்).

பீம : (அதைப் பார்த்து) முகம் நிரம்ப அழகாயிருக்கிறது!

மோக : அவ்வளவுதானா? இதைப் பார்த்தவுடன் எவருடைய நினைவும் உனக்கு உண்டாகவில்லையா? நன்றாகப் பார். இது யாரைப் போல் இருக்கிறது.

பீம : (யோசனை செய்தவண்ணம்) இது யாருடையது? இன்னாரைப்போல் இருக்கிறதென்பது தெரியவில்லையே! நீங்கள் சொல்லுங்கள்.

மோக : இதை உனக்குக் காட்டாமலே ஸகாராம்ராவ் இதை வைத்திருந்தாற் போல் இருக்கிறது. இறந்து போன அவருடைய தங்கையின் படமல்லவா இது? அவளை நீ பார்த்ததில்லையா?

பீம : (சற்றுத் தடுமாறி) ஆம்! ஆம்! அவளுடையதுதான். இப்போதுதான் உண்மை தெரிகிறது.

மோக : நான் 100ரூ. கொடுத்து இதை அவரிடத்தில் வாங்கினேன். அவர் 200ரூ. கேட்டிருந்தாலும் நான் கொடுத்திருப்பேன்.

பீம : ஏன் அப்படி?

மோக : இது இன்னும் யாரைப் போலிருக்கிறது? நன்றாகப் பார்.

பீம : (யோசனை செய்தவண்ணம்) வேறு யாரைப் போலிருக்கிறது? தெரியவில்லையே!

மோக : இவ்வளவுதானா! உன்னால் கண்டு பிடிக்க முடிய வில்லையா? அடிக்கடி இவளுடன் பேசிப் பழகுவதால் இவள் யாரென்று சொல்ல உன்னால் முடியவில்லையா? இது ஸஞ்ச லாக்ஷியைப் போல இல்லையா?

பீம : (உற்றுப் பார்த்து) ஆம்; கொஞ்சம் ஒற்றுமை இருக்கிறது. ஆனால், கண்ணில் மாத்திரம் சிறிது வித்தியாசமிருக்கிறது.

மோக : உன்னுடைய கண்ணிலேதான் வித்தியாசம் இருக்கி றது. இது ஸஞ்சலாக்ஷியின் படம் என்றே எனக்குத் தோன்றுகிறது. ஆகையினாலேதான் 100 ரூபாய் கொடுத்து இதை வாங்கினேன். ஆனால், இவள் உன்னைக் கலியாணம் செய்து கொள்ளப் போவதை அறிந்தவுடன், இதை நான் இனி வைத்துக் கொண் டிருப்பது தவறென்று நினைத்தேன்.

பீம : தங்களுடைய கண்ணிய புத்தியும் மேன்மைக் குணமும் யாருக்கு வரும்? ஸஞ்சலாக்ஷிக்கும் தங்களுக்கும் நடந்த சம்பாஷணை முழுதையும் அவள் என்னிடம் சற்று முன்பே தெரிவித்தாள்.

மோக : (தற்பெருமையோடு) நான் அவளை விட்டு வந்த உடன் செய்த முதற் காரியம் இதை எடுத்து சட்டங்களைக் கழற்றி நெருப்பில் போட்டதுதான். ஆனால் சட்டத்துக்கும் பலகைக்கும் மத்தியில் ஒரு வஸ்து இருந்தது.

பீம : (புன்சிரிப்போடு) என்ன வஸ்து? அது ஏதாவது கரன்ஸி நோட்டா?

மோக : இல்லை இல்லை. அதில் மரணாந்த சாஸனம் ஒன்று இருந்தது; பவானியம்மாள் புரம் ஜெமீந்தார் எழுதியது.

பீம : என்ன வேடிக்கையாக இருக்கிறதே!

மோக : (புன்சிரிப்போடு) பொய்யல்ல; இதோ நான் காட்டுகிறேன் பார்.

முக்கியமான தஸ்தாவேஜி என்று நினைத்து நீங்கள் விசனப்பட ஆரம்பித்து விட்டீர்களே!'' என்றான். அதைக் கேட்க, அவரது மன வேதனை ஒருவாறு குறைவுபட்டது.

மோக : அப்படியானால் அது உபயோகமற்ற காகிதமென்றா நினைக்கிறாய்?

பீம : உபயோகமுள்ளதாய் இருந்தால் அதை இந்தப் படத்திலா வைத்திருப்பார்கள்? அவர்களுக்கு இதை வைக்க இரும்புப் பெட்டி இல்லாமலா போய்விட்டது?

மோக : (யோசனை செய்து) எல்லாவற்றிற்கும் இதை ஸகாராம் ராவிடம் தெரிவிப்பது நல்லதென்று நினைக்கிறேன்.

பீம : அதனால் என்ன உபயோகம்? நீங்கள் சொல்வதை அவர் நம்ப மாட்டார்.

மோக : ஏன் நம்ப மாட்டார்?

பீம : அவர் வஸந்தராவின் ஸர்வாதிகாரி. நீங்கள் புதிய சாஸனம் ஒன்றைக் கண்டதாகச் சொன்னால், அது யார் பேருக்கு எழுதப்பட்டது, எந்த வருஷம், மாதம், தேதி என்று கேட்கப் போகிறார். நீங்கள் ''எனக்குத் தெரியாது'' என்று சொல்லப் போகிறீர்கள். அப்படியானால் அதைக் கொடுங்கள் பார்க்கலாம் என்பார். அது நெருப்பில் எரிந்து போய் விட்டதென்று நீங்கள் சொல்ல வேண்டும். உடனே அவர், ''இவ்வளவுதானா'' என்று சிரிக்கப் போகிறார். அவரிடம் சொல்வதனால் இதுதான் நடக்கும். இதனால் என்ன பலன்?

மோக : (சிறிது யோசனை செய்து) அப்படியானால் இதனால் ஒருவருக்கும் கெடுதல் இல்லையென்றா நினைக்கிறாய்? இது உண்மையான சாஸனமல்லவா?

பீம : அதைப்பற்றி ஸந்தேகமே தேவையில்லை. குப்பையில் போடவும் யோக்கியமற்ற காகிதத்தைக் கண்டு நீங்கள் ஏன் இப்படிக் கவலைப்பட வேண்டும் - என்றான்.

அதைக்கேட்ட மோகனராவின் ஸஞ்சலம் ஒருவாறு நிவர்த்தியாயிற்று. அதன்பிறகு அரைநாழிகை வரையில் அவ்விருவரும் புதிய ஸாரட்டு குதிரை முதலியவற்றைப் பற்றிப் பேசினர். பிறகு பீமராவ் அவரிடம் செலவு பெற்றுக் கொண்டு, அந்த வீட்டை

விட்டு வெளியில் வந்து தனது மடியில் வைக்கப்பட்ட சாஸனம் இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்தவண்ணம் நடந்தான். அதை மடியில் வைத்துக் கொண்டு அவன் மோகனராவுடன் இருந்த போது நெருப்பை வயிற்றில் கட்டிக் கொண்டிருந்தவனைப் போல அவன் தனது துன்பத்தை மறைத்துக் கொண்டிருந்தான். அவ்விடத்தை விட்டு எப்போது வெளியில் வருவோம் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தான். வெளியில் வந்தவன் தெற்கு ராஜவீதியில் தானும் மல்லிகாவும் தனியாக குடியிருக்கும்பொருட்டு, சென்ற சில நாட்களாக வாடகைக்கு அமர்த்தி வைக்கப்பட்டிருந்த வீட்டிற்குள் போய் வாசற்கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு, உள்ளே இருந்த தனது அறைக்குள் நுழைந்து சாஸனத்தை எடுத்து நன்றாகப் பிரித்து ஒருதரம் படித்தான். அது சரியான சாஸனம் என்றும், அது எந்த நியாயஸ்தலத்திலும் செல்லும் என்றும், முதலில் வஸந்தராவின் பேரில் எழுதப்பட்ட சாஸனம் பிந்தியதனால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறதென்றும் உறுதி செய்து கொண்டான். தனது மனைவியான மல்லிகாவுக்கு பெருத்த ஜெமீனும் இரண்டு கோடி திரவியமும் மாளிகைகளும் வரப்போவதை நினைத்து நினைத்துக் கரைகாணா மகிழ்ச்சியடைந்து தாண்டவமாடினான். அவனது கண்கள் இரண்டும் சந்தோஷத்தினால் மலர்ந்து பிரகாசித்தன. அவ்வளவு ஐசுவரியத்தையும் பெற்ற பிறகு தான் எதைத்தான் செய்ய முடியாதென்றும், தனக்கு நிகரான பெரிய மனிதன் எவனுமில்லை என்றும், தான் மல்லிகாவை தனது இச்சைப்படி நடத்தலாம் என்றும், பலவாறு நினைத்து நினைத்து அளவளாவினான். பெற்றோர் இன்னார் என்பதையே அறியாத அநாதையும் பரம ஏழையுமான தான் தனது சாமர்த்தியத்தினாலும், தந்திரத்தினாலும் பெருத்த தனவந்தன் ஆகப்போவதை நினைத்து கட்டிலடங்காக் குதூகலமடைந்தான்.

தான் எப்படியாகிலும் முயன்று தனது விவாகத்தை அதி சீக்கிரத்தில் முடித்து விட வேண்டும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டவனாய் அன்று மாலையில் கருந்தட்டான்குடிக்கு வந்து சேர்ந்தான்.

மல்லிகா மேன் மாடத்தில், ஒரு புத்தகத்தைத் தனது கையில் வைத்துக் கொண்டு படிக்க முயன்று கொண்டிருந்தாள். அவள்

தனது நினைவை புத்தகத்தில் செலுத்த வேண்டுமென்று முயன்றது யாவும் பலிக்கவில்லை. அதில் ஒரு வரியைப் படிக்குமுன் அவளது மனம் எங்கேயோ சென்றது. பற்பல எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றி அவளது மனதைத் தமது வசப்படுத்தின. கொட்டகையில் நெருப்புப் பிடித்த போது மோகனராவ் தனக்குச் செய்த பேருதவிகளும், அன்று காலையில் அவர் தன்னிடம் சொன்ன அன்பான சொற்களும், தன் மீது அவர் கொண்ட கடுங்காதல், கலியாணப் பிரரேபனை முதலிய யாவும் ஒன்றன் பின் ஒன்றாக மனதில் தோன்றி வருத்தின. தான் துக்கோஜிராவின் வீட்டில் துன்புற்றிருந்த காலத்தில் தனக்கும் வஸந்தராவுக்கும் நடந்த வ்ருத்தாந்தங்களெல்லாம் நினைவுக்கு வந்தன. சமுத்திரக் கரையிலும், வடவாற்றங் கரையிலும், பங்களாவிலும் அவர் தன்னிடம் கூறிய காதல் மொழிகளும், அவர் தனக்குச் செய்த நன்மையான காரியங்களும், தன்னை மணப்பதாய்ச் சொல்லி வஞ்சகமாக தன்னை தஞ்சைக்கு அழைத்து வந்ததும், தன் மனதையும், காதலையும் ஒருங்கே கவர்ந்து தன்னை உயிரற்ற பாழுடலாக்கி தனது ஆயுட்காலத்தை நாசமாக்கி ஆராத் துயரத்தில் ஆழ்த்திய விஷயங்களும் அப்போதே நிகழ்வன போலத் தோன்றின. தான் தஞ்சைக்கு முதலில் வந்த தினத்தின் காலையில் கோனூர் மிட்டாதாரும், மோகனராவும் வஸந்தராவின் குணத்தைப் பற்றிப் பேசியதும், அதைக் கேட்டு தான் புறப்பட்டு வந்ததும், அதன் பிறகு நடந்த மாறுபாடுகளும் கண்களின் முன்பாக நின்றன. வஸந்தராவ் தன்னை வஞ்சிக்க நினைத்தது உண்மையானால், அவர் தமயந்தியை மணக்கப் போவதாக பத்திரிகையில் வெளியான வதந்தி எப்படிப் பொருந்தும் என்று அவள் சந்தேகித்தாள். அவர் துன்மார்க்க குணமுடையவராய் இருந்தால், அவர் வேறொருத்தியை மாத்திரம் மணப்பாரா என்று பலவாறு எண்ணமிட்டவளாய் வஸந்தராவின் நினைவும் வடிவமும் தன் மனதை விட்டு நீங்கப் பெறாதவளாய் மெய்ம்மறந்து உட்கார்ந்திருந்தாள்.

அந்தச் சமயத்தில் அங்கு தோன்றிய பீமராவ், ''என்ன பலமாக யோசனை செய்கிறாய்?'' என்று வினவிய குரலைக் கேட்ட மல்லிகா திடுக்கிட்டு, பீமராவ் வந்ததை உணர்ந்து தனது ஸுயநினைவை அடைந்து புன்சிரிப்பை பலவந்தமாகத் தனது

முகத்தில் உண்டாக்கிக் கொண்டு, ''யோசனை என்ன இருக்கிறது. பொழுது போகவில்லை; புத்தகத்தைப் படிக்க முயன்றேன். அதற்குள் நினைவு எங்கேயோ போய்விட்டது. பைத்தியம் போல் உட்கார்ந்திருக்கிறேன்'' என்றாள்.

''நீ ஏதாவது யோசனை செய்தால் உனக்கு எவ்விதமான மனக்குறையோ என்று என் மனம் வருந்துகிறது. உன் முகத்தைக் காண சிறிது தாமசமானால், என் மனம் பதைக்கிறது. நான் என்ன செய்வேன்! அடிக்கடி நான் உன்னை உபத்திரவிப்பதனால் உனக்குக் கோபமுண்டாகுமோ என்னும் அச்சம் ஒரு பக்கத்தில் என்னை வதைக்கிறது; காதலின் உரமே உரம்! அது மனிதனை என்ன பாடு படுத்துகிறது! உன் விஷயத்தில் நான் கொண்ட ஆசையும், நினைக்கும் நினைவுகளும், படும் பாடுகளும் உள்ளபடி உனக்கு எப்படித் தெரியப் போகின்றன. உன்னை நினையாமல் ஒரு நாளில் ஒரு நிமிஷங்கூடக் கழிந்ததில்லை. ஆகா! உன் மேல் நான் கொண்ட பிரேமையில் பத்தில் ஒரு பாகம் நீ என் மேல் கொண்டால் என்னைப் போன்ற பாக்கியவான் உலகத்தில் இருக்கவே மாட்டான்'' என்று உருக்கமாக மொழிந்தான் பீமராவ்.

மல்லி : ஏன் இன்றைக்கு என்மேல் இவ்வளவு வருத்தம்? நான்தான் என் மனநிலைமையை முன்னமேயே தெரிவித்து விட்டேனே! என்னுடைய ஆசையை எல்லாம் வேறொருவர் கவர்ந்து கொண்டு போய் விட்டமையால், எனக்கு மற்றவர் எவர் மேலும் விருப்பம் உண்டாகவில்லை என்று சொன்னேனே! நீர் என் மேல் வைத்திருக்கும் ஆசைக்கும் அளவில்லை என்பது நன் றாகத் தெரிகிறது; நீர் எவ்வளவோ உண்மையாகத்தான் நடந்து கொள்ளுகிறீர். ஆனால், நன்றி கெட்டவளான என் மனசில் மாத்திரம் உண்மையான பிரியம் ஏற்படவில்லையே! நான் என்ன செய்வேன் – என்றாள்.

பீம : எது எப்படி இருந்தாலும் நம்முடைய கலியாணத்தை இனி தாமதித்து வைப்பது கூடாது. எப்படியாவது அதற்கு நீ சம்மதித்தே தீர வேண்டும்.

மல்லி : அதற்குத்தான் நான் முன்னமேயே சம்மதித்தேனே. அதைப்பற்றி மறுபடியும் கேட்பதேன்?

பீம : நீ என்னைக் கலியாணம் செய்து கொள்ளப்போகிறாய் என்று மனசில் நினைப்பது மாத்திரம் என் மனசிற்குத் திருப்தி யைத் தரவில்லை. அதிசீக்கிரம் முகூர்த்தத்தை நடத்தினாலன்றி என் மனசின் துன்பம் அதிகரிக்குமேயன்றி குறையாது. கலி யாணம் முடிந்து விட்டால் உனக்கு என் மேல் ஆசை உண் டாகும்படி நான் செய்கிறேன். இன்னம் 10, 12 நாளைக்குள் ஒருமுகூர்த்த நாள் இருக்கிறது. அதில் கலியாணத்தை நடத்த ஏற்பாடு செய்கிறேன். அதற்கு உன்னுடைய சம்மதியைப் பெற வந்தேன். நீ யாதொரு தடையும் சொல்லாமல், 'சரி' என்று சொல்ல வேண்டும்.

மல்லி : என்னுடைய உண்மையான அபிப்பிராயத்தைக் கேட்டால், என் மனப்பிணி ஒருவாறு நீங்கும் வரையில் பொறுப்பது நலமாய் இருக்குமென்று சொல்லுவேன். கூடாதென்று வற்புறுத் தினால், உம்முடைய வார்த்தையைத் தடுத்து மறுமொழி சொல்ல எனக்குத் துணிவுண்டாகவில்லை.

பீம : (நயமாக) கண்ணே! நான் சொல்வதைக் கேள். உனக்கு நன்மை உண்டாகும். நீ நிரம்பவும் சுகப்படுவாய்; நம்முடைய கலியாணம் விரைவில் நடப்பது, உன் விசனத்தை விலக்க ஒரு மருந்தாகும். நீ அரை மனதோடு சொல்லக் கூடாது. முழு மனசோடு 'ஆகட்டு'மென்று சொல்ல வேண்டும்.

மல்லி : (சற்று யோசனை செய்து) உமக்கு இஷ்டமானால் செய்யலாம்.

பீம : எனக்கு இஷ்டமில்லாமலா நான் இவ்வளவு தூரம் பாடுபடுகிறேன். கரும்பு வேண்டாம் என்று எவனாகிலும் சொல் வானா? உன்னையே நான் என்னுடைய உயிராக மதித்திருக்கி றேன். நீ இல்லாமல், இனி அரை நாழிகை நேரமும் நான் தனித்திருக்க மாட்டேன். நான் போய் விவாகத்துக்கு ஆக வேண்டிய காரியங்களைச் செய்கிறேன். போகலாமா?'' என்றான். அவள், ''உமது இஷ்டம் போலச் செய்யலாம்'' என்றாள்.

உடனே பீமராவ் அவளிடம் விடை பெற்றுக் கொண்டு, வெளியிற் போய்த் தனது எண்ணம் பூர்த்தியாகப் போவதைப் பற்றி ஆநந்தபரவசம் அடைந்தவனாய், தனது புது வீட்டிற்கு வந்து உள்ளே நுழைந்தபோது அங்கு ஒரு புது விசேஷத்தைக் கண்டு, அதை உற்று நோக்கினான்.

அவன் குடியிருந்த வீட்டிற்கு அடுத்தவீடு காலியாக இருந்தது. அதில் அப்போதுதான் யாரோ சிலர் குடி புகுந்ததை அவன் கண்டான். முதலில், ஒரு வண்டியில் பெட்டிகள் படுக்கை முதலிய சாமான்கள் வந்திறங்கின. அடுத்த நிமிஷத்தில் வேறொரு வண்டியில் ஒரு வேலைக்காரியும், அவளது எஜமானியும் வந்திறங்கினார்கள். அந்த எஜமானி மகாராஷ்டிர ஸ்திரீயா கையால் அவள் துப்பட்டியால் கால் முதல் தலைவரையில் தன்னை மூடிக் கொண்டிருந்தாள். ஆனால், நடை, உயரம், பருமன் முதலியவற்றிலிருந்து, அவள் தமயந்திபாயைப் போல் அவனது பார்வைக்குக் காணப்பட்டாள். அவன் எவ்வளவு முயன்றும், அவள் உண்மையில் இன்னாளென்பதை அறிந்து கொள்ளக் கூடவில்லை. சிறிது வாசலில் நின்று தத்தளித்த பிறகு பீமராவ் தனது ஜாகைக்குள் நுழைந்தான்.

25–வது அதிகாரம்

சுவர்க் கோழி

பக்கத்து வீட்டில் புதிதாகக் குடிவந்தவள் வெளியில் வந்தால் அவள் யாவளென்பதை அறிந்து கொள்ளலாமென்று நினைத்த பீமராவ் இரண்டொரு நாட்கள் அடுத்த வீட்டை கவனித்துக் கொண்டிருந்தும் பயன் உண்டாகவில்ல. உள்ளே சென்றவள் வெளியில் வராமலே இருந்தாள். அவள் நிரம்பவும் முயன்று, அவளது வேலைக்காரியுடன் பேசி, அவளது எஜமானி யாவளென்பதைக் கேட்டான். அவள் திருவடமருதூரில் ஒரு பெரிய மிராசுதாருடைய மனைவி என்றும், அவளது புருஷன் சமீப காலத்தில் இறந்து விட்டதாயும் அவள் கண் வைத்தியம் செய்து கொள்ளும் பொருட்டு தஞ்சைக்கு வந்ததாயும் வேலைக் காரி தெரிவிக்க, அதைக் கேட்டு ஒருவாறு திருப்தி அடைந்தான்.

வீட்டிற்குள் நுழைந்த ஸ்திரீயோ தனது போஜனம் முதலி யவற்றை முடித்துக் கொண்ட பிறகு வேலைக்காரியை அழைத்து, "அவனுடைய அறை எதற்கு நேராக இருக்கிறது?'' என்று கேட்டாள். பீமராவிருந்த வீட்டிற்கும், அவர்கள் இருந்த வீட்டிற்கும் நடுவில் இருந்த சுவரில் ஒரு பாகத்தை வேலைக்காரி எஜமானிக்குக் காட்டி, அதற்கு நேராக பீமராவின் அறை இருப்பதாகவும், அவன் அப்போதுதான் வெளியில் போனதா கவும் தெரிவித்தாள். அவர்கள் தாம் கொணர்ந்திருந்த கடப்பாரை முதலிய ஆயுதங்களை உடனே எடுத்து சுவரினருகில் வைத்துக் கொண்டார்கள். எஜமானியான தமயந்திபாயி கடப்பாறையைத் தனது கையிலெடுத்து வேலைக்காரி காட்டிய இடத்தில் சுவரை மெல்ல இடித்து ஓசையின்றி இரண்டு மூன்று கற்களைப் பெயர்த்து, பீமராவின் அறைப் பக்கத்தில் ஓர் அங்குல சதுரத்தில் ஒரு துளை செய்தாள். அதன் வழியாக பீமராவின் அறையில் நடப்பதை நன்றாகப் பார்க்கவும், பேசப்படுவதைக் கேட்கவும் அந்தத் துளை நிரம்பவும் அநுகூலமாக இருந்தது.

தமயந்தி அவ்விதம் சுவரில் துளை செய்த பிறகு அதற்கருகிலேயே எப்போதும் உட்கார்ந்துகொண்டு, பீமராவின் அறையில் என்ன நடக்கிறதென்று கவனித்துக் கொண்டே இருந்தாள்.

அவள் சென்னையில் வஸந்தராவ் சௌக்கியமடையும் வரையில் அவர் உடனிருந்து, அவருக்குத் தேவையான உபசர ணைகளைச் செய்து, அவரது அபிமானத்தையும், மதிப்பையும் பெற்றாள். அவ்விருவருக்கும் ஒருவரது நற்குணம் மற்றவருக்கு நன்றாகத் தெரிந்தது, அவர் தமது விசனத்தை எல்லாம் அவளி டத்தில் வெளியிட்டார். அவளுக்கும் அவர்மீது ஒருவித அபி மானமும் ஆசையும் பற்றும் ஏற்பட்டன. ஆனால், அவர்கள் ஒருவர் மீது ஒருவர் காதல் மாத்திரம் கொள்ளவில்லை. அவரிடத்திலிருந்து ஓடினவளே ஸஞ்சலாக்ஷி என்றும், அவளது மனதை பீமராவே அவ்விதம் கலைத்தவன் என்றும், தமயந்தி தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள். பீமராவின் மேல் அவள் வைத்திருந்த பிரேமை முழுதும் வெறுப்பாக மாறியது. தனது விஷயத்திலும் வஸந்தராவின் விஷயத்திலும் அவன் செய்த வஞ்சகத்தை நினைத்து நினைத்து, அவன் மீது பெருத்த பகைமை பாராட்டினாள். அவற்றிற்கெல்லாம் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று அவள் தனக்குள் உறுதி செய்து கொண்டாள். அவனுக்கருகில் இருந்து அவனது இரகஸியங்களை எல்லாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டு, அவன் எங்கு குடியிருக்கிறான் என்பதை அறிந்து, அதன் அண்டை வீட்டை வாடகைக்கு வாங்கிக் கொண்டு,தான் இன்னாளென்பதை அவன் அறியாதபடி அங்கு வந்து சேர்ந்தாள். அவள் தனது உட்கருத்தை வஸந்தராவிடம் தெரிவியாமல் ஏதோ அவசர நிமித்தம் தஞ்சைக்குப் போய்விட்டு வருவதாக அவரிடம் தெரிவித்து விட்டு வந்து சேர்ந்தாள். தான் எப்படியாகிலும் முயன்று, அவனது அந்தரங்கங்களை அறிந்து கொண்டு அவனது எண்ணத்தில் மண்ணைப் போட்டு ஸஞ்சலாக்ஷியை மீட்டு வஸந்தராவிடம் ஒப்புவிக்கக் கருதினாள்.

அன்று சாயங்காலம் ஏழு மணி சமயத்தில் பீமராவ் அறையில் பேசிய சத்தத்தைக் கேட்டு தமயந்தி, தான் செய்திருந்த துளையில் கண்ணை வைத்துப் பார்த்தாள். பீமராவும், ஸகாராம்

ராவும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததை அவள் கண்டாள். உடன் அவள் தனது செவியை அதில் வைத்து, அவர்களது சம்பாஷணையை உற்றுக் கேட்டாள்.

ஸகா : (இரகசியமாக) பீமா! வாசற்கதவை நன்றாகத் தாளிட்டாயா?

பீம : (புரளியாக) தாளிட்டேன்.

ஸகா : (நான்கு பக்கங்களிலும் திரும்பிப் பார்த்து ஆச்சரியத்தோடு) இந்த வீடு பெரிய மனிதருடைய வீட்டைப் போல் இருக்கிறதே! படங்கள், பீரோக்கள், நாற்காலிகள், மேஜைகள், பலே! எவ்வளவு ஏற்பாடாக இருக்கிறது! நீ பெரிய பணக்காரன் ஆய்விட்டாயே! அநாதையாய் அகப்பட்டவனைப் போலவா இருக்கிறாய்.

பீம : (சிறிது கோபமடைந்து) அதெல்லாம் இருக்கட்டும். இங்கே உம்மை யார் வரச் சொன்னது?

ஸகா : நான் இங்கே வரக் கூடாதா? நீ வீட்டிற்கே வருவதில்லை என்று, உன்னை இவ்விடத்திலாவது பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். கலியாணபுரம் ஜெமீந்தார் விஷயத்தில் நான் சொன்னதை மறந்து விட்டாயே! உன்னுடைய காரியமும், உன்னுடைய தமாஷாகவும், உன்னுடைய விளையாட்டுகளுமே உனக்குச் சரியாய் இருக்கின்றன.

பீம : நீர் சொன்னதை நான் மறக்கவில்லை. அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்து கொண்டுதான் இருக்கிறேன். மற்றபடி நான் எப்படி இருந்தால் உமக்கென்ன?

ஸகா : மோகனராவ் எனக்குக் கொடுக்க வேண்டிய கடன் இப்போது ஒரு லட்சம் ஆய்விட்டது. இன்னம் பல செலவுகளைச் செய்யும்படி அவரைத் தூண்டிவிட்டு மேலும் கடன் வாங்கச் செய்தால் ஜெமீன் கூடிய சீக்கிரம் என் வசமாகும். எல்லாம் கடைசியில் உனக்குத் தானே வரப் போகிறது. நீ இப்படி அசிரத்தையாய் இருந்தால் காரியம் எப்படிக் கைகூடும்?

பீம : இப்படி அவசரப்பட்டால் காரியம் எப்படி கைகூடும்? நான் தினந்தோறும் அவரிடத்தில் நூறு ஆயிரம் பதினாயிரம் இப்படி ஜெயித்துக் கொண்டுதான் இருக்கிறேன். எல்லாம் தானாக நிறைவேறும்.

ஸகா : அப்படியானால் சரி; நீ அவ்வளவு பணத்தையும் என்ன செய்கிறாய்? எல்லாவற்றையும் தொலைத்து விட்டாயா? ஏதாவது சேர்த்து வைத்திருக்கிறாயா?

பீம : எல்லாவற்றையும் ஆற்றில் எறிந்து விட்டேன். எங்கே போட்டால் உமக்கென்ன? நீர் என்னுடைய செலவுக்கு ஒரு காசு கூடத் தருகிறதில்லை.


ஸகா : நீ சம்பாதிப்பதிலேயே எவ்வளவோ மிகுதிப்படுமே! என்னிடத்திலிருந்து வேறே பணம் வாங்கி வீணாக்க வேண்டுமா? என்னவோ வர வர உன்னுடைய புத்தி இப்படிக் கெட்டுப் போய் விட்டது. அடே பீமா! நாடகம் ஆடும் பெண்களின் வீடே கதியாக இருந்தால் பணம் ஏன் மிஞ்சும்? யாரோ ஸஞ்சலாக்ஷியாம். அவளைக் கட்டிக் கொண்டு அழுகிறாயாமே? வீணாய்க் கெட்டுப் போகாதே; அவர்கள் பணத்தோடு உன்னுடைய உயிரையும் உறிஞ்சி விடுவார்கள். நான் சொல்வதைக் கேள். வீணாகக் கெட்டுப் போகாதே!

பீம : (கோபத்தை அடக்கிக் கொண்டு) கெட்டுப் போகவில்லை; அப்படியே விட்டு விடுகிறேன். அதிருக்கட்டும். வஸந்தராவிடமிருந்து ஏதாவது செய்தி வந்ததா?

ஸகா : அவர் பட்டணத்திலேதான் இருக்கப் போகிறாராம். உடம்பு சௌக்கியமாய் இருக்கிறதாம். அவருக்கும் ஆயிரக் கணக்கில் பணம் அனுப்பிக் கொண்டே இருக்கிறேன். அந்தப் பைத்தியக்காரி மல்லிகா ஆற்றில் விழுந்து உயிரை விடாமல் இருந்தால், இத்தனை பணமும் நம்முடையதாயிருக்கும்.

பீம : போன விஷயத்தைப் பற்றிப் பேசுவதில் என்ன லாபம்? அவள் செத்துப் போய்விட்டாள். தவிர, அவள் பேரில் எழுதப்பட்ட சாஸனமும் அகப்படவில்லை. அப்படியிருக்க, அவள் உயிரோடிருந்தாலும் அதனால் பயனில்லை.

ஸகா : அவள் மட்டும் உயிரோடிருந்தால், சாஸனத்தை எப்படியாவது கண்டு பிடித்திருக்கலாம். பரசுராமபாவா கடைசியாக வஸந்தராவுக்கு எழுதிய கடிதத்தில், வேறொருவருக்கு எல்லாவற்றையும் தாம் எழுதி வைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறாரே! என்ன இருந்தாலும் நமக்குச் சேர வேண்டிய பொருளை வஸந்தராவ் இவ்விதம் அழிப்பதைக் காண எனக்கு வயிறு எரிகிறது.



பீமராவ் தமயந்திபாயி

பீம : எனக்குக் கூட எரிகிறது? என்ன செய்கிறது?

ஸகா : அது போகட்டும்; கலியாணபுரம் ஜெமீனாவது கிடைக்கும் வழியைப் பார்; சும்மா இருந்து விடாதே!

பீம : அப்படி இருப்பேனா? அவசியம் செய்கிறேன்; ஆகட்டும்.

ஸகா : சரி; கூத்தாடி ஸஞ்சலாக்ஷியை இனிமேலாவது விட்டு விடு. நான் சொல்வதைக் கேள்.

பீம : கேட்கிறேன். ஆகட்டும்.

ஸகா : முன்னே 'தமயந்தி' என்று ஒரு கழுதையைக் கட்டிக் கொண்டு அழுதாய்; அந்தப் பீடை தெய்வச் செயலாக ஒழிந்தது. இந்தப் புதுச் சனியன் எப்போது தொலையுமோ தெரியவில்லை என்றான். அண்டை வீட்டிலிருந்த வண்ணம் அதைக் கேட்ட தமயந்திபாயிக்கு பெரிதும் கோபமூண்டது. தன்னைப் பற்றி நிரம் பவும் ஏளனமாகப் பேசிய கிழவனது மண்டையை உடைத்து விடலாம் என்று அவள் நினைத்திருந்த சமயத்தில் கிழவன் எழுந்து வெளியில் போய்விட்டான்.

தான் கண்டுபிடித்த இரகசியங்களைப் பற்றி தமயந்திபாயி பெரிதும் சந்தோஷமடைந்தவளாய் போஜனத்திற்குச் சென்றாள். அன்று கேட்ட சம்பாஷணையிலிருந்து ஸஞ்சலாக்ஷியே மல்லிகா என்றும், பவானியம்மாள்புரம் ஜெமீன் முதலியவற்றிற்கு அவளே சொந்தக் காரி என்றும், அவள் தனது பிறப்பு முதலிய வற்றை அறியாமல் இருக்கிறாள் என்றும் யூகித்துக் கொண்டாள். பீமராவ் அந்த இரகசியத்தை அவளிடத்தில் சொல்லாமலே அவளைக் கலியாணம் செய்து கொண்டு, தானே ஜெமீந்தார் ஆக வேண்டும் என்று நினைத்ததையும் அறிந்தாள். அவ்விஷயங் களை நினைக்க நினைக்க அவளது ஆச்சரியம் அதிகரித்தது. தன்னை அவன் முற்றிலும் மறந்து ஸஞ்சலாக்ஷியைத் தொடர் வது, அந்தக் காரணத்தினாலேதான் என்பதையும் அவள் உணர்ந் தாள். "அடே பீமராவ்! நீ எல்லாரிலும் அதிக சாமர்த்தியசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன்னையே உயிராக மதித்த என்னைப் பணத்தின் பொருட்டு வஞ்சித்தாயல்லவா! இருக் கட்டும். உன்னுடைய எண்ணம் பலிப்பதை நான் பார்க்கிறேன்" என்று அவனது அறையை நோக்கி தனக்குள் பௌரஷம் கூறிய பின், ஒரு சிறிய கடிதம் எழுதி சென்னைக்கு அனுப்பினாள்.

26—வது அதிகாரம்

கடற்கரையில் கடும் போர்

மறுநாள் காலையில் மல்லிகாவும் கிருஷ்ணவேணியும் மேன் மாடத்தில் உட்கார்ந்திருந்தனர். அப்போது கிருஷ்ண வேணி, "என்னிச்சைப்படி விடுவதாயிருந்தால், இந்தக் கலியா ணத்தை நான் எவ்வளவு சிறப்பாக நடத்துவேன் தெரியுமா? வெளியில் தெரியாமல் இப்படி இரகஸியமாக நடக்கும் ஏழைக் கலியாணமெல்லாம் கலியாணத்தில் சேர்ந்ததேயல்ல. பெண்கள் தங்களுடைய கலியாணத்தில் உல்லாஸமாக இல்லாவிட்டால், வேறு எப்போதுதான் அவர்கள் சந்தோஷப்படப் போகிறார்கள்?" என்றாள்.

மல்லி : என் மனசுக்குக் கலியாணமே பிடிக்கவில்லை. பீமராவின் உபத்திரவத்தைப் பொறுக்க முடியாமல், இதற்கு இணங்கினேன். அதிக டம்பம் செய்வது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

கிருஷ்ண : நீ மகா அபூர்வமான பெண்ணாக இருக்கிறாயே. எல்லாவற்றிலும் நிதானமாக கலியாணத்தைக் கூட நீ அலட்சிய மாக மதிக்கிறாயே! எனக்குக் கலியாணம் நடப்பதாயிருந்தால் என்ன செய்வேன் தெரியுமா? அந்த ஆநந்தத்தினால் அப்படியே குதிக்க மாட்டேனா! ஆனால், பெரிய மனிதருடைய வீட்டுப் பெண்கள் இப்படித்தான் இருப்பார்கள். எங்களைப் போன்ற ஏழைகளுக்கு அற்ப காரியத்துக்கெல்லாம் சந்தோஷம் அதிகம்.

மல்லி : இந்தக் கலியாணம் உன்னுடையதாக இல்லாமல் போயிற்றே என்பதுதான் எனக்கு விசனமாக இருக்கிறது.

கிரு : ஏன்?

மல்லி : இது உன்னுடைய கலியாணமாயிருந்தால், நீ மணக் கோலத்தில் அழகான யௌவன மணமகளாய் இருப்பாய்;

நிரம்பவும் குதூகலமாகவும் காணப்பட்டு மணமகனுடைய மனத்தைக் குளிரச் செய்வாய்.

கிரு : (புன்சிரிப்போடு) என் கலியாணம் வரட்டும். அப்போது சொல்லுகிறேன். நான் உட்காருவதற்கு எட்டுக் குதிரைகள் கட்டிய ரதமும், அதன் நாற்புறத்திலும் சாமரை வீச தாசிகளும், முன்னும் பின்னும் நூறு ஸாரட்டுகளும் வர வேண்டாமா?

மல்லி : (புன்சிரிப்போடு) மைசூர் மகாராஜாவின் கலியாணத்தைப் போலவா?

கிரு : அதுமட்டுமா? யானைகள் குதிரைகள் ஒட்டைகள் சிப்பாயிகள் மேளம் பாண்டு எடுபிடி ஆலவட்டம் முதலியவற்றுடன் போக வேண்டாமா?

மல்லி : பேஷ்! நன்றாகச் சொல்லுகிறாய்!

கிரு : கலியாணமான பிறகு புருஷனும் ஸ்திரீயும் இணை பிரியாமலும், கவலை என்பதையே அறியாமலும், எப்போதும் இன்பமே அநுபவித்துக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் புருஷனோடு ஸுகமாக நாடகம் பார்த்து ஆநந்திக்க வேண்டும். சம்பாத்தியத்தைப் பற்றி கொஞ்சமும் கவலையே இருக்கக் கூடாது.

மல்லி : நாடகத்தில் உனக்கு இவ்வளவு ஆசை இருக்கிறதே! எனக்கு அதில் கொஞ்சமும் ஆசையே இல்லை. உன் பொருட்டு இரண்டொரு தடவைகளில் நான் வேஷம் போட்டுக் கொண்டேன். இல்லாவிட்டால், அதில் நான் ஒருநாளும் தலையிட்டிருக்கவே மாட்டேன்; அதற்கு நான் தகுந்தவளே அல்ல.

கிரு : (புன்சிரிப்போடு) ஆம்; நீ ராஜாத்தி ஆவதற்கே தகுந்தவள். மல்லிகா! உன்னைப் பார்க்கும்போது ஒவ்வொரு சமயம் நீ நிரம்பவும் உன்னத பதவிக்குரியவள் என்றும், ஏதோ கால வித்தியாசத்தினால் எங்களோடு இருக்கிறாய் என்றும் ஒரு நினைவு என் மனதில் உண்டாகிறது. தவிர, உன்னுடைய உண்மை நிலைமையும் உனக்குத் தெரியாமல் இருப்பதாக நினைக்கிறேன். அதிருக்கட்டும்; கலியாணம் இன்னம் ஏழு நாள் இருக்கிறது. கலியாணமானவுடன் பீமராவ் உன்னைத் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டால், உன்னை விட்டுப் பிரிந்து நாங்கள் எப்படி இருப்போம்?

மல்லி : எனக்கும் அதுதான் விசனமாக இருக்கிறது. கலியாணமானாலும் நான் உங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து போகவே மாட்டேன். நான் இங்கேதான் இருக்கப் போகிறேன்.

கிரு : நானும் பீமராவிடம் கேட்டுக்கொள்கிறேன். உன்னை விட்டு நாங்கள் ஒருநாளும் பிரிந்திருக்க மாட்டோம். அதிருக் கட்டும். தமயந்தி எப்போது வஸந்தராவைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாளோ தெரியவில்லை. அவளும் அதிர்ஷ்ட சாலிதான் - என்றாள்.

அதைக் கேட்ட மல்லிகாவின் தேகம் திடுக்கிட்டு நடுங்கியது. அவளது அழகிய முகத்தில் விசனம் குடிகொண்டது. அவள் அதை மறைத்துக் கொண்டு, ''ஆம்; நிரம்பவும் அதிர்ஷ்ட சாலிதான்'' என்றாள்.

கிரு : அவளை நான் நிரம்பவும் கெட்டவள் என்று அநியாயமாக நினைத்தேன். வஸந்தராவின் விஷயத்தில அவள் பட்ட பாட்டைப் பார்த்தால், அவளைப் பற்றி விரோதமாக நினைப்பதற்கே இடமில்லை. அதோ வருபவர் யார்? நம்முடைய வீட்டிற்குள் வருகிறாரே!

மல்லி : (எட்டிப் பார்த்து) கலியாணபுரம் ஜெமீந்தாரல்லவா வருகிறார் - என்றாள்.

உடனே கிருஷ்ணவேணி கீழே இறங்கிப் போய், அவரை உபசரித்து மரியாதையோடு மேன்மாடத்திற்கு அழைத்து வந்தாள். மல்லிகாவும் புன்சிரிப்போடு எழுந்து அவருக்கெதிரில் ஒரு நாற்காலியைப் போட்டுவிட்டு சிறிது தூரத்தில் வணக்கமாக நின்றாள்.

மோக : நான் அதிகமாக உட்காருவதற்கு நேரமில்லை; இந்த ஊரை விட்டு சென்னைக்குப் போகிறேன். அதற்கு முன் கடைசியாக உன்னிடம் சொல்லிக்கொண்டு போகலாம் என்று வந்தேன்.

மல்லி : (மெதுவாக) இந்த ஊருக்கே இனிமேல் வருவதில்லையோ?

மோக : ஆம்; அநேகமாய் இல்லை.

கிரு : பட்டணத்தில் என்ன விசேஷம்?

மோக : இந்த ஊர் என் தேகத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் போகிறேன் - என்றார்.

அவர் ஊரைவிட்டுப் போக உத்தேசித்ததன் உண்மைக் காரணம் மல்லிகாவுக்கு நன்றாகத் தெரியுமாதலால், அவள் மிக்க கலக்கமடைந்தவளாய் கீழே குனிந்து கொண்டு நின்றாள். அவரது விஷயத்தில் அவளுக்குப் பெரிதும் விசனம் உண்டாயிற்று.

மோக : அடுத்த வாரம் கலியாணத்துக்கு முகூர்த்தம் பார்த்திருப்பதாக பீமராவ் தெரிவித்தான். அந்தச் சமயத்தில் நான் இருக்க மாட்டேன். ஆகையால் அதை உத்தேசித்தே இப்போது இங்கே வந்தேன். மல்லிகாவை நான் என்றைய தினம் நெருப்பி லிருந்து விடுவித்தேனோ, அன்று முதல் அவளை நான் என்னுடைய சொந்த சகோதரிக்கும் அதிகமாக மதிக்கிறேன். இங்கிருந்தால் அவளுடைய கலியாணத்தில் என்ன சிறப்புகள் செய்வேனோ அவைகளை இப்போது செய்துவிட்டுப் போக வந்தேன் - என்று சொல்லிக் கொண்டே ஒரு சிறிய காகிதப் பொட்டலத்தை எடுத்து கிருஷ்ணவேணியிடம் நீட்டினார். அவள் அதை ஆவலுடன் வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். அதில் வைர அட்டிகை ஒன்றிருந்தது. அதை மல்லிகாவும் பார்த்தாள். அவ்வளவு விலையுயர்ந்த ஆபரணத்தைக் காண, அவரிடத்தில் அவளுக்குண்டான மதிப்பிற்கு அளவில்லை.

மல்லி : எனக்கு உயிரைக் கொடுத்தது போதாதென்று; இன்னம் சிறப்பும் வேறு செய்ய வேண்டுமா? எனக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டதுதான் மனதிற்குச் சகிக்க வில்லை. இவ்வளவு அருமையான காரியங்களுக்கெல்லாம் நான் எப்படி உரிமை உடையவளானேன்? இத்தனைக்கும் நான் என்னுடைய நன்றியறிதலை எப்படிக் காட்டப்போகிறேன் - என்றாள். நன்றியறிதலின் பெருக்கால் கண்ணீர் தானாகப் பொங்கி கன்னங்களில் வழிந்தது.

மோக : (அன்போடு) உன்னை நான் அன்று காப்பாற்றிய பிறகு, எனக்கு உன்னுடைய க்ஷேமலாபத்தில் ஒருவித அபிமானம் உண்டாகிவிட்டது. அதனால் செய்கிறேனே ஒழிய நீ பதில் நன்றி பாராட்ட வேண்டும் என்பதற்காக அல்ல. நீ எப்போதும் சௌக்கி யமாக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கை.

இனி எந்தச் சமயத்தில் உனக்கு என்னவிதமான உதவி தேவையோ அதை நீ என்னிடம் பெற்றுக்கொள்ளத் தடையில்லை. பீமராவும் நிரம்ப நல்லவன். உன்னை அன்போடு நடத்தும்படி அவனுக்குப் புத்திமதி சொல்லியிருக்கிறேன். நீ கவலைப்படாதே! நான் போய் விட்டு வருகிறேன்; மறந்து விடாதே - என்றார்.

அவரது பேரன்பையும் தயாளத்தையும் நற்குணத்தையும் கண்ட மல்லிகா எவ்விதமான மறுமொழியும் சொல்ல மாட்டா தவளாய்க் கீழே குனிந்த வண்ணம் நின்றாள். நன்றியறிதலின் பெருக்கால் அவளது கண்களில் கண்ணீர் ததும்பியது. சொல்ல நினைத்த வார்த்தைகள் விசனத்தினால் தொண்டையில் தடைப் பட்டன. ''போய் விட்டு வாருங்கள். தங்களுடைய மேன்மைக் குணத்துக்கு ஈசுவரன் எப்படியும் சகாயம் செய்வான்'' என்றாள். உடனே மோகனராவ் கிருஷ்ணவேணியிடத்திலும் சொல்லி விட்டுக் கீழே இறங்கினார். இறங்கி வீட்டிற்கு வெளியில் வந்த வுடன் அவர் நெடுமூச்செறிந்தார். மல்லிகாவை வேறொருவன் கையிற் பிடித்து மணப்பந்தலில் நிற்கும் கோலத்தைக் காண மனமற்றவராய், அவர் உடனே அவ்வூரை விட்டுப் போய்விடத் தீர்மானித்தார். அன்றிரவே புறப்பட்டு அவர் சென்னைக்குப் பிரயாணமாகி மறுநாள் புரசைவாக்கத்திலிருந்த தனது பங்க ளாவிற்கு வந்து சேர்ந்தார்; தஞ்சையிலிருந்து அதிக தூரத்தில் உள்ள இடமாகிய சென்னைக்கு வந்தால், மல்லிகாவின் நினைவு மாறும் என்னும் எண்ணத்தோடு அங்கே வந்தார். ஆனால், சென்னைக்கு வந்தபிறகு, அவளது நினைவு அவரை விட்டு அகலாமலே இருந்து வருத்தியது. நாலைந்து நாட்கள் வரையில், அவர் வெளியில் எங்கும் போகாமல், ஏக்கங் கொண்டவராய்த் தமது பங்களாவிலேயே இருந்தார். பார்த்த இடமெல்லாம் மல்லிகாவின் வடிவமே அவருக்குத் தோன்றியது.

அந்தச் சங்கடமான நிலைமையில், கடற்கரை முதலிய இடங்களுக்குப் போனாலாகிலும் ஒருவேளை தமது மனதின் வேதனை நீங்குமோ என்று நினைத்தவராய், அவர் ஐந்தாம் நாள் சாயங்காலம் பங்களாவை விட்டு வெளிப்பட்டு, மெல்ல நடந்து வழியிலிருந்த பல காட்சிகளில் தமது நினைவைச் செலுத்த முயன்றவராய்க் கடற்கரைக்குச் சென்றார். அப்போது மாலை ஆறு மணி நேரம் இருக்கலாம். மணலின் மீது சிறிது தூரம் அவர்

நடந்தார். அப்படி நடந்தது நிரம்பவும் அலுப்பாக இருந்தமையால், அவர் அங்கிருந்த மரங்களின் அடியில் தமது அங்கவஸ்திரத்தை விரித்து குப்புறப் படுத்துக் கொண்டு, தமது சிரத்தை மாத்திரம் உயர்த்தி கடலை நோக்கிய வண்ணமிருந்தார்.

அவ்வாறே சிறிது நேரம் கடலின் அமைப்பையும், அழகையும் ஜனங்கள் உல்லாஸமாகப் போனதையும் பார்த்துக் கொண்டே அவர் படுத்திருந்தார். யௌவன ஸ்திரீ புருஷர் நிரம்பவும் சந்தோஷமாகப் போனதைக் காண, அவரது மனதில் மல்லிகாவின் நினைவு உண்டாயிற்று. முதலில் அவளை வஸந்தராவின் மோக வலையிலிருந்து தப்புவித்தது அவரது மனதில் தோன்றியது, யாதொரு கவலையும் இல்லாமல் எங்கேயோ இருந்த மல்லிகாவின் மனதைக் கலைத்து அவளை வஞ்சித்து அழைத்து வந்ததிலிருந்து, அவளுக்கும் தங்களைப் போன்ற பிறருக்கும் உண்டான துன்பங்களைப் பற்றி நினைத்தார். ''படுபாவி அந்த வஸந்தராவ் செய்த மோசத்தினால், எத்தனை குடும்பங்கள் நிலை குலைந்தன! எத்தனை புருஷர் வருந்தித் தவிக்கின்றனர். மல்லிகாவின் துன்பத்திற்கெல்லாம் அந்தப் பாதகனே காரணமானவன்! அவனை என்றைக்காவது நான் காண்பேனானால், அவனுடைய உயிரை வாங்காமல் விடுவதில்லை'' என்று தமக்குள் பலவாறு நினைத்து வஸந்தராவின் மீது பகைமை பாராட்டிக் கொண்டிருந்தபோது, வஸந்தராவைப் போல ஒருவன் கடலோரத்தில் போனதைக் கண்டார். முதலில் சிறிது நேரம் அந்தத் தோற்றம், தமது மனதின் நினைவினால் உண்டான மனோபாமான பொய்த் தோற்றமோ என்று அவர் நினைத்தார்.

ஆனால், அந்த மனிதன் அலைகளை நோக்கி மெல்ல நடந்து போக அவருக்கு அது மனோபாவத் தோற்றமல்ல என்பது நிச்சயமாயிற்று. அவர் உடனே எழுந்து உட்கார்ந்து அந்த மனிதனை உற்று நோக்கினார். அவன் வஸந்தராவைப் போல் இருந்தாலும், நிரம்பவும் இளைத்துத் தளர்வடைந்து இருந்தமையால், சிறிது சந்தேகம் உண்டாயிற்று. யௌவனமும் அழகும் பொருந்திய வஸந்தராவ், அவ்விதம் வயது முதிர்ந்த கிழவனைப் போல இருக்க மாட்டாரே என்று மோகனராவ் நினைத்தார். ''அந்த வஞ்சகன் மாத்திரம் இங்கே அகப்பட்டுக் கொண்டால், அவனை

நன்றாக மர்த்தனம் செய்து விடுகிறேன்'' என்று நினைத்து வீராவேசம் அடைந்தார்.

சற்று தூரம் நடந்த பின் வஸந்தராவ் தமது ஜாகைக்குத் திரும்ப நாழிகையானதை உணர்ந்து, பாட்டைக்கு வர நினைத்து, மோகனராவ் இருந்த இடத்தின் வழியாக நடந்தார். அவர் மோகனராவின் முகத்தைப் பார்த்துக் கொண்டே வந்தமையால், பின்னவர் அவரை உற்று நோக்கி, அவர் வஸந்தராவென்றே உறுதி செய்து கொண்டவராய், உடனே கோபத்தோடு துள்ளி எழுந்தார். ''சரி; நல்ல நேரத்தில் இவன் அகப்பட்டுக் கொண்டான்; இவன் செய்த அநியாயத்திற்குத் தகுந்தபடி இவனை இங்கேயே தண்டித்து விடுகிறேன். ஒரே குத்தில் ஒரு குடம் ரத்தம் கக்கும்படி செய்கிறேன்'' என்று தீர்மானம் செய்து கொண்டு யுத்தத்திற்குத் தயாராக நின்றார்.

வஸந்தராவ் எதிரிலிருந்த மோகனராவை அப்போதே கவனித்துப் பார்த்தார். அப்படி நின்றவர் கலியாணபுரம் ஜெமீந்தார் என்பதை உணரவே வஸந்தராவ் வியப்படைந்தார். அவர்கள் இருவரும் அதற்கு முன் நண்பர்களாய் இருந்தவர்களாதலால், மோகனராவைக் கண்டவுடன் வஸந்தராவுக்கு மிகுந்த சந்தோஷத்தினால் முக மலர்ச்சி உண்டாயிற்று. அவன் புன் சிரிப்பைக் காட்டிய முகத்தோடு ''அப்படியா! மோகனராவா! இன்று சுபதினந்தான்'' என்று உண்மையான அன்போடு உபசார வார்த்தை கூறினார்.

மோகனராவ் மறுமொழி ஒன்றும் சொல்லாமல் பதை பதைத்த தேகத்தினராய் நின்றார். வஸந்தராவ் சிறிது சந்தேகத்தோடு நடந்து அவருக்கு நிரம்பவும் அருகில் நெருங்கி, ''என்ன இவ்வளவு சீக்கிரத்தில் மோகனராவ் தம்முடைய சிநேகிதனை மறந்து விட்டது!'' என்றார்.

''யோக்கியனுடைய சிநேகமாயிருந்தால், அது நிலைத்திருக்கும். அயோக்கியனுடைய சிநேகம் எப்படி நிலைத்திருக்கும்?'' என்று ஆத்திரத்தோடு மறுமொழி கூறினார் மோகனராவ்.

அந்தக் குரூரமான மொழியைக் கேட்ட வஸந்தராவின் முகம் மாறியது. தாம் எதிர்பாராத அந்த விரோதத்தின் காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ளக் கூடாதவராய் வஸந்தராவ் வியப்

படைந்து, ''அப்படியானால், நான் உம்முடைய சிநேகத்துக்கு அருகமற்றவன் என்பது உம்முடைய எண்ணமா?'' என்றார்.

மோக : (அழுத்தமாக) ஆம்; தடையென்ன?

வஸ : (சிறிது கோபத்தோடு) அப்படி நினைக்கக் காரணம் என்ன? நான் எந்த விஷயத்தில் யோக்கியதை இல்லாமல் நடந்து கொண்டேன்? அவதூறான இந்த வார்த்தையைச் சொன்னது மோகனராவானதால் விட்டேன். இன்னம் வேறு எவனாவது இப்படிச் சொல்லியிருந்தால், இந்நேரம் அவனுடைய பற்களை உடைத்திருப்பேன். நீர் என்னை இப்படித் தூஷிக்கக் காரணம் என்ன?

மோக : ஒன்றையும் அறியாத அபலைப் பெண்ணை வஞ்சித்து அழைத்து வந்து கெடுக்க நினைத்த அயோக்கிய சிகாமணியான உனக்குப் பௌரஷிமும் இருக்கிறதா?

வஸ : (ஆத்திரத்தோடு) ஆகா! என்ன சொன்னீர்? ஏது வர வர வார்த்தை மிஞ்சுகிறது! நான் எந்த ஸ்திரீயை வஞ்சித்தேன்?

மோக : இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து போய் விட்டயோ? யோசனை செய்து பார். ஸஞ்சலாக்ஷியின் நினைவு ஒழிந்து போய் விட்டதா?

வஸ : (ஆத்திரத்தோடு) யார் ஸஞ்சலாக்ஷியா? அந்தப் பெயருடைய பெண்ணை நான் கண்ணாலும் பார்த்ததில்லையே! உமக்கென்ன பைத்தியம் முற்றிப் போய்விட்டதா? இல்லா விட்டால் குடிவெறியா? பேசுவதை யோசனை செய்து பேசும்; நீ என்று மரியாதை தவறிப் பேச வேண்டாம்.

மோக : (கோபத்தோடு) அடே! அயோக்கியக் கழுதை! யாருக்கடா குடி வெறி? நீதான் குடி வெறியால் ஸஞ்சலாக்ஷியை இதற்குள் மறந்து விட்டாய். நீ அவளை உண்மையில் அறிய மாட்டாயோ?

வஸ : (சிறிது யோசனை செய்து) ஆம், ஆம்; ஸஞ்சலாக்ஷி என்று தஞ்சாவூர் அரண்மனையில் ஒருத்தி நாடகத்தில் இருப்ப தாகக் கேள்விப்பட்டேன். அவளைப் பற்றி எனக்கொன்றும் தெரியாதே! - என்றார்.

அப்போது அவரது தேகம் கோபத்தினால் பதறியது. எதிர் பார்க்காத இந்த அவமானத்தைப் பொறாமல் பொங்கியெழும்

கோபத்தினால், அவரது மனம் கொதித்தது. அவர் உண்மையை மறைத்து, பொய் பேசுகிறார் என்று நினைத்தமோகனராவுக்கும் ஆவேசம் அதிகரித்தது.

மோக : (ஏளனமாக) உனக்கு அவளை எப்படித் தெரியப் போகிறது! பவானியம்மாள் புரத்திலிருந்து ரகஸியமாக அழைத்துக் கொண்டு வந்து, அவளுடைய கற்பை அழித்து ஓட்டிவிட நினைத்த சேதாரப் பயலே! யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? உன்னுடைய கைவரிசை எல்லாம் யாரிடத்தில் காட்டுகிறாய்? உனக்கு அவ்வளவு அகமா? ஒரே குத்தில் உன்னுடைய குடலைக் கலக்கி விடுகிறேன் பார்! துஷ்டப் பயலே! ஜெமீந்தாரா நீ! உன்னைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறதடா! - என்று சொல்லிக் கொண்டே கோபாவேசத்துடன் சண்டைக்கு நெருங்கினார்.

அதைக் கேட்ட வஸந்தராவும் கோபாவேசத்தினால் தம்மை முற்றிலும் மறந்தார். அவரது தேகம் துரும்பாக மெலிந்திருப் பினும் அவர் நல்ல வீரராதலால் மரியாதைக் குறைவான வார்த்தைகளைக் கேட்கப் பொறாமல் மோகனராவைத் தண்டிக்க வேண்டும் என்று துடிதுடித்து நெருங்கினார்.

இருவரும் தம்மை மறந்து ஒருவரை ஒருவர் வாயில் வந்த விதம் திட்ட ஆரம்பித்தனர். வாய்ச்சண்டை முற்ற கையுத்தம் செய்யத் தொடங்கினர். ஒருவரை ஒருவர் கட்டி உருட்டியும், புரட்டியும், அடித்தும், குத்தியும் சண்டை செய்து மணலில் விழுந்து புரண்டனர்; அவர்கள் செய்த பெருத்த ஆரவாரத்தைக் கேட்டு பாட்டையில் சென்ற சில வழிப்போக்கர்கள் அங்கு ஓடி வந்தனர். அவர்களுடன் வந்த ஒரு யௌவன மங்கை சண்டை செய்தவர்கள் இன்னார் என்பதை அறிந்துகொண்டு வீரிட்ட சப்தத்தோடு ஆத்திரமாக ஓடி வந்து அவர்களுக்கிடையில் விழுந்து, அவர்களைப் பிரித்து விட முயன்றாள். வஸந்தராவ் நிரம்பவும் மெலிந்து இளைத்திருந்ததை அறிந்தவளாதலால், அவள் அவரைப் பிரித்து அப்பால் செலுத்த முயன்றாள். அந்தச் சமயத்தில் மோகனராவ் தனது வீராவேசத்தில் தம்மை மறந்து, வஸந்தராவை ஓங்கிக் குத்த முயல, அந்தக் குத்து, குறுக்கில் விழுந்த அந்த ஸ்திரீயின் மார்பில் பட்டது; அவள், ''ஐயோ செத்தேன்!'' என்ற கூச்சலுடன் மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள்.

அந்தக் கூச்சலைக் கேட்ட ஜனங்கள் ஓடிவந்து குறுக்கிட்டு இருவரையும் பிரித்துவிட்டு, "யாரையா நீ! ஆண்பிள்ளையா நீ! மகா சூரன்! பெண்பிள்ளையைக் குத்தி விட்டாயே!" என்று மோகனராவைத் தூஷிக்க, சிலர் அவளைத் தூக்கியெடுத்தனர். அப்போது அவளைப் பார்த்த வஸந்தராவ், "அடடா! தமயந்தி பாயி எங்கே வந்தாள்! என்ன ஆச்சரியம்! யாராவது ஓடி ஜலம் கொண்டு வாருங்கள்" என்று கூச்சலிட்டுக்கொண்டு ஓடி வந்து அவளை வாரியெடுத்து தமது மார்பில் சார்த்திக் கொண்டார். அதற்குள் ஒருவன் ஓடிப் போய் சமுத்திர ஜலத்தில் துணியை நனைத்து வர, அவர் அதை வாங்கி, அவளது முகத்தில் துடைத்தார். அதற்குள் வேறொருவன் பாட்டைக்குப் போய் அங்கிருந்த தண்ணீர்க் குழாவில் வந்த ஜலத்தை தனது இரு கைகளிலும் பிடித்துக் கொண்டு வந்து அதை அவள் வாயில் விட, அவள் இரண்டொரு நிமிஷத்தில் கண்ணை விழித்துக் கொண்டு, "உங்களுக்கு அதிகமாக அடி இல்லையே?" என்று வஸந்த ராவைக் கேட்க, அவர் "எனக்கொன்றுமில்லை. நீ ஏன் இதில் வந்து தலையிட்டாய்?" என்றார். அதற்குள் நன்றாகத் தெளிவு அடைந்த தமயந்தி, "இதென்ன சண்டை? ஏன் நீங்கள் இருவரும் இப்படிச் சண்டை போடுகிறீர்கள்? என்ன காரணம்?" என்று மோகனராவைப் பார்த்துக் கேட்டாள்.

மோக : அதை வஸந்தராவே சொல்லுவார்.


வஸ : எனக்குக் காரணம் தெரியவில்லை. அவரே சொல்ல வேண்டும்.

தம : (கோபச் சிரிப்போடு) அப்படியானால் உங்கள் இருவருக்கும் பைத்தியம் போலிருக்கிறது. இருவரும் ஒருவரை ஒருவர் குத்திக் கொள்ள முயன்றீர்கள். அதற்குக் காரணம் உங்களுக்கே தெரியவில்லையோ?

மோக : (ஆத்திரத்தோடு) இவரே சொல்லுவார். இவர் ஒரு பெண்ணைத் திருட்டுத் தனமாக அவளுடைய குடும்பத்திலிருந்து அழைத்து வந்து விட்டார். அவளுடைய பெயர்............!

வஸ : ஸஞ்சலாக்ஷியாம். அவளை நான் பார்த்ததே இல்லை.

அதைக்கேட்ட தமயந்தி மாறி மாறி இருவரது முகத்தையும் பார்த்துப் பரிகாசம் செய்து, "போனது போகட்டும். வாருங்கள்



வஸந்தராவ் படம்

மோகனராவ்

ஜாகைக்குப் போவோம். இதில் ஒருவர் மேலும் குற்றமில்லை. உண்மையை நான் சொல்லுகிறேன். இதன் அந்தரங்கம் எனக்கு நன்றாகத் தெரியும். நான் அவசர நிமித்தம் தஞ்சையிலிருந்து இங்கு வந்தது தெய்வச் செயலாக முடிந்தது. இல்லாவிட்டால் உங்களில் யாருடைய உயிராவது போயிருக்கும். இனி இங்கேயிருப்பது அவமானம்; வாருங்கள் ஜாகைக்குப் போவோம்'' என்ற சொல்லி இருவரையும் அழைத்துக் கொண்டு, தனது வீட்டை நோக்கி நடந்தாள். அதைக் கண்டு வியப்படைந்த ஜனங்களும் பிரிந்து போயினர்.

27—வது அதிகாரம்

வஞ்சகத்தை வென்ற வஞ்சி

பீமராவின் கலியாணத்தை கிருஷ்ணவேணியின் வீட்டிலேயே நடத்தி வைக்க நிச்சயமாயிற்று. அதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. முகூர்த்த தினத்திற்கு முதல் நாளே பீமராவும் அந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அன்றிரவு அவனுக்கு நிரம்பவும் சிறப்பான விருந்து தயார் செய்யப்பட்டது. ஆகையால், அன்றிரவு போஜனம் நடப்பதற்கு மிகுந்த கால தாமதமாயிற்று. மேன் மாடத்தில் ஒரு பெரிய விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மல்லிகா அங்கு தனியாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். கலியாணம் நெருங்க நெருங்க, அவளது மன வேதனை அதிகரித்துக் கொண்டே வந்தது. இன்னதென்று அறிய ஒண்ணாத ஏதோ ஒரு சஞ்சலம் அவளது மனத்தை வருத்த ஆரம்பித்தது. எப்போதும் வஸந்தராயரது நினைவும் வடிவமுமே மயமாய் அவளது மனதில் நிறைந்திருந்தன. அவள் கலியாணத்தை சந்தோஷ கரமான காரியமாகவே நினைக்கவில்லை. கொலைக்குற்றம் புரிந்த ஒரு குற்றவாளி தனக்கு மரணதண்டனை விதிக்கப்படும் தினத்தை எவ்வளவு மனவேதனையோடு எதிர்பார்த்து வருந்து வானோ அவ்விதம் அவள் சங்கடத்தில் ஆழ்ந்திருந்தாள்.

பீமராவ், மல்லிகா எவ்வகையாலும் தனது வலையிலிருந்து தப்பிப் போக மாட்டாளென்றும், மறு நாட் காலையில், அவள் தனக்கு மனைவி ஆய்விடுவாள் என்றும், தான் உடனே பெருத்த சமஸ்தானத்திற்கு ஜெமீந்தாராகி விடலாம் என்றும், அதன் பின் தனக்கு எவனும் நிகரில்லை என்றும் நினைத்து மானஸீகக் கோட்டைக் கட்டி, அதையே நினைத்து நினைத்து ஆநந்தக் கடலில் மூழ்கி இருந்தான். கீழேயிருந்த கிருஷ்ணவேணியுடன் ஸல்லாப மாகப் பேசிக் கொண்டிருந்த அவன், ''மல்லிகா என்ன செய் கிறாளென்று பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று சொல்லிய வண்ணம் மேன்மாடத்திற்கு வந்தான்; அங்கு விசனக் கடலில்

மூழ்கி தன்னை மறந்திருந்த மல்லிகாவைப் பார்த்து, ''கண்ணே! ஆருயிரே! உனக்கென்ன விசனம்? விடிந்தால் கல்யாணம். நீ இப்படி அழலாமா? என்ன ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்று அன்பாகவும் அருமையாகவும் கூறியவண்ணம் அவன் அவளுக்கு அருகில் நெருங்கினான்.

அவனைக் கண்ட மல்லிகா திடுக்கிட்டெழுந்து நின்று, ''நான் அழுதுகொண்டா இருக்கிறேன்? இல்லையே. ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தேன்'' என்றாள்.

பீம : எதைப்பற்றி யோசனை செய்கிறாய்?

மல்லி : நாளைய தினத்தைப் பற்றித்தான்.

பீம : அதைப் பற்றி என்ன யோசனை? உன் மனசில் ஏதாவது குறையிருந்தால், அதை உடனே நிவர்த்தி செய்கிறேன். நீ இப்படி வருத்தப்படுவதைக் கண்டு, நான் அரை க்ஷணமும் ஸகிக்க மாட்டேன்.

மல்லி : என்னவோ பைத்தியக்கார யோசனை செய்து கொண்டிருந்தேன். அதை ஏன் கேட்க வேண்டும்?

பீம : (அன்போடும் விசனத்தோடும்) அடி என் தங்கமே! நான் கலியாணம் செய்து கொள்ள ஆரம்பிக்கும்போதே ஒருவர்க் கொருவர் விஷயங்களை மறைத்து ரகஸியமாக வைத்துக் கொள்வது சரியல்ல. உன்னுடைய விசனத்தை வெளிப்படை யாகத் தெரிவி; உன் முகங்கோண நான் ஒரு க்ஷணமும் பார்க்க மாட்டேன்.

மல்லி : இவ்வளவு அன்பும் ஆசையும் வைத்த உங்களுக்குத் தகுந்த விதத்தில் கைம்மாறு செய்ய முடியவில்லை என்பதே என்னுடைய விசனம். நான் உங்களுக்கு நன்மையைச் செய்யா மல் தீமையைச் செய்வதைப் பற்றி வருந்துகிறேன்.

பீம : நீ எனக்கு வேறு என்னவிதமான கைம்மாறுதான் செய்ய வேண்டும்? இன்பக் களஞ்சியமான உன்னையே நீ எனக்கு சன் மானமாகக் கொடுக்கிறாயே!

மல்லி : அதுதான் தவறான எண்ணம். நான் இன்பக் களஞ் சியமாக இருந்தால் நீங்கள் சொல்வது சரிதான். நான் துன்பக் களஞ்சியமாக அல்லவா இருக்கிறேன். ஒரு பெண்ணைக்

கலியாணம் செய்து கொண்டால், அதனால், அன்பும், ஆசையும், காதலும், சுகமும் உண்டாக வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அது காசைக் கொடுத்து தேளைக் கொட்ட விட்டுக் கொள்வதைப் போன்றதே. பெண்ணின் மனம் ஒன்றுமற்ற பாழாயிருந்தால், அவளை அடைவது தீராத துயரையல்லவா தரும். நான் உண்மையை உள்ளபடி சொல்லுகிறேன். கோபிக்கக் கூடாது? யோசனை செய்யச் செய்ய, இந்தக் கலியாணத்துக்கு யான் ஏன் இசைந்தேன் என்று என் மனம் என்னை ஓயாமல் கண்டிக்கிறது. நான் என்ன செய்வேன்?

பீம : இதனால் உனக்குச் சுகமில்லை என்று நினைத்து வருந்துகிறாயா?

மல்லி : என்னைப் பற்றிய கவலையே இல்லை. யோசனை எல்லாம் உங்களைப் பற்றியதே. என்னிடத்தில் இவ்வளவு ஆசை வைத்த உங்களுக்கு இந்தக் கலியாணத்தினால் கொஞ்சமேனும் சுகம் உண்டாவதாயிருந்தாலும் கவலையில்லை. அந்த ஆறுதல் கூட இராதே. என்ன செய்கிறது? ஆகையால் (இழுப்பு)

பீம : ஆகையால் என்ன?

மல்லி : ஆகையால், என்மேல் தயவு செய்து, உங்கள் அன்புக்குப் பாத்திரமில்லாத என்னை விலக்கித் தள்ளி விடுவதே உத்தமமான காரியம்; என் மேல் இரக்கங் கொள்ளுங்கள் - என்று கெஞ்சத் தொடங்கினாள்.

அதைக் கேட்கவே அவனது முகம் மாறுதலடைந்தது. விசனம் மனதில் குடி கொண்டது. அவன் தனது மடியிலிருந்த சாஸனத்தைத் தொட்டுப் பார்த்தான்; கடைசியாக, அவள் தனது வலையிலிருந்து தப்பிப் போய்விடுவாளோ என்றும், அவ்வளவு ஐசுவரியமும் தனக்கு இல்லாமல் போய்விடுமோ என்றும் நினைத்து வருந்தினவனாய் அவளை அன்போடு நோக்கி, "உன்மேல் இரக்கமா கொள்ள வேண்டும்? அந்த இரக்கம் உன்னிடத்தில் மாத்திரம் இல்லையா? என்னுடைய உயிரும் மூச்சும் எனக்கு எவ்வளவு இன்றியமையாதவைகளோ அவைகளைக் காட்டிலும் அருமையானவளான உன்மேல் நான் ஆசை வைக்காமல் இருக்க முடியுமா? என் அருமைச் செல்வமே! உன்னைத் தள்ளியா விடுகிறது? நீதான் என்னைத் தள்ளி விலக்கப் பார்க்கிறாய்

கண்மணி! என்னிடத்தில் நீ இன்னமும் கபடமாகப் பேசுகிறாயே! நீ சொன்ன வாக்குறுதிக்குப் பழுது வரலாமா? உன்னை என் வசத்தில் ஒப்புவிக்க, நீ ஏன் இவ்வளவு பயப்படுகிறாய்? உன் மனசை ஏன் இப்படி வருத்திக் கொள்ளுகிறாய்? என் மேல் உனக்குச் சரியான பிரியம் ஏற்படவில்லை என்றுதானே நினைக்கிறாய்? அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. உன் விஷயத்தில் நான் பரமப் பிரீதியாக இருக்கிறேன். உனக்கு வேண்டியது அவ்வளவுதானே. பழகப் பழக உன் பிரியம் ஏற்பட்டுவிடும் என்பதற்குச் சந்தேகமே இல்லை'' என்று நிரம்பவும் பரிதாபகரமாக மறு மொழி கூறினான்.

அப்போது, வேடனது வலையிலிருந்து தப்ப முயன்ற பறவையை நான்கு பக்கங்களிலும் விலக்க முடியாமல் வலை நன்றாக வளைத்துக் கொள்வதைப் போன்ற நிலைமையில் இருந்த மல்லிகா, ''எனக்குக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் விருப்பமே உண்டாகவில்லை. இந்த விஷயத்தில் ஆசை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்று நான் எவ்வளவோ முயன்றும் சிறிதும் பயன் உண்டாகவில்லை. இந்த விஷயத்தில் பிரவேசிக்க வேண்டாம் என்று ஏதோ என் மனசில் தடுக்கிறது. இதனால் ஆயுட் காலம் முடிய விலகா துன்பமும் துயரமும் ஸம்பவிக்குமன்றி நன்மை உண்டாகப் போவதில்லை; நான் சொல்வதைக் கேளுங்கள். காரியம் கெட்டுப் போவதற்கு முன் இப்போதே எரிச்சரிக்கையாக இருப்பது நல்லது. வேண்டாம். இந்த எண்ணத்தை விலக்கி விடுங்கள்.

பீம : என் ராஜாத்தி! இந்தச் சமயத்தை விடாமல் காரியத்தை நிறைவேற்றினால், இனி ஆயுட்காலம் முற்றும் நன்மையும் இன்பமும் பெருகும் என்று என் மனசில் ஏதோ தெரிவிக்கிறது. வீணாகப் பிடிவாதம் செய்யாதே. நான் சொல்வதைக் கேள். என் கோமளாங்கி! உன்னை விட்டுப் போவேன் என்றா நினைக்கிறாய்? இந்த இடத்திலேயே கத்தியால் குத்திக் கொண்டு என்னுடைய உயிரை உன்னுடைய பாதத்தடியிலேயே விட்டு விடுவேனே அன்றி, உன்னை இனி ஒரு க்ஷணமும் விட்டுப் பிரிந்து உயிருடன் இருக்க மாட்டேன். வீணாகப் பழியை ஏற்றுக் கொள்ளாதே. உன்னுடைய முகம் ஏன் இப்படி விசனத்தைக் காட்டுகிறது? உன்னுடைய அழகிய செந்தாமரை முகத்தில்

புன்சிரிப்போடு, என்னிடம் ஒரு வார்த்தை பேசக் கூடாதா? கண்ணே! இப்படி வா; எங்கே ஒரு முத்தங் கொடு'' என்று மனது இளகக் கூறியவண்ணம், அவளை ஆலிங்கனம் செய்து கொள்ளும் எண்ணத்துடன் அருகில் நெருங்கினான்; அந்தச் சமயத்தில் தடதடவென்று காலடியோசை செய்து கொண்டு மெத்தைப் படியின் வழியாக யாரோ மேன்மாடத்திற்கு வந்ததை உணர்ந்து, அவளிடம் நெருங்காமல் விலகி நின்றான். அடுத்த நிமிஷத்தில் கிருஷ்ணவேணி அவர்களுக்கெதிரில் வந்து நின்றாள். அவளது முகம் ஒருவிதமான பதைபதைப்பைக் காட்டியது. அவளைக் கண்ட பீமராவ் இன்னம் சிறிது தூரத்தில் விலகி நின்றான்.

மல்லி : கிருஷ்ணவேணி! என்ன விசேஷம்? உன் முகம் ஒரு மாதிரியாக இருக்கிறதே?

கிரு : விசேஷம் ஒன்றுமில்லை. கவலைப்படாதே. உன்னைப் பார்க்க வேண்டும் என்று சில மனிதர் வந்திருக்கிறார்கள்.

மல்லி : (திடுக்கிட்டு) என்னைப் பார்க்கவா? யார் அது? என்று யோசனை செய்ய ஆரம்பித்தாள்.

கிரு : (புன்சிரிப்போடு) நீ எவ்வளவு யோசித்தாலும், அது இன்னாரென்று உன்னால் யூகிக்க முடியாது - என்றாள்.

அந்தச் சமயத்தில், ''ஏன் அவ்வளவு சிரமம் கொடுக்க வேண்டும்? நானே இதோ வந்து விட்டேன்'' என்ற ஒரு குரல் கேட்டது. உடனே தமயந்திபாயி அவர்களுக்கு முன்பு தோன்றினாள். அவளைக் காணவே பீமராவின் முகம் திடீரென்று மாறியது. அவனது அடிவயிற்றில் நெருப்பு வீழ்ந்ததைப் போல பெருத்த திகிலடைந்து வாய் திறந்து பேசவும் வல்லமையற்றவனாய், திகைத்து நின்றான். அவளது குரலைக் கேட்டவுடன் மல்லிகாவின் உடம்பில் சுருக்கென்று ஒருவிதச் சிலிர்ப்பு பரவியது. வஸந்தராவை மணக்கப் போகிற தமயந்தி தன்னிடத்தில் என்ன காரியமாக வந்திருக்கிறாளோ என்று மல்லிகா மலைத்தாள். அவளது விஷயத்தில் உண்டான ஒரு விதப் பொறாமையையும், விசனத்தையும் அடக்கிக் கொண்டு புன்சிரிப்பைத் தோற்றுவித்து அவளை நோக்கி, ''வர வேண்டும்; வர வேண்டும். வந்தது மிக்க அருமையாக இருக்கிறது'' என்று உபசரித்தாள்.

தம : ராத்திரி இவ்வளவு அகாலத்தில் நான் வந்து உங்களை உபத்திரவிப்பதைப் பற்றி மன்னிக்க வேண்டும். நிரம்பவும் அவசரமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டும். ஆகையால், நான் இப்போதே வர நேர்ந்தது. தவிர, நாளைக்கு உனக்குக் கலியாணம் நடத்த நிச்சயித்திருப்பதாகவும் கேள்விப்பட்டேன். அது நிஜந்தானா?

மல்லி : (யோசனையோடு) ஆம்! நிஜந்தான்.

தம : (புன்சிரிப்போடு) பீமராவுக்கும் உனக்கும் தானே?

மல்லி : ஆம்!

பீம : (தடுமாற்றத்தோடு) சொல்லப் போகும் விஷயம் ரகஸியமானதாக இருந்தால் நான் வெளியில் போய்விடுகிறேன்.

தம : (அலட்சியமாக) இல்லை, இல்லை. அப்படி ரகசியம் ஒன்றும் இல்லை. (பரிகாசமாக) மல்லிகா நாளைக்கு உம்முடைய மனைவியாகப் போகிறாள். இனி உமக்குத் தெரியாத ரகசியமும் உண்டா? போக வேண்டாம். இருக்க வேண்டும். (மல்லிகாவை நோக்கி), வேறொன்றும் இல்லை. நான் இரண்டொரு சந்தேகங்களைப் பற்றிக் கேட்கிறேன். நீ அவைகளை நிவர்த்திக்க வேண்டும். உன்னுடைய நன்மையைக் கருதியே கேட்கிறேன். வித்தியாசமாக நினைக்க வேண்டாம்.

மல்லி : (சிரித்த முகத்தோடு) இல்லை, இல்லை. தெரிவிக்கலாம்.

தம : இந்த நாடகத்தில் சேர்ந்தவர்களுக்கெல்லாம் உண்மைப் பெயர் ஒன்றும், கொட்டகைப் பெயர் வேறொன்றுமாக இருப்பது வழக்கமல்லவா. கொட்டகையில் உன்னை ஸஞ்சலாக்ஷி என்று சொல்லுகிறார்களே. உனக்குச் சொந்தப் பெயர் ஒன்று உண்டல்லவா?

மல்லி : (திகைத்து) ஆம்.

தம : அப்படியானால், அது இன்னதென்று பீமராவுக்குத் தெரிவித்தாயா?

மல்லி : இல்லை.

தம : (பீமராவை நோக்கி) நீர் வேறுவிதத்திலும் அதைத் தெரிந்துகொள்ளவில்லையா?

பீம : இல்லை; ஏன்? அதற்கென்ன?

தம : (மல்லிகாவை நோக்கி) அதிருக்கட்டும். உங்களிருவருக்கும் எவ்வளவு காலமாகப் பழக்கம்? நாடகத்தில் நீ சேர்ந்த பிறகுதானே?

மல்லி : ஆமாம்.

தம : உன்னுடைய முந்திய வரலாறுகளை இவருக்குத் தெரிவித்தாயா?

மல்லி : (மாறுபட்ட முகத்தோடு) ஏன்?

தம : காரணத்தைப் பிறகு தெரிவிக்கிறேன். உன்னுடைய நன்மையைக் கோரியே கேட்கிறேன். யோசனை செய்யாமல் சொல்.

மல்லி : என்னுடைய வரலாற்றைச் சொல்லவில்லை.

தம : (பீமராவை நோக்கி) உமக்கு ஒன்றும் தெரியாதா?

பீம : தெரியாது. (ஆத்திரத்தோடு) தமயந்தி, ஏன் இப்படி உபத்திரவிக்கிறாய். இந்தக் கேள்வியெல்லாம் எதற்காக? வந்த காரியத்தைப் பளிச்சென்று சொல்.

தம : நான் உம்மை ஒன்றும் உபத்திரவிக்கவில்லை. நான் மல்லிகாவைக் கேட்கிறேன். அவள் பதில் சொல்லுகிறாள். உமக்கு வருத்தமென்ன? மல்லிகா! நாளைக்கு இவரைக் கலியாணஞ் செய்து கொள்ள உனக்குப் பிரியந்தானா? என்றாள்.

மல்லிகா மறுமொழி சொல்ல அறியாமல் மௌனமாக நின்றாள்.

பீம : (ஆத்திரத்தோடு) அடி தமயந்தி! அழைக்காத இடத்தில் அநாவசியமாக வந்து ஏன் இப்படித் தாறுமாறாகப் பேசுகிறாய்? போதும்; புறப்பட்டுப் போ.

தம : (பரிகாசமாக) ஐயா! இதோ போய்விடுகிறேன். கவலைப்படாதேயும். ஏது? நீர் இந்த வீட்டுக்குக் கூட எஜமான் ஆய்விட்டீரோ? கிருஷ்ணவேணியின் அனுமதியின் பேரில் நான் வந்திருக்கிறேன். அவள் போகச் சொன்னால் உடனே போய்விடுகிறேன். நீர் ஏன் வீணாக அவஸ்தைப்படுகிறீர்? பேசாமல் இரும் - என்றாள்.

அதைக் கேட்ட மல்லிகா பெரிதும் வேதனை அடைந்த வளாய், ''நானே போகிறேன்'' என்று சொல்லியவண்ணம் கீழே இறங்க முயன்றாள்.

''இரு, இரு, போக வேண்டாம். இன்னம் ஒரே நிமிஷம்; உன்னுடைய நன்மைக்குத்தான். ஆகா! எனக்குத் தெரிந்த விஷயங்கள் உனக்குத் தெரிந்திருந்தால் நீ இப்படி இருப்பாயா! நாளைக்கு உன்னைக் கலியாணம் செய்து கொள்ளப் போகும் இந்த மனிதன் யார் என்பதை நீ அறிந்து கொண்டாயா?'' என்றாள் தமயந்தி. மல்லிகாவின் முகம் வெளுத்தது. அங்க மெல்லாம் வெடவெடவென்று நடுங்கியது. அவள் பீமராவைப் பார்த்தாள்.

தம : பாவம் உனக்குத் தெரியாது. இவன் பெருத்த சூதாடி; மோசக்காரன்; வஞ்சகன்; துரோகி; திருடன் - என்றாள்.

அதைக் கேட்ட மல்லிகா ஸ்தம்பித்து நின்றாள். பீமராவ் பெரிதும் கோபமடைந்தவனாய்த் துடிதுடித்து நறநறவென்று பல்லைக் கடித்து, அவளைக் கொடூரமாக நோக்கி, ''அடி தமயந்தி! இதுவும் நாடகக் கொட்டகை என்று நினைத்துக் கொண்டாயா? உன்னுடைய சாமர்த்தியம் எல்லாம் எங்களுக்குத் தெரியும். நீ இப்போது நடித்தது நிரம்பவும் திருப்தியா யிருக்கிறது. போதும்; உன்னை நான் கலியாணஞ் செய்து கொண் டிருந்தால் யோக்கியன்; நற்குணமுடையவன்; இல்லாவிட்டால் கெட்டவன். அவலை நினைத்து உரலை இடிப்பதைப்போல, நீ எந்த ஆத்திரத்தையோ வைத்துக் கொண்டு இப்படிப் பிதற்றுவது மூடத்தனம். இனி இம்மாதிரி பேசினால் எனக்குக் கோபம் வரும். பிறகு நான் எதைத்தான் செய்வேன் என்று சொல்ல முடியாது.

தம : (ஏளனமாக) சரியான விஷயம். மரியாதைக்குப் பாத்திரமான மனிதனை இவ்வளவு தூஷிக்கலாமா; அதிலும், தகப்பன், தாய் இன்னார் என்பது தெரியாமல் குப்பைத் தொட் டியில் இருந்து எடுத்து வளர்க்கப்பட்ட பெரிய மனிதர் நீர்; உம்முடைய அந்தஸ்து யாருக்கு வரும்? அதிருக்கட்டும். உம்மைக் குப்பைத் தொட்டியிலிருந்து எடுத்து வளர்த்து எவ்வளவோ அன்போடு காப்பாற்றிய ஸகாராம் ராவைக் கூட ஏமாற்ற உமக்கு உத்தேசம் போலிருக்கிறதே!

பீம : (கோபத்துடன்) அடி தமயந்தி! போதும்; நிறுத்து; இனி உன்னைப் பெண் என்று பார்க்க மாட்டேன். மரியாதை கெட்டுப்போம்; பைத்தியம் பிடித்து உளராதே. நீ வந்து செய்த காரியம் போதும். வந்த வழியைப் பார்த்துக் கொண்டு புறப்பட்டுப் போ. ஸகாராமாவது ராவாவது? அவன் யார். பித்தம் தலைக்கேறி விட்டதோ?

தம : (ஏளனமாக) இதற்குள் போய்விடுவேன் என்று பார்த்தாயா? ஓகோ! அப்படி நினைக்காதே. உனக்கு ஸகாராம் ராவைத் தெரியாதா? கலியாணபுரம் ஜெமீந்தாரை ஏமாற்றி பணம் பிடுங்கிக் கொண்டு மேன்மேலும் கடன் வாங்கச் செய்து அவருடைய ஜெமீனை அபகரிக்க உத்தேசமில்லையா? இதில் இருவரும் பங்காளிகள் இல்லையா? உன் ஜாகையில் நீயும் ஸகாரமும் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசித் தீர்மானம் செய்தது யாருக்கும் தெரியாதா?

பீம : (முகம் மாற) இதெல்லாம் முழுப் பொய். கட்டுக் கதை. கலியாணபுரம் ஜெமீந்தாரையாவது ஏமாற்றுவதாவது! அவருக்கு யார் கடன் கொடுப்பார்கள்? என்றான். அந்தச் சமயத்தில் மெத்தைப் படியில் நின்று கொண்டிருந்த மோகனராவ், ஸகாராம்ராவை முன்னால் தள்ளிக் கொண்டு வந்து சேர்ந்து அவனைச் சுவரோரமாக நிற்க வைக்க, அவன் அஞ்சி நடுநடுங்கிய வண்ணம், பொறியில் அகப்பட்ட எலியைப்போல விழித்துக் கொண்டு நின்றான். அதைக் கண்ட கிருஷ்ணவேணி மல்லிகா, பீமராவ் ஆகிய மூவரும் திடுக்கிட்டுத் திகைத்து நின்றனர்.

தம : (ஸகாராமைப் பார்த்து) ஸகாராம் ராயரே! இதோ நிற்கிறாரே இந்தப் பெரிய மனிதருக்கு நீர் யார் என்பது தெரியாதாமே! அது உண்மைதானா?

ஸகா : (அச்சத்தோடு) ஓகோ அப்படியா! இவனைச் சிறு குழந்தைப் பருவத்தில் இருந்து வளர்த்து பெரியவனாக்கினது நான்தானே. அநாதையாகக் குப்பைத் தொட்டியில் இவனுடைய பெற்றோர் இவனைத் திருட்டுத்தனமாகப் போட்டு விட்டார்கள். நான் எடுத்து வளர்த்தேன். அடே பீமா! இனி மறைப்பதில் பயனில்லை; உண்மையை இவர்கள் அறிந்து கொண்டார்கள். நம்முடைய ரகசியங்களை எல்லாம் இவர்கள் நன்றாக அறிந்து

கொண்டார்கள். (மல்லிகாவைப் பார்த்து திடுக்கிட்டு) ஆகா! இது யார்? இறந்தவள் எப்படிப் பிழைத்தாள்! பீமா! என்ன ஆச்சரியம் இது!

மோக : ஸகாராம்! இந்தப் பெண் யார் என்பது உனக்குத் தெரியுமா? ஏன் இப்படி ஆச்சரியப்படுகிறாய்?

ஸகா : தெரியும். இவள் பவானியம்மாள் புரம் ஜெமீந்தாரின் பேர்த்தி மல்லிகா அல்லவா? இவள் ஆற்றில் விழுந்து இறந்தாளே! சே! இவள் இறந்திருக்க மாட்டாள் - என்று பிதற்றினான்.

அவற்றை இன்னதென்று அறிந்து கொள்ள மாட்டாமல் மல்லிகா திகைத்து திக்பிரமை கொண்டாள்.

பீம : (பாசாங்கு செய்து) என்ன விநோதம்! பரசுராம பாவாவின் பேர்த்தியா இவள்? பெயர் மல்லிகாவா? நான் ஒருநாளும் அதைக்கேட்டதே இல்லையே! என்ன புளுகு இது!

தம : (ஏளனமாக) ஸகாராம்! பீமராவுக்கு ஒன்றும் தெரியாது! மல்லிகா ஜெமீந்தாரின் பேர்த்தி என்பதே தெரியாது. நீங்கள் இரண்டு பேரும் சில மாசகாலமாக தேடிக் கொண்டிருக்கும் மரண சாஸனமும் இன்னதென்பது தெரியாது.

பீம : அந்தச் சங்கதியை உனக்கு யார் சொன்னது? ஸகாராம் ராவா? இவன் சொல்வதெல்லாம் புளுகு; மற்றவர்கள் இவனிடத்தில் கடன் வாங்குவதைப் போல நானும் இவனிடத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொண்டிருக்கிறேனே அன்றி இவனுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

ஸகா : பீமா! என்ன ஆச்சரியம்! நான் சொல்வதா புளுகு? அடே துரோகி! குப்பைத் தொட்டியிலிருந்து நான் எடுத்து வளர்த்ததைக் கூட மறந்து விட்டாயே!

மோக : போதும். உங்கள் பிரபாவம் நிறுத்துங்கள்; அடே பீமா! இவள் பவானியம்மாள்புரம் ஜெமீந்தாரின் பேர்த்தி என்பது உனக்குத் தெரியாது என்கிறாயே; அதிருக்கட்டும். நான் அவருடைய ஸாசனத்தைக் கண்டெடுத்தேனே; அதாவது ஞாபகம் இருக்கிறதா?

ஸகா : (ஆச்சரியத்தோடு) ஸாசனம் அகப்பட்டதா! அடே பீமராவ்! என்னடா இது?

பீம : (விழித்து) இவர்கள் எல்லோரும் என்னைக் கெடுக்க வேண்டும் என்று ஒரே கட்டுப்பாடாக வந்திருக்கிறார்கள். இனி இங்கிருக்க எனக்குப் பிடிக்கவில்லை. ஸஞ்சலாக்ஷி! என்னோடு வா! நாம் போவோம். விவரத்தையெல்லாம் நான் உனக்கு என் வீட்டில் தெரிவிக்கிறேன். இல்லாவிட்டால் இவர்களை உடனே வீட்டை விட்டு வெளிப்படுத்து - என்றான்.

அதைக் கேட்ட மல்லிகா எதையும் சொல்ல மாட்டாதவளாய்த் தத்தளித்து பின்வாங்கினாள். அவளுக்குத் தன்னோடு பேசவும் விருப்பம் இல்லை என்றறிந்த பீமராவ் அவளை மனைவியாக அடைவோம் என்னும் நம்பிக்கையை முற்றிலும் துறந்தவனாய் மெத்தைப் படியை நோக்கி மெல்ல நடக்க ஆரம்பித்தான். அதைக் கண்டு தமயந்தி, ''மோசக்காரன் போகிறான்; விட வேண்டாம்; விட வேண்டாம்'' என்று மோகனராவைத் தூண்ட, அவர் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவனது கையைப் பிடித்துக் கொண்டு, ''பீமா! எங்கே போகிறாய்? சாஸனத்தை கொடுத்து விட்டுப் போ!'' என்று அதட்டிக் கூறினார்.

பீம : முட்டாள்! சாஸனமா வேண்டும்? அது இனி உன் கண்ணில் படுவதேது; அதை நான் கொளுத்தி விட்டேன். என்னை விட்டு விடு - என்று திமிறினான். அந்த மொழியைக் கேட்ட மோகனராவ், பெரிதும் விசனமடைந்தார். அவன் தம்மை அவமரியாதையாகப் பேசியதைக் கூட அவர் கவனிக்கவில்லை. சாஸனம் போய் விட்டதைப் பற்றியே வருந்தி, அவனைப் பிடித்த பிடியையும் தளர விட்டார். மற்றவரும் சிறிது ஏங்கி நின்றனர். பீமராவ் தான் அவர்களை வென்று விட்டதைப் பற்றி தற்பெருமையும் அகம்பாவமும் கொண்டவனாய், ''நீங்கள் சொல்வதற்கு நான் கட்டுப்பட்டிருப்பேன்; உண்மையையும் சொல்லியிருப்பேன். நீங்கள் இவ்வளவு தூரம் செய்தபடியால், சாஸனத்தைக் கொளுத்தி விட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே தனது மடியில் இருந்த ஒரு காகிதச் சுருளை எடுத்து அருகில் இருந்த பெரிய விளக்கில் பிடித்துத் திருப்பித் திருப்பி நாலைந்து இடங்களில் அதைக் கொளுத்திக் கீழே போட்டு விட்டான்.

''அதோ காகிதத்தைக் கொளுத்துகிறான்'' என்று கிருஷ்ணவேணி கூச்சலிட, மோகனராவ், அதை அவிக்க ஓடினார். பீமராவ் குறுக்கே விழுந்த வழிமறித்து பலமாக அவரைப் பிடித்துக்

கொள்ள, அடுத்த நிமிஷத்தில் காகிதம் முழுவதும் எரிந்து சாம்பலாய் விட்டது. அதன் பிறகு பீமராவ் அவரை விட்டான்.

மோக : (கோபத்தோடு) அடே கொலை பாதகா! நீ செய்த காரியம் இன்னதென்பதை அறிந்து கொண்டாயா? அடே துரோகி! நீ எவ்வளவோ ஆசையோடு கலியாணம் செய்து கொள்ள நினைத்த இந்த மல்லிகாவின் ஐசுவரியத்தை எல்லாம் போக்கடித்தாயே! படுபாவி! துன்மார்க்கா! உன் தலையில் இடி விழுந்து விடும் - என்று நிரம்பவும் பதறிக் கூறினார்.

பீம : (தனது வெற்றியினால் சந்தோஷமடைந்து) ஆகா! நான் இவளிடம் எவ்வளவு பிரியம் வைத்தேன். அவ்வளவையும் போக்கடித்துக் கொண்டாள். என்னைக் கடைசி வரையில் நம்பியிருந்தால் பவானியம்மாள் புரத்து எஜமாட்டியாக்கி இருப்பேன். உங்களுடைய பேச்சைக் கேட்டு என்னை இவள் எப்போது வெறுத்தாளோ, அப்போதே இவளுக்கும் கேடு வந்து விட்டது. எல்லாவற்றையும் இவள் இழந்தாள் - என்று ஆத்திர மாகவும் அகங்காரமாகவும் கூறி மல்லிகாவை ஒரு பார்வை பார்த்தபின் தமயந்தியை நோக்கி, ''தமயந்தி மகா புத்திசாலி! ஆனால் நிரம்பவும் அவசரப்பட்டு விட்டாள். அடீ தமயந்தி! இவ்வளவு சாமர்த்தியமாக எல்லோரையும் அழைத்து வந்தும் உன் சிநேகிதையான மல்லிகாவை ஜெமீந்தாரியாக்க உன்னால் முடிய வில்லையே! நீ மல்லிகாவுக்கு செய்த இந்த நன்மையை அவள் இனி மறக்கவே மாட்டாள்'' என்று கூறி ஏளனம் செய்தான்.

அதைக் கேட்ட எல்லோரும் திகைப்பும் வியப்பும் அடைந்து விசனத்தோடு மௌனமாக நின்றனர்.

பீம : ஜெமீந்தார்வாள்! தாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு இங்கே வந்தும் காரியம் பலிக்காமல் போய்விட்டது. நான் உத்தரவு பெற்றுக் கொள்கிறேன். தங்களுக்கு நிரம்பவும் சிரமம் கொடுத்தேன் - என்று ஏளனமாகச் சொல்லிவிட்டுப் புறப்பட, மல்லிகா, ''போகட்டும் விட்டு விடுங்கள்'' என்று ரகசியமாகத் தெரிவித்தாள்.

மோக : (உரக்க) இல்லை இல்லை. இவன் போகக் கூடாது; இவன் செய்த குற்றத்துக்கு இவனைப் போலீசார் வசம் இப்போதே ஒப்புவிக்கிறேன். என்னுடைய வீட்டிலிருந்த சாசனத்தைத் திருடி

நெருப்பில் போட்டுக் கொளுத்திய குற்றத்துக்கு இவன் உத்தரை சொல்லிக் கொள்ளட்டும் - என்று கூறியவண்ணம் அவனது கையைப் பலமாகப் பிடித்துக் கொண்டார்.

பீம : திருட்டுக் குற்றம் நான் செய்தேன் என்று நீர் மாத்திரம் சொல்வது போதுமா. வேறு சாட்சி வேண்டாமா? சாஸனத்தைப் பார்த்தது யார்? அதை நான் எப்போது எடுத்தேன்? கொளுத்தப் பட்டது சாஸனந்தானா என்பது எப்படி நிச்சயம்? இவைகளுக் கெல்லாம் சாட்சியிருந்தால் என்னைத் தொடும் – என்று பரிகாசமாகப் பேசினான்.

மோக : (கோபத்தோடு) அடே அயோக்கிய நாயே! சட்டமா பேசுகிறாய்?

பீம : வார்த்தைகளை அதிகமாகப் பேசினால் ஒவ்வொன் றுக்கும் பதில் கிடைக்கும். சாட்சியிருந்தால் போலீசார் வஸம் ஒப்புவிக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் போக வேண்டும்.

ஸகா : (உள்ளூர சந்தோஷமடைந்து) பீமனுடைய சாமர்த் தியம் யாருக்கு வரும்! அவன் எல்லோரையும் ஏமாற்றி விடுவானே!

தம : (பரிகாஸமாக) இவருடைய சாமர்த்தியம் ஒருவருக் கும் வராது. இவருடைய தாயார் திருட்டுத்தனமாகக் குழந்தை யைப் பெற்று, ஒருவரும் அறியாதபடி அதைக் குப்பைத் தொட்டியில் போட்டுத் தப்பித்துக் கொண்டாளே. அவள் எவ்வளவு சாமர்த்தியசாலி. அவளுடைய பிள்ளையாகிய இவர் அவளைக் காட்டிலும் அதிக சாமர்த்தியசாலியாக இருக்க மாட்டாரா! அதைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

மல்லி : போதும்; விட்டுவிடுங்கள்; போகட்டும். எனக்காக தயவு செய்யுங்கள்.

மோக : அடே! நீ எவளை வஞ்சித்தாயோ அவளே உன் விஷயத்தில் இவ்வளவு பரிதாபப்பட்டு பரிந்து பேசுகிறாள். ஆகையால், இதோ உன்னை விட்டுவிட்டேன், போ, உன் எலும்பும் தோலும் பத்திரமாய் இருக்க வேண்டுமானால் நீ என் கண்ணில் படாதே! என்று அவனது கையை விட்டு விட்டார்.

பீம : இந்த அதட்டலையெல்லாம் நான் அறிவேன். கடையைக் கட்டும். உம்முடைய உடம்பை முதலில் காப்பாற்றிக்

கொள்ளும். அடி தமயந்தி! நீ தப்பான இடத்தில் உன்னுடைய சாமர்த்தியத்தை உபயோகித்தாய். நாடகத்தில் சூது நகைகளைப் போட்டு அரிதாரத்தை அப்பிக் கொண்டு வந்து குலுக்கி மினுக்கி னால் மோகனராவைப் போல இருக்கிற ஆடுதன் ராஜாக்க ளெல்லாம் வாயைப் பிளந்து உன்னைச் சுற்றிக் கொண்டு அலைவார்கள். அதை விட்டு நீ போலீஸ் உத்தியோகம் செய்ய வந்தாயோ? இனிமேலாவது ஜாக்கரதையாக இரு. பீமராவின் காலை மிதித்தால், அவன் உன்னுடைய தலையை மிதித்து விடுவான் என்பதை இனியாவது மனசில் பத்திரமாக வைத்துக் கொள்; ஆனால் உன் சினேகிதையான மல்லிகாவுக்கு எவ்வளவு பெருத்த ஐசுவரியம் இல்லாமல் போய்விட்டது பார்த்தாயா? நீ பதினைந்து ஜென்மம் எடுத்து கூத்தாடிச் சேர்த்தாலும் அந்த ஐசுவரியத்தை உன்னால் சம்பாதித்து அவளுக்குக் கொடுக்க முடியுமா? இனிமேலாவது மடத்தனத்தை விட்டு விடு - என்று சொல்லியவண்ணம் படியை நோக்கி நடந்தான்.

தம : (ஏளனமாக) ஐயா! பீமராயரவாள். போகுமுன் ஒரு வார்த்தை; இப்படிக் கொஞ்சம் தயவு செய்யவேண்டும்.

பீம : இன்னம் திருப்தியாகவில்லையா?

தம : நீர் நிரம்பவும் புத்திசாலியாகையால், உம்மை இவ்வளவு சீக்கிரத்தில் அனுப்பிவிட எனக்கு மனம் வரவில்லை..

மோக : அவன் போகட்டும்; அவனைப் பார்த்தால் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போலிருக்கிறது. கூப்பிட வேண்டாம். ஒழியட்டும் துராத்மா.

தம : மன்னிக்க வேண்டும். இன்னம் ஒரே ஒரு நிமிஷம்; அதற்குப் பிறகு இந்த மேதாவியை அனுப்பி விடுகிறேன். ஐயா பீமராயரவாள்! சற்று முன் என்ன சொன்னீர்? நான் ஏமாறிப் போனதைப் பற்றியல்லவா நீர் தூஷித்தீர்.

பீம : நான் தூஷிக்கவில்லை. உள்ளதைச் சொன்னேன். உங்களுடைய புத்திசாலித்தனத்தை வெளியிட்டேன்; வேறில்லை.

தம : நீர் நேராக தெய்வ லோகத்திலிருந்து குப்பைத் தொட்டியில் இறங்கிய பிரகஸ்பதி என்பது இப்போதுதான் உண்மையில் வெளியாகிறது. உம்முடைய திறமையை இவர்கள் இன்னம் நன்றாக அறிந்து கொள்ளவில்லை. நான் அதை எடுத்துச்

சொல்கிறேன். அது சரிதானா என்று கவனியும். இவருடைய ஜெமீனை அபகரிக்கும் பொருட்டு, இவரைச் சூதாட்டத்துக்கு இழுத்து தினந்தினம் பெருத்த பொருளை அபகரித்தீர். வஸந்த ராவை ஏமாற்றி அவருடைய சமஸ்தானத்தை அபகரிக்கும் பொருட்டு மரண சாஸனத்தைத் தேட முயன்றீர்; பிறகு மல்லிகாவை இன்னாளென்று அறிந்து கொண்டீர்; அவளைக் கலியாணம் செய்து கொண்டால், ஜெமீந்தார் ஆகிவிடலாம் என்று நினைத்தீர். வேறு எவளோ இறக்க அவளை மல்லிகா என்று சொல்லி, ஸகாராம்ராவை வஞ்சித்தீர். கலியாணபுரம் ஜெமீந்தார் படத்தின் பின்புறத்தில் இருந்து எடுத்து வைத்திருந்த சாஸனத்தைத் திருட்டுத்தனமாக அபகரித்துக் கொண்டு, ஒன்றையும் அறியாதவரைப்போல நடித்து, அது வெந்நீரடுப்பில் எரிந்து போய் விட்டதென்று சொல்லி, அவரை ஏமாற்றினீர். இவ்வளவு சாமார்த்தியந்தான்! ஆனால், இப்போது இந்தப் பெண்ணை கலியாணஞ் செய்து கொண்டு ஜெமீனை அபகரிக்கும் சமயத்தில், முட்டாளாகிய நான் இவ்வளவையும் கண்டுபிடித்து, இங்கே வந்தபோது சாஸனத்தையும் எங்களுக்கெதிரிலேயே கொளுத்தி விட்டீர். மல்லிகாவின் வாயில் மண் போட்டு விட்டதாக நினைத்துச் சந்தோஷப்படுகிறீர்; எல்லாரையும் ஏமாற்றி விட்டதாக நினைத்து எங்களை ஏளனம் செய்கிறீர்.

பீம : நீ இப்போது என்ன புதிய சங்கதியைச் சொல்லி விட்டாய்? முன்னம் தனித்தனியாக சொன்னதை எல்லாம் இப்போது ஒன்றாய்ச் சேர்த்துச் சொல்கிறாய். அவ்வளவுதானே?

தம : அவ்வளவுதான். ஆனால் நீர் கொளுத்தியது மாத்திரம் மரண சாஸனமல்ல. அது ஒன்றுதான் புதிய சங்கதி.

பீம : (திடுக்கிட்டு) உனக்கென்ன பைத்தியமா? நான் எத்தனையோ தடவைகளில் படித்துப் பார்த்துப் பார்த்து மடியில் வைத்திருந்தேனே! அது ஸாசனமல்ல என்று உன்னிடம் யார் சொன்னது. கீழே விழுந்தவன் சிரிப்பதைப்போல, இதுவும் ஒரு சாமர்த்தியமோ?

தம : (தனது மடியிலிருந்த ஒரு காகித மடிப்பை எடுத்துக் காட்டி) பிரகஸ்பதி! இதோ பார்த்தீரா ஸாசனத்தை? இதைத்தான் நீர் திருடி வைத்திருந்தீர். கொளுத்தப்பட்டது வெற்றுக் காகிதம்.

(மோகனராவிடம் கொடுத்து) இதுதானா நீங்கள் கண்டுபிடித்தது? பாருங்கள்)'' என்றாள்.

அவர் அதை வாங்கிப் பார்த்து, ''ஆம்; இதுதான்! இதுதான்!'' என்று சொல்லி ஆநந்தக் கூத்தாடினார். அங்கிருந்த மற்றவரும் திக்பிரமை கொண்டு கல்லாய்ச் சமைந்து நின்றனர்.

பீம : எங்கே? நான் பார்க்கிறேன் - என்று சொல்லிக் கொண்டு அருகில் நெருங்கினான்.

தம : காட்டுங்கள்; பார்க்கட்டும். இதற்கு இவன் ஏதாவது கெடுதல் செய்ய முயன்றால், இவனை இவ்விடத்திலேயே துகைத்து விடுவோம். அடே பீமா! மினுக்கிக் குலுக்கும் கூத்தாடியாகிய நான் போலீஸ் உத்தியோகம் எப்படிச் செய்தேன் என்று பார்த்தாயா? இதை உனக்கெதிரில் உன்னிடமிருந்தே நான் எடுத்ததை அறிந்து கொள்ளக் கூடாத மூட சிகாமணியாகிய நீ எங்களைப் புரளி செய்கிறாய்?

மோ : (சந்தோஷத்தோடு) தமயந்தி! நீ இதை எப்படி எடுத்தாய்?

தம : இவனுடைய ரகசியங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் இவன் இருக்கும் வீட்டுக்கு அடுத்த வீட்டில் இருந்ததையும், இவன் செய்ததையெல்லாம் சுவரின் துளை வழியாக அறிந்ததையும் முன்னமேயே சொன்னேன் அல்லவா? இந்தப் பத்திரத்தை இவன் தினம் இரவில் தன் மடியிலிருந்து எடுத்துப் படித்தப் பின் தனது மேஜையின் மேல் வைத்துவிட்டு நித்திரை செய்வான். விடியற்காலையில் திரும்பவும் எடுத்து மடியில் வைத்துக் கொள்ளுவான். இதை அறிந்த நான் நேற்று இரவு இவனுக்குத் தெரியாமல் இவன் வீட்டுக்குள் போய் ஒளிந்து கொண்டிருந்து இவன் தூங்கிய சமயத்தில், இவனறைக்குள் நுழைந்து, மேஜையின் மேல் இருந்த சாஸனத்தை எடுத்துக் கொண்டு அதைப்போல முன்னதாகவே தயாரித்த வேறொரு காகித மடிப்பை அந்த இடத்தில் வைத்துவிட்டு வந்துவிட்டேன். அதை இந்த முட்டாள் அறியாமல் அந்த வெற்றுக் காகிதத்தை இதுவரை சுமந்து திரிந்ததும் அன்றி அது உண்மையானதென்று நினைத்துக் கொண்டு இவ்வளவு ஆடம்பரம் செய்து விட்டான் வடிகட்டின மூடன் – என்றாள்.

ஸாசனத்தையும் பார்த்து, அவள் சொன்னதையும் கேட்ட பீமராவின் கோபத்திற்கு அளவில்லை. அவன் தமயந்தியை எரித்து விடுபவனைப் போல உருட்டி விழித்து அவளை உற்று நோக்கினான். தான் எத்தனையோ நாட்களாக முயன்று செய்த பிரயத்தனங்கள் யாவும் வீணானதைப் பற்றி நினைக்க, அவனது கண்களில் கண்ணீர் பெருகியது. தனது அழுகையை மெல்ல அடக்கிக் கொண்டு, வெட்கிய முகத்தோடு அவன் வெளியில் நடந்தான். அப்போது தமயந்தி, ''அடே பீமா! இனியாவது புத்தியோடு பிழை. மற்றவரை முட்டாள் என்று நினைக்கும் வழக்கத்தை விட்டு விடு; நாம் எவ்வளவோ புத்திசாலியாக இருந்தாலும் நமது தலையில் மிதிக்கக் கூடிய எத்தனையோ மேதைகள் உலகத்தில் இருக்கிறார்கள் என்று நினைத்துப் பணிவாக நடந்து கொள்; அப்போதுதான் நீ முன்னுக்கு வருவாய்'' என்று கூறினாள்.

28—வது அதிகாரம்

கூட்டி வைக்கும் தரகர்

பீமராவ் வீட்டை விட்டுப் போனவுடன் தமயந்தி தான் மறுபடியும் வருவதாகச் சொல்லிவிட்டு ஸகாராம் ராவோடு வெளியிற் செல்ல, கிருஷ்ணவேணியும் ஏதோ அவசர வேலையின் நிமித்தம் வெளியில் சென்றாள். மோகனராவ், ஒரு மூலையில் தளர்வடைந்து நின்று கொண்டிருந்த மல்லிகாவிடம் நெருங்கி, ''மல்லிகா! உனக்கும் இப்போது சம்பவித்த விஷயங்களுக்கும் உள்ள சம்பந்தம் என்னவென்பதை நீ அறிந்து கொண்டாயா?'' என்று சந்தோஷமாக வினவினார்.

அவர் தனது உண்மையான பெயரைச் சொல்லி அழைத்ததைக் கேட்ட மல்லிகா திடுக்கிட்டு நிமிர்ந்து, ''எனக்கொன்றும் தெரியவில்லையே! எல்லாம் கனவு போலிருக்கிறதே! என் பெயர் மல்லிகா என்பது உண்மைதான். நான் பவானியம்மாள் புரம் ஜெமீந்தாரின் பேர்த்தி என்பதுதான் எனக்கு விளங்க வில்லை'' என்றாள்.

மோக : அதுவும் உண்மைதான். உன் விஷயத்தில் தமயந்தி சென்ற சில நாட்களாக எவ்வளவு பாடுபட்டிருக்கிறாள் தெரியுமா? ஆகா! அவளுடைய சாமர்த்தியத்தை என்னவென்று சொல்வேன்! பீமராவ் செய்த வஞ்சகத்தை எல்லாம் கண்டுபிடித்து அவனுடைய எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டு நீதான் ஜெமீனுக்கு சொந்தக்காரி என்பதையும் நிச்சயப்படுத்தி விட்டாளே!

மல்லி : இது நிரம்பவும் விநோதமாகத்தான் இருக்கிறது! என்னுடைய தாய் இறந்தது எனக்குத் தெரியாது. என் தந்தை இறந்தபோது அவர் என்னை துக்கோஜிராவின் வசத்தில் ஒப்புவித்தார். அப்போதாவது அதன் பிறகாவது எங்களுக்கும் இந்த ஜெமீந்தாருக்கும் சொந்தம் என்று ஒருவராவது சொன்னதில்லை.

ஆகையினாலே தான் இது உண்மை என்பதை என் மனசு நம்ப மாட்டேன் என்கிறது.

மோக : உண்மையைத் தெரிவிக்கிறேன். உன்னுடைய பாட்டி நிரம்பவும் ஏழையான குடும்பத்தைச் சேர்ந்தவள். பழைய ஜெமீந்தார் பரசுராமபாவா அவளை ரகசியமாகக் கலியாணம் செய்து, பவானியம்மாள்புரத்து மாளிகையில் எவருக்கும் தெரியா மல் வைத்திருந்தார்; அவருக்கு அவளால் பிறந்த பெண்ணை பூனாவில் ஒருவருக்குக் கலியாணம் செய்து கொடுத்தார். அவர் களே உன்னுடைய தாய் தகப்பன்மார், இந்தக் கலியாணங்க ளெல்லாம் ரகசியமாக நடந்தமையால் விவரம் எவருக்கும் நன்றாகத் தெரியாது.

மல்லி : அதிருக்கட்டும். பெரியவர் சாஸனத்தைப் படத்திற் குள் வைக்க வேண்டிய காரணமென்ன?

மோக : அதன் காரணந்தான் எங்களுக்கும் நிச்சயமாகத் தெரியவில்லை. சகாராம் ராவுக்கு இந்த ரகசியம் தெரியாம லிருக்க வேண்டும் என்றும், அந்தப் படத்தை உன்னிடத்தில் கொடுக்கும்படி சொல்லிவிட்டுப் போனால், எப்போதாகிலும் நீ அதிலிருக்கும் சாஸனத்தை எடுத்துக் கொள்வாய் என்றும் நினைத்து அப்படிச் செய்திருக்கலாம்.

மல்லி : இதனால் எனக்கு எவ்வளவு பொருள் சேரும்?

மோக : இந்தச் சென்னை ராஜதானியிலுள்ள சமஸ்தானங் கள் எல்லாவற்றிற்கும் பவானியம்மாள்புரம் ஜெமீன் நிரம்பவும் பெரியது. பணமாக இரண்டு கோடி ரூபாயும், ஜெமீன் கிராமங் களும், மாளிகைகளும் வந்து சேரும். கிராமங்களிலிருந்து வருஷ வருமானம் நான்கு லக்ஷம் ருபாய் வரலாம். வஸந்தராவ் வந்த பிறகு அவர் அவற்றில் அதிகம் செலவு செய்யவில்லை.

மல்லி : ஆம்; எல்லாம் இப்போது அவருடைய சொத்தென் பதை சுத்தமாக மறந்து விட்டேன்.

மோக : இனி அவருடையது ஒன்றுமில்லை. எல்லாம் உன் னுடையது. அவரும் விகாரமின்றி யாவற்றையும் கொடுத்து விடக்கூடியவரே.

மல்லி : எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, அவர் என்ன செய்வார்? அவருக்கு வேறு சொத்து ஒன்றுமில்லையே.

மோ : ஆம்; அதைப்பற்றி உனக்கென்ன கவலை? ஜெமீனுக்கு உண்மையில் உரிமையுடையவள் நீ; எல்லாம் உன்னுடையது. இதுவரையில் அவர் அநுபவித்ததே நியாய மில்லாத விஷயம்; உலகத்தாருடைய கஷ்டங்களை எல்லாம் நாம் கவனிக்க முடியுமா? எல்லாவற்றையும் நீ வைத்துக் கொண்டு இனி சுகமாக அநுபவிக்க வேண்டும்.

மல்லி : சுகமா! அந்தச் சங்கதி எனக்கு இந்த உலகத்திலேயே கிடையாது – என்றாள்.

அப்போது கிருஷ்ணவேணியும் தமயந்தியும் மேலே வந்தார்கள்.

உடனே மல்லிகா, ''ஆகா! தமயந்திபாயி என் விஷயத்தில் செய்த உதவியை என்னவென்று சொல்லுவேன்! முன் பின் அறியாதவளான என் விஷயத்தில் அவள் இவ்வளவு பாடுபட்டதன் காரணம் என்ன?'' என்றாள்.

அதைக் கேட்ட மோகனராவ், ''உன்னை நினைத்துப் பைத்தியங் கொண்டு அலையும் வஸந்தராவிடத்தில் உண்டான பச்சாதாபத்தினால் அவள் இப்படிச் செய்தாள்'' என்று சொல்ல நினைத்தார்.

ஆனால், அதைச் சொல்ல அது சரியான சமயமல்ல என்று நினைத்து, ''தமயந்தி இயற்கையிலேயே பிறரிடத்தில் அபிமானமும், இளகிய மனமும், பிறருக்கு உதவி செய்யும் குணமும் உடையவள்'' என்றார்.

மல்லிகா தமயந்திக்கு அருகில் போய் புன்சிரிப்போடு, ''நீங்கள் என் விஷயத்தில் செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!'' என்றாள்.

தம : (புன்சிரிப்போடு) எனக்கு உபசாரம் சொல்ல வேண்டாம். பீமராவின் மேல் எனக்கு ஆத்திரம் இருந்ததல்லவா; அதற்காகப் பழிவாங்க நான் இவ்விதம் செய்தேன். அவனைப் போன்ற துன்மார்க்கனை நான் எங்கும் பார்த்ததில்லை. அவன்

மகா பாதகன். நல்ல வேளையாக அவனுடைய வலையில் விழாமல் தப்பினோமே!

மல்லி : நான் தப்பியது உங்களுடைய தயவினாலன்றி வேறல்ல. இந்தப் பேருதவிக்கு அருகமாக நான் இனி உங்களிடம் எப்படி நடந்து கொள்ளப் போகிறேன்.

தம : (புன்னகையோடு) நீ எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தெரியவில்லை என்கிறாயே! நான் அதைத் தெரிவித்தால் அப்படி நடந்து கொள்ளுவாயா?

மல்லி : தடையில்லை. பேருபகாரியாகிய நீங்கள் எனக்கு நன்மையையல்லாது தீமையை ஒருநாளும் கோர மாட்டீர்கள்.

தம : சரி; அப்படியானால், உன்னுடைய விஷயங்களை யெல்லாம் இன்னம் சொற்பகாலத்துக்கு என் வசத்திலும் மோகன ராவ் வசத்திலும் விட்டு விட வேண்டும். நாங்கள் சொல்லுகிற படி நீ செய்ய வேண்டும். செய்கிறாயா?

மல்லி : அப்படியே செய்கிறேன். நீங்கள் என்னைக் கிணற்றில் விழச் சொன்னாலும் விழத் தடையில்லை.

தம : (புன்சிரிப்போடு) கடைசியாகச் சொன்ன காரியம் மாத்திரம் யார் சொன்னாலும் செய்ய வேண்டாம்; மற்றதை நாங் கள் சொல்லுகிறபடி செய்தால் அதுவே போதும். சரி; திரும்பவும் அதி சீக்கிரம் உன்னைப் பார்க்கிறோம். அதுவரையில் இவ்விடத் திலேயே ஜாக்கிரதையாக இரு!

மல்லி : சரி; அப்படியே ஆகட்டும்; என் விஷயத்தில் நீங்கள் இவ்வளவு அபிமானம் வைத்திருப்பதைக் காண, எனக்கு உண்டாகும் சந்தோஷத்தை எப்படி வெளியிடுவேன். ஈசுவரன் உங்களுக்கும் சீக்கிரத்தில் சுகத்தைக் கொடுப்பான்; சந்தேகமில்லை.

தம : (அசட்டையாக) இனி எனக்கென்ன சுகம் உண்டாகப் போகிறது?

மல்லி : பவானியம்மாள்புரத்தின் இப்போதைய ஜெமீந் தாரை நீங்கள் சீக்கிரம் கலியாணம் செய்து கொண்டு க்ஷேமமாக வாழ வேண்டும். அதற்கு ஈசுவரன் அவசியம் சகாயம் செய்வார்.

தம : *நீதானே இப்போதைய ஜெமீந்தார். உனக்குச் சீக்கிரம் கலியாணம் செய்து வைக்க வேண்டும் என்கிறாயா? அப்படியே ஆகட்டும்; சீக்கிரத்தில் முடித்து வைக்கிறோம். கவலைப்படாதே!*

மல்லி : *(சிரித்துக்கொண்டு) எனக்கா சொன்னேன்? நான் இன்னும் ஜெமீனை ஒப்புக் கொள்ளவில்லையே; இப்போதிருப் பவரைப் பற்றியல்லவா நான் சொன்னது.*

தம : *ஆம்; உண்மைதான். அதைத்தான் நானும் சொல்லுகி றேன்; அவரைக் கலியாணம் செய்து கொண்டால் சுகமாய் இருக்கலாம் என்றுதான் நானும் நினைக்கிறேன் - என்று சொல் லியபிறகு அவளும் மோகனராவும் விடைபெற்றுக் கொண்டு, வெளியில் போயினர். மல்லிகாவும் கிருஷ்ணவேணியும் தனியாக இருந்தனர். மல்லிகா சோர்வடைந்து அங்கிருந்த ஒரு கட்டிலின் மேல் உட்கார்ந்து சாய்ந்து கொண்டாள். கிருஷ்ணவேணி அவளுக்கு அருகில் போய் நின்று கொண்டு, புன்னகை செய்து, "கடைசியாக நீ பெருத்த சீமாட்டி ஆகிவிட்டாய். ஆரம்பத்திலி ருந்தே நான் சொல்லிக் கொண்டு வந்தது நிஜமாய் விட்டது பார்த்தாயா? போட்டும். எப்படியாவது நீ பெருமை அடைந் தாயே; அதுவே எனக்குப் பரம ஆநந்தமாக இருக்கிறது" என்று அன்போடு கூற, அவளது கண்களில் நீர் தாரை தாரையாக ஒழுகியது. உதடுகள் துடித்தன.*

மல்லி : *கிருஷ்ணவேணி! நீ சந்தோஷப்படுவதாகத் தெரிய வில்லையே! வருத்தப்படுவதைப் போலல்லவா இருக்கிறது. ஏன் இதற்குள் என்னைப் பற்றி இவ்வளவு கெடுதலாக எண்ணி விட்டாய்?*

கிரு : *(அதிக விசனத்துடன்) கெடுதலாக ஒன்றும் நினைக்க வில்லை; நீங்கள்-*

மல்லி : *அடாடா! இது என்ன பெருத்த அதிசயமாய் இருக்கிறதே! என்னை இப்போதே நீங்கள் என்று அழைக்க ஆரம்பித்து விட்டாயே! ஐசுவரியம் வந்து விட்டதனாலேயே உனக்கும் எனக்கும் உள்ள அன்பும் சிநேகமும் மாறுமா? இது வரையில் நாம் ஒருவருக்கொருவர் பாராட்டிய அன்னியோன்*

னியமும், சொந்தமும் எப்படி மாறும்? அப்படி நினைக்காதே! - என்று கடிந்துரைத்தாள்.

கிரு : அவசியம் வித்தியாசம் ஏற்படும். நாங்கள் சாதாரண மான ஸ்திதியில் இருக்கும் ஏழைகள்தானே; நீ பெருத்த சீமாட்டி! ராஜ வம்சத்தைச் சேர்ந்தவள்.

மல்லி : அப்படி நினைக்காதே! நானும் உன்னோடு ஊர்வசி வேஷம் போட்டுக் கொண்டு ஆடிய ஸஞ்சலாக்ஷி என்றே நீ என்னை எப்போதும் நினைத்துக் கொள். அற்பப் பணம் வந்து விட்டதனாலேயே நண்பரை மறந்து விடக் கூடிய கேவல புத்தியையுடைய மனுஷி என்றா என்னை நினைக்கிறாய்? இத்தனை நாட்கள் என்னோடு பழகியும் என்னுடைய குணத்தை நீ அறிந்து கொள்ளவில்லையே! - என்று கொடுமையாகப் பேசினாள்.

அதைக் கேட்ட கிருஷ்ணவேணி அவளை ஆசையோடு கட்டிக்கொண்டு, ''கோபித்துக் கொள்ளாதே! நான் உன்மேல் சந்தேகப்பட்டது தவறு. மன்னித்துக் கொள். சகோதரியைப்போல வித்தியாசம் இல்லாமல் ஒன்றாயிருந்த நீ பிரிந்துபோய் விடுவாயோ என்ற என்னுடைய மனம் கொதித்தது. அதனால் பலவிதமாகப் பேசி விட்டேன். இப்போது உன்னுடைய மனசை அறந்தேன். விசனப்படாதே! இனிமேல் இப்படிச் சொல்லவே மாட்டேன்'' என்று தேற்றினாள்.

★ ★ ★

தஞ்சையில் தமது மாளிகையில் வந்திறங்கிய வஸந்தராவ் ஏக்கங் கொண்டவராய் மறுநாட் காலையில் தனியாக நாற் காலியில் உட்கார்ந்திருந்தார். தான் இனி தஞ்சைக்கே வருவ தில்லை என்று உறுதி செய்து கொண்டு போன தம்மை தமயந்தி வற்புறுத்தி திரும்பவும் தஞ்சைக்கு அழைத்து வந்ததன் காரணத்தை அறிய அவர் நிரம்பவும் ஆவல் கொண்டு உட்கார்ந்தி ருந்தார். தமது உயிரை இரண்டு முறை காப்பாற்றிய நற்குணவதி யான தமயந்திக்கு மனவருத்தம் உண்டாகக் கூடாதென்று அவர் தஞ்சைக்கு வந்தாரேயன்றி வேறு எக்காரணம் பற்றியும் வந்த வரன்று. தமது உயிரை வாங்க நினைத்த மோகனராவும், அதன்

பிறகு தமது பிராண சிநேகிதர் ஆகிவிட்டதை நினைத்து வஸந்த ராவ் வியப்படைந்தவராய், ''இவர்கள் இருவரும் ரகஸியமாக ஏதோ காரியம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதில் எனக்கென்ன சம்பந்தம் இருக்கிறது என்பது தெரியவில்லை. மல்லிகா இறந்த பிறகு இந்த உலகில் இருப்பதனால் எனக்கு இனி என்ன சுகம் உண்டாகப் போகிறது? நான் சாக மாட்டாமல், பூமிக்குப் பாரமாக அலைந்து தடுமாறுகிறேன்'' என்று பலவாறு நினைத்து வருந்திய வண்ணம், எழுந்து கூடத்தில் உலாவத் தொடங்கினவர் தற்செயலாய் ஜன்னலின் வழியாக வெளியில் பார்த்தார். ஏராளமான ஜனங்கள் போவதும் வருவதுமாய் இருந்தனர். அதைக் கண்ட அவர், ''ஆகா! ஒவ்வொருவரும் ஏதோ ஒரு காரியத்தின் நிமித்தம் அலைந்து கொண்டிருக்கிறார்களே. நான் ஒருவன் மாத்திரம் உலகத்தில் ஒரு வேலையும் அற்ற வீணனாக இருந்து இப்படி விசனப்படவா பிறந்திருக்கிறேன்'' என்று நினைத்துக் கொண்டிருந்த சமயத்தில் தமயந்தியும் மோகனராவும் வந்து சேர்ந்தனர்.

வஸ : (புன்சிரிப்போடு) வர வேண்டும்; வர வேண்டும்; என்னை இந்த ஊருக்கு அழைத்து வந்த காரணத்தை இன்னமும் தெரிவிக்காமல் என்னை வருத்துகிறீர்களே! இது உங்களுக்குத் தருமமா? இந்த ஊரில் இருப்பது எனக்குப் பெருத்த தண்டனையாகத் தோன்றுகிறதே!

தம : முன்னமேயே தங்களுக்கு இருக்கும் விசனம் போதாதென்று நாங்கள் இன்னமும் ஒரு துன்பம் தரும் செய்தியைக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஸகா : (விசனமும் புன்சிரிப்பும் காட்டி) அதுவும் நல்லது தான். எட்டிக்காயைத் தின்றவனுக்கு வேப்பங்காய் ஒரு பொருட்டா? விசனக் கடலில் மூழ்கியிருப்பவனை, இனி எந்த விசனந்தான் என்ன செய்யப் போகிறது? சொல்லுங்கள்; பாதகமில்லை.

தம : அப்படியல்ல! அதன் கொடுமை இவ்வளவு என்பது இப்போது தெரியாது; சொன்னவுடன் தெரியும். அதை நான் சொல்லவும் கூடவில்லை; சொல்லாமல் இருக்கவும் கூட வில்லை; தரும சங்கடமாக இருக்கிறது.

வஸ : (உறுதியாக) சொல்லலாம். எதைப் பற்றியும் எனக்கு இனி கவலையில்லை.

தம : இப்போது தாங்கள் பவானியம்மாள்புரத்தின் ஜெமீந்தார் அல்லவா?

வஸ : இந்த ஜெமீன் வந்தது என்னுடைய துரதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும்.

தம : ஏன் அப்படி நினைக்க வேண்டும்?

வஸ : அதனாலேதான் நான் இங்கே வர நேர்ந்தது. வந்ததனால் என்னுடைய ஆயுட்காலம் வரையில் நீங்காத பெருத்த விசனமூட்டை என் தலைமேல் வந்து இறங்கி விட்டது. தவிர, இந்த ஜெமீனை வைத்துக்கொண்டு நான் இனி என்ன செய்யப் போகிறேன்? பரசுராமபாவா வகை தெரியாமல் இதை எனக்கு விட்டுப் போய் விட்டார். ஆனால், அவர் எனக்குக் கடைசியாக எழுதிய கடிதத்தில், இதை வேறு யாருக்கோ கொடுத்து விட்ட தாக எழுதியிருந்தார். ஆனால், சாஸனம் மாத்திரம் என் பேரில் இருக்கிறது.

தம : அந்தக் கடிதத்தை கிழித்து எறிந்து விட்டீர்களோ?

வஸ : இல்லை, இல்லை; அதையா கிழித்தெறிவேன்? நிரம்பவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வைத்திருக்கிறேனே! வேறு யார் பேரிலாவது சாஸனம் எழுதப்பட்டிருந்தால், அதற்கு இந்தக் கடிதமும் அநுகூலமாக இருக்குமல்லவா?

தம : ஓகோ! அப்படியா! பிந்திய சாஸனம் அகப்படுவது தங்களுக்குப் பிரதிகூலமானதல்லவா? அப்படியிருக்க தங்களுக்கு விரோதமாக தாங்களே சாக்ஷி தேடி வைத்துக் கொள்ளுகிறீர் களோ! அதுவும் நல்ல காரியந்தான். எல்லாம் போய்விட்டால், தாங்கள் ஏழைகளில் ஒருவர் ஆய்விட வேண்டாமா?

வஸ : ஆம்; உண்மைதான். அது மாத்திரமல்ல. நான் இது வரையில் செலவு செய்த ஏராளமான பொருளை எல்லாம் திருப்பிக் கொடுக்கவும் வேண்டும். இத்தனை கேள்விகள் எதற்கு? ஏதாவது சாஸனம் அகப்பட்டிருக்கிறதா. சொல்லி விடுங்கள்.

தம : அகப்பட்டிருக்கிறது. அதனாலேதான் விசனமான சங்கதி என்றேன்.

வஸ : எனக்கு இதனால் விசனமே கிடையாது. சாஸனம் எங்கிருந்து கிடைத்தது?

தம : பவானியம்மாள்புரம் பங்களாவிலேயே பெட்டியிலிருந்து அகப்பட்டது.

வஸ : யார் கண்டு பிடித்தது?

தம : நானே கண்டு பிடித்தேன்.

வஸ : (கவலைப்படாமல்) அப்படியா! அவர் கடிதத்திலேயே எழுதியிருக்கிறார். இப்படி இருக்கும் என்று நானும் முன்னாகவே சந்தேகித்ததுதானே! இது புதுமையானதல்லவே! சரி; இனி நான் பவானியம்மாள்புரத்தின் ஜெமீந்தாரல்ல.

தம : ஏன் அப்படி? சொந்தக்காரர் ஒப்புக் கொள்ளும் வரையில் நீங்கள்தானே ஜெமீந்தார். இவ்வளவு அபாரமான செல்வத்தைச் சுலபத்தில் கொடுத்துவிட யாருக்குத்தான் மனம் வரும்.

வஸ : ஏன்? கொடுக்காமல் என்ன செய்ய முடியும்? அவர் பேரில் உண்மையான சாஸனம் எழுதப்பட்டிருந்தால், உடனே நான் எல்லாவற்றையும் ஒப்புவித்து விடுவேன். இதில் வியாஜ்ஜியமென்ன இருக்கிறது, வழக்கென்ன இருக்கிறது?

தம : அப்படியானால் சாஸனத்தைக் காட்டினால் உடனே தாங்கள் யாவற்றையும் கொடுத்து விடுவீர்களா?

வஸ : தடையில்லை. அவசியம் கொடுத்து விடுவேன். அவர் எங்கிருக்கிறார்?

தம : அவரல்ல. அவள்.

வஸ : அப்படியா! (யோசனை செய்தவண்ணம்) இறந்து போன ஜெமீந்தாருக்கு என்னைவிட அதிக நெருக்கமான உறவினள் எவளிருக்கிறாள்?

தம : அவர் கடைசியாக ஓர் ஏழை ஸ்திரீயைக் கலியாணம் செய்து கொண்டு, அவளை ரகஸியமாக வைத்திருந்தாரல்லவா? அவளுடைய வயிற்றில் பிறந்த பெண்ணின் பெண்ணாம்.

வஸ : அவருடைய இளைய சம்சாரத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அவளுடைய பேர்த்தியைப் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை. போகட்டும்; சந்தோஷமே. அவளுடைய பெயரென்ன?

தம : ஸஞ்சலாக்ஷி.

வஸ : (அதிசயித்து) ஆ! ஸஞ்சலாக்ஷியா! மோகனராயரே, இவளைப் பற்றித்தானே தாங்கள் என்னோடு சண்டைக்கு வந்தது? இவளை நான் பார்த்தது கூட இல்லை என்று சொன்னேனே!

மோக : ஆம், ஆம்; அவள்தான். ஆனால், அவளுக்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று நான் சமீப காலத்தில்தான் அறிந்து கொணடேன்.

வஸ : நீங்கள் அவளைப் பார்த்து அவளோடு பேசினீர்களா?

மோக : ஆம்; சாஸனத்தைக் கூடப் பார்த்தோம். அதில் தங்களுக்கும் சொற்ப பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்-

வஸ : (புன்சிரிப்போடு) ஆனால் என்ன?

மோக : ஆனால் நீங்கள் இதுவரையில் செலவழித்ததற்கும் அதற்கும் சரியாய்ப் போயிருக்கும் என்று நினைக்கிறேன்.

வஸ : சரி என்னுடைய பழைய நிலைமை எங்கே போய் விட்டது? எனக்கு இதைப் பற்றி கவலையே இல்லை. அவள் எப்படி இருக்கிறாள்?

மோக : நிரம்பவும் அழகு பொருந்திய யௌவன மங்கை யாக இருக்கிறாள். இந்த ஜெமீனுக்கு எஜமானியாகும் யோக்கி யதை அவளிடம் பூர்த்தியாக பொருந்தி இருக்கிறது.

வஸ : நல்ல வேளை! யோக்கியதை அற்றவர்களிடத்தில் ஜெமீன் போய், அதனால் முன்னோர்களின் பெயர் கெட்டுப் போகுமோ என்று கவலைப்பட்டேன். நீங்கள் சொன்னதைக் கேட்க, சந்தோஷமே! ஆனால், எனக்கொரு சந்தேகம்; கோபித் துக் கொள்ளக் கூடாது. தங்களுக்கு அந்த ஸ்திரீயைக் கலியாணம் செய்து கொள்ளும் உத்தேசமுண்டோ?

மோக : இல்லை, இல்லை. எனக்கும் அவளுக்கும் சாதாரண மாக பழக்கந்தான். உங்களிருவருக்கும் மத்தியஸ்தனாக அவள் என்னையும் அனுப்பினாள். வேறொன்றும் இல்லை. அவள் சொல்லுவதென்னவென்றால், யாதொரு விவகாரமும் இல்லா மல் சொத்துக்களைத் தாங்கள் விட்டு விடுவதானால், தாங்கள் இதுவரையில் செலவழித்ததை அவள் கேட்பதில்லையாம். அதோடு சாஸனத்தில் கண்ட தொகையையும் தங்களுக்குக் கொடுத்து விடுகிறாளாம்.

வஸ : (சந்தோஷத்தோடு) அப்படியா! இவ்வளவு தயவாக யார் செய்யப் போகிறார்கள்? எனக்கு மனப்பூர்வமான சந்தோஷம். அப்படியே செய்யலாம். சாஸனத்தை என்னுடைய ஸர்வாதிகாரி ஸகாராம் ராவிடத்தில் காட்டுவதே போதுமானது.

மோக : அவரும் அதைப் பார்த்துவிட்டு, அது சரியானது தான் என்று ஒப்புக் கொண்டு விட்டார். இப்போது அங்கிருந்தே நாங்கள் வருகிறோம்.

வஸ : அப்படியா! பலே! நீங்கள் காரியத்தை எல்லாம் நிரம்பவும் ஏற்பாடாக செய்கிறீர்கள். நிரம்ப சந்தோஷம்! இனி எந்த நிமிஷத்தில் ஒப்புவிக்கச் சொன்னாலும் நான் சித்தமாகக் காத்திருக்கிறேன். ஆனால் எனக்கு ஒரு விஷயம் மிகுந்த விஸனத்தைத் தருகிறது.

தம : எவ்வளவுதான் விரக்தி ஏற்பட்டிருந்தாலும், இவ்வளவு உன்னத நிலைமையை இழப்பதில் விசனம் இருக்காதா! ஐயோ! பாவம்!

வஸ : (புன்சிரிப்போடு) நான் என்னைப் பற்றி விஸனப் படவில்லை. இவற்றின் சொந்தக்காரியான அந்த ஸ்திரீ இவ்வளவு காலம் இந்த ஐசுவரியத்தை சுயமாய் அநுபவிக்காமல் இருக்கும் படி நேர்ந்ததே என்றுதான் விசனிக்கிறேன்.

தம : அடாடா! தங்களுடைய மேன்மைக்குணம் யாருக்கு வரும்! உலகத்தில் எவனும் இவ்விதம் நினைக்கவே மாட்டான். அதிருக்கட்டும்; தங்களுக்குப் புதிதாக ஏற்பட்ட இந்த உறவின ளைப் பார்க்க வேண்டும் என்னும் ஆசை தங்களுக்கு உண்டாக வில்லையா?

வஸ : *ஆகா! அவசியம் பார்க்க வேண்டும். அவள் எங்கே இருக்கிறாள்? அவள் என்னைப் பார்க்க விரும்புவாளோ மாட்டாளோ?*

தம : *சொத்துக்களை ஒப்புவிக்கும்போது நீங்கள் இருவரும் அவசியம் சந்திக்க வேண்டுமே! நாளைக்கு அடுத்த நாள் பவானியம்மாள்புரத்து பங்களாவுக்கு வாருங்கள். அவளை அங்கே அழைத்து வந்து வைத்திருக்கிறேன். அங்கே நீங்கள் சந்திக்கலாம் - என்றாள்.*

வஸந்தராவ் அதை ஒப்புக்கொள்ள, தரகர் இருவரும் விடை பெற்றுக் கொண்டு சென்றனர்.

29—வது அதிகாரம்

சக்கிலியர் சாமிக்கு செருப்புப் பூசை

தனது அந்தரங்கமான கருத்தை எல்லாம் தமயந்திபாயி வெளிப்படுத்தி தன்னை அயோக்கியன் என்று ருஜூப்படுத்திய நாள் முதல், ஸகாராம்ராவ் அவளிடத்தில் பெருத்த அச்சங் கொண்டான். அவளைக் காணும்போதே அவனுக்குப் பேயைக் காண்பதைப் போல் இருந்தது. புதிதாக வந்த ஜெமீந்தாரினி தமயந்தியின் கைக்குள் இருப்பதால், தான் தமயந்தியின் சொற் படி நடக்காவிடில், தனது ஸர்வாதிகாரி உத்தியோகத்தை அவள் ஒழித்து விடுவாள் என்று நினைத்து அவன் பெரிதும் கவலை அடைந்தான். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சாஸனத்தைப்பற்றி தாங்கள் உத்தரவிடும் வரையில், எவரிடத்திலும் உண்மையை வெளியிடக் கூடாதென்று அவனிடம் தமயந்தி கண்டிப்பாகத் தெரிவித்திருந்தாள். அவ்விதமே செய்வதாக அவனும் ஒப்புக் கொண்டிருந்தான். மல்லிகா ஆற்றில் விழுந்திருக்கவில்லை என்றும், உயிரோடிருப்பதாயும், மூன்றாம் நாள் அவள் பவானி யம்மாள்புரத்திற்குப் போவதாயும், துக்கோஜிராவுக்கு ஸகாராம் ராவ் ஒரு கடிதம் எழுதியனுப்ப தமயந்தி ஏற்பாடு செய்தாள்.

அன்று மாலை பவானியம்மாள்புரத்து தபால்காரன் அப்பாயி நாயுடு என்பவன், தனது வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த துக்கோஜிராவிடத்தில் போய், மேலே குறிக்கப்பட்ட கடிதத்தைக் கொடுத்தான். அதை வாங்கிப் படித்த துக்கோஜிராவ் திடுக்கிட்டு ஒருவிதமான மனோவேதனை அடைந்தவனாய் விரைவாக எழுந்து வீட்டிற்குள் போய் இயந்திரத்தில் மாவு அரைத்துக் கொண்டிருந்த கமலாவையும், ஸீதாவையும் நோக்கி, ‘‘கமலா! அதிசயத்தைக் கேட்டாயா! மல்லிகா சாகவில்லையாமே! உயிரோடு இருக்கிறாளாமே! இதென்ன நிஜமாயிருக்குமா? அல்லது, இதை

எழுதிய ஸகாராமுக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்குமா? ஒன்றும் தெரியவில்லை!'' என்றான்.

கமலா : *என்ன வேடிக்கை! ஆற்றில் விழுந்து செத்தவள் எப்படிப் பிழைத்திருப்பாள்?*

ஸீதா : *(ஆத்திரத்தோடு) இது எனக்கு முன்னமேயே தெரியாமல் போய்விட்டதே! தெரிந்திருந்தால் அவள் பிழைக்காதபடி அவளுடைய தலையில் ஒரு பெரிய கல்லைப் போட்டிருப்பேனே!*

கமலா : *இது நிஜமாயிருக்குமா? அல்லது, வேறு எவளாவது இவளென்று வேஷம் போடுகிறாளா?*

ஸீதா : *ஓர் ஆளைப் பிடித்துக் கொண்டு ஓடிய கழுதையைப் பற்றி நமக்கென்ன பேச்சு? வெட்கம் மானம் ஏதாவது இருந்தால், அவள் ஒரு மனுஷி என்று மறுபடியும் வெளியில் வருவாளா?*

கமலா : *ஆமாம்; துஷ்ட முண்டை! இனிமேல் நாம் அவளுடைய முகத்தில்கூட விழிக்கக் கூடாது.*

ஸீதா : *அவள் ஓடிப்போனதைப் பற்றி ஊரெல்லாம் சிரிக்கிறதே! இனி இங்கே தலைகாட்ட அவளுக்குப் பைத்தியமா? அவள் வரமாட்டாள்.*

துக்கோ : *அப்படியா நினைக்கிறாய்? நாளைக்கு மறுநாள் அவள் இங்கே வரப்போகிறாளாமே! அதுதான் எனக்குப் பெருத்த கவலையாக இருக்கிறது. அவள் வந்து விட்டால், அவளுடைய வருமானத்தை நாம் அவளிடம் கொடுக்க வேண்டுமே!*

கமலா : *ஒரு காரியம் செய்வோம்; அவள் இங்கே வருமுன் ஸகாராமுக்கு ஒரு கடிதம் எழுதி விடலாம். மல்லிகா உயிரோடு இருப்பதைப் பற்றி நாம் சந்தோஷப்படுவதாயும், ஆனால் அவளுடைய துர்நடத்தையை உத்தேசித்து அவளை இந்த வீட்டில் சேர்த்துக் கொள்ள மாட்டோம் என்றும் உடனே கடிதம் எழுதி அனுப்பி விட்டால் சரியாய்ப் போகிறது.*

துக்கோ : *(ஆத்திரத்தோடு) என்ன துன்பமோ! வருகிற இழவெல்லாம் எனக்கே வருகிறது. இந்தப் பீடை ஒழிந்தபின் நமக்குச் சௌக்கியமாயிருந்தது. மறுபடியும் வரப்போகிறது*

என்று வாயில் வந்தபடி மல்லிகாவைப் பலவாறு தூஷித்த வண்ணம் கமலா சொல்லியவாறு ஒரு கடிதம் எழுதி அப்போதே ஸகாராம் ராவுக்கு அனுப்பி விட்டான். அதை ஸகாராம் உடனே தமயந்தியிடம் சேர்த்தான்.

மறுநாள் ஸகாராம் ராவ் பவானியம்மாள்புரத்திற்கு வந்து, நீடித்த காலமாக அடைபட்டுக் கிடந்த பங்களாவைத் திறந்து, பல ஆட்களை விடுத்து அதைச் சுத்தி செய்து கலியாண வீட்டைப் போல நேர்த்தியாக அலங்கரித்து வைத்தான். அந்த ஏற்பாடு களைக் கண்ட அவ்வூர் ஜனங்கள் அதன் காரணத்தை அறிந்து கொள்ளக் கூடாதவர்களாய், ''யார் வரப் போகிறார்கள்? ஏன் பங்களாவைச் சுத்தம் செய்கிறார்கள்?'' என்று ஒருவரை ஒருவர் வினாவி வியப்போடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

வஸந்தராவ் கலியாணம் செய்து கொண்டு பங்களாவுக்கு வரப் போகிறார் என்று இரகசியமாகக் கூறினர். அவர் ஜெமீனை வேறொருவருக்கு விற்று விட்டதாகவும், வாங்கியவர் வரப் போவதாகவும் வேறு பலர் ஊகித்தனர்.

இங்ஙனம் நிலைமை இப்படியிருக்க, தஞ்சையில் தமயந்தி மல்லிகாவினிடம் போய், ''மல்லிகா! நாம் நாளைக்கு ஊருக்குப் போக வேண்டும். நாளை காலை ஆறு மணிக்குப் புறப்பட நீ தயாராக இருக்க வேண்டும்'' என்றாள்.

மல்லி : (ஆச்சரியத்தோடு) எந்த ஊருக்கு?

தம : பவானியம்மாள்புரத்துக்கு. ஏன் அந்தப் பெயரைச் சொன்னவுடன் உன் முகம் மாறிவிட்டது? உன்னுடைய பங்களா முதலிய வைபவங்களை நீ பார்க்க வேண்டாமா?

மல்லி : இவ்வளவு சீக்கிரத்திலா? இப்போதுதான் அவை களுக்கு ஓர் எஜமான் இருக்கிறாரே! என்ன அவசரம்?

தம : யார் வஸந்தராயரா?

மல்லி : ஆம்.

தம : அவர் உன்னுடைய சொத்துக்களை எல்லாம் நாளைய தினம் சாயங்காலம் உன்னிடம் ஒப்புவிக்கும்பொருட்டு அங்கே வரப்போகிறார்.

மல்லி : நான்தான் அவைகளுக்குச் சொந்தக்காரி என்பது அவருக்குத் தெரியுமா?

தம : தெரியாது. ஆனால் ஸஞ்சலாக்ஷி என்ற பெண்ணே சொந்தக்காரி என்று நாங்கள் சொல்லி இருக்கிறோம்.

மல்லி : (புன்சிரிப்போடு) உங்களுடைய உள் கருத்து இன்னதென்பது தெரியவில்லை. சரி; நடக்கிறபடி நடக்கட்டும். உங்கள் இச்சைப்படி செய்யுங்கள்.

தம : நாளைய காலை ஆறுமணி; ஞாபகமிருக்கட்டும்.

மல்லி : அப்படியே நானும் கிருஷ்ணவேணியும் ஐந்தரை மணிக்கே தயாராக இருக்கிறோம்.

தம : ஆம்; கிருஷ்ணவேணியும் அவசியம் வர வேண்டும். என்னால் கூடுமானால் நானும் வருகிறேன்.

மல்லி : நன்றாயிருக்கிறதே! பருப்பில்லாமல் கலியாணமா? எங்களை நடத்துபவரில்லாமல் நாங்கள் என்ன செய்யப் போகிறோம் - என்றாள்.

மறுநாட் காலை ஏழரை மணி சமயமிருக்கலாம். பவானியம்மாள்புரத்து ஜெமீந்தாரது பங்களாவின் வாசலில் உன்னதமாக ஒரு பெட்டி வண்டி வந்துநின்றது. தமயந்தி, மல்லிகா, கிருஷ்ணவேணி ஆகிய மூன்று யௌவன மடந்தையரும் வண்டியிலிருந்து கீழே இறங்கி பங்களாவிற்குள் நுழைந்தனர். ஸகாராம்ராவ் அவர்களை எதிர் கொண்டழைத்தான். அந்தப் பங்களாவையும், பூஞ்சோலையையும், சமுத்திரத்தையும் கண்ட உடனே மல்லிகாவின் மனதில் கோடாநுகோடி எண்ணங்கள் உதித்தன. முன்பு நடந்த விஷயங்கள் யாவும் ஒன்றன் பின் ஒன்றாக அவளது நினைவிற்கு வந்தன. துக்கோஜிராவ் முதலியோர் தன்னைச் செய்கையாலும் சொல்லாலும் வருத்தியதையும், தான் எத்தனையோ இரவுகளில் சமுத்திரக் கரையில் அமர்ந்து துயருற்று அலமந்ததையும், பிறகு வஸந்தராவின் நட்புண்டான பின் தான் அடைந்த அற்ப சந்தோஷங்களையும் பற்றி நினைத்தாள். தான் வஸந்தராவோடு இரகஸியமாகத் தஞ்சைக்குப் புறப்பட்டுப் போனது பற்றி துக்கோஜி முதலியோர் என்ன நினைப்பார்களோ

என்றும், அவர்கள் முகத்தில் எப்படி விழிக்கிறதென்றும் எண்ணிக் கிலேசமடைந்தவளாய், பிரம்மாண்டமான அந்த மாளிகைக்குள் நுழைந்தாள். பெருத்த அரண்மனையைப் போலிருந்த அந்த அழகிய பங்களாவைக் கண்ட கிருஷ்ணவேணி பெரிதும் வியப் படைந்தவளாய், "மல்லிகா! இவைகள் எல்லாம் உண்மையா கவே உன்னைச் சேர்ந்து விட்டனவா?" என்றாள்.

"ஆம்; உண்மையில் அவளுடையவைகள்தான்" என்றாள் தமயந்தி.

அதைக் கேட்ட கிருஷ்ணவேணி திக்பிரமை கொண்டு தன்னை முற்றிலும் மறந்தாள். மூவரும் நெடு நேரம் வரையில் அந்த மாளிகைக்குள்ளும் வெளியிலும் சுற்றிப் பார்த்துவிட்டு, அழகாய் அலங்கரிக்கப் பட்டிருந்த ஒரு சவுக்கண்டியில் இறங் கினர். அவர்களுக்குப் போஜனம் முதலியவை நிரம்பவும் ரம்மிய மாக நடந்தேறியபின், பிற்பகலில் தமயந்தி ஸகாராம்ராவை அழைத்து துக்கோஜிராவையும், அவனது புதல்வியரிருவரையும் வருவிக்கும்படிச் சொல்லி அனுப்ப, கால் நாழிகையில் துக்கோஜி ராவ், கமலா, ஸீதா ஆகிய மூவரும் மாளிகைக்குள் நுழைந்தனர்; அவர்கள் வந்ததை மேன் மாடத்தின் மீதிருந்து கண்ட மல்லிகா சகிக்கவொண்ணாத சஞ்சலமடைந்து, "இவர்களை யார் வரச் சொன்னது?" என்றாள். "நான்தான் வரச் சொன்னேன்; நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று தமயந்தி சொல்லிவிட்டுக் கீழே இறங்கி வந்தாள். வெளியில் ஓர் அறைக்குள் வந்து உட்கார்ந் திருந்த துக்கோஜிராவையும், பெண்களையும் பார்த்துத் தமயந்தி, "ஓகோ; நீர் தான் துக்கோஜிராவோ?" என்றாள்.

துக்கோ : (தமயந்தியைக் கண்டு அதிசயித்து) ஆம்; நான் தான் துக்கோஜி. நீங்கள் யாரென்பது தெரியவில்லையே? வஸந்த ராயருடைய மனைவி.....?

தம : என் பெயர் தமயந்திபாயி. என்னைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். எனக்கும் வஸந்தராவுக்கும் சிநேகிதம். இங்கே ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் அதைத் தெரிந்து கொள்ள பிரியப்படுவீர்கள் என்று உங்களை அழைத்து வரச் சொன்னேன். நீர் வஸந்தராயருடைய பழைய சிநேகிதரல்லவா?

சமீபகாலத்தில் உங்களிருவருக்கும் கொஞ்சம் மனஸ்தாபம் கூட ஏற்பட்டது போலிருக்கிறது.

துக்கோ : ஆம், ஆம். என்னவோ கால வித்தியாசத்தினால் அவருக்கும் எனக்கும் மனஸ்தாபம் உண்டாயிற்று. என் வீட்டில் அநாதையாய் வளர்ந்து வந்த ஒரு பெண்ணின் துர் நடத்தையால் கொஞ்சம் மனஸ்தாபம் ஏற்பட்டது.

தம : அவளுடைய பெயர் என்ன? யாரோ மல்லிகா என்றார்களே அவள்தானே?

துக்கோ : ஆமாம்; அந்தத் துஷ்டைதான். அவளை நாங்கள் ஜாதியை விட்டு விலக்கி விட்டோம். அவளுக்கும் எங்களுக்கும் இனி யாதொரு சம்பந்தமும் இல்லை.

தம : ஆம். அதைப் பற்றி நானும் கேள்விப்பட்டேன். நீர் செய்தது சரியான காரியம்.

துக்கோ : ஆனால் இது வஸந்தராவுக்கு சரியாகப் படுமோ படாதோ!

தம : அதை அவர்தான் சொல்ல வேண்டும்.

கமலா : அவர் வந்திருக்கிறாரா?

தம : இன்னம் வரவில்லை.

துக்கோ : ஆனால் அவருடைய வருகையை எதிர்பார்க்கிறீர்களோ? அவரைப் பார்க்க என்னுடைய குழந்தைகள் நிரம்பவும் ஆசைப்படுகிறார்கள். அவர் தம்முடைய ஜெமீனை விட்டுப் போய் அநேக மாதங்கள் ஆகின்றன அல்லவா?

தம : ஆம், ஆம். இருக்கும், இருக்கும். இதைப் பற்றிச் தெரிவிக்கும்பொருட்டே நான் உங்களை வரவழைத்தேன். இந்த ஜெமீன் இனிமேல் அவருடையதல்ல. இதற்கு முன்னும் அவருடையதல்ல. கடைசியாக பரசுராம பாவா எழுதிய சாஸனம் அகப்பட்டு விட்டது. அதன்படி வஸந்தராவுக்கு ஒன்றுமில்லாமல் போய்விட்டது.

துக்கோ : என்ன ஆச்சரியமிது! அவருக்கு ஒன்றுமில்லாமலா போய்விட்டது? யாருக்குப் போய்ச் சேர்ந்தது?

தம : பரசுராம பாவாவின் பேர்த்தி ஸஞ்சலாக்ஷி என்பவளைச் சேர்ந்து விட்டது.

துக்கோ : என்ன! ஸஞ்சலாக்ஷியா? அந்தப் பெயரையே நான் கேட்டதில்லையே!

தம : ஆம். கேட்டிருக்க மாட்டீர்கள். ஆனால், அவள் நிரம்பவும் நல்லவள்; அவளைப் பார்த்தால் நீங்கள் அவளிடத்தில் நிரம்பவும் பிரியப்படுவீர்கள்.

துக்கோ : அப்படியா! நிரம்ப சந்தோஷம்! எங்களுக்கு இந்த ஜெமீந்தாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எவராயிருந்தாலும் அவர்களை நாங்கள் தெய்வத்தைப் போல பாவிப்போம். அவர்களை விட்டுப் பிரிவதே வழக்கமில்லை.

தம : அப்படியானால் நான் போய் ஸஞ்சலாக்ஷியை அழைத்துக் கொண்டு வருகிறேன். ஆனால், நீர் சொன்ன இன்னொரு விஷயம் நிச்சயந்தானா? ஸஞ்சலாக்ஷியிடத்தில் பழக்கமாயிருக்க வேண்டுமானால், துர் நடத்தையுள்ள மல்லிகா முதலியோரை இனி நீங்கள் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாது. அது உங்களுக்குச் சம்மதமா?

ஸீதா : அதைப் பற்றி இனி சந்தேகமென்ன?

கமலா : அந்த விபசாரியின் முகத்தில் இனி நாங்கள் விழிப் போமா? ஒருநாளும் இல்லை. அதுவும் தவிர, இந்த ஜெமீனை ஆள ஒரு சீமாட்டி வந்திருக்கையில், அந்தக் கழுதை எங்கள் வீட்டில் அடி வைக்கவும் விட மாட்டோம்.

தம : நீங்கள் சொல்வதைக் கேட்க எனக்கு நிரம்ப ஸந் தோஷமாக இருக்கிறது. நீங்கள் மல்லிகாவினிடத்தில் சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பதை ஸஞ்சலாக்ஷி கேள்விப்பட்டால், உங்கள் மேல் அருவருப்புக் கொள்வாள். ஆகையால், சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள். நான் போய் அவளை அழைத்துக் கொண்டு வருகிறேன் - என்று சொல்லிய வண்ணம் தமயந்தி அவர்களை விட்டுச் சென்றாள்.

கமலா : இப்போதுதான் என்னுடைய மனம் குளிர்ந்தது. எங்களை அலட்சியம் செய்த வஸந்தராவின் வாயில் மண் விழுந்ததா! ஒழியட்டும்; எனக்குப் பரமாநந்தமாயிற்று.

ஸீதா : மல்லிகாவைக் காட்டிலும் நாம் என்ன அழகில் குறைந்து விட்டோமா? அவள்மேல் மாத்திரம் அவனுக்கு அவ்வளவு பைத்தியம் என்ன? நம்மிடம் வெறுப்பு என்ன? துஷ்டனுக்கு இது வேண்டும். எவ்வளவு சீக்கிரமாக வந்ததோ அவ்வளவு சீக்கிரமாக எல்லாம் ஒழிந்து போய் விட்டது - என்றாள்.

அடுத்த நிமிஷத்தில் யாரோ ஒருவர் வந்த காலடியோசை உண்டாயிற்று; உச்சி முதல் உள்ளங்கால் வரை வைரங்களையும், உயர்ந்த பட்டாடையையும் அணிந்து கொண்டவளாய் பளபள வென்று மின்னிய மேனியினளாய் தெய்வ ரம்பையைப் போல் மல்லிகா அவர்களுக்கெதிரில் வந்து நின்றாள். நின்றவள் ஒரு விதமான சஞ்சலத்தையும், புன்சிரிப்பையும் காட்டிய முகத்தோடு, கமலாவிடம் நெருங்கி அவளை அணைத்துக் கொள்ளும் எண்ணத்தோடு ஆவலாகவும் அன்பாகவும் தனது கைகளை விரித்தாள்.

அவளைக் கண்ட துக்கோஜிராவ் திடுக்கிட்டுத் திகைத்துப் பின் வாங்கினான். பெண்கள் இருவருக்கும் கோபத்தினாலும் பொறாமையினாலும் முகம் சுருங்க, கண்கள் சிவந்தன. அவள் மீது விழுந்து அவளைக் கடித்துத் தின்று விட நினைப்பவரைப் போல மூவரும் குரூரமாக அவளை நோக்கித் துடிதுடித்து உருட்டி விழித்தனர். அதைக் கண்ட மல்லிகா, ''என்ன கமலா! என்னோடு பேசக் கூட மாட்டீர்கள் போலிருக்கிறதே!'' என்றாள். உடனே துக்கோஜிராவ் கனைத்துக் கொண்டு, ''மல்லிகா! காரியம் இவ்வளவு தூரத்துக்கு வந்த பிறகு நான் சும்மா இருப்பது பிசகு. உண்மையைச் சொல்லி விடுகிறேன்; கேள். நீ என்ன பாசாங்கு வேஷம் போட்டுக்கொண்டு இந்த மாளிகைக்கு வந்திருக்கிறாயோ அது எங்களுக்குத் தெரியவில்லை; அது எப்படி இருந்தாலும் நீ செய்ததை இந்த ஊரில் எவரும் மறக்கவில்லை. காரியம் அப்படி நடந்த பிறகு உனக்கும் எங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க நியாயமில்லை. நாங்கள் உன்னோடு பேசுவதும் தகாது'' என்றான்.

அந்தச் சமயத்தில் தமயந்தியும், அவளுக்குப் பிறகு ஸகாராம் ராவும் உள்ளே நுழைந்தனர்.

தம : (தமயந்தி அவர்களை அருவருப்போடு பார்த்து) ஐயா! துக்கோஜிராவே! அடீ அருமைப் பெண்களா! இந்த அபூர்வ மான வேடிக்கையை நீங்கள் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள். நீங்கள் நிரம்பவும் அன்போடு பாதுகாத்து வளர்த்த அநாதையான அந்தப் பெண்ணே இந்த ஜெமீனுக்கு இப்போது எஜமானியாக வரப் போகிறாள் என்று நீங்கள் கனவிலும் நினைத்திருக்க மாட்டீர்கள் - என்றாள்.

துக்கோ : (அதைக் கேட்டு) என்ன ஆச்சரியம்! இவளா ஜெமீனுக்கு சொந்தக்காரி? – என்று திகைப்பும் வியப்பும் அடைந்து வாயைப் பிளந்தான்.

கமலா : இவளா ஸஞ்சலாக்ஷி!

ஸீதா : மல்லிகாவா ஸஞ்சலாக்ஷி!

தம : ஆம்; இவளே பழைய ஜெமீந்தாரின் பேர்த்தி! இந்த சமஸ்தானத்துக்கும் எங்களுக்கும் இந்த ஊராருக்கும் இனி இவளே எஜமானி! சாஸனம் அகப்பட்டு, இவளே இதன் சொந்தக்காரி என்பதும் ருஜுவாய்விட்டது - என்றாள்.

அதைக்கேட்ட துக்கோஜிராவ் முதலிய மூவரும் திகைத்து, ஆத்திரமும் அவமானமும் அடைந்து, செய்வதின்னது என்பதை அறியாமல் பல்லிளித்து நின்றனர். அப்படி இரண்டொரு நிமிஷம் சென்ற பின் துக்கோஜிராவ் மெதுவாக, "இதென்னவோ சூதாகத் தான் இருக்கிறது. எனக்கு ஒன்றும் நம்பிக்கைப் படவில்லை" என்றான்.

தம : நீர் சொன்னது சரியான வார்த்தை; உண்மையான சிநேகிதர் யார் என்பதையும் பகட்டான சிநேகிதர் யார் என்பதையும் பரீட்சித்துப் பார்க்கும் பொருட்டு செய்யப்பட்ட சூதுதான் இது. இந்த சூதைப் பற்றிய விவரங்களை நீர் நன்றாக அறிந்துகொள்ள வேண்டுமானால், இதோ நிற்கிற ஸகாராம்ராவ் தெரிவிப்பார். உங்களை இந்தப் பங்களாவின் வாசலில் உடனே

கொண்டு போய் விடும்படி உத்தரவு செய்திருக்கிறோம். உங்களை வெளியில் அழைத்துக் கொண்டு போகும்போது இந்த விவரங் களைத் தெரிவிப்பார் - என்றாள்.

அதைக் கேட்ட மூவரும் வெட்கித் தலை குனிந்தவராய் மெல்ல எழுந்து வெளியில் போய்விட்டனர். அவர்கள் தங்களது ஆயுட் காலத்தில் அந்த ஐந்து நிமிஷ நேரத்தில் அடைந்த மனோ வேதனையையும், அவமானத்தையும் ஒருநாளும் அடைந்தது இல்லை.

30–வது அதிகாரம்

இறந்தவர் பிழைத்தது எங்ஙனம் சொல்வது!

கிருஷ்ணவேணிக்கு அன்றைய பகற் பொழுது கால் நாழிகையைப் போலக் கழிந்து விட்டதாயினும் மல்லிகாவிற்கு அது ஒரு யுகம்போல இருந்தது; தமயந்தியோ தான் துக்கோஜி ராவ் முதலியோரை அவமானப்படுத்தியதைப் பற்றி பெரிதும் குதூகலமடைந்தவளாய் மிகுதியிருந்த நாடகக் காட்சியையும் விரைவில் நடித்து விட வேண்டும் என்னும் ஆவலோடிருந்தாள்.

அன்றைய மாலையில் தஞ்சையில் இருந்து வந்த ஒரு பெட்டி வண்டி அந்த மாளிகையின் வாசலில் நின்றது. அதில் வஸந்தராவும், மோகனராவும் கீழே இறங்கி மாளிகைக்குள் நுழைந்தார்கள்.

மோக : (புன்சிரிப்போடு) தாங்கள் இவ்வளவு பெருத்த ஐசுவரியத்தை எல்லாம் கொடுத்து விடப் போகிறவரைப் போலவே காணப்படவில்லையே! கலியாண மாப்பிள்ளையைப் போல நிரம்பவும் சந்தோஷமாக இருக்கிறீர்களே!

வஸ : என்னுடையது அல்லாத பொருளை நான் எதற்காக அநாவசியமாக வைத்திருக்கிறது? ஐசுவரியம் வந்ததனால் எனக்கு ஏதாவது சந்தோஷம் இருந்தால் அல்லவா, அது போவதைப் பற்றி கவலை உண்டாகும். எனக்கு இனி தெய்வ லோகத்திலிருந்து சங்கநிதி பதுமநிதி இரண்டுமே கிடைப்பதனாலும் சந்தோஷம் உண்டாகப் போகிறதில்லை. என்னுடைய கதையைத் தான் நான் முன்னமேயே தெரிவித்திருக்கிறேனே! எப்போது நான் என்னுடைய பிராண சுந்தரியை இழந்தேனோ, அப்போதே இந்த உலகம் என்னுடைய கண்ணுக்குப் பாழாய்ப் போய் விட்டது. எங்கே பார்த்தாலும் அந்தப் பெண்மணியின் உருவமே மயமாகக் காணப்படுகிறது. இந்தச் சமுத்திரக் கரையும், பூஞ்

சோலையும், தோட்டமும் மாளிகையும் ஒவ்வொரு விஷயத்தை நினைப்பூட்டுகின்றன. என் மனசிலும் கண்ணிலும் நினைவிலும் சதாகாலமும் குடிகொண்டு தாண்டவமாடும் அந்தப் பேடன்னத்தை ஒருநொடியாவது நான் மறக்கப் பார்க்கிறேன். அவளது பித்தமே முற்றிப் போய்விட்டது. இந்தக்கொடிய விஸனக் குன்றைச் சுமந்து நான் இனி எப்படி என் வாழ்நாட்களைக் கழிக்கப் போகிறேன்! மித்திர ரத்தினமே! என்னுடைய விசனங்களை எல்லாம் சொல்லி, தங்களை உபத்திரவிப்பதை மன்னிக்க வேண்டும் - என்று மோகனராவைப் பார்த்து விசனத்தோடும், புன்சிரிப்போடும் மொழிந்தார்.

மோ : தாங்கள் சொல்வதைப் பார்த்தால், அவள் நிரம்பவும் நற்குணவதியாகவும், தங்களிடத்தில் ஆழ்ந்த பிரேமை கொண்டவளாகவும் இருக்க வேண்டும்.

வஸ : இந்தப் பதினான்கு லோகத்திலும் அவளுக்குச் சமமான ஸ்திரீ இருப்பாளா என்பது சந்தேகமே. அப்படிப்பட்ட பத்தரை மாற்றுப் பசுந்தங்கம்.

மோக : ஆனால் அவள் இறந்து போனது நிச்சயந்தானா?

வஸ : அதைப் பற்றிச் சந்தேகமென்ன? அவளுடைய பிரேதத்தை நான் என்னுடைய கண்ணால் கண்டேன். ஆனால்! என் கண் முன் நிற்கிறாளே என் அருமைக் கண்ணாட்டி! இந்த மாளிகை முதலியவை எனக்கில்லாமல் போவதே நல்லது. இந்த இடங்களைப் பார்க்கும்போதெல்லாம் அவளுடைய நினைவு உண்டாகி, என்னை வதைக்கிறது – என்றார்.

அவ்வாறு இருவரும் உரையாடியவண்ணம் மாளிகைக்குள் நுழைந்தனர். சமுத்திரத்தைப் பார்த்த பக்கத்தில் அவர்கள் இருவருக்கும் இரண்டு அழகிய விடுதிகள் தயார் செய்யப்பட்டிருந்தன. இருவரும் அவற்றில் இறங்கினர். உடனே ஸகாராம்ராவ் வஸந்தராவிடம் போய் நிரம்பவும் விசனமடைந்தவனைப் போலப் பாசாங்கு செய்து, ''எஜமான்களே! தங்களுக்கு இவைகள் இல்லாமல் போவது எனக்கு நிரம்பவும் விசனமாக இருக்கிறது! தங்கள் விஷயத்தில் கிழவர் நிரம்பவும் அநியாயம் செய்து விட்டார்'' என்றார்.

அதைக்கேட்ட வஸந்தராவ், ''அதனால் எனக்கு விசனமே இல்லை. நீர் புதிய எஜமானியிடத்தில் நல்ல மாதிரியாக நடந்து நற்பெயரெடுக்க வேண்டும்; அதுதான் நான் உமக்குச் சொல்லக் கூடியது'' என்றார்.

அந்தச் சமயத்தில் மோகனராவ் அங்கு வந்து, ''இன்று இராப் போஜனம் ஆன பிறகே ஸஞ்சலாக்ஷி தங்களைப் பார்க்க முடியு மாம். ஆகையால், தாங்கள் சிறிது நேரம் தோட்டத்தில் உலாவி னால், தங்களுடைய விசனத்துக்கு அது ஓர் ஆறுதலாயிருக்கும்'' என்றார்.

வஸ : தாங்கள் உலாவ வரவில்லையா?

மோக : நான் அவசரமான சில கடிதங்கள் எழுத வேண்டும்; அதனால் வரக்கூடவில்லை. மன்னிக்க வேண்டும் - என்றார்.

வஸந்தராவ் அதற்கிணங்க, மோகனராவ் தமது விடுதிக்குப் போய்விட்டார். ஸகாராம்ராவும் ஏதோ காரியமாக வெளியில் போய் விட்டான்.

அதன் பிறகு வஸந்தராவ் எழுந்து சமுத்திரக் கரையை நோக்கி மெல்ல நடக்க ஆரம்பித்தார். அவர் படித்துறையை அடைந்தவுடன், அவரது மனதில் மல்லிகாவின் நினைவும், உருவமும் தோன்றி அகலாமல் வதைக்க ஆரம்பித்தன. அந்த இடத்தில் அவள் தம்மோடு கிள்ளைப்போல் கொஞ்சிப் பேசிய மொழிகளும் அவளது உல்லாஸமும் அவள் இறந்த பிறகு எல்லாம் ஒடுங்கிக் கிடந்த பரிதாபகரமான நிலைமையும் மின்னல் தோன்றுவதைப் போல அவரது மனதில் தோன்றின. ''அடி என் ஆசைக் கிளியே! என் ஆருயிர்க் கோமளாங்கி! இந்த உலகில் எனக்கு இனி யாதொரு கதியும் இல்லாவிட்டாலும் இனி அடுத்த ஜென்மத்திலாவது, நான் உன்னைச் சந்திப்பேன் என்கிற ஒரு நம்பிக்கை மாத்திரம் உண்டாகிறது. இனி நான் நீண்ட காலம் உலகத்தில் இருப்பது துர்லபம். கண்மணி! கவலைப்படாதே; சீக்கிரமாக உன்னிடம் வந்து சேர்கிறேன்'' என்று தனக்குத்தானே மொழிந்து கொண்டு பலவாறு சிந்தனை செய்தவண்ணம் விசனக் கடலில் மூழ்கி மெய்ம்மறந்தவராய்ப் படித்துறையின் மேல்

உட்கார்ந்து தோட்டத்தைப் பார்த்தவண்ணமிருந்தார். தமது கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடிக் கொண்டிருந் ததை அவர் கவனிக்கவே இல்லை.

அவ்வாறு அரை நாழிகை கழிய, அவருக்கு நேராக, சற்று தூரத்தில், ஒரு மங்கையின் வடிவம் ஸஞ்சாரம் செய்ததாக அவரது மனதில் பட்டது. அது மல்லிகாவின் வடிவத்தைப் போலவே இருந்தது. உயரம், சாயல், நிறம், யௌவனப் பருவம், தளர்ந்த நடை முதலிய யாவும் அவளுடையவை போலவேயிருந்தன. அது மானஸீகமான பொய்த்தோற்றம் என்று நினைத்த வஸந்தராவ் அதை அலட்சியமாக நோக்கியவண்ணம் இருந்தார். ஆனால், அவரது ஹிருதயம் மாத்திரம் படபடவென்று அடித்துக் கொண் டது. அதை உற்று நோக்கியதில், அவரது மூச்சு நீண்ட நேரத்திற் கொருமுறை வெளிவந்தது. அந்த வடிவம் படித்துறையை நோக்கி மெல்ல நடந்து வந்ததாகக் காணப்பட்டது. அவ்வாறு, அது அருகில் நெருங்க நெருங்க, அவரது வியப்பும் ஆற்றலும் மலைபோலப் பெருகின. அந்த வடிவம் கடைசியாக படித் துறைக்கு இரண்டு மூன்று கஜ தூரத்தில் நின்று கீழே குனிந்து ஒரு ரோஜா மலரைப் பறித்து நாசியில் மோந்ததாகத் தெரிந்தது. அதுகாறும் மறைவிலிருந்த வஸந்தராவ் எழுந்து திடீரென்று பாய்ந்து போய், "அடீ என் உயிர் நிலையே! என் மல்லிகா! என் பாக்கியமே!" என்று அவளை வாரியெடுத்து இறுக அணைத்துக் கொண்டார். அவள் திடுக்கிட்டு அஞ்சி வீரிட்ட சப்தம் செய்து தனது கையிலிருந்த புஷ்பத்தை கீழே போட்டு விட்டு தனது இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டாள். முதலில் யாரோ அன்னியன் தன் மீது பாய்ந்து தன்னைத் தூக்கினான் என்பதை மாத்திரம் அறிந்தாள் அன்றி, அது வஸந்தராவ் என்பதை அறிய வில்லை. அவள் மேன்மேலும் கூச்சலிட நினைத்தாள். அதற்குள் அவரது குரல் அவளது மனதில் சந்தேகத்தை உண்டுபண்ணவே, அவள் கூச்சலிடாமல் தனது கண்ணை மெதுவாகத் திறந்து பார்த் தாள். உடனே அவளது முகம் மாறுபட்டது. தேகம் காற்றில சையும் மாந்தளிரைப் போல ஆடியது. அவர் அதை மல்லிகாவின் பொய்த் தோற்றம் என்றே அப்போதும் நினைத்தாராயினும்,

அவள் மீது கொண்ட ஆசையினால் உண்டான பைத்தியத்தினால், தம்மை மறந்து அந்த உருவத்தை அவர் அணைத்துக் கொள்ளச் சென்றார்; அது உயிருடனிருந்த மல்லிகாவைக் காட்டிலும் அதிக அழகாயும் இன்பகரமாகவும் வசீகரமாகவும் இருந்ததைக் காணவே, அவரது வியப்பும் திகைப்பும் முன்னிலும் கோடி மடங்கு அதிகரித்தன. ''ஆகா! என்ன ஆச்சரியம்! எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா! நீ யார்? உயிருடன் இருப்பவளா? நீ என்னுடைய ஆசைக் கண்ணாட்டியைப் போல இருக்கிறாயே! நீ உண்மையில் அவள்தானா?'' என்ற கெஞ்சிக் கொஞ்சி வினவினார்.

அப்போது மல்லிகா நிமிர்ந்து ஒருவித அருவருப்போடு பார்த்து, ''நான் மல்லிகாதானே! சந்தேகமென்ன?'' என்றாள்.

வஸ : இல்லை, இல்லை. என்னை ஏமாற்றாதே! இதென்ன இந்திரஜாலமாயிருக்கிறதே! என்னுடைய பிரிய சுந்தரி மல்லிகா இறந்து போய்விட்டாளே! - என்று வியப்போடு கூறினார்.

அதற்குள் மல்லிகா தன்னை மெதுவாக அவரது ஆலிங்க னத்திலிருந்து விடுவித்துக் கொண்டாள். அந்த க்ஷணத்தில், அவளது மனதில் கோடானுகோடி எண்ணங்கள் தோன்றின. அவர் தனது விஷயத்தில் செய்ய நினைத்த வஞ்சகமெல்லாம் நினைவுக்கு வந்தது.

உடனே மல்லிகா, ''என்ன வேடிக்கையாக இருக்கிறது! நானாவது இறக்கவாவது! தாங்கள் வஞ்சிக்க எண்ணிய மல்லிகா தானே நான்! ஒன்றையும் அறியாதவர்களைப் போலப் பேசுகிறீர் களே!'' என்றாள்.

வஸ : (தமது தலையில் கையை வைத்துக் கொண்டு குழம்பிய முகத்தோற்றத்தோடு) இறக்கவில்லையா? இது விந்தையாக இருக்கிறதே! இதென்ன கனவா! அல்லது உண்மை தானா? எங்கே! உன்னை இன்னொரு முறைதொட்டுப் பார்க்கி றேன்! எங்கே! நீ இன்னொரு வார்த்தை சொல் - என்று பலவாறு பிதற்றித் தத்தளித்தார். அதைக் கண்ட மல்லிகாவின் கோபம் சிறிது தணிய, அவரது விஷயத்தில் ஒருவித இரக்கம் தோன்றியது.

மல்லி : நானே மல்லிகா! நானே ஸஞ்சலாக்ஷி; நீங்கள் இங்கு வந்ததும் என்னைப் பார்க்கவே; நான் உயிரோடுதான் இருக்கிறேன் - என்றாள்.

அதைக் கேட்ட வஸந்தராவின் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவர் கரைகடந்த ஆவலோடு பாய்ந்து திரும்பவும் அவளை இறுகக் கட்டி அணைத்துக் கொண்டார். ஒரு நிமிஷம் மல்லிகா அதைத் தடுக்க வல்லமையற்று நின்றாளாகிலும், உடனே திமிறி தன்னை விடுவித்துக் கொண்டு கோபத்தோடு, ''என்ன இது? முன்னே செய்ய நினைத்த மோசத்துக்கு இது வட்டியா! போதும் அருமை; காரியம் இவ்வளவுக்கு வந்த பிறகு தாங்கள் என்னைத் திரும்பவும் தொட்டு இப்படி அவமரியாதைப் படுத்துவீர்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை'' என்றாள்.

வஸ : ஆகா! என்ன வார்த்தை! மோசம்! அவமரியாதை என்ன! என்னிடத்தில் நீ இப்படிப் பேசுகிறாயா? அடீ கண்மணி! என் தங்கமே! என் மனம் பதைக்கிறது! சிரம் சுழலுகிறது! என் உயிர் போய்விடும் போலிருக்கிறது! ஹிருதயம் வெடித்து விடும் போலிருக்கிறது! இனி என்னை இப்படி நடத்தினால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும் - என்றார்.

மல்லி : நான் இந்தப் பங்களாவுக்கு இதற்காகவா வந்தேன்? நான் முன்னிருந்த ஜெமீந்தாரின் பேர்த்தி மல்லிகா; என்னுடைய சொத்துக்களை ஒப்புக்கொள்ள வந்தேன். தாங்களும் அதன் பொருட்டே இங்கே வந்தீர்கள். அதைவிட்டு வேறு விதத்தில் தாங்கள் பரிகாசம் செய்து கொண்டிருப்பது அழகல்ல. என் பேரில் எழுதப்பட்ட சாஸனம் இதோ இருக்கிறது. அதைப் பார்க்கலாம்; இனி நாம் வந்த காரியத்தை முடிப்பதன்றி, வேறு எவ்விதச் சொந்தமும் பாராட்டுவது சரியல்ல – என்று கடுமையாகப் பேசியவண்ணம் தனது மடியிலிருந்த சாஸனத்தை எடுத்து அவரிடம் காட்டினாள்.

வஸ : ஆகா! மல்லிகா! நீதானா இதன் சொந்தக்காரி! அடி என் மாணிக்கமே! நீ ஏன் என்னிடத்தில் முகமறியாத அந்நிய

மனுஷியைப்போல் ஒரு மாதிரியாகப் பேசுகிறாய்? நான் உனக்கு என்ன வஞ்சகம் செய்தேன்?

மல்லி : (ஆத்திரமாக) ஓகோ! செய்ய நினைத்ததை இதற்குள் மறந்து விட்டீர்களா? நீங்கள் மறந்தாலும் நான் ஒரு நாளும் மறப்பேனென்று நினைக்க வேண்டாம். தாங்கள் செய்த வஞ்சகத்துக்குப் பதில் பழிவாங்க நான் ஒரு காரியம் செய்ய உத்தேசிக்கிறேன். இந்தப் பத்திரத்தின்படி தங்களுடைய ஐசுவரியம் எல்லாம் என்னைச் சேர வேண்டும். என் விஷயத்தில் மோசம் செய்ய நினைத்த மனிதரிடத்திலிருந்து ஒரு துரும்பைக் கூட வாங்கிக் கொள்ள எனக்குப் பிரியமில்லை. இதோ சாஸனம் இருக்கிறது. இதையும், ஐசுவரியம் யாவற்றையும் தாங்களே எடுத்துக் கொள்ளலாம். எனக்கு ஒன்றும் தேவையில்லை. இந்த ஜெமீனுக்கு சொந்தமான ஒரு செப்புக் காசைத் தொட்டாலும் அது என் கையையும் மனசையும் கொளுத்தி விடும்; நம்பிக்கை துரோகம் செய்த மனிதருடைய கைபட்ட சொத்தைக் கையால் தொடுவதும் பெருத்த பாவம்; தவிர, அதைக் கொடுத்தவருடைய நினைவும் அடிக்கடி வந்து வருத்துமாதலால், எனக்கு ஒன்றும் தேவையில்லை - என்று சாஸனத்தை எடுத்துக் கீழே எறிந்தாள். வஸந்தராவ் திகைத்து, ''கண்மணி! மல்லிகா! என்னை ஏன் இப்படித் தூஷிக்கிறாய்? ஒரு புருஷன், ஸ்திரீயை எவ்வளவு அதிகமாகக் காதலிக்கக் கூடுமோ அதைக் காட்டிலும் விசேஷமாக நான் உன்மேல் பிரேமை கொண்டிருக்கிறேன்; சதாகாலமும் என் இருதயத்தில் உன்னை வைத்துப் பூஜித்து வருகிறேன்;நீ இல்லாமல் இந்த உலகமே எனக்குப் பாழாய்விட்டது. என்னுடைய உயிரைக் காட்டிலும் நீயே எனக்கு விசேஷமென்று மதிக்கிறேன். அப்படி யிருக்க, என்னை நீ இவ்விதம் இகழ்வது தருமமல்ல'' என்றார்.

மல்லி : ஓகோ! நான் சொல்வதா தருமமல்ல? நல்ல வேளையாக, சமயத்தில் தங்களுடைய மோசக் கருத்தையும் வஞ்சக குணத்தையும் ஒருவர் வெளியிட்டபடியால் தப்பினேன். இல்லா விட்டால், என் கதி என்ன ஆயிருக்குமோ! என்னை வஞ்சிக்க எண்ணவில்லை என்று நீங்கள் சுவாமி சாட்சியாக மறுக்க முடியுமா?

வஸ : ஹா! ஈசுவரா! இதுவும் உன் சோதனையா? இதுவும் உன் திருவுளக் கூத்தா! - அடி சுந்தரி! உன் மேல் குற்றமில்லை. என்னுடைய கால வித்தியாசம். உன்னை வஞ்சிக்கும் எண்ணத்துடன் நான் உன்னை அழைத்துக் கொண்டு போனதாகவா நினைத்துக் கொண்டிருக்கிறாய்? அது தவறான எண்ணம் என்று நான் எப்படி உனக்கு ருஜுப்படுத்தப் போகிறேன். உன் மனம் திருப்தி அடையும்படி அதை நான் எப்படி எடுத்துச் சொல்லப் போகிறேன்! (சிறிது யோசனை செய்து) சரி; சரி; நல்ல வேளையாக இதோ ஒரு காகிதமிருக்கிறது; இதைப் பார். பார்த்த பிறகாவது இந்தத் தவறான அபிப்பிராயம் மாறாதா; பார்க்கலாம் - என்று தமது சட்டைப் பையில் வைத்திருந்த ஒரு காகிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினார்.

மல்லிகா மிகுந்த ஆவலோடு அதை வாங்கிப் படித்துப் பார்த்தாள். அது அவர்களது கலியாணத்திற்கு தஞ்சையில் அவரது மாளிகையின் வாசலில் கொட்டகைப் பந்தல் போட்டுக் கொள்ளும்படி முனிசிபாலிடியாரால் கொடுக்கப்பட்டிருந்த அநுமதிச் சீட்டு; மல்லிகா அதன் தேதியை பார்த்தாள். தானும் அவரும் இரகசியமாக தஞ்சைக்கு வந்த காலத்திற்கு அது முற்றிலும் பொருத்தமாக இருந்தது. அதைக் கண்டவுடன், அவளது முகம் சடக்கென்று மாறியது. அவளது கோபம் எல்லாம், சூரியனைக் கண்ட இருளைப்போல ஒரே நொடியில் பறந்தது. மிகுந்த அச்சமும், வணக்கமும், கிலேசமும், கரைகடந்த பிரேமையும் அவளது மனதில் பொங்கி எழுந்து அவளை மேற்கொண்டன. வெயில் காலத்தில் நீர் வற்றியிருக்கும்போது, தீப்பொறியைக் கக்கும் மணல் நிறைந்த ஆற்றில் திடீரென்று பெருத்த வெள்ளம் தோன்றிப் பொங்கி எழுந்து கரை புரண்டு போவதைப் போல அவரிடம் அவள் கொண்ட காதல் வெள்ளம் சுரந்து வழிந்தது. அவளது தேகம் துடிதுடித்தது. வார்த்தைகள் திக்கிப் போயின; மனம் கொதித்தது. தான் அவரது விஷயத்தில் பெருத்த அபராதியானதை நினைக்க அவளது தேகம் குன்றியது. அவள் வெட்கித் தலை குனிந்தாள். கண்கள் கலங்க, கண்ணீர் மளமள வென்று ஊற்றெடுத்து முத்துச் சரங்களைப் போலக் கன்னங்களில் வழிந்தது.

அதைக் கண்ட வஸந்தராவ் தத்தளித்தவராய், ''என் அன்பே! பார்த்தாயா! உன்னை வஞ்சித்தது நானா! உனக்கு ஒரு நிமிஷ நேரம் துன்பம் வரக்கூடியதாயிருந்தால் அதை விலக்கும் பொருட்டு என்னுடைய உயிரையும் கொடுப்பேனே! நானா உனக்குத் தவறு செய்பவன்! நீயே என் விஷயத்தில் தவறாக நடந்தாய்?'' என்று இளகி உருகித் தெரிவிக்க, அதைக் கேட்ட மல்லிகா காம்பொடிந்த மலரைப்போல அவரது மார்பின் மீது அப்படியே சாய்ந்து விட்டாள். வெட்கமும் துக்கமும் அழுகையும் பொங்கி எழுந்தன! விம்மி விம்மி அவள் அழுதாள். ''ஆம்; மகா பாவியாகிய நான்தான் தங்கள் விஷயத்தில் பெருத்த பிழை செய்துவிட்டேன். அதன் பொருட்டு நான் எத்தனையோ வகைகளில் தண்டனைகளும் அடைந்து விட்டேன். இனி தாங்களே என் கதி! இத்தனை நாட்கள் தங்கள் மனத்தை வதைத்த குற்றத்தையெல்லாம் மறந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். **ஆறுவது சினம்** என்று மூத்தோர் சொன்னதை, தாங்கள் இந்தச் சமயத்தில் கடைப்பிடிக்க வேண்டும்'' என்ற வார்த்தைகள் அவளது வாயிலிருந்து நிரம்பவும் தடுமாற்றத்தோடு வந்தது. அதைக் கேட்ட வஸந்தராவ் மெய்ம்மறந்து ஆவேசமடைந்து அவளை அப்படியே அணைத்து முத்தமிட்டு, ''ஆ! என் சீமாட்டி! விதி வலி யாரை விட்டது! நம்முடைய கால வித்தியாசமே இப்படி நம்மைப் பிரித்து விட்டது. துன்புற்றபின் இன்பம் அடைவதே தெய்வத்தின் இன்னருள் என்றே நாம் எண்ண வேண்டும். போனதுபோகட்டும். இனி இதைப் பற்றி நீ வருந்த வேண்டாம். நீ விசனப்படுவதைக் காண என் மனம் பதைக்கிறது'' - என்று தேற்றி, அவளை விட்டுத் தாம் பிரிந்த பிறகு தாம் அடைந்த துன்பங்களையும் துயரங்களையும் விரிவாக எடுத்துக் கூறினார். அதைக் கேட்ட மல்லிகா துன்பக் கடலில் மூழ்கிப் பாகாய் உருகி, தான் பீமராவின் வலையில் அகப்பட்டது, மோகனராவ் நெருப்பிலிருந்து தனது உயிரைக் காப்பாற்றியது, தமயந்திபாயி மோகனராவ் ஆகியோர் பீமராவின் வஞ்சகங்களை வெளிப் படுத்தியது முதலிய வரலாறுகளைத் தெரிவித்தாள். அதைக் கேட்ட வஸந்தராவ் பெரிதும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்

தார். அதன் பிறகு அவ்விரு காதலரும் நெடுநேரம் வரையில் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசி, பேரானந்தத்தில் மூழ்கி இருந்தனர்.

★ ★ ★

இரவு எட்டு மணி நேரமாயிற்று. அவர்கள் மாளிகைக்குத் திரும்பி வராததைக் கண்டு பலவாறு சந்தேகித்த தமயந்தி, கிருஷ்ணவேணி, மோகனராவ் ஆகிய மூவரும் அவர்களைத் தேடிக்கொண்டு வந்து படித்துறையில் அவர்களைக் கண்டு அவர்கள் இருவரும் இன்ப சாகரத்தில் மூழ்கியிருந்ததை உணர்ந்து பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

மோகனராவ் அப்போது புன்சிரிப்போடு, ''பிரிய மித்ரரே! உங்களிருவருக்கும் உண்டான துன்பங்களுக்கெல்லாம் நானே காரணமானவன். கோனூர் மிட்டாதாருக்கும் தங்களுக்கும் விரோதம் என்பதை அறியாமல், நான் அவருடைய சொல்லை நம்பினேன். அதனால் ஏமாறிப் போய், தங்களைப் பற்றி தவறான அபிப்பிராயம் கொண்டேன்; மல்லிகாவின் புத்தியைக் கலைத்து, சத்திரத்திலிருந்து அவளைப் போகச் செய்தேன். அதனால் தங்கள் இருவருக்கும் பெருத்த துயரத்தையும் துன்பங்களையும் உண்டாக்கி மகத்தான பாவ மூட்டையைக் கட்டிக்கொண்டேன்; நான் அறியாமல் செய்த குற்றத்தை நீங்கள் இருவரும் பெரிய மனசோடு மன்னிக்க வேண்டுகிறேன். அவைகளுக்குப் பரிகாரமாக உங்கள் இருவரையும் திரும்பவும் இப்போது சேர்த்து வைத்து விட்டோம் - என்று உள்ளம் உருக வணக்கமாகக் கூறினார்.

அதைக் கேட்ட வஸந்தராவின் மனமும் கண்களும் கலங்கின. அவர் மோகனராவை நோக்கி, ''எல்லாம் சர்வேஸ்வரனுடைய விளையாட்டல்லவா! மனிதர் செய்யும் காரியமா! இரவுக்குப் பின் பகல் வருவது எவ்வளவு நிச்சயமோ, அப்படியே துன்பத்துக்குப் பிறகு இன்பம் வருவது நிச்சயமல்லவா?'' என்றார்.

அப்போது மல்லிகா, ''துன்பத்திற்குப் பிறகு இன்பம் வந்தால் தான் இன்பத்தின் அருமையும், ருசியும் அதிகரித்துத் தோன்றும். எங்களுடைய ஆபத்துக் காலத்தில் எங்களைக் காப்பாற்றி கடைசி வரையில் உதவி செய்து இவ்வித மேன்மையை அளித்த பரம

நண்பர்களாகிய தங்களை நாங்கள் என்ன விதமாக ஸ்தோத்திரம் செய்தாலும் மனம் அமைதியடையாது. எங்கள் உயிருள்ள வரையில் தங்களை மனசார நினைத்து, வாயாரத் துதிப்பதே நாங்கள் செய்யக்கூடிய கைம்மாறு. அதைத் தவிர வேறு என்ன இருக்கிறது!'' என்றாள்.

★ ★ ★

அதன் பிறகு இரண்டு மாத காலம் கழிந்தது. ஒரு நாள் மாலையில் யௌவன ஸ்திரீ புருஷரிருவர் சென்னைக் கடற்கரையில் மிக்க உல்லாஸமாய் நீரின் ஓரமாக நடந்து கொண்டிருந்தனர். அந்த யௌவன மங்கை இயற்கையில் தந்தத்திற் கடைந்தெடுக்கப்பட்ட பதுமையைப் போல அழகே வடிவாக அமைந்திருந்தனள். அவள் அணிந்திருந்த வைர ஆபரணங்களாலும், பட்டாடைகளாலும் அவளது வனப்பு ஆயிரம் மடங்கு சிறந்து தோன்றியது. அவள் அங்கு சென்ற ஜனங்களின் கண்களுக்கு ஒரு பெருத்த விருந்தாக இருந்தாள். அவளைக் கண்டோர் ஒவ்வொருவரும் தமது மனதில் அவளது இனிய வடிவத்தைப் பதித்துக் கொண்டு சென்றனர். அந்தச் சுந்தர மடமயிலாள் அடிக்கடி கடலை நோக்குவதும், தனது காதலனிடத்தில் குதூகலமாக ஏதோ வார்த்தை ஆடுவதுமாக அன்னம் போல அழகு நடை நடந்தாள். அவளோடு நடந்த மன்மத புருஷன் அவளது வார்த்தைகளைக் கேட்டு கலகலவென்று நகைப்பதும், அவளோடு கொஞ்சிக் குலாவி தேன்போல மறுமொழி கூறுவதுமாய் நடந்தார். அவர்கள் இருவரும் தாம் பிறந்தது முதல் யாதொரு துன்பத்தையும் துயரத்தையும் அநுபவித்தே அறியாதவர்ளைப் போல வெளிக்குக் காணப்பட்டமையால், காண்போர் யாவரும் அவர்களை நோக்கிப் பொறாமை கொண்டு நெடுமூச் செறிந்து, ''புருஷர் பெண்ஜாதி இருந்தால் இப்படியல்லவா இருக்க வேண்டும்! நாம் என்ன ஜென்மமெடுத்தோம். கேவலம் நடைப் பிணங்கள். இவர்கள் இரண்டு சுவர்க்க லோகங்கள் ஜதையாகப் போவதைப் போல் அல்லவா இருக்கிறார்கள்!'' என்று சொல்லிக் கொண்டு போகும்படி செய்தனர்.

அப்போது மல்லிகா, ''ஆகா குளிர்ந்த காற்று எவ்வளவு மனோ ரம்மியமாக வீசி மனதையும், தேகத்தையும் பரவசப் படுத்துகிறது. இதைத்தவிர சுவர்க்க லோகம் வேறு எங்கே இருக் கிறது! எப்போதும் என்னோடு இந்த மந்தமாருதமும், தாங்களும் இருந்து விட்டால், நான் ஆகாரம் நித்திரை முதலிய வேறு எந்தச் சுகத்தையும் கொஞ்சங்கூட நினைக்கவே மாட்டேன்'' என்றாள்.

வஸந்தராவ் : (உடனே) அடீ இன்பவல்லி! என் மனதில் கோவில் கொண்ட என் குல தெய்வமே! கோகிலத்வனியைப் பழிக்கும் குரலால் நீ பேசும் சொற்களின் இனிமையான ஓசையைக் கேட்டுக் கொண்டே இருந்தால், எனக்கு அதுவே பரமசுகம். இந்த உலகில் அதைத் தவிர எனக்கு வேறு புருஷார்த்தம் இருக் காது என்பது உறுதி. மற்றவைகள் எல்லாம் எனக்கு இன்பகர மாகவே தோன்றவில்லை - என்றார்.

மல்லி : ஆனால் இந்தக் கடற்காற்று நமக்கு ஒரு வாரத்துக்கு இல்லாமல் போய்விடுமே என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. நாம் ஊருக்கு எப்போது புறப்படுகிறது?

வஸ : நாளை ராத்திரி ரயிலில் புறப்பட வேண்டும். நாளைக்கு மறுநாள் காலையில் முகூர்த்தமாம். நல்ல வேளையாக இரண்டு முகூர்த்தங்களும் ஒரே காலத்தில் நடக்கின்றன. ஆகை யால், நாம் இரண்டு தடவைகள் போக வேண்டிய அவசியமில் லாமல் போனது ஒரு லாபமல்லவா?

மல்லி : மோகனராவின் இளைய ஸகோதரரான ஸுந்தர ராவை நீங்கள் இதற்குமுன் பார்த்தீர்களா?

வஸ : பார்த்திருக்கிறேன். அவன் நல்ல அழகான பையன். கிருஷ்ணவேணிக்கு அவன் சரியான புருஷன்தான்.

மல்லி : (புன்சிரிப்போடு) ஏன்? தமயந்திக்கும் மோனக ராவுக்கும் பொருத்தமில்லையா? மணத்திற்கு முன்பாகவே அவர்களிருவருடைய மனமும் குணமும் ஒத்துப் போய்விட்டன. இரண்டும் சரியான ஜோடிகள் என்பதற்கு ஆக்ஷேபணையில்லை. நாம் கலியாணத்திற்குப் போகாவிட்டால், முகூர்த்தத்தை நிறுத்தி விடுவதாக எழுதியிருக்கிற படியால், வண்டி தவறாமல் சரியான

காலத்தில் நாம் புறப்பட வேண்டும். நம்மிடம் அவர்கள் வைத்திருக்கும் அன்புக்கு நாம் வேறு எதைத்தான் செய்யப்போகிறோம்?

வஸ : உண்மையான நண்பர்கள் என்பது அவர்களுக்கே தகும். நற்குணமுள்ளவனுக்கு ஜெகதீசன் எப்போதும் உதவியே செய்வான் அன்றி, அவர்களுக்கு ஒரு குறைவையும் வைக்க மாட்டான். கண்மணி! இப்படி வா! இப்படி வா! அதோ ஒரு பெருத்த அலை வருகிறது. இப்படி ஓடிவந்துவிடு! உன் மேல் மோதிவிடும் - என்று சொல்லிக் கொண்டே ஓடிப்போய் அவளை அழைத்துத் தூக்கி இப்பால் கொணர்ந்து, நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்து, தங்களை யாராகிலும் கவனிக்கிறார்களா என்பதை ஆராய்ந்துணர அவளது முகத்தில் திருட்டுத்தனமாக ஒரு முத்தமிட்டு அவளைக் கீழே விடுத்தார்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

மதிப்புரை

சுதேசமித்திரன் 1-6-26ம் தேதியில் எழுதுகிறது:-

மாயா விநோதப் பரதேசி

(ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதியது)

*ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்காரைத் தமிழ் உலகம் நன்கறியும்; அவர் ஏற்கெனவே எழுதிய பல அரிய நாவல்கள் தமிழ் நாட்டினரைப் பரவசப்படுத்தி இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. எனினும் : **மாயா விநோதப் பரதேசி** என்னும் நாவலானது, மேனாடுகளில் பலரும் நம் நாட்டிற் சிலரும் சாசுவதமான நன்மையை விளைவிப்பதில் நாட்டமின்றி, தங்களுடைய நாவல் விலையாகிப் பணம் கைக்கு வரவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் உசிதாவுசிதம், யுக்தாயுக்தம் முதலியவைகளைக் கவனியாது படிக்கும்போதுமட்டில் ஒருவித இன்பத்தை விளைவிக்கக்கூடியதாகவும், சில சமயங்களில் தீயவழிகளிலும் பிரவர்த்தித்துவிடப் படிப்போரைத் தூண்டிவிடக் கூடிய வழியிலும் எழுதியிருப்பதைப்போல் இல்லாது நமது நூலாசிரியர் தற்காலம் நமது சமூகத்தில் இருந்துவரும் குறைகளை உணர்ந்து அவைகளைப் பரிகரிக்கும் நோக்கத்துடன் படிப்பவருடைய மனதில் நல்வழியான வாழ்வில் நாட்டம்கொள்ள வேண்டுமென்ற ஆவல் சுலபமாய் உதிக்கக்கூடிய விதமாக எளிய நடையிலும் மனதை உருக்கக்கூடிய விதமாகவும் நாவல்களை எழுதி வருவதற்குத் தமிழ் மக்கள் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நம் முன்னிருக்கும் இந்த நாவலில் மனித வாழ்வில் சுகதுக்கங்கள் மாறி மாறி வருவது இயல்பு என்பதையும், ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' என்பதையும், ''கெடுவான் கேடு நினைப்பான்'' என்பதையும், மேனாட்டுக் கல்வி முறையினாலும்*

சகவாஸ தோஷத்தினாலும் ஏற்படக்கூடிய கேடுகள் இன்னவை என்பதையும், ஸத்சங்கத்தால் எவ்விதம் சரீரத்தில் வெகு சுலப மாக ஊறிப்போயுள்ள கெட்ட வழக்கங்களையும் சுலபமாக விட்டுவிடக்கூடியது சாத்தியம் என்பதையும், மனிதருடைய புக்தி யுக்தியால் எத்துணை விஷயங்களையும் எவ்விதம் சுலபமாகக் கண்டுபிடித்துவிடக்கூடும் என்பதையும் நூலாசிரியர் வெகு அழகாயும், தெள்ளிய நடையிலும், படிக்கப்படிக்க இன்பத்தைக் கொடுக்கக்கூடிய விதமாகவும் வர்ணித்திருக்கிறார். முன்னர் இந் நூலாசிரியர் வெளியிட்டுள்ள திகம்பரசாமியார் என்ற கதையின் தொடர்ச்சியாக இக்கதை இருக்கிறது. அந்தக் கதையில் கண்ணப்பாவும், வடிவாம்பாளும், திகம்பரசாமியாரும் முக்கிய பாத்திரங்களாக விளங்கியதுபோல் இதில் கண்ணப்பாவின் சகோ தரரான கந்தசாமியும், முடிவில் அவருடைய மனைவியான மனோன்மணியும், திகம்பர சாமியாரும் முக்கிய நடிகர்களாக இருக்கின்றனர். கல்வியறிவில் கரை கடந்து மேனாட்டுப் பழக்க வழக்கங்களிலும் சம்பிரதாயங்களிலும் முழுகி, நமது புராதன தர்மங்களில் மிகுந்த வெறுப்படைந்திருந்த கதாநாயகியை கந்த சாமிக்கு மணமுடிக்க உபயகுலப் பெற்றோர்களும் தீர்மானம் செய்திருந்தும், பூர்வீக தர்மங்களில் கண்ணுங்கருத்தும் உடையவ னாயினும் தான் மணம் செய்துகொள்ள இருக்கும் பெண்ணை நேரில் கண்டு அவளுடைய குணாதிசயங்களை அறிந்துவர விரும்பிய கந்தசாமி தனது நண்பரொருவருடன் அவருடைய மனைவிபோல் வேடம் பூண்டு பெண்ணைப் பார்க்கச் செல்வதும், கந்தசாமியின் பெற்றோருடைய குடும்பத்தாரில் தீரா வைரம் வைத்திருந்த சிலர் தங்களுடைய க்ஷாத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளக் கருதி மணமகளைக் களவாட வருவதும், பெண்ணைப் பார்க்க வந்தவர்கள் சொல்லியபடி மணமகனின் பிதா உணர்ந்ததும், அவர்களை அவர்கள் அறியாமல் சிறை வைப்பதும், மண மகளைக் களவாட வந்தவர்கள் பெண் வேஷத்துடன் வந்திருந்த கந்தசாமியைக் களவாடிச் செல்லுவதும், அவனை சட்டநாத பிள்ளையின் சகோதரன், புருஷன் என்பதை அறியாமல் விவாகம் செய்து கொள்ளுவதும், அவனிடமிருந்து கந்தசாமி சாமர்த்தியமாக வெளிப்படுவதும், திகம்பரசாமியாருக்கு அவருடைய விரோதிகள்

செய்யுங் கேடுகளும், அவைகளிலிருந்து அவர் தப்பி சமயத்திற்குத் தகுந்த வேடந்தரித்து தமது நண்பர்களுக்கு உதவி செய்து வருவதும், காணாமற்போன கந்தசாமி திரும்பிவர வேண்டும் என்று அவனுடைய பெற்றோரும், உற்றாரும், தெய்வப்பிரார்த்தனை நடத்துவதும், அதுகாலை கந்தசாமியின் தகப்பனார் தெய்வத்தை தொழுத பாடல்களின் உருக்கமான தன்மையையும் அவைகளின் உட்கருத்தையும் உணர்ந்த மனோன்மணி தனது புத்தியை மாற்றிக் கொண்டு உத்தமப் பெண்மணியாக மாறிவிடுவதும், முடிவில் கந்தசாமி க்ஷேமமாகத் திரும்பி வந்தபிறகு இருவருக்கும் சுப முகூர்த்தத்தில் விவாகம் நடைபெறுவதும் இந்த நாவலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. படிப்பவருடைய மனதில் நல்லெண்ணங்களும், தெய்வபக்தியும் சுதாவாகவே எழுந்து நவீன நாகரிகத்தில் வெறுப்பு ஏற்படக்கூடிய விதமாக இது எழுதப்பட்டிருக்கிறது. இத்துணை உயரிய நாவல்களை எழுதித் தமிழ் உலகிற்கு உதவி வரும் இந்நூலாசிரியருக்குத் தமிழ் மக்கள் தங்கள் பூர்ண ஆதரவைத் தந்து மேன்மேலும் இத்துறையில் ஈடுபட அவருக்கு ஊக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஆங்கிலத்தில் ஷெர்லாக்ஹோம்ஸ்
நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில்

திகம்பர சாமியார்






1. பூர்ண சந்திரோதயம் பாகம் - 1
2. பூர்ண சந்திரோதயம் பாகம் - 2
3. பூர்ண சந்திரோதயம் பாகம் - 3
4. பூர்ண சந்திரோதயம் பாகம் - 4
5. பூர்ண சந்திரோதயம் பாகம் - 5
6. கும்பகோணம் வக்கீல் பாகம் - 1
7. கும்பகோணம் வக்கீல் பாகம் - 2
8. மாயா விநோதப் பரதேசி பாகம் - 1
9. மாயா விநோதப் பரதேசி பாகம் - 2
10. மாயா விநோதப் பரதேசி பாகம் - 3
11. மேனகா பாகம் - 1
12. மேனகா பாகம் - 2
13. சௌந்திர கோகிலம் பாகம் - 1
14. சௌந்திர கோகிலம் பாகம் - 2
15. சௌந்திர கோகிலம் பாகம் - 3
16. சௌந்திர கோகிலம் பாகம் - 4
17. மதன கல்யாணி பாகம் - 1
18. மதன கல்யாணி பாகம் - 1
19. மதன கல்யாணி பாகம் - 2
20. வித்யாசாகரம்
21. வசந்த மல்லிகா







... ... இதற்கு மேலும் வருவார் !